2263 | சட/85
தி
281

அரசினர் ஆவணக்காப்பகம் மற்றும்
... ஆராய்ச்சி
8 MAR 1985
... ஆவணக்காப்பகம்
... சென்னை-8

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 23, 1984—தொகுதி 209—எண் 1

Monday, 23rd April 1984—Volume 209—No. 1

சட்டமன்ற மேலவைச் செயலகம்
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009

LEGISLATIVE COUNCIL SECRETARIAT
Fort St. George, Madras-600 009

விலை ரூ. 2·75 ]

## பொருளடக்கம்

| | |
|---|---|
| | பக்கங்கள். |
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | vi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. | vii |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் .. | viii-xi |
| இதுகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்களும் நியமிக்கப் பெற்ற உறுப்பினர்களும் புதிய அரசியலமைப்பின்மீது தமக்குள்ள பற்றுறுதிப் பிரமாணத்தை அல்லது உறுதிமொழியை எடுத்துக் கொள்ளுதல் .. | 1 - 2 |

143901

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

THIRU SUNDAR LAL KHURANA

*Members of the Council of Ministers.*

1. The Honourable Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology, Excise and Prohibition excluding grant of Liquor Permit.

2. The Honourable Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen

3. The Honourable Thiru S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. The Honourable Thiru K. A. KRISHNASWAMY, Minister for Dairy Development, in charge of Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Honourble Thiru S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes and Census.

6. The Honourable Thiru R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

7. The Honourable Thiru C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education and Official Language.

8. The Honourable Dr. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. The Honourable Thiru C. PONNAIYAN, Minister for Law and Industries, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, Large Scale Industries and Mines and Minerals.

10. The Honourable Thiru P. KOLANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. The Honourable Thiru S. RAGHAVANANDAM, Minister for Labour, in charge of Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The Honourable Dr. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. The Honourable Thiru S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Acts and Ports.

14. The Honourable Thiru S. THIRUNAVUKKARASU, Minister for Handlooms and Co-operation, in charge of Textiles, Handlooms and Co-operation.

15. The Honourable Thiru S. N. RAJENDRAN, Minister for Environmental Pollution Control, in charge of Environmental Pollution Control and Passports.

16. The Honourable Thiru M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. The Honourable Thiru R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

18. The Honourable Thiru S. R. ERADHA, Minister for Public Works in charge of Public Works Department and Establishment matters relating to Public Works Department, Housing and Slum Clearance Board.

19. The Honourable Thiru M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Classes.





20. The Honourable Thirumathi GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees Correctional Administration.

21. The Honourable Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in charge of Khadi.

22. The Honourable Thiru Y. S. M. YUSUF, Minister for Irrigation and Wakf, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. The Honourable Thiru R. ARUNACHALAM, Minister for Rural Industries, in charge of Rural Industries, including Village, Cottage and Small Industries.

24. The Honourable Thiru K. KALAIMANI, Minister for Fisheries, in charge of Fisheries.

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சுந்தர்லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, [illegible] நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், [illegible] மாவட்ட துணை ஆட்சியாளர்கள், [illegible] இலவச [illegible], சர்க்கரை [illegible] கழிவு, [illegible] திட்டம், [illegible] துறை மற்றும் [illegible] அறநிலையத் துறைகள் நீங்கலாக.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, [illegible], [illegible], உணவு, [illegible] அளவு, [illegible] கட்டுப்பாடு மற்றும் [illegible].

3. மாண்புமிகு திரு க. இராமச்சந்திரன் ([illegible] அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் [illegible].

4. மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி ([illegible] துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பால், [illegible] மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், [illegible].

6. மாண்புமிகு திரு இராம. வீரப்பன் (செய்தி—அறநிலை [illegible] அமைச்சர்) கீழ்க்கண்ட [illegible] பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் [illegible], சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி [illegible], அறநிலையத் துறை, [illegible], அனுமதிச் சீட்டு வழங்கல்.



7. மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை [illegible], வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை-பொறியியல் [illegible].

9. மாண்புமிகு திரு சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், பெருந்தொழில்கள் மற்றும் சுரங்கமும் கனிவளமும்.

10. மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

நகராட்சி நிர்வாகம், [illegible], ஊராட்சி ஒன்றியங்கள், [illegible] வளர்ச்சி, கிராமப்புற [illegible], பூமிதானம், கிராம [illegible] மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர் [illegible], தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் [illegible] வசதி [illegible].

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு சு. முத்துச்சாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, [illegible] போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு சு. திருநாவுக்கரசு ([illegible] மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

[illegible], [illegible] மற்றும் கூட்டுறவு.

15. மாண்புமிகு திரு சொ. நீ. இராசேந்திரன் (சுற்றுப்புறச்சூழல் தூய்மைக்கேடு தடுப்புத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு தடுப்புத் துறை மற்றும் கடவுச் சீட்டு.

16. மாண்புமிகு திரு எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், செய்தி காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணையத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் திட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சத்துணவுத் திட்டம்.

18. மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

பொதுப் பணித் துறை [illegible] பொதுப்பணித் துறை அலுவலர்கள், சட்டமன்றம், வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்று வாரியம்.

19. மாண்புமிகு திரு எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

பிற்பட்டோர் நலம்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, [illegible], அனாதை இல்லம், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேறுபவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

கதர்.

22. மாண்புமிகு திரு பா. கை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை மற்றும் வக்ஃப் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

[illegible] சங்கங்கள், [illegible] பாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் வக்ஃப்.

23. மாண்புமிகு திரு இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

[illegible] தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் [illegible].

24. மாண்புமிகு திரு க. கலைமணி ([illegible] அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார்:—

[illegible].

---

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**

• டாக்டர் ம. பொ. சிவஞானம்

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**

திரு. ஜி. சுவாமிநாதன்

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. சி. இராமலிங்கம்
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
3. திரு. எ. ஜெ. தாஸ்
4. திரு. க. அருணாசலம்

**மேலவைச் செயலாளர்**

திரு. சி. ரு. இராமசாமி, பி. ஏ., பி. எல்.,

**துணைச் செயலாளர்**

திரு. த. ப. டிப்லிகுமார், பி. எஸ்சி., பி. எல்.,

**துணைச் செயலாளர் (பதிப்பாளர்)**

திரு. நா. கோதண்டராமன், பி. ஏ., பி. ஜி., எல்., பி. எல்.

**தலைமை நிருபர்**

திரு. ச. சுவாமிநாதன், எம். ஏ.

---

•25-4-1984 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி அமைக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அங்கமுத்து, திரு. பா. | நியமனம் |
| 2 அருணாசலம், திரு. க. | நியமனம் |
| 3 ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 4 இ[illegible], திரு. எஸ். (தொழில் [illegible] துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 5 இர[illegible], திரு. எஸ். ஆர். (பொதுப் பணித் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 6 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7 இராஜேந்திரன், திரு. [illegible] துரை, ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 8 கண்ணப்பன், திரு. காடுவெட்டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9 கணேசன், திரு. ஆர். [illegible] ஆர். கணேசன். | [illegible] மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 10 கருணாநிதி, டாக்டர் மு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 11 [illegible], திரு. [illegible] (மீன்வளத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 12 கோபால், திரு. [illegible] ஆர். | நியமனம் |
| 13 [illegible]லிங்கம், திரு. மு. செ. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 14 [illegible], டாக்டர் [illegible]. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 15 [illegible] | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 16 சிவ[illegible], டாக்டர் [illegible]. | நியமனம் |
| 17 சிவ[illegible], திரு. அ. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 18 சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 19 சுப்பிரமணியம், திரு. எம். பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 20 சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்). | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 21 தாஸ், திரு. பா. [illegible] | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 22 தாரா செரியன், திருமதி | நியமனம் |
| 23 தாஸ், திரு. எ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 24 பழனிவேல் ராஜன், திரு. பி. டி. ஆர். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 25 பாலாஜி, திரு. நெல்லை | நியமனம் |
| 26 மதுசூதனன், திரு. இ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 27 மயில்சாமி, திரு. அ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 28 மாசிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 29 மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 30 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 முத்து, திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 32 முத்துலிங்கம், கவிஞர் | நியமனம் |
| 33 முனுசாமி, திரு. பி. | நியமனம் |
| 34 யூசுப், திரு. யா. செ. மு. (நீர்ப்பாசனத் துறை மற்றும் வக்ஃப் அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 35 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36 லீலாவதி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 வள்ளிமுத்து, திரு. ஈ. வே. கு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 38 வீரப்பன், திரு. இராம (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 39 ஜெயச்சந்திரன், திரு. எல். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 40 ஜெயலட்சுமி, திருமதி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 41 ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 42 ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்). | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 43 வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45 வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47 வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 வெற்றிடம் | கோயம்பத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 வெற்றிடம் | கோயம்பத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53 வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55 வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63. வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

---

## திங்கட்கிழமை, 1984 ஏப்ரல் 23.

## சித்திரை 11, ரக்தாட்சி, திருவள்ளுவராண்டு-2015.

*(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான தமிழ் நாடு சட்டமன்ற மேலவையின் அறுபத்தி ஐந்தாவது கூட்டத் தொடர்.)*

*சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் (திரு ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.*

**புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களும், நியமிக்கப்பெற்ற உறுப்பினர்களும் இந்திய அரசியலமைப்பின் மீது தமக்குள்ள பற்றுறுதிப் பிரமாணத்தை அல்லது உறுதிமொழியை எடுத்துக் கொள்ளுதல்.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களே,

புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களை நான் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்று எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலவை விதி 3-அ-அ-ன்படி சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அவையில் முதன் முதலாக தத்தம் இருக்கையில் அமருமுன் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 188-வது பிரிவில் விதித்துள்ளபடி உறுதிமொழி கூறி, அதில் கையொப்பமிடவேண்டும்.

இம்மன்றத்தில் கடைப் பிடித்து வரும் மரபின்படி, அமைச்சர், முன்னாள் மேலவைத் தலைவர் மற்றும் முன்னாள் முதலமைச்சர் பின் மற்ற உறுப்பினர்களை அவர்கள் பெயர்களின் தமிழ் அகர வரிசைப்படி மேலவைச் செயலாளர் அழைப்பார். உறுப்பினர்கள் மேடை அருகே வந்து, தேர்தல் சான்றிதழை செயலாளரிடம் கொடுத்து, அவரிடமிருந்து அச்சிட்ட உறுதிமொழி இதழைப்பெற்று அதன்படி உறுதிமொழி எடுத்துக்கொண்டு, அதிலும், பதிவேட்டிலும், கையொப்பமிட்டு பின்னர் இருக்கையில் சென்று அமரும்படி வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது புதிய உறுப்பினர்களுக்கு மேலவையில் உட்காருவதற்கு தனி இடம் ஒதுக்கப்படவில்லை. வெற்றிடம் எதிலாவது அவர்கள் அமரலாம். நாளை உறுப்பினர்களுக்கு தற்காலிகமாக மேலவையில் இடம் ஒதுக்கப்படும். கட்சியின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், கொறடாக்கள் ஆகிய விபரம் கிடைக்கப் பெற்றவுடன், மேலவையின் விதிகளின்படி தனி இடம் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும்.

## புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களும், நியமிக்கப்பெற்ற உறுப்பினர்களும் இந்திய அரசியலமைப்பின் மீது தமக்குள்ள பற்றுறுதிப் பிரமாணத்தை அல்லது உறுதிமொழியை எடுத்துக் கொள்ளுதல்



நாளை மறுநாள் மேலவைத் தலைவர் தேர்தல் நடைபெறும். அதற்கான வேட்பு மனுக்களை நாளை நண்பகல் 12 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும்.

இப்பொழுது செயலாளர் உறுதிமொழி எடுத்துக்கொள்ள உறுப்பினர்களை அழைப்பார்.

(பின்னர் செயலாளர் அவர்கள் உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்படி அழைத்தார்கள்)

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்:—

1. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே
2. டாக்டர் ம. பொ. சிவஞானம் *
3. திரு அலகாபுத்தூர் சி. இராமலிங்கம்
4. திரு மான மதுரை ஆர். இராஜேந்திரன்
5. திரு ஆர். கணேசன் என்கிற மிசா ஆர். கணேசன்
6. திரு எம். சி. சங்கரலிங்கம்
7. திரு அ. ப. சிவராமன்
8. திரு நெல்லை பாலாஜி *
9. திரு இ. மதுசூதனன்
10. திரு அ. மயில்சாமி
11. திரு க. மீனாட்சிசுந்தரம்
12. கவிஞர் முத்துலிங்கம்
13. திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் *
14. திரு எல். ஜெயசந்திரன் *
15. திரு தி வி. ஜெயபட்சுமி *
16. திரு ஜேப்பியார்

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 24—4—1984, செவ்வாய்க்கிழமை அன்று காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(முற்பகல் 10-22)

---

* கடவுள் பெயரால் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.

221

# பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் .. .. | 3—18 |
| 2. | தகவல் கோரல்— அவையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இடம் ஒதுக்கீடு குறித்து | 19—22 |
| 3. | கவன ஈர்ப்பு— உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட சிறப்பூதியத்தை இராமநாதபுரத்தில் உள்ள தேவகோட்டை கல்வி மாவட்டத்தில் பணியாற்றும் உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களிடம் பிடித்தம் செய்தது குறித்து .. .. .. | 22—23 |
| 4. | அரசின் தீர்மானம்— தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு .. | 24—61 |
| 5. | அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. | 61—64 |


143901

D

V2,11,32 N84

N84.209.1-3;1

## தமிழ்நாடு சட்டமன்ற பேரவை

செவ்வாய்க்கிழமை, 1984 ஏப்ரல் 24.

சித்திரை 12, ரக்தாட்சி, திருவள்ளுவராண்டு—2015

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற பேரவை மண்டபத்தில், முற்பகல் 10 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### அரிசி பற்றாக்குறை

* 138 வினா—திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்த ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரிசிப் பற்றாக்குறை காரணமாக, வெளி மாநிலங்களிலிருந்து தமிழக அரசு அரிசி வாங்கியது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) பஞ்சாப், அரியானா மாநிலங்களிலிருந்து 19,719 டன்கள் அரிசி, டன் ஒன்றுக்கு ரூ. 3,130 முதல் 3,650 வரை விலை கொடுத்து வாங்கப்பட்டது. ஆந்திரப் பிரதேசத்திலிருந்து 83,787 டன்கள் அரிசி டன் ஒன்றுக்கு ரூ. 3,450 முதல் ரூ. 3,700 வரை விலைகளில் வாங்கப்பட்டது.

இதைத் தவிர மேலும் 48,163 டன்கள் அரிசி பஞ்சாப், அரியானா, டெல்லி, மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து டன் ஒன்றுக்கு ரூ. 2,680 முதல் ரூ. 2,900 வரை கொடுத்து வாங்கப்பட்டது. வெளி மாநிலங்களிலிருந்து வாங்கி அரிசியை இரயிலில் கொண்டு வர டன் ஒன்றுக்கு போக்குவரத்துச் செலவு ரூ. 15 முதல் ரூ. 30 வரை ஆகிறது.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு மாநிலங்களிலிருந்து அரிசி கொள்முதல் செய்கிறார்கள். மொத்தமாக எத்தனை ரூபாய்க்கு வெளி மாநிலங்களிலிருந்து அரிசி கொள்முதல் செய்யப்பட்டதென்ற விவரத்தையும், வெளி மாநிலங்களிலிருந்து வாங்கிய கொள்முதல் விலைக்கும், தமிழ்நாடு கொள்முதல் விலைக்கும் என்ன வித்தியாசம் இருந்ததென்பதையும், நம்முடைய அரசு கொள்முதல் செய்திருப்பது மற்ற மாநில அரசுகளோடு தொடர்புகொண்டு அரசுக்கு அரசு என்ற முறையில் கொள்முதல் செய்யப்பட்டதா அல்லது கூட்டுறவுத் துறையின் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மொத்தமாக எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது என்ற விலை பற்றிய முழுத் தொகையினுடைய குறிப்புகள் இல்லை. பஞ்சாப், அரியானா, டெல்லி ஆகிய மாநிலங்களில் வாங்குகின்றபோது, பெரும்பாலும் ஆந்திர மாநிலத்தில் வாங்கியது ஆந்திர மாநில நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம், அரிசி ஆலை அதிபர்களிடமிருந்து வாங்கப்பட்டது. ஆந்திர மாநிலக் கூட்டுறவு சங்கங்களின் மூலமும் ஆந்திர மாநில நுகர்பொருள் வணிபக் கழகம் மூலமும் நேரிடையாகவும், ஆந்திர மாநில அரிசி ஆலைகள் சங்கங்களின் மூலமும் டெண்டர்கள் மூலமும் ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து வாங்கப்பட்டது. உத்திரப் பிரதேசத்திலிருந்து கூட்டுறவு பெடரேசன் மூலமும் வாங்கப்பட்டது. டெண்டர்கள் மூலம் மத்தியப் பிரதேசம், டெல்லி, பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலிருந்து வாங்கப்பட்டது.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** துணைத் தலைவர் அவர்களே, அப்படிக் கொள்முதல் செய்கிற நேரத்திலே நம்முடைய மாநிலத்திலே இருந்த விலை என்ன, மற்ற மாநிலங்களில் இருந்த விலை என்ன? அதனால் அரசாங்கம் அதிகப்படியாகக் கொடுக்கவேண்டிய தொகை எவ்வளவு ஆயிற்று? அதன் மூலம் தமிழ்நாடு சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டதுண்டா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே ரூ. 132, ரூ. 136, ரூ. 140 என்கின்ற விலையிலே கொள்முதல் செய்து அரிசி வாங்கினோம். அதற்குப் பிறகு வறட்சி நிலைமையை உத்தேசித்து ரூ. 35 கூடுதலாகத் தந்து, தஞ்சை முழுவதும், தஞ்சை மாவட்டத்தைச் சுற்றி இருக்கின்ற தென்னாற்காடு மாவட்டம், திருச்சி மாவட்டம் ஆகியவற்றில் உள்ள தாலுக்காக்களை உள்ளடக்கி ஏகபோகக் கொள்முதலை அரசே வைத்துக் கொண்டிருந்ததன் காரணமாக அவர்களுக்கு கூடுதலாக 35 ரூபாய் தந்து, ரூ. 167, ரூ. 171, ரூ. 175 என்கிற அளவுக்கு நாம் கொள்முதல் செய்தோம். ஆனால் பிற மாநிலங்களில் வாங்கும்போது தரம் வெளிச் சந்தையிலே வாங்குகின்ற அளவுக்குத் தான் வாங்கினோமே



தவிர, அங்கே கொள்முதல் செய்து வாங்குகின்ற அளவுக்கு இல்லை. மத்திய அரசு வெளிச் சந்தையிலே வாங்குகின்ற அளவுக்கு கூட்டுறவுக் கழகங்களின் மூலமாகவும் அங்கே இருக்கின்ற நுகர்பொருள் வாணிபக் கழகங்களின் மூலமாகவும் அவற்றை வாங்கவேண்டிய அவசியம் வந்தது. கொள்முதல் விலையிலே அங்கே வாங்குவதற்கில்லை. வெளிச் சந்தையிலே தான் வாங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பொதுவாக இப்படி வாங்கிய வகையிலே இந்த அரிசி மற்றவைகளை நாம் கிலோ ஒன்றுக்கு ரூ. 1·75-க்கு கொடுத்ததன் காரணமாக நமக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இப்படி வாங்கிய அரிசியை கிலோ ஒன்றுக்கு ரூ. 1·75 வீதம் நாம் தருவதன் காரணமாக சென்ற ஆண்டு கிட்டத்தட்ட கூடுதலாக ரூ. 100 கோடிக்கு மேல் இதிலே சப்சிடி தரவேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டது.

**டாக்டர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களில் உள்ள சந்தைகளின் மூலமாக வாங்கிய உணவு தானியங்களுக்காகவும், தமிழ்நாட்டிலேயே கொள்முதல் செய்ததற்காகவும் ஏற்பட்ட மொத்த நஷ்டம் எவ்வளவு? அது நஷ்டமாக எடுத்துக்கொள்ளப் படுகிறதா அல்லது அதிகத் தொகை கொடுப்பதாக எடுத்துக்கொள்ளப் படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, அப்படி வாங்கப்பட்ட வகைகளிலே சப்சிடியாகக் கொடுத்து, விலையைக் குறைத்து, நாம் நுகர்பொருள் வாணிபக் கழக நியாய விலைக் கடைகள் மூலமாக விநியோகிக்கிறோம் என்ற அளவுக்கு நாம் அதற்கு மானியமாகவும், சப்சிடியாகவும் கொடுக்கிறோம். அரசினுடைய கணக்கைப் பொறுத்த வரையில், அது நஷ்டமாகத்தான் வரும்.

## Stay petitions filed by Non-Minority Institutions.

* 139 Q—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that a large number of stay petitions filed by non-minority institutions against the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973 (Act No. 29 of 1974) and Rule 74 framed thereunder, has not yet been vacated;

(b) if so, the number of such institutions enjoying the stay; and

(c) the number of teachers affected?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** (அ), (இ) மற்றும் (உ) இவ்வினா தொடர்பாக ஒரு விவர அறிக்கை @ அவையின் வைக்கப் பட்டுள்ளது.

---

@ 65–66 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு பா. ரா. தாமஸ்:** துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக சிறுபான்மை இனத்தவர் அரசியல் சட்டத்தைக் காட்டி தன்னிச்சை போல் நிர்வாகம் செய்கின்றார்கள். சிறுபான்மை அல்லாதவர்கள், சிறுபான்மையினரைக் காட்டி அவர்கள் பெறுகின்ற உரிமைகளை தாங்களும் பெற வேண்டும் என்று தமிழகத்திலே பொதுவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை தமிழகத்திலே இருக்கின்றது. அவைகளை எல்லாம் தவிர்த்து, ஆசிரியர்களுக்கு நம் மாநிலத்தில் முழுமையாகப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய அளவிலே ஏதாவது அரசு செய்யுமா? மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதற்கு என்ன திட்டம் வைத்திருக்கின்றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் இனத்தவர்களுக்குத் தரப்படுகின்ற உரிமைகள் அரசியல் சட்டப்படி தரப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையை வைத்துத் தான் அவர்கள் அப்படி பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்த உரிமையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்- ஆகவே அந்த வரம்பிற்குள்ளாக ஆசிரியர்களுக்கு என்ன பாதுகாப்பு தர முடியுமோ, அதைத் தருவதற்காக இப்போது நடைமுறையிலே இருக்கின்ற தனியார் கல்லூரி, தனியார் பள்ளி ஆசிரியர்கள் சட்டத்தைப் பயன்படுத்தி வருகிறோம். அதிலே ஏதேனும் குறைகள் இருந்தால் அதைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்து வருகிறோம்.

**திரு பா. ரா. தாமஸ்:** துணைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டம் வகுக்கப்பட்ட காலத்திலே கல்லூரிகளிலே, பள்ளிகளிலே ஆசிரியர்களுக்கு ஊதியமானது, முழுமையாக அரசால் கொடுக்கப்படவில்லை. அதற்குப் பிறகுதான், நம்முடைய மாநிலத்திலே பள்ளிகளிலே 1964-லிருந்தும், கல்லூரிகளில் 1976-லிருந்தும் அனைத்து ஊதியங்களையும் நம்முடைய வரிப் பணத்திலிருந்து கொடுக்கிறோம். அந்தக் காரணத்தினாலே, அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு நமது அரசு வற்புறுத்த வேண்டும். இன்றைக்குக்கூட தமிழ்நாடு முதுகலைப் பட்டதாரி கழகமானது, ஆசிரியர்களுக்கு நல்ல பாதுகாப்பு இல்லை என்று தர்ணா அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதன் நோக்கம் முழுமையான பாதுகாப்பு வேண்டும் என்பதுதான். அந்த வகையிலே நம்முடைய மாநில அரசு ஒரு குழு அமைத்தால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பெருமனம் கொண்டு செய்தால், அந்தக்குழுவினுடைய அறிக்கையின் அடிப்படையிலாவது சட்டத்தைத் திருத்தி முழுமையான பாதுகாப்பு கொடுக்க முன்வருவார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற மாநில அரசு அதிகாரங்களை வைத்துக்கொண்டு எந்த அளவுக்குப் பாதுகாப்பு தர முடியுமோ



அந்த அளவுக்குப் பாதுகாப்பு தர இந்த அரசு தயாராக இருக்கின்றது. அந்த அடிப்படையில்தான் நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**செல்வி ஆ. லீலாவதி:** துணைத் தலைவர் அவர்களே, அண்மையில் உயர்நீதி மன்றம் சிறுபான்மையினர் பள்ளிகளில் கல்வி கற்போரில் சிறுபான்மையினர் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு இருந்தால்தான், அப்பள்ளி சிறுபான்மையினர் பள்ளி என்று கூறலாம் என்று தீர்ப்பு வழங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மைதானா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு தீர்ப்பைப்பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஆனால் இததான் சிறுபான்மையினரால் நடத்தப்படுகின்ற கல்வி நிலையம் என்று ஒரு "டெபநிஷன்" ஒரு இலக்கணம் இதுவரையிலே நாம் சொல்லவில்லை. அதனாலே என்னவாகிறது என்றால், ஒரு கரெஸ்பாண்டெண்ட் முஸ்லீமாக இருந்தாலும் கூட அல்லது கிருஸ்டியனாக இருந்தாலும்கூட, அந்த நிறுவனம் சிறுபான்மை ஆகிவிடுகின்ற நிலைமை இருக்கின்றது.

**திரு க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் நடத்துகின்ற கல்வி நிறுவனங்களிலே சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பணியாற்றுகின்றார்கள். பெரும்பான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் பணியாற்றுகின்றார்கள் என்றாலும், சிறுபான்மையினர் நிர்வாகியாக இருந்துவிட்டால், அவர்களுக்கு இருக்கின்ற பாதுகாப்பு, அதே பள்ளியிலே பணியாற்றுகின்ற சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இல்லாமல் போகிறது. ஆகவே அந்தப் பாதுகாப்பு அவர்களுக்கும் கிடைக்கக்கூடிய அளவிலாவது ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, அப்படியெல்லாம் பேச முடியாது. அவர்கள் ஆசிரியர்கள். அவர்கள் ஆசிரியர்களாக வேலை பார்க்கிறார்கள். சம்பளம் வாங்கிக்கொண்டு ஆசிரியர்களாக வேலை பார்க்கின்றார்கள். நிர்வாகி சிறுபான்மை இனத்தவருக்கு பள்ளி நடத்துவதாகச் சொல்கின்றார். ஆகவே அரசியல் சட்டத்தில் உள்ள உரிமையைப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அப்போது நாம் அதைத் தடுக்க வேண்டுமென்றால், மைனாரிட்டி நிறுவனம் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒரு வரையறையை நாம் சட்டத்திலே கொண்டுவந்தால், பெரும்பாலான அளவில் இதை நம்மாலே கட்டுப்படுத்த முடியும். ஆனால் இப்போது இருக்கின்ற பிரச்சினை ஆசிரியர்கள் பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால், ஆசிரியர்கள் பிரச்சினையை வேறு வகையிலே தீர்க்க முடியும் என்பதைத்தான் அரசு ஆராய்ந்து வருகின்றது.

(முற்பகல் 10-10)

**திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் என்று சொல்லப்படும்போது, மத அடிப்படை யில் சிறுபான்மையினரை மட்டுமல்ல, மொழி அடிப்படையில் சிறுபான்மையினரையும் தான் என்று சொல்கிறார்களே, அது உண்மையா? கிருஸ்தவர்கள், முஸ்லீம்கள் மட்டுமல்லாமல், தெலுங்கு மொழி பேசுவோர், கன்னட மொழி பேசுவோர், மலையாள மொழி பேசுவோரும் சிறுபான்மையினர் எனக் கருதி, அவர்களும் நிறுவனங்கள் நடத்தினால், அதற்கும் இந்திய அரசியல் சட்டப்படி பாதுகாப்பு தரவேண்டும் என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பாதுகாப்பு அவர்களுக்கும்தான் இருக்கிறது. இப்போது கர்நாடகத்தில இருக்கிற நம்முடைய தமிழ் மக்களுக்கும் அந்தப் பாதுகாப்பு இருக்கிறது.

**திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர் களே, சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிலையங்களில், நிர் வாகத்தில் தலையிடக்கூடாதென்றும், ஆனால் அதே சமயத்தில் அரசு முழு மானியத்தை மக்களுடைய வரிப்பணத்திலிருந்து கல்வி நிலையங்களுக்குக் கொடுக்கிற காரணத்தினால், அரசு விதிக்கிற விதிமுறைகளுக்கு அந்த நிர்வாகங்கள் கட்டுப்படவேண்டு மென்ற அடிப்படையிலே உச்சநீதி மன்றம் ஒரு தீர்ப்பை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வழங்கியிருக்கிறது. தலைமை நீதிபதி அவர்கள் அந்தத் தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி வரவில்லை என்றால், அந்த நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நம்முடைய மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு, ஆளுகைக்கு உட்பட்டு சரியான திருத்தங்களை தற்போதுள்ள சட்டத்தில் ஏற்படுத்துவதற்கு தமிழக அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு தீர்ப்பு உச்சநீதிமன்றம் வழங்கியிருப் பதாகத் தெரியவில்லை. ஆனால் சிறுபான்மையினர் நிறுவனங் களுக்கு நிதி உதவி தந்து வருகிறோம். நாம் அவர்கள்மீது அதிகபட்சமாக நடவடிக்கை என்று எடுக்கிறபோது, அந்த நிதியை நிறுத்துகிற அதிகாரம் இருக்கிறதே தவிர, மற்றபடி அவர் களுக்கு இருக்கிற அந்த உரிமையிலே தலையிடுவதற்கு அதிகார மில்லை என்பதே தற்போதுள்ள நிலைமையாகும். ஆசிரியர் களைப் பொறுத்தமட்டில், அவர்களுக்கு எதிராக நிர்வாகம் நடவடிக்கை எடுக்கிறபோது, நாம் தலையிடுகிற அதிகாரம் இல்லை என்றுதான் திட்டவட்டமாக நிர்வாகத்தினர் சொல்லி, அதற்கான குறிப்பிட்ட ஷரத்துக்களையெல்லாம் அனுப்பியிருக்கின்றார்கள். ஆகவே இப்போது அதைக் குறித்துத்தான உச்ச நீதிமன்றத் திற்கு நாம் அப்பீல் செய்திருக்கின்றோம். அப்பீல் எடுத்துக



கொள்வதற்கு அதிக நாள் ஆகிய காரணத்தால், உடனடியாக எடுத்துக்கொள்ளும்படி ஒரு மனுவையும் போட்டிருக்கிறோம்.

**செல்வி ஆ. லீலாவதி :** துணைத் தலைவர் அவர்களே, அரசு பள்ளிகளுக்கு மானியம் என்ற முறையிலேயே தொகை யைக் கொடுக்கிறது. அதை மொத்தமாக ஆசிரியர்களுக்கும் சம்பளமாக அளிக்கிறது. மானியம் என்றில்லாமல், அரசு ஆசிரி யர்களுக்குச் சம்பளம் கொடுப்பதென்ற அடிப்படையில், மானியம் என்ற பெயரை எடுத்துவிட்டு சம்பளம் என்ற பெயரிலே கொடுத் தாலே, அரசிடமிருந்து ஆசிரியர்கள் சம்பளம் பெறுகிறார்கள் என்ற எண்ணம் ஓரளவிற்குத் தோன்றும். ஆனால் இப்போது நிர்வாகிகள் தாங்களே சம்பளம் கொடுப்பதா கவும், அரசு மானியம் மட்டுமே கொடுப்பதாகவும் எண்ணி ஆசிரியர்களை வேலையிலிருந்து எடுத்து விடுகிறார்கள். ஆகை யால் மானியம் என்பதை எடுத்துவிட்டு சம்பளம் என்ற பெயரை அரசு வைக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர் களே, தனியார் பள்ளிக்கூடங்களில் பணியாற்றுகிற ஆசிரியர் பெருமக்கள் சம்பந்தமாகவும் அவர்கள் பிரச்சினைகள் பற்றியும் கேள்விகள் கேட்கப்படுகின்றன. அத்தனை கேள்விகளும், எல்லா நிர்வாகிகளும் மோசம் என்ற அடிப்படையிலே கேட்கப்படுகின்றன. அதுபோலவே எல்லா ஆசிரியர்களும் சரியாக முறையாகப் பணி யாற்றுகிறார்கள், தவறே புரியவில்லை என்ற அடிப்படையில்தான் கேட்கப்பட்டுவருகின்றன. பொதுவாக தனியார் பள்ளிகள் என்றால், ஓரளவிற்குச் சரியாக நடக்கிறது என்ற ஒரு கருத்து இருப்பதற்கு மாறாக, அவையும் அரசுப் பள்ளிகள் போல இருக்கின்றன என்று வரக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே ஆசிரியர்கள் உரிமைகள் பாதுகாக்கப்படவும், அந்தப் பள்ளிக்கூடங்களை நிர்வாகம் சரியாக நடத்துவதற்கும் அவர் களுக்கு ஓர் உற்சாகத்தையும், ஆர்வத்தையும் உண்டுபண்ணக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டுமே தவிர அவர்களுக் கிருக்கிற எல்லாவிதமான உரிமைகளையும் எடுத்துக் கொள்வது என்பதை நாம் ஆராய்ந்துபார்ப்போமேயானால். இதுவரைக்கும் நமக்குக் கிடைத்திருக்கிற அனுபவம், திருப்திகரமாக இல்லை.

**திரு. பா. ரா. தாமஸ்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கூறிய அந்த உச்சநீதிமன்ற தீர்ப்பைக் கொடுத்த ஜஸ்டிஸ் பசல் அலி என்பவர், ஒரு மாநிலத்தினுடைய பாடத் திட்டத்தை ஒரு நிர்வாகம் ஏற்றுக் கொண்டு அமல்நடத்தும்போது, அந்த அரசிடமிருந்து முழுமை யாக மானியம் பெறும் போது, அந்த ஆசிரியர்களுடைய சர்வீஸ் கண்டிஷனைப் பாதுகாக்கக்கூடிய உரிமை மாநில அரசுக்கு இருக்கிறதென்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படை

யிலே சிறுபான்மையினரோ பெரும்பான்மையினரோ, ஆசிரியர் களுக்குப் பணிப் பாதுகாப்பு என்ற அடிப்படையிலே, சட்டம் கொண்டுவந்து பாதுகாப்பு கொடுக்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அருள்கூர்ந்து முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நாம் அப்பீல் செய் திருக்கிறோம். அந்த அப்பீல் எடுத்துக் கொண்டு, தீர்ப்பு சொன்னால், பிரச்சினை இல்லை. அந்த அடிப்படையிலே நாம் காரியங்களைச் செய்கிறோம்.

### *U. G. C. Pay Scale for College Teachers.*

* 140 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that, as per G. O. Rt. No. 291, Education, dated 27th February 1980, the pay of certain College Teachers has been fixed in the scale applicable to the U. G. Professors (i. e., Rs. 700-1,600) starting initially at Rs. 1,100 as on 1—1—1974 with monetary effect from 1—1—1977;

(b) if so, the reasons for not extending this privilege to other College Teachers of the same category; and

(c) the number of Teachers affected thereby?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) மேற்படி அரசாணையில் அளித்துள்ள சலுகைகளை இதே நிலையில் உள்ள கல்லூரி ஆசிரியர்களுக்கும் அளிப்பதற் கான கருத்துரு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(உ) சுமார் 10 ஆசிரியர்கள்.

**திரு பா. ரா. தாமஸ் :** துணைத் தலைவரவர்களே, மதுரை யில் உள்ள செந்தமிழ்க் கல்லூரியில் பி. லிட். வகுப்பு ஆரம் பித்தார்கள். 1—7—1976 அன்று நம்முடைய மாநில அரசின் ஒப்புதலோடு ஒரியண்டல் கல்லூரியாக அது ஆரம்பிக்கப்பட்டது. அவர்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின் படி ஊதியம் கொடுக்கப்பட வேண்டியிருந்தாலும், 24—12—1984 முதல்தான் வழங்கப்படுகிறது. எனவே அவர்களுக்கு 1—7—1976 முதலே பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரையின் அடிப் படையில் ஊதியம் வழங்க வேண்டும். கலைக் கல்லூரி துணைப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள் என்ன ஊதியம், சலுகைகள் பெறுகிறார்களோ அதே முறையிலே செந்தமிழ்க் கல்லூரியில் பணியாற்றுகிறவர்களுக்கும் சலுகைகள், ஊதியத்தை வழங்க கல்வி அமைச்சரவர்கள் முன்வருவார்களா?



**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** என்னிடத்தில் தரப் பட்டுள்ள விவரத்தில் செந்தமிழ்க் கல்லூரி என்றில்லை. 10 ஆசிரியர்கள் கூடுதல் பேராசிரியர்களாகப் பணியாற்றுவதாகக் குறிப் பிடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பிரச்சினையை இப்போது அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பின ரவர்கள் கருத்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு மு. செ. சங்கரலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவ ரவர்களே 10 கல்லூரிகளில் பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின்படி ஊதியம் தரவில்லை. மதுரையில் செந்தமிழ்க் கல்லூரியில் உள்ள ஆசிரியர்களுக்கு 1—7—1976 முதல் கொடுக் காமல், 1982-லிருந்து கொடுக்கப்படுகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு பா. ரா. தாமஸ் :** செந்தமிழ்க் கல்லூரிக்கும், கலைக் கல்லூரிக்கும் பெருத்த வேறுபாடு இந்த மாநிலத்தில் இருக்கி றது. மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் பல சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். கலைக் கல்லூரி முதல்வர்களுக்கு 200 ரூபாய் சிறப்புப் படி கொடுத்திருக்கிறார்கள். அதே முறையில் தமிழ்க் கல்லூரி முதல்வர்களுக்கும் சிறப்புப் படி வழங்க வேண்டும். அடுத்து 10 ஆண்டு பணிக்காலம் முடித்த துணைப் பேராசிரியர் களை பேராசிரியர்களாக்கும் சலுகையை கலைக் கல்லூரி ஆசிரியர் களுக்கு அறிவித்திருக்கிறார்கள். அதையும் இவர்களுக்கு வழங்க வேண்டும். இந்தக் கருத்துக்களை மாண்புமிகு கல்வி அமைச்ச ரவர்கள் அருள்கூர்ந்து கவனித்து ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** அது குறித்துப் பரி சீலிக்கப்படும்.

### வான்இயல் கையடக்க தாரகை ஆய்வுக்கூடம்

* 141 வினா—திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு வி. வி. வி. ஆனந்தம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) Starlab Portable Planetarium எனப்படும் வான் இயல் கையடக்க தாரகை ஆய்வுக்கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில் அது எங்கு, எப்போது அமையவிருக் கின்றது?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) ஸ்டார் லேப் பிளேனிடோரியம் என்னும் சாதனங்கள் இரண்டை (ஒன்று ரூ. 1 இலட்சம் செலவில்) மொத்தம் ரூ. 2 இலட்சம் செலவில் வாங்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அவை பொதுவாக பள்ளிகளில் வான 'சாஸ்திரம் பற்றி கற்றுத்தர பயன்படுத்தப்படும். இவற்றை

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவிருப்பதால், அவை வாங்கி முடிந்த பின்னரே அவற்றை எங்கு அமைக்கலாம் என்பது குறித்து முடிவு செய்யப்படும். அதனை எளிதில் எடுத்துச் செல்லக்கூடியதாகையால், அதனை அமைக்கும் இடத்தைச் சூழ்ந்துள்ள பல பள்ளிகளும் அவற்றைப் பயன்படுத்தலாம்.

**திரு சி. ரா. லெட்சுமிகாந்தன்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய அந்தத் திட்டத்தை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். இதைப் போலவே கர்நாடக மாநிலத்தில் பெங்களூரிலும், மேற்கு வங்கத்தில் கல்கத்தாவிலும் வான இயல், அறிவியல் அடிப்படையில் பொதுமக்கள், மாணவர்கள் இளைஞர்கள் ஆகியோருக்குப் பயன்படும் வகையில் மிகச் சிறப்பாக ஆய்வுக்கூடங்களை அமைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆய்வுக் கூடங்களை தமிழ்நாட்டின் முக்கிய இடங்களில் அமைக்க அரசு சிந்திக்கிறதா? அப்படித் திட்டம் இப்போது இல்லையென்றால், வருங்காலத்திலாவது அதுபற்றிப் பரிசீலித்து, அரசு ஒரு முடிவெடுக்குமா?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவரவர்களே, இதில் ஏற்கனவே அரசு முடிவெடுத்திருக்கிறது. சென்னையில் பெரியார் அவர்கள் பெயரில் ஓர் அறிவியல் தொழில்நுட்ப மையம் ஏற்படுத்தி, அதிலே பிளேனடோரியம் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த பிளேனடோரியத்திற்கான முழுச் செலவையும் பிர்லா டிரஸ்டைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக் கொள்வதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகள் தொடங்கப்படும்.

(முற்பகல் 10-20)

**திரு பா. ரா. தாமஸ்:** இவ்வாறு அமைக்கப்படும் பிளேனடோரியத்தில் எத்தனை பேர் அமர முடியும்? அதற்கு எவ்வளவு செலவாகும் என்று மதிப்பிடப்பட்டதா? அதற்கு மத்திய அரசின் பங்கு எவ்வளவு? மாநில அரசின் பங்கு எவ்வளவு?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** பிளேனடோரியத்தில் 300 பேர் உட்கார்ந்து பார்க்கலாம். பக்கத்தில் அறிவியல் கூடம் இருக்கும். எல்லாம் சேர்ந்து அதற்காக 4 கோடி ரூபாய் செலவாகும். பிளேனடோரியத்திற்கு மட்டும் 1½ கோடி ரூபாய் செலவாகும். அதற்கான செலவை பிர்லா டிரஸ்ட் செய்கிறார்கள். சயன்ஸ் சென்டருக்கான செலவை அரசு ஏற்கும். மத்திய அரசு 7 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உதவி செய்ய முன்வருவார்கள்.





### அறிவியல் பட்டதாரிகள்

***142 வினா—செல்வி ஆ. லீலாவதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் பாடத்திற்கு, அறிவியலில் பட்டம்பெற்ற பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அரசு முடிவெடுத்து உள்ளதென்பது உண்மையா?

(இ) இல்லையாயின், அதை அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) நடுநிலைப் பள்ளிகளிலும், உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளிலும், நடுநிலை வகுப்புகளாகிய 6—8 வகுப்புகளுக்குப் பெரும்பாலும் (இடைநிலை) செகண்டரி கிரேட் ஆசிரியர்களே பாடம் கற்றுத் தரும் நிலையே வாடிக்கையாக இருந்து வருகிறது. இந்நிலையில் மாற்றம் தேவையெனக் கருதப்படவில்லை. அறிவியலில் பட்டம்பெற்ற பி. டி. ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக உடைய நடுநிலைப் பள்ளிகளில் அவர்கள் அறிவியல் பாடங்களைக் கற்றுத் தரலாம்.

**செல்வி ஆ. லீலாவதி:** இப்பொழுது அறிவியல் பாடத்திட்டம் உயர்ந்த நிலையில் இருக்கிறது. அதனால் இடைநிலை ஆசிரியர்கள் அறிவியல் பாடங்களைக் கற்பிக்க சிரமப்படுகிறார்கள். ஆகவே பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுள் 8 ஆம் வகுப்பில் அறிவியல் பாடங்களைப் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** இப்பொழுது இருக்கின்ற நிலைமையில் பி. டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களைப் போடுவது சாத்தியமில்லை. காரணம் இப்பொழுது செகண்டரி கிரேட் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆகவே இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் ஏற்கனவே பணியில் இருக்கின்ற ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி தரலாம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

**திரு க. மீனாட்சிசுந்தரம்:** கிராமப்புறங்களில் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்புகளைப் பொறுத்தவரையில் அறிவியல் பாடங்களை போதிக்கத் தேவையான வாய்ப்பு வசதிகள் பெரும்பான்மையான பள்ளிகளில் ஏற்படுத்தப்படவில்லை. அதனால் கல்வியின் தரம் குறையக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு நடுநிலைப் பள்ளியிலும் அறிவியல் பாடங்களைப் போதிப்பதற்கு தேவைப்படுகின்ற உபகரணங்கள், வாய்ப்புகள், வசதிகள் எல்லாம் உடனடியாக ஏற்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** நாம் ஆண்டுதோறும் ஒரு சில பள்ளிகளுக்கு இத்தகைய வசதிகளைச் செய்து வருகிறோம். அந்த அடிப்படையில் வாய்ப்புகள் வசதிகள் இல்லாத மற்ற பள்ளிகளுக்கு ஏற்பாடு செய்யலாம்.

**திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் :** எட்டாம் வகுப்பு என்பது weakest link என்கிற நிலையில் உள்ளவர்கள் என்ற கருத்தை ஏற்கனவே இதே அவையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பல மாநிலங்களில் கல்வியின் தரத்தை உயர்த்தக் கூடிய நிலையில் 8 ஆம் வகுப்புகளில் உயர் கல்வி தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு பாடங்களை போதிக்கிறார்கள். இப்பொழுதுகூட பணியில் இருந்து கொண்டே இடைநிலை ஆசிரியர்களாக இருந்து கொண்டே கணிதம், அறிவியல் போன்ற பாடங்களைப் படித்து தகுதி பெற்ற பல பட்டதாரி ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கல்வியின் தரத்தை உயர்த்துவது என்கிற அடிப்படையிலும், இடைநிலை ஆசிரியர்கள் உயர் கல்வியில் தேர்ச்சி பெற்றிருப்பதன் அடிப்படையில் அவர்களின் பணி நலன் அடிப்படையிலும், அவர்களுடைய பணி நலனை மேம்படுத்துவதற்காகவும் இப்படிப்பட்டவர்களை 6, 7, 8 ஆம் வகுப்புகளில் போதிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தால், இந்த இரண்டு பிரச்சினைகளையும் எளிதாகத் தீர்க்கலாம் அல்லவா? அதற்கேற்ற வகையில் இது குறித்து அரசு ஆராயுமா?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** இதனால் புதிய பிரச்சினை தோன்றியிருக்கிறது. அப்படி சிந்திப்பதில் பயனில்லை. ஆனால் 8 ஆவது வகுப்பை ஹைஸ்கூலில் சேர்க்கலாம் என்ற யோசனையைத் தான் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். மகாராஷ்டிராவில் இந்தத் திட்டத்தைப் பின்பற்றியிருக்கிறார்கள். அந்த வகையில் எட்டாவது வகுப்பை ஹைஸ்கூலில் சேர்ப்பதன் வாயிலாக நாம் நினைக்கின்ற ஒரு நல்ல மாறுதலை உருவாக்கலாம். அதை உருவாக்க நிறைய பணம் செலவாகும் என்பதால் தான், இப்பொழுது அதை ஒத்தி வைத்திருக்கிறோம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** பட்டதாரி தலைமை ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளில் அறிவியல் பாடங்களை அவர்களே போதிக்கலாம் என்ற கருத்தினை இதே அவையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். எல்லாப் பள்ளிகளிலும் இன்றைய தினம் பட்டதாரி தலைமை ஆசிரியர்கள் இல்லை. இன்றுள்ள நிலைமை என்னவென்றால் பட்டதாரி ஆசிரியருக்குரிய தகுதி பெற்ற பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதற்காக வேண்டி மட்டும் நான் சொல்லவில்லை. 8 ஆம் வகுப்பு கல்வியின் தரம் உயர வேண்டுமென்று சொன்னால், அது பட்டதாரி ஆசிரியர்கள் போதிப்பதன் மூலம் மட்டுமே முடியும். இன்றைக்கு இளநிலை ஆசிரியர் பயிற்சி இல்லை. இதன் காரணமாக ஏராளமான



இடைநிலை ஆசிரியர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களைப் பொறுத்த வரையில், நிலைமை அப்படி அல்ல. அவர்களில் ஏராளமான பேர் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். இதையெல்லாம் கருத்தில் கொண்டு நான் சொன்ன கருத்தினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் அதுபற்றி பரிசீலனைக்கு எடுக்கிறபோது, இதுவும் கவனத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, மகாராஷ்டிரத்தில் எட்டாவது வகுப்பு உயர் நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையில் இங்கும் அது மாதிரி சேர்க்கப்பட இருக்கிறது என்று அமைச்சர் சொல்லி, நிதிநிலை காரணமாகத் தான் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். மேல்நிலை வகுப்பைக் கொண்டு வந்ததே கிராமங்களில், கல்லூரிகளுக்கு சென்று படிக்க முடியாத மாணவர்களிடையே அதைப் பரவலாக்குகிற வகையில்தான் என்று நான் கருதுகிறேன். அமைச்சரும் அப்படித்தான் சொன்னார்கள். ஆனால் 8 ஆவது வகுப்பை எடுத்து அதை உயர் நிலைப் பள்ளியில் சேர்த்து, தொடக்கக் கல்வி நிலையில் மட்டும் குவியலாக்குகிற வகையில் புதிய முறைகளை உயர் நிலைப் பள்ளிகளில் கொண்டு வருகிற கருத்தை, ஆசிரியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்கவில்லை. கல்வியாளர்களும் ஏழைக் குழந்தைகள் பயிலக் கூடிய வகையில் இல்லை என்று சொல்லி அதை ஏற்கவில்லை. அதனால் பொது மக்களும் அதை விரும்பவில்லை என்ற கருத்தை பல முறை நான் சொல்லி இருக்கிறேன். ஆகவே அந்தத் திட்டத்தை............

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் தனது கருத்தைச் சொல்லாமல், துணைக் கேள்வியாகக் கேட்டால், நலமாக இருக்கும்.

**திரு க. மீனாட்சிசுந்தரம்:** ஆகவே எப்படி கிராமப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தைப் பரவலாக ஆக்கினோமோ அது போல் நடுநிலைப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பை ஏற்படுத்தி, அதற்குரிய வாய்ப்பு வசதிகளை அங்கேயே சேர்த்துத் தருவதன் மூலம் பரவலாக்கிய தன்மையை குவியலாக்காமலிருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, மாணவர்களின் வசதி, கல்வியின் தரம் இது போன்ற எல்லாவற்றையும் வைத்துத்தான் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டி

யிருக்கிறது. நாம் கல்வியைப் பரவலாக்குவதற்கு கல்வியின் தரம் உயர்வதற்கான யோசனையை ஏற்றுக் கொள்ள மறுப்பது அவ்வளவு சரியல்ல.

*Institute of Agricultural Studies*

* 143 Q.—THIRU S. J. SADIQ PASHA: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Bharathidasan University, Thiruchirappalli, proposes to start an Institute of Agricultural Studies; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** (அ) பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் வேளாண்மைத் துறை சார்ந்த படிப்பு நிலையம் (Institute of Agricultural Studies) தொடங்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(இ) முதற்குறிப்பிட்டுள்ள கேள்விக்குப் பதில் 'இல்லை' என்றாதலால் அது தொடர்பான வேறு விவரங்கள் தற்போதைக்கு எழவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, பாரதிதாசன் பெயரால் அமைக்கப்பட்டிருக்கிற பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு என்று ஒரு தனி துறை இல்லையென்ற குறை இருக்கிறது. அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? மற்ற எல்லாத் துறைகளும் இருக்கும்போது, தமிழுக்கு மட்டும் தனித் துறை இல்லையென்றால், அது ஒரு மிகப் பெரிய குறையாக இருக்கிறதே. அதை இந்த அரசு போக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அதனுடைய எல்லையிலேயே தான் தமிழ்ப் பல்கலைக் கழகமே அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு கல்லூரிகளில் தமிழ்த் துறை இருக்கிறது. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் எல்லாத் துறைகளும் இருக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. ஆனால் பாரதியார் பல்கலைக்கழகமானாலும், பாரதிதாசன் பல்கலைக்கழகமானாலும் மொழிக்கென்று ஒரு துறை இருக்க வேண்டுமென்று அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று பாடியவர் பாரதிதாசன். ஆகவே அவருடைய பெயரால் இருக்கக் கூடிய பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு என்று தனித் துறை இல்லாதது தமிழுக்கே ஒரு இழுக்காக இருப்ப



பதைப் போல இருக்கிறது. ஆகவே அங்கே தமிழ்த் துறையொன்று படுத்த அரசு முயற்சி எடுக்க வேண்டும். மேலும் 'தமிழ் இயக்கம்' என்ற நூலை அங்கே பாடத்திட்டத்திலிருந்து எடுத்தது குறித்து அதிலுள்ள குறைபாடுகளைக் களைந்து அதை மீண்டும் வைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, பாரதிதாசன் பெயரால் பல்கலைக்கழகம் அமைத்துவிட்டதாலேயே, தமிழுக்கு ஒரு துறை வேண்டுமென்று சொல்வதைவிட, தமிழுக்கு ஒரு துறையும் அங்கே செயல்பட வேண்டுமென்று சொல்வதுதான் சரியாக இருக்கும். அத்தகைய முயற்சிகளில் அந்தப் பல்கலைக்கழகம் ஈடுபடுவதற்கு நாம் இந்த நேரத்தில் ஒருமித்த வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்ளலாம். "தமிழ் இயக்கம்" என்ற நூலைப் பொறுத்த வரையில், அது ஒரு குறிப்பிட்ட சாரரைப் புண்படுத்துகிறது என்று சொல்லித்தான் அதை எடுத்திருக்கிறார்கள். அது குறைபாடு என்று சொல்கிற அளவுக்கு இருந்தால், அந்தக் குறைபாடுகள் என்ன என்று தெரிந்தால், நாம் அவற்றைத் திருத்தலாம், ஆனால் அது அப்போது குறைபாடா இல்லையா என்ற விவாதப் பொருளாகிவிடும்.

**திரு க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, 'தமிழ் இயக்கம்' என்ற நூலில் ஒரு சாரரைக் குறை சொல்வதாக இருக்கிறது என்று குறிப்பிடப்படுகிறது. நம்முடைய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலிலே கூட ஒரு பகுதி ஒரு சிலரைப் புண்படுத்துவதாக இருப்பதாகச் சொல்லி அதை நீக்கிவிட்டுத்தான் மற்ற பகுதிகளை இன்றைக்குப் பாடிக்கொண்டிருக்கிறோம். அது போல் அந்த "தமிழ் இயக்க"த்தில் ஒரு பகுதியை மட்டும் நீக்கிவிட்டு, அதை பாடத்திட்டமாக வைப்பதற்கு என்ன சங்கடம் இருக்கிறது? அதற்காக அந்த நூலையே எடுத்துவிட வேண்டுமா? அந்தக் குறைகளைத் திருத்தி அந்த நூலை வைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இப்போது சொல்கிற யோசனை புதிய யோசனை. தவறுகளைக் களைந்து அதை வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதை ஒரு புதிய யோசனையாகச் சொல்கிறார்கள். பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**Long Distance Public Transport Routes.**

144. * THIRU S. J SADIQ PASHA: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) Whether it is a fact that Private Bus operators are permitted to ply their buses in the intermediate portions of routes taken over by the Government, fos Public Transport System under Nationalisation of Bur Transport in the State; and

(b) the long distance routes taken over by the Government under Public Transport system from 1—1—1980 to 20—10—1983 ?

**மாண்புமிகு திரு க. முத்துசாமி:** (அ) தனியார் பெருந்து உரிமையாளர்கள் பெருந்து போக்குவரத்தை அரசுடைமை ஆக்கும் திட்டத்தின்கீழ் பெருந்துப் போக்குவரத்து ஏற்பட்டிருக்கின்ற அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட வழித்தடங்களின் இடைப்பட்ட பகுதிகளில் பேருந்து ஓட்டுவதற்கு நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ) 1—1—1980 முதல் 20—10—83 வரை நீண்ட தூர பொதுப் போக்குவரத்து தடங்கள் எதுவும் அரசால் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(முற்பகல் 10-30)

**திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு அந்த வழித்தடங்களுக்கு சில பல விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. அத்தகைய நிபந்தனைகள் ஏதுமில்லாமல், பப்ளிக் செக்டாரில் உள்ள ரூட்களில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று திட்டவட்டமாக அமைச்சர் அவர்கள் அறிவிக்க முன்வருவாரா? அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு க. முத்துசாமி:** அடிப்படை வழித்தடங்களில் இருக்கிற அனைத்து பேருந்துகளையும் உடனடியாக அரசுத் துறையில் மாற்ற வேண்டுமென்றால், உடனடியாக அதற்காகக் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவேதான், சிலபல வரைமுறைகளுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு அனுமதி கொடுக்கிறோம். எனவே இந்த நிலைமை மாறுகிறபோது, அந்த நேரத்தில் அந்தப் பேருந்துகளையெல்லாம் அரசுப் பொறுப்பில் எடுத்துக்கொள்கிற நிலைமைதான் உருவாகும். அந்த நிலைமையில்தான் இந்த வாய்ப்பை இப்போது அளித்திருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.



[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### அவையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இடம் ஒதுக்கீடு குறித்து.

**திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவை பற்றிய பிரச்சினை குறித்து தங்கள் மூலமாக விளக்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் இந்த அவையில் ஐந்து உறுப்பினர்களாக இருக்கிறோம் என்று தங்களுக்கு ஏற்கெனவே தெரிவித்திருக்கிறோம். டாக்டர் கலைஞர் அவர்கள் எங்களுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் தெரிவித்திருக்கிறோம். ஆனால் இன்றைக்குப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அதாவது "திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 5 உறுப்பினர்கள் மேலவையில் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியில் திருமதி தாரா செரியன் அவர்கள் சேர்ந்த பிறகு, மேலவையில் 5 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆகவே இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவருக்குத்தான் எதிர்க் கட்சி வரிசையில் முதலிடம் கொடுக்கப்பட இருப்பதாக". செய்தி வந்திருக்கிறது. நம்முடைய அவையிலிருந்து எங்களுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பில் இங்கே எங்களுக்குத் தற்காலிகமாகத் தான் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதலிடம் வெற்றிடம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இந்த நிலைமையில் பத்திரிகையில் வந்திருக்கிற செய்தி சரியா? இல்லையென்றால் தாங்கள் அறிவித்திருப்பதைப் போல் இது தற்காலிக ஒதுக்கீடுதானா? காங்கிரஸ் கட்சியின் சார்பாக தலைவர் யார் என்று அவர்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்களா என்பதைப் பற்றியும் இந்தச் செய்தியைக் குறித்தும் இங்கே விளக்கம் தேவை என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்தச் செய்தி பத்திரிகையாளர்களால் போடப்பட்டது. அது துறையிலிருந்து தரப்பட்ட செய்தியல்ல. இரண்டாவது, காங்கிரஸ் கட்சியின் சார்பில் 5 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் 5 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதுதான் இப்போதுள்ள நிலைமை. காங்கிரஸ் கட்சியின் தலைவர் யார் என்று அவர்கள் தெரிவித்த பிறகுதான் மற்றதைப்பற்றி முடிவு செய்யப்படும். இப்போது வெற்றிடமாக இருக்கிற இடத்தில் திரு. இராமமூர்த்தி அவர்கள் இருந்தார்கள். எனவே காங்கிரஸ் கட்சியின் தலைவர் இங்கே யார் என்று தெரிந்த பிறகுதான், அந்த இடத்திற்கு தலைவர் அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, யாருக்கு எந்த இடம் என்பதில் மிகவும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. நாங்கள் எந்த இடத்தில் உட்கார்ந்தாலும் பணியாற்றத்தான் வந்திருக்கிறோம். தாங்கள் வாழ்கிற நான் சார்ந்திருக்கிற மாவட்டத்தின் தலைநகரில் உள்ள பெரிய கோயிலினைக் கட்டிய ராஜராஜசோழன் சிலை கோயிலுக்கு வெளியேதான் இருக்கிறது. அவனது சிலையை கோயிலுக்குள்ளே வைப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் செய்தும் முடியாமல் போய் அந்த ராஜராஜசோழனின் சிலை இப்போதும் வெளியேதான் இருக்கிறது. அதனாலே இருக்கிற இடம் எது என்பதைப்பற்றி பிரச்சினை இல்லை. என்னைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் அமர்ந்திருக்கிற இடத்தில் அமர வேண்டியிருந்தாலும், அங்கேயிருந்து என்னுடைய குரலை எழுப்பத்தான் தயாராக வந்திருக்கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு சாதிக் பாட்சா அவர்கள்கூட இதை ஒரு பிரச்சினையாகக் கேட்கத் தேவையில்லை என்று குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதை இங்கே யாரும் பிரச்சினையாகச் செய்யவில்லை. உண்மையிலேயே காங்கிரஸ் கட்சி இந்த அவையில் எதிர்க் கட்சியாக இருந்து வருகிறது. அடுத்து திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. இப்போது காங்கிரஸ் கட்சியிலும் 5 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலும் 5 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆகவே "ஸ்டேடஸ் குவா" (status quo) என்ற முறையில் காங்கிரஸ் கட்சி எதிர்க் கட்சியாக இருக்கிறது. இதுதான் நிலைமை. யார் இடத்தையோ யாருக்கோ கொடுத்து விட்டதாக யாரும் நினைக்க வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட அபிப்பிராயம் யாருக்கும் இல்லை. இங்கே இருக்கிற நிலைமை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் 5 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் 5 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எனவே "ஸ்டேடஸ் குவா" அப்படியே இருக்கிறது. மாற்ற வேண்டும் என்று எங்களுக்குத் தெளிவாகத் தெரிந்தால், நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வளவுதான்.

**டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே தாங்களே "தற்காலிகமான இடம்" என்றுதான் குறிப்பிட்டிருக்கிறீர்கள். எங்களுக்கு இது தற்காலிகமான இடம்தான் என்று தாங்களே ஒப்புக் கொண்டதற்கு நன்றி. தாங்களே அப்படித்தான் எழுதியிருக்கிறீர்கள், இது தற்காலிகமான இடம்தான் என்பது எனக்கும் தெரியும், நாட்டுக்கும் தெரியும். இது தற்காலிகமானதுதான் என்று ஒப்புக்கொண்டதற்கு நன்றி. ஆனால், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 4 பேர்களாக இருக்கும்போதே, நாங்கள் ஐந்து பேர்களாக ஆகிவிட்டோம் என்பதையும் உணர்ந்து பார்க்க வேண்டும்.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தற்காலிக இடம் என்று ஏன் சொல்லுகிறோம் என்றால், ஒரு கட்சியின் தலைவர் யார், கொறடா யார், உபதலைவர் யார் என்று எங்களுக்குத் தெரிவித்த பிறகுதான், நாங்கள் அந்த இடத்தை யார் யாருக்கு ஒதுக்குவது என்று நிர்ணயிக்க முடியும். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில், அதற்கு இங்கே யார் தலைவர் என்பது எங்களுக்கு இன்னும் தெரிவிக்கப்படவில்லை. அதைப்போலவே ஆசிரியர் கூட்டணியிலிருந்தும் எங்களுக்குச் செய்தி வரவில்லை. எனவே அவர்கள் செய்தி தெரிவிக்கிற வரையில் தற்காலிக இடம் இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி எங்களுக்குத் தெரிந்த பிறகு, இடத்தை நிர்ணயிப்பதில் எந்தத் தவறும் இருக்காது. ஆகவேதான், தற்போது தற்காலிக இடம் என்று ஒதுக்கியிருக்கிறோம். 2 ஆண்டுகளுக்கு முன்னாலேயே கூட இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை எழுந்து, அப்போதும்கூட தற்காலிக இடம் என்று முதலில் சொல்லி, அவர்கள் தங்களின் தலைவர் யார் என்று சொன்னதற்குப் பிறகே இங்கே இடத்தை முறையாக ஒதுக்கியிருக்கிறோம் என்கிற நிலைமையை கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்லியபடி இன்னும் காங்கிரஸ் கட்சியிலிருந்து தலைவர் யார் என்று அறிவிக்கப்படவில்லை. அந்தச் செய்தி இன்றும் தங்களுக்கு வந்து சேரவில்லை. இப்போது நாங்கள் 5 பேர் இருக்கிறோம். நாங்கள் எத்தனை காலம் பொறுத்திருக்க வேண்டும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இதற்குக் கால வரையறை இல்லையா? இப்போது இருக்கின்ற நிலைமையில் நாங்கள் முன்னுரிமை பெற்றிருக்கிறோம். இருந்தாலும் தங்களுடைய கருத்துக்கு மதிப்பு அளிக்கிறோம். இந்தக் காலகட்டத்திலே பொறுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இதிலே கட்சித் தலைவர் யார், துணைத் தலைவர் யார் என்பது பிரச்சினையல்ல. தலைவர் இடத்தை யாருக்கு ஒதுக்குவது என்பதுதான் பிரச்சினை. முதலிலே யார் அமர்வது என்பதுதான் பிரச்சினை. திரு தாஸ் அவர்களை துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பதாக அவர்கள் வந்து காலையிலே சொன்னார்கள். அவர் முன்பே இருக்கிறார். தலைவர் யார் என்ற முடிவை ஓரிரு நாட்களில் சொல்லுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன பிறகு, ஒதுக்கப்படும். யாருக்கு இந்த இடம் என்பதுதான் முக்கியம் அந்த இடத்திலே யார் உட்கார வேண்டும் என்பதைத்தான் நிர்ணயிக்க வேண்டும். கட்சியைப் பொறுத்த வரையில், எந்தப் பிரச்சினையும் வரவில்லை.

**திரு ஆர். டி. சீத்தாபதி:** துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் கேள்வி நேரம் முடிந்த பிறகு 'சீரோ அவர்' என்ற நிலையில் இங்கே யாரும் பேசியதில்லை. இப்போது இது முன்

[திரு ஆர். டி. சீத்தாபதி] [1984 ஏப்ரல் 24

மாதிரியாக அமைந்து விட்டால், எதிர்காலத்திலே அப்படி நிலைமை ஏற்படுகிறபோது, அதற்கான வாய்ப்புகளை தங்கள் தருவீர்களா என்று தெரிந்துகொள்ள விரும்புறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இதை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டியதில்லை என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அவர் "சீரோ அவர்" என்ற முறையில் இந்தப் பிரச்சினையை எழுப்பவில்லை. நடைபெற்றிருக்கக் கூடிய ஒன்றைப்பற்றி ஒழுங்குப் பிரச்சினையாக மாண்புமிகு உறுப்பினர் திரு சாதிக் பாட்சா அவர்கள் எழுப்பினார்கள். இன்னுமொன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு சீத்தாபதி அவர்கள் சொன்னது போல, இனிமேல் இதை முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள வேண்டாம். அவரும் இதைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, 'சீரோ அவர்' என்று ஒன்று இல்லவே இல்லை. இப்படி எதிர்பாராத நிலையில், தெளிவு இல்லாத சூழ்நிலை ஏற்படுகிறபோது, தெளிவு பெறுவதற்காக சில விளக்கங்கள் கொடுப்பது மூறை. அந்த முறையிலேதான் விளக்கம் அளிக்கப்பட்டது என்று கொள்ள வேண்டும்.

## 3. கவன ஈர்ப்பு

**உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட சிறப்பூதியத்தை இராமநாதபுரத்தில் உள்ள தேவகோட்டை கல்வி மாவட்டத்தில் பணியாற்றும் உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களிடம் பிடித்தம் செய்தது குறித்து.**

**திரு பா. ரா. தாமஸ்:** துணைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட சிறப்பூதியத்தை, அரசாணை எண் 649, கல்வித் துறை, நாள் 2—4—1983-ல் வெளியிடப்பட்ட ஆணைகளுக்கு மாறாக பிடித்தம் செய்தது குறித்தும், இராமநாதபுரத்தில் உள்ள தேவகோட்டை கல்வி மாவட்டத்தில் பணியாற்றும் உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு நேர்ந்துள்ள இன்னல் குறித்து."

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை@ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு பா. ரா. தாமஸ்:** துணைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள ஆணைக்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 66 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1984 ஏப்ரல் 24] [திரு பா. ரா. தாமஸ்]

ஏற்கெனவே இது குறித்து விளக்க உரை, தெளிவுரை ஆகியவற்றை இயக்குநர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். 19—6—1983-லும் 3—8—1983-லும் இரு கூறாக்கப்பட்ட பாடத் திட்டங்களில் தொழில் பிரிவு ஆசிரியர்களாக உள்ளவர்களுக்கு சிறப்பூதியம் வழங்குவது குறித்து விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். பள்ளி நேரங்களிலும், வெளி நேரங்களிலும் பாடம் எடுத்த அந்தக் காலத்தைக் கணக்கிட்டு 24 பாட வேளையாக எடுத்துக் கொள்ளலாம் என்று ஆணை இருந்தும் கூட, தேவகோட்டை கல்வி மாவட்டத்திலே, மாநிலத்தின் ஆசிரியர்கள் இயக்கத்தின் பொதுச் செயலாளராக உள்ள அவருக்கு வேண்டுமென்றே 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் மொத்தமாக ரூபாய் 880-ஐப் பிடித்தம் செய்திருக்கிறார்கள். ஆகவே அவருக்கு இந்தத் தொகையை உடனடியாகத் திருப்பிக் கொடுக்க கல்வியமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** இந்தப் பிரச்சினைக்குக் காரணமாக இருந்தது குறித்து தெளிவு ஏற்படுத்தி 16—4—1984-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக 24 பாட வேளைகள் என்ற நிபந்தனை நீக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இனிமேல் இந்தப் பிரச்சினை தீர்வதற்கான நிலைமை உருவாகியிருக்கிறது. நிச்சயமாகத் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

**திரு பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாநில அளவிலே பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுடைய தெளிவுரையும், அறிவுரையும், குறிப்புரையும் தெரிந்தும் கூட இவ்வாறு மாவட்டங்களிலே மாவட்டக் கல்வி அலுவலர்கள் முறைகேடாக நடக்கிறார்களே. குற்றம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா? வேண்டுமென்றே ஒரு ஆசிரியருடைய ஒரு மாதத்திற்கான முழுமையான ஊதியத்தையும் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறைந்த பட்சம் வேலை வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. அதனாலே இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருப்பதாக எனக்குத் தரப்பட்டிருக்கிற குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது அந்த நிபந்தனையை 16—4—84-ல் நீக்கியிருக்கிறார்கள். ஆகவே இனி அந்தப் பிரச்சினைக்கு இடமிருக்காது. ஆகவே ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை அவர்கள் தீர்ப்பதற்கான நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்....

## 4. அரசின் தீர்மானம்

### தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு@ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

**திரு சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன். தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் பல விவரங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக மழை அதிகமாகப் பெய்தாலும், தேவையான மழை பெய்யாமல் வறட்சி ஏற்பட்டாலும், அதனுடைய பின் விளைவுகள் பெரிதும் மே, ஜூன் மாதங்களில் பொதுமக்களை எப்போதுமே பாதிப்பது வழக்கம். ஆகவே, அறுவடை, பயிர் சாகுபடி இல்லாத காலமான மே, ஜூன், ஜூலை மாதங்களில் இப்படிப்பட்ட வறட்சியினுடைய பின் விளைவுகளும் அல்லது அதிக வெள்ளப் பெருக்கத்தின் காரணமாக ஏற்படும் சேதங்களின் பின் விளைவுகளும் பொதுமக்களை மிகவும் பாதித்து, அத்தியாவசியப் பண்டங்களினுடைய விலைவாசிகள் ஏறக்கூடிய சூழ்நிலை இந்த மாதங்களில்தான் உருவாக்கப்படுகிறது. ஆகவே இதைக் கருத்தில் கொண்டு வருகின்ற இந்த மே, ஜூன், ஜூலை மாதங்களில் பொதுமக்களுக்கு எந்தவிதமான நெருக்கடியும் ஏற்படாத வகையில் முன் எச்சரிக்கையாக நம்முடைய உணவுத்துறை தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு கூட, சென்ற ஆண்டு என்று நினைக்கிறேன், காய்கறிகளுக்கு அதிகமான பஞ்சம் ஏற்பட்டது. அதிகமான பற்றாக்குறை ஏற்பட்டது. ஆனால் அப்படிப் பற்றாக்குறை ஏற்பட்ட பிறகுதான், சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதே தவிர, தகுந்த முன் எச்சரிக்கை நடவடிக்கைகளாக முன்கூட்டியே யூகித்து நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக, சென்ற ஓரிரு ஆண்டுகளில் பல கடுமையான விளைவுகள், பாதிப்புகள் பொதுமக்களுக்கு ஏற்பட்டு அவர்கள் மிகவும் அவதிப்

@ 67-103 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



பட்டார்கள். ஆகவே அதைக் கருத்தில் கொண்டு அப்படிப்பட்ட மாதங்களில், குறிப்பாக மே, ஜூன் மாதங்களில் காய்கறித் தட்டுப்பாடு நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கும் இந்தத் துறை தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று சத்துணவு மையங்களைப் பொறுத்தவரையில், அரிசி, பருப்பு முதலியன நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகின்றன. அரிசி, பருப்பு மூட்டைகளாகக் கொடுக்கப்படுகின்றன. அதிலே பிரச்சினைகள் குறைவு. எண்ணெயை மட்டும் கொடுக்கும்போது, சில்லறையாக அளந்து கொடுக்கிறார்கள். அதைச் சரியான முறையில் பார்சல் செய்து, 'பேக்டு டின்' என்று சொல்கிற அளவுக்கு டின்களில் எண்ணெய்களை அடைத்து, டின்களாக வழங்கிவிட்டால், அவைகளை சில்லறையாகக் கொடுக்கும்போது ஏற்படக்கூடிய சில பிரச்சினைகளை, புகார்களை, குற்றச்சாட்டுகளைத் தவிர்க்க முடியும். ஆனால் தற்போது பரவலாக இருக்கின்ற ஒரு புகார் இந்த எண்ணெயை வழங்கும்போது பல தவறுகள் நடைபெறுகின்றன என்பது.

(மாற்றுத் தலைவர் திரு எ. ஜே. தாஸ் தலைமை)

தமிழகம் முழுவதும் இருக்கின்ற அந்தப் புகாருக்குச் சரியான பரிகாரம் எண்ணெயை டின்களில் பார்சல் செய்து டின்களாக வழங்குவது தான். அது ஒவ்வொரு டின்னிலும் குறைந்த பட்சமாக எவ்வளவு இருக்கவேண்டுமென்று துறையே முடிவு செய்து அதைச் சத்துணவு மையங்களுக்கு 5 கிலோ, 10 கிலோ என்று தேவைகளுக்கேற்ப 'சீல்' இடப்பட்ட டின்களாக நாம் விநியோகம் செய்தால், இப்போதுள்ள புகார்கள் குறைவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே அந்த நடவடிக்கையை இந்தத் துறை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சத்துணவு மையங்களில் வழங்கப்படுகின்ற அரிசியானது இப்போது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். அந்த அரிசியினுடைய ரகம் மோட்டா ரகமாக இருக்கின்றது. அந்த மோட்டா ரக அரிசியை பலரும் இப்போது விரும்புவதில்லை. நான் பல இடங்களில் சுற்றிப் பார்த்தபோது, அந்தக் குழந்தைகளினுடைய பெற்றோர்களே என்னிடம் வந்து இந்த அரிசியைப் பற்றிக் குறை கூறுகிறார்கள். ஆகவே நாம் திட்டத்தைக் கொடுக்கும்போது, ஏதோ வேறு எதற்கும் பயன்படாத அரிசியைக் கொடுக்கிறார்கள் அல்லது மோட்டா ரகமான அரிசியைத் தான் கொடுக்கிறார்கள் என்ற ஒரு எண்ணத்தை, உணர்வினை அந்த ஏழை மக்களிடம் ஏற்படுத்தாமல் தவிர்க்கும் பொருட்டு, அங்கே வழங்கப்படுகின்ற அரிசியை நல்ல அரிசியாக வழங்குவதற்குத் தகுந்த நடவடிக்கையை இந்தத் துறை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு விடுதிகளைப் பொறுத்தவரையில், ஓட்டல்களைப் பொறுத்தவரையில், கடந்த 2, 3 ஆண்டுகளாகவே இருக்கின்ற பொதுப்படையான பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. உணவு விடுதிகளைப் பொறுத்தவரையில், உணவுப் பண்டங்களுடைய

விலைகளை தாறுமாறாக ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். அது இன்று சாதாரண பாமர மக்களையும் நடுத்தர மக்களையும் பாதிக்கக்கூடியதாக இருக்கின்றது. 5 ஸ்டார், 3 ஸ்டார் ஓட்டலைப்பற்றி இப்போது நமக்குக் கவலையில்லை. காரணம் வசதி படைத்தவர்கள்தான் அங்கே செல்கின்றார்கள். அங்கே என்ன விலை நிர்ணயிக்கப்படுகின்றதோ அந்த விலையைக் கொடுப்பதற்கு அவர்களுக்குத் தகுதி இருக்கின்றது, சக்தி இருக்கின்றது. ஆனால் நடுத்தர மக்களும் ஏழை மக்களும் சென்று பயன்படுத்தக்கூடிய சாதாரண ஓட்டல்களில் பண்டங்களின் விலைகள் திடீர் திடீரென்று ஏற்றப்படுகின்றன. தாறுமாறாக விலையை ஏற்றுகின்றார்கள். இன்று பொது மார்க்கெட்டிலே என்ன விலையில் விற்கப்படுகின்றதோ அந்த விலையின் அடிப்படையில் இல்லாமல், அதிலே ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்ற வகையில் இந்த ஓட்டல்களில் உணவுப் பண்டங்களினுடைய விலை இருக்கின்றது. இந்த விலைகளை நிர்ணயிப்பது என்பது மிகவும் முக்கியமானது. அது காபியாக இருந்தாலும், டீயாக இருந்தாலும், அல்லது சிற்றுண்டியாக இருந்தாலும், மதிய உணவாக இருந்தாலும், தாறுமாறாக உணவுப் பொருள்களில் விலைகளை ஓட்டல்களிலே ஏற்றக்கூடிய நிலைகள் இருக்கின்றன அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். அதற்கான கடுமையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். காரணம் கடந்த 2, 3 ஆண்டு காலமாகவே இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல், பாதிப்புக்கு உள்ளாகின்றவர்கள் சாதாரண மக்கள் என்பதை இந்த சமயத்திலே தெரிவித்துக்கொண்டு, மாற்று ஏற்பாடாக கூட்டுறவுத் துறை மூலமாக, அரசுத் துறையின் மூலமாக நாமே ஏன் பல இடங்களில் பாமர மக்களுக்காகவும், நடுத்தர மக்களுக்காகவும் ஓட்டல்களைத் தொடங்கக்கூடாது? அப்படி ஓட்டல்களைத் தொடங்குவது குறித்து, நாம் ஏன் பரிசீலனை செய்யக்கூடாது என்பதையும் இந்த சமயத்திலே கேட்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஓட்டல்களைத் தொடங்குவதன் மூலம் ஆரம்ப கட்டத்தில் பல இடையூறுகளும் இழப்புகளும்கூட ஏற்படலாம். ஆனால் பொது மக்களுடைய நன்மையை கருத்தில் கொண்டு, இந்த இழப்புகளை எல்லாம் பொருட்படுத்தாமல், அரசுத் துறையின் மூலமாக, கூட்டுறவுத் துறையின் மூலமாக சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய உணவு விடுதிகளை முதலில் பரிட்சார்த்தமாக முக்கியமான தலைநகரங்களில், சென்னை போன்ற நகரங்களில் ஆரம்பிக்க இந்த உணவுத் துறை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்துக்கொள்வதன் மூலம் தனிப்பட்ட முறையில் ஓட்டல்களை நடத்தக்கூடியவர்கள் தாறுமாறாக விலைகளை ஏற்றக்கூடிய நிலைமைக்கு ஒரு கட்டுப்பாட்டை நாம் விதிக்கலாம். அவர்களுக்கு நாம் ஒரு நிபந்தனையை விதிப்பதற்கும், நாம் விதிக்கின்ற கட்டுப்பாடுகளை அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கும் தகுந்த சூழ்நிலையை உருவாக்குவதற்கு இந்த நடவடிக்கைகள் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தக் கருத்துக்களை அரசு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கைகளை, தக்க முடிவுகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.



**திரு நெல்லை பாலாஜி:** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இப்போது முதன் முதலாகப் பேசுகிறேன். எனவே இது கன்னிப் பேச்சாகவும் அமைகின்றது. உணவுப் பிரச்சினையைப் பற்றிப் பேசும் போது, 1977-லே இருந்து, கடந்த 7 ஆண்டு காலமாக, இயற்கையின் ஏதாவது சீற்றத்திற்கு நம்முடைய துறை ஆளாகியிருக்கின்றது. முதல் மூன்றாண்டு காலம் கடுமையான வெள்ளமும், அடுத்த மூன்றாண்டு காலம் கடுமையான வறட்சியும், இந்த ஆண்டுக் காலத்திலேயே வெள்ளமும், வறட்சியும் இரண்டும் கலந்த நிலையில் இருந்தும், நம்முடைய உணவுத் துறை ஓரளவுக்கு மக்களுக்குத் தர வேண்டியதை பக்குவமாகவும் பரிவுடனும் கவனித்து வந்திருக்கின்றது. வாரத்திலே ஒரு நாள் சாப்பிடக்கூடாது என்று சொன்ன காலமும் நம் காலத்திலேயே இருந்தது. பிறகு எதையாவது புசித்துக் கொள்ளலாம் என்று சொன்ன காலமும் இருந்தது.. அப்படி இல்லாமல், தரவேண்டியதை கனிவுடனும், பரிவுடனும் தருகின்றது நம்முடைய துறை. இருப்பினும்கூட, தருகின்ற அவ்வளவும் சாதாரண மனிதனுக்கு, சராசரி மனிதனுக்குப் போய்ச் சேருகிறதா என்றால், இடையிலே உள்ளவர்களுடைய தகிடுதத்தங்கள் விளைவாக அது போக மறுக்கிறது. அரசு இவ்வளவு தருவதாக இருந்தாலும்கூட பட்டி தொட்டிகளில் எல்லாம், சம்பந்தப்பட்ட சராசரி மனிதனுக்கு அது கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் அவ்வப்போது நம்முடைய செவிகளுக்கு வந்து கொண்டுதான் இருக்கின்றது. அந்தத் தொல்லைகளுக்கு எல்லாம் மூல காரணம் கடந்த பத்து ஆண்டு காலமாக ஆங்காங்கு நடந்தது தான். அவர்கள்தான் ஏற்கனவே இருந்த ஆட்சியினருக்கு இழிவையும், பழியையும் ஏற்றித் தந்திருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற நமக்கும் இழிவையும், பழியையும் ஏற்றித் தருகிறார்கள். அவைகளை எல்லாம் ஓரளவுக்கு சமப்படுத்தி சராசரி மனிதனுக்கும், சாதாரண மனிதனுக்கும் அவன் அனுபவிப்பதற்குண்டான அளவுக்கு அத்தனை பொருள்களையும் அரசு தரவேண்டும் என்ற அளவிலே, அரசு செயல்பட வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி.

(முற்பகல் 10-50)

**செல்வி ஆ. லீலாவதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உணவு நிலைமை குறித்து கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது விநியோக முறையில் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகியவற்றை வறட்சிக் காலத்திலும், வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட காலத்திலும், பயிர்கள் நாசமான காலத்திலும் அரசு பொது மக்களுக்கு விநியோகம் தடைபடாமல் கொடுத்துக்கொண்டிருப்பதை நான் பொதுமக்கள் சார்பாகப் பாராட்டி, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்; அதை வரவேற்கின்றேன்.

[செல்வி ஆ. லீலாவதி] [1984 ஏப்ரல் 24

அதிலே இரண்டு வாரத்திற்கு ஒருமுறை ஒரு குடும்ப அட்டையிலே எல்லாப் பொருள்களையும் வாங்க வேண்டுமென்று இப்போது கூறுகிறார்கள். இது தினசரி கூலி பெறுபவர்களுக்கு ஒரு வகையில் சிரமமாக இருக்கிறது. ஆனால் ஒரு சிலர் அதை வரவேற்கின்றனர், இதற்கு முன்பு ஒவ்வொரு பொருளையும் பல நாட்கள், பல மணி நேரங்கள் கியூவில் நின்று வாங்க வேண்டிய நிலை இருந்தது. இப்போது அந்த நிலைமை மாற்றப்பட்டிருப்பதை அவர்கள் வரவேற்கின்றனர். ஆனால் ஒரு சிலர் தினக்கூலி பெறுபவர்கள் எப்போதெப்போது தங்களுக்குப் பணம் கிடைக்கிறதோ அப்போதப்போது அரிசியை வாங்கும் நிலையில் உள்ளவர்களுக்கு இந்த நிலைமை மிகவும் சிரமத்தைக் கொடுக்கிறது. எனவே அவர்கள் எப்போது வேண்டுமானாலும் பொருள்களை வாங்கிக்கொள்ளலாம் என்று அரசு ஓர் ஆணை பிறப்பித்தால், அப்பேர்ப்பட்டவர்களுக்கு அது சாதகமாக இருக்கும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போது ஒரு ரேஷன் கடையிலே ஏறக்குறைய 2,000 குடும்பத்தினர் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அவற்றை ஓரளவிற்குக் குறைத்து 500 குடும்பத்தினர் ஒரு ரேஷன் கடையிலே வாங்கும் அளவிற்கு அரசு ஆணை பிறப்பித்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று இந்த நேரத்திலே நான் கூறி, அவ்வாறு ஆணை பிறப்பிக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னும் அரிசி, சர்க்கரை ஆகியவைகளை 15 ஆம் தேதிக்குள் பொதுமக்கள் வாங்க வேண்டிய ஒரு நிலை தற்போது இருக்கிறது. 15 ஆம் தேதிக்குள் வாங்க பொதுமக்கள் விட்டுவிட்டால், அதற்குப் பிறகு அவர்களால் வாங்கமுடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. இதனால் குறைந்த சம்பளம் வாங்குபவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே அரசு இதைக் கவனித்து எந்த எந்தப் பொருள்களை குறைந்த சம்பளம் பெறுபவர்கள் என்றைக்கு வாங்க வந்தாலும், அவர்கள் வாங்குவதற்கு வாய்ப்பளிக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நியாய விலைக் கடைகள் ஏழை மக்களுக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே அவர்களுக்கு சாதகமாக இருக்கும் வகையில் இந்த வழிவகைகளைச் செய்தால், அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

இப்போது எல்லோருக்கும் ஒரு பெரிய கவலை. தேங்காய் எண்ணெய் கிலோ ரூ. 40, இதனையும் அரசு நியாய விலைக் கடைகள் மூலம், பொது விநியோகக் கடைகள் மூலம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொருவரும் தங்கள் தலைக்குத் தேய்த்துக் கொள்வது தேங்காய் எண்ணெய்யாக இருக்கிறது, அதனை இவ்வளவு விலை கொடுத்து வாங்குவதற்கு மிகவும் சிரமம். திடீரென்று அதன் விலை அதிகமாயிருப்பது பொது மக்கள் அனை



1984 ஏப்ரல் 24] [செல்வி. ஆ. லீலாவதி]

வருக்கும் தெரியும். ஆகையால் அரசு இந்த விநியோகக் கடைகளில் தேங்காய் எண்ணெய்யும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாத வருமானம் ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக உள்ள குடும்பங்களுக்கு அரிசி வழங்குவதை மாத வருமானம் 1,500 ரூபாய் வரை உள்ளவர்களுக்கும் கொடுத்தால், நன்றாக இருக்கும். அதாவது ஒரு குடும்பத்திலே அநேகர் இருக்கும்போது, அவர்களுக்கு 1,500 ரூபாய் வருமானம் என்பது மிகக் குறைவானதாகத்தான் இருக்கிறது. எனவே, அப்பேர்ப்பட்டவர்களுக்கும் ஒரு வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி கொடுத்தால், அந்தக் குடும்பங்களும் பலன் பெறும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, இப்போது கார்டு ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு வாரம் ஒரு கிலோதான் கொடுக்கப்படுகிறது என்றும், குழந்தைகளுக்கு அரை கிலோ கொடுக்கப்படுகிறதென்றும் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(மாற்றுத் தலைவர் திரு. க. அருணாசலம் தலைமை)

500 ரூபாய், 600 ரூபாய் சம்பளம் உள்ளவர்களுக்கு ஒரு கிலோ அரிசி என்று இல்லாமல், 2 கிலோவாகக் கொடுத்து, அந்த ஏழை மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். கடைகளிலே அதிகமான அளவுக்கு 'கியூ' இருக்கிறது. இப்போது வெய்யில் காலமாக இருப்பதால், அதிக நேரம் கியூவில் இருந்து வாங்க முடியாது. எனவே காலையிலே 7 மணிக்கு கடையைத் திறந்து வெய்யிலுக்கு முன்பாக விநியோகம் செய்யவேண்டும். மீண்டும் மாலை 5 மணிக்கு மேல் கடையைத் திறந்து விநியோகம் செய்தால், பெண்கள் அதிக நேரம் வெய்யிலில் நிற்காமல், வெய்யில் வருவதற்கு முன்பாகவே தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிச் செல்ல வாய்ப்பு ஏற்படும் என்று கூறி, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தமிழகத்தில் உணவு நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக தங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் தமிழ் நாட்டிலே தொடர்ந்து மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு விவசாயம் பாதிக்கப்பட்டு, இன்றைக்கு அரிசிப் பற்றாக்குறை நிறைய ஏற்பட்டிருக்கிறது. அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருப்பதாக இதிலே

குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு மாதத்திற்கு சத்துணவுத் திட்டத்திற்கு மட்டுமே 80,000 டன் அரிசி தேவை என்றும், ஒரு ஆண்டுக்கு 10 லட்சம் டன் நமக்குத் தேவை என்றும், அது தவிர முடையிருப்பாக 2 லட்சம் டன் வைத்திருக்க வேண்டுமென்றும் இதிலே குறிப்பு காணப்படுகிறது. ஆக 12 லட்சம் டன் தேவைப்படும் போது, இங்கே இதுவரை கொள்முதல் எவ்வளவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1983 டிசம்பர் வரை 1·16 லட்சம் டன்; அதற்குப் பின்னாலே 1984 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாள் வரை 3 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகவும், ஆக மொத்தம் 4·16 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகவும், மீதி 6·84 லட்சம் டன்னுக்கு என்ன செய்வது என்று தெரியாத வகையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் கொள்முதல் செய்ய வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆக இன்னும் பாதிக்கு மேல், அதாவது 6 லட்சம் டன் அரிசி நமக்குக் கிடைத்தால்தான், இந்த ஆண்டிலே பஞ்சம், பசி ஏற்படாமல் மக்களைக் காப்பாற்றுகிற சூழ்நிலை இருக்கும். ஆனால் இன்றைக்கு சாகுபடி எல்லாம் முடிந்து, கொள்முதல் முடிந்து விட்டது. இந்த நிலையில் மேலும் தேவைப்படும் 6 லட்சம் டன்னை எங்கேயிருந்து கொள்முதல் செய்ய இருக்கிறார்கள் என்பதற்கான குறிப்பை இதிலே பார்க்க முடியவில்லை. வெளி நாடுகளிலிருந்து வரவழைக்க இருக்கிறார்களா? மத்திய அரசிடமிருந்து கேட்க இருக்கிறார்களா? மத்திய அரசிடம் 80,000 டன் கேட்டால், 40,000 டன் தருகிறோமென்று சொல்லி, 20,000 டன் தரும் நிலையைத்தான் நம்மால் பார்க்க முடிகிறது. பஞ்ச பாண்டவர் 5 பேர் என்பதற்கு, பஞ்சபாண்டவர் கட்டில் காலைப் போல என்று வாயால் சொல்லி, 3 பேர் என்று விரலைக் காட்டி, 2 என்று சொல்லி, ஒன்று என்று எழுதி, அதற்குப் பின்னாலே அதையும் அழித்துவிடும் நிலையைப் போல, மத்திய அரசிடம் 80,000 டன் கேட்டால், 40,000 டன் தருகிறோமென்று சொல்லி, 20,000 டன் தரும் அளவுக்கு குறைந்து கொண்டே வருகிறது. எனவே எந்த முறையிலே வருங்காலத்திலே அரிசியைக் கொள்முதல் செய்து மக்களுக்கு விநியோகிக்க இருக்கிறோம் என்பதற்கான குறிப்பு இதிலே காணப்படவில்லை என்பதைப் பார்க்கும் போது, நமக்குப் பயமாக இருக்கிறது. வருங்காலத்தில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டால், அதை எப்படிச் சமாளிக்க முடியும் என்பதுபற்றி தெளிவாகச் சொல்லாத நிலையில், அது குறித்து அச்சம் ஏற்படும் நிலை மக்களுக்கு இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பஞ்சம் வருவதற்கு முன்னாலே, வருமுன் காப்பவர்தான் மந்திரி என்பதால், அவர் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதைச் சொல்ல மாண்புமிகு அமைச்சரவர்கள் கடமைப்பட்டவர்கள். சத்துணவுத் திட்டத்திலே 80,000 டன் செலவழிக்கிறோம். அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளிலிருந்து 15 வயது வரை உள்ளவர்களுக்கும் தருவதாக சொல்லப்பட்டிருக்கிறது, அனாதைகளுக்கு வழங்குவதாக உறுதிமொழி சொல்லப்பட்டிருக்கிறது.



(முற்பகல் 11-00)

உறுதிமொழியில் சொல்லப்பட்ட திட்டங்களை எல்லாம் இந்த அரசு நிறைவேற்றுகிறது என்று சொன்னால், நான் சொல்கிறேன் இந்த நாட்டிலுள்ள மக்களில் 90 சதவிகிதம் பேரை தட்டை ஏந்த வைத்த பெருமை இந்த அரசுக்கு உண்டு. ஆனால் அதற்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பெற என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை: அதுபோல் காவல் துறையினருக்கு, தீயணைப்புத் துறையினருக்கு எல்லாம் சலுகை விலையில் வழங்கப்பட்ட உணவுப் பொருட்கள் ஜெயில் துறையில் பணியாற்றுகின்ற வார்டர்களுக்கு இன்னும் பணியாளர்களுக்கு எல்லாம் வழங்கப்படவில்லை என்று நான் அறிகிறேன். அவர்கள் காவல் துறையினர் இல்லையா? ஆகவே சிறைத் துறையில் உள்ளவர்களுக்கு இதுவரை இந்தச் சலுகை வழங்கப்படவில்லை யென்றால், இனிமேலாவது வழங்குவதற்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 17 ஆயிரம் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று அரசால் உறுதிமொழி தரப்பட்டு, பிறகு அந்தக் கடைகள் ஓரளவுக்கு திறக்கப்பட்டிருக்கின்றன. நெல்லை மாவட்டம், தென் ஆற்காடு, தர்மபுரி, தஞ்சை போன்ற மாவட்டங்களில் எல்லாம் 4,277 கடைகள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப் படுகின்றன. அந்தக் கடைகளில் பணியாற்றும் ஊழியர்களை நியமிக்கும்போது, அவர்களுக்கு 150 ரூபாய் சம்பளம் என்று சொல்லி, ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு என்று ஒரு டெசிக்னேஷன் (designation) கொடுத்து நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். அவர்களுக்கு இதுவரை ஊதியம் உயர்த்தப்பட்டிருக் கிறதா என்றால், இல்லை. அதுபோல் ஓராண்டுக்குப் பிறகு அவர்கள் அனைவரும் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று வழங்கப்பட்ட உறுதிமொழி என்ன ஆயிற்று? ஒரு வேளை அந்தக் கடைகளை எல்லாம் மூடுகின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? அப்படி அரசு கடைகளை எல்லாம் மூடிவிட்டால், ஏழையெளிய மக்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருட்கள், குறிப்பாக அரிசி கிடைக்காத சூழ்நிலை ஏற்படும். இதையெல்லாம் குறித்து மக்கள் அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது குறித்தும் நான் மாண்புமிகு அமைச்சரிடமிருந்து உண்மை நிலையை அறிய விரும்புகிறேன். இங்கே தொழிலாளர் நலன் பற்றிய விவாதத்தின் போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு ஆர். டி. சீத்தாபதி ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். தனியார் கடைகளிலே பணி யாற்றுகின்ற சாதாரண குமாஸ்தாவுக்குக்கூட அடிப்படைச் சம்பளம் எந்த இடமாக இருந்தாலும் சரி, 210 ரூபாய்க்குக் குறையக் கூடாது என்கிற வகையில் இந்த அரசு சட்டம் கொண்டு வந்திருக் கிறது என்று பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். தனியார் கடை களிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு குறைந்த பட்சம் 210

ரூபாய் அடிப்படைச் சம்பளம் இருக்க வேண்டுமென்று பொருந்து
கின்ற சட்டம் அரசுத் துறையிலே நுகர்பொருள் வணிகக் கழகத்திலே
பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குப் பொருந்தாதா? இந்த அரசு
கொண்டு வந்த சட்டத்தை, அவர்களுக்கு உள்ளே அவர்களே
பாராட்டுகிறார்கள், புரட்சிகரமான திட்டம், புரட்சிகரமான சட்டம்
என்றெல்லாம் பாராட்டிவிட்டு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில்
பணியாற்றுபவர்களுக்கு மட்டும் இதனை விரிவாக்கவில்லை என்று
சொன்னால், இதுகுறித்து சற்று சிந்திக்க வேண்டும். இனி
மேலாவது தாமதப்படுத்தாமல் இத்திட்டத்தை அவர்களுக்கும்
விரிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையைப் பொறுத்தவரையில், நெல் கொள்முதல் நிலை
யங்கள் இருக்கின்றன. அவற்றிலே பணியாற்றுகின்ற ஊழியர்
களுக்கு ஞாயிற்றுக்கிழமைகூட விடுமுறை இல்லை. வாரத்திற்கு
ஒரு நாள், ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பது உலகம்
எல்லாம் ஒத்துக்கொண்ட உண்மை. அதற்கு மாறாக ஞாயிற்றுக்
கிழமைகூட அவர்களுக்கு விடுமுறை இல்லையென்று சொன்னால்,
அவர்கள் என்ன இயந்திரங்களா? இயந்திரங்களுக்குக்கூட அதற்கான
வாய்ப்பு அளிக்கிறோம். அதை ஓட விடாமல் நிறுத்தி வைக்
கிறோம். இந்த ஊழியர்கள் மீது அரசுக்கு மனிதாபிமானம்
இல்லையா? அவர்களுடைய குறைகளைக் களைய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு எப். சி. ஐ. மூலம் நெல் இன்னும் மற்ற
பொருள்களையெல்லாம் கொள்முதல் செய்கிறது. நெல் இன்னும் இது
போன்ற தானியங்கள் உலர்ந்து போவதால், உலர்ந்ததற்குப் பிறகு
அதனை ஈடுகட்ட ஒரு குறிப்பிட்ட பெர்சன்டேஜ் அதற்காக விட்டுக்
கொடுக்கிறார்கள். மத்திய அரசின் கொள்முதல் நிலையத்தில் இதை
அனுமதிக்கும் அதே நேரத்தில் அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற நம்
முடைய அரசு கொள்முதல் நிலையத்தில் இவ்வாறு உலர்வதன் மூலம்
எடை குறைவு ஏற்படுவதற்கு ஈடு செய்யாமல் ஊழியர்களுடைய சம்பளத்
திலிருந்தே அதைப் பிடித்தம் செய்கிறார்கள். மத்திய அரசுக்கு இருக்கிற
ஆலோசனைகள் இந்த அரசுக்கு மட்டும் இல்லையா? இந்த அரசுக்கு
அந்த ஊழியர்களிடம் அன்பு இல்லையா? அவர்களை வஞ்சம் தீர்க்க
வேண்டுமென்பதற்காக இப்படிச் செய்கிறார்களா? அல்லது இப்படி
விடுவதன்மூலம் அவர்கள் தவறு செய்யட்டும் என்றே இவர்கள் தூண்டு
கிறார்களா? இப்படி குறைந்த சம்பளத்தில் அவர்கள் எப்படி பணியாற்ற
முடியும்? ஆகவே அந்த நெல் காய்வதற்கு, அவர்கள் தருகின்ற அந்த
பர்சண்டேஜ் நாமும் தர வேண்டும்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு
என்று எந்தவித பணிவிதி முறைகளும் இப்போது வகுக்கப்படவில்லை.
நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் உள்ள பர்ச்சேஸ் சென்டர்களில்
பணியாற்றுகிறார்களே, அவர்களுக்கான பணிவிதிமுறைகள் விதிக்கப்



படவே இல்லை. இதன் காரணமாக, அங்கே ஒரு சிறு தவறு நடந்து
விட்டாலும், ஒரு மண்டலத்தில் சம்பளத்தில் பணத்தைப் பிடித்து
விடுகிறார்கள், இன்னொரு மண்டலத்தில் தற்காலிக வேலை நீக்கம்
செய்கிறார்கள், இன்னொரு மண்டலத்தில் வேலையை விட்டே அவர்
களை எடுத்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. நினைத்த இடத்தில்
நினைத்த மாதிரி செய்கிறார்கள் என்றால், அதற்கு என்ன காரணம்?
அங்கே பணியாளர்களை நியமிக்க தகுந்த பணிவிதிமுறைகள் இல்லாதது
தான், ஒரே விதமான தவறுக்கு மூன்று இடங்களில் மூன்று வேறு
விதமான தண்டனைகள் அளிப்பதற்கு இடமளிக்கிறது. நான் இங்கே
இதை எழுப்பிய காரணத்தாலேயே, அரசு உடனே ஒரு திருத்தம்
கொண்டு வரலாம். 'எல்லோருக்கும் ஒரேவிதமான தண்டனை, அதிக
பட்ச தண்டனை, வேலை நீக்கமே செய்கிறோம்' என்று சொல்லி,
அதற்கு என் பெயரை இழுத்து விடக்கூடாது என்று கேட்டுக்கொள்
கிறேன். என்ன தவறு என்றாலும், அதற்கு என்று குறைந்தபட்ச
தண்டனை என்னவென்று தெரிவிக்கக்கூடாதா? ஒரு முறை, இரண்டு
முறை அந்தத் தவறுகள் நடக்கும்போது, குறைந்தபட்ச தண்டனையைக்
கொடுத்து, மூன்றாம் முறையும் அதே தவறைச் செய்யும்போது,
அதிகபட்ச தண்டனை என்று விதிக்கக்கூடாதா என்று கேட்க
விரும்புகிறேன். எடுத்தவுடனேயே சஸ்பென்ஷன், டிஸ்மிஸல் என்று
பெரிய தண்டனைகள் கொடுப்பதற்கு என்ன காரணம் என்றால்,
அங்கே பணிவிதிமுறைகள் இல்லாத காரணத்தால்தான் இப்படியெல்
லாம் அங்கே நடக்கிறது. ஆகவே அதையும் மாண்புமிகு அமைச்சர்
அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஊழியர்களுக்குப் பதவி உயர்வு
கொடுப்பது பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.
அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட வேண்டுமென்று ஒரு
ஒப்பந்தமே இருக்கிறது. அதிலே தகுதி உடையவர்களுக்குப்பதவி உயர்
வுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால்
இன்றைக்கு அங்கே என்ன நடக்கிறது? அங்கே உயர்ந்த பதவியில்
தலைவராக இருக்கிற ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி என்ன செய்கிறார்
என்று சொன்னால், எந்த அடிப்படையும் இல்லாமல், தகுதிவாய்ந்த
வர்களுக்குப் பதவி உயர்வு எதுவும் தராமல் ஒரு தேர்வை வைத்து,
வெளியே உள்ளவர்களையும், இந்தத் துறையிலேயே பணியாற்றிக்
கொண்டிருப்பவர்களையும் ஒன்றாக எழுத வைத்து, அதிலே வெளியிலே
வந்தவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, ஏற்கனவே பணியாற்றிக்
கொண்டிருந்தவர்களுக்குப் பதவி உயர்வுகள் மறுக்கப்பட்டதால், அவர்
கள் நீதிமன்றம் சென்று 'ஸ்டே' என்று சொல்லப்படுகிற தடை
யுத்தரவைப் பெற்றிருக்கிறார்கள். இதன் காரணமாக, புதியதாகவும்
யாரையும் போட முடியாமல், உள்ளிருப்பவர்களுக்கும் பதவி கொடுக்கப்
படாமல், இப்போது காலியிடங்கள் அதிகம் இருந்து வருகின்றன.
அந்தக் காலியிடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. பதவி உயர்வுக்கான
ஒப்பந்தம் ஏற்கனவே இருக்கிறதே, அதற்கான வழிமுறைகள் இருக்
கின்றனவே, அதை ஏன் பின்பற்றவில்லை என்று கேட்க விரும்பு

கிறேன். இந்த நடவடிக்கைகளிலிருந்து அதிகாரிகளின் செயல்களுக்கு உள்நோக்கம் இருப்பதாகத்தானே தெரிகிறது? உள்நோக்கம் கருதி, பயன் கருதி, இப்படி அந்தச் செயல்களில் ஈடுபடுகிறார்களோ என்று அந்த ஒரு எண்ணத்தை நாங்கள் கொள்ள இடம் தரலாமா? ஆகவே அத்தகைய எண்ணத்தை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடும்ப அட்டைகள் இப்போது தமிழ்நாடு பூராவும் வழங்கப்பட்டு, அரிசி மற்ற பொருள்களை மக்கள் வாங்குகிறார்கள். அதிலே என்ன குறையென்றால், ஒரு அட்டையில் விலாச மாற்றம் செய்வதற்குக்கூட எவ்வளவு பெரிய நடைமுறைகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன என்று பார்க்க வேண்டும். அரசாங்கத்தின் நடைமுறைகள் மக்களுக்கு எளிமையானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு அது பயன் உள்ளதாக இருக்கும். இப்போதுள்ள நடைமுறைகள் கடினமானதாக இருப்பதோடு, அங்குள்ளவர்களுக்குப் பணம் கொடுத்தால்தான் நடக்கும் என்ற சூழ்நிலையில் ஒரு நடைமுறையை உருவாக்கினால், அதன் காரணமாக அவதிப்படுவது பொதுமக்கள்தான். அந்தக் கண்ணோட்டத்தில் இப்போதுள்ள நடைமுறைகள் எளிதாக இருக்கின்றனவா என்றால், இல்லை. விலாச மாற்றம் குறித்து, காலையில் அங்குள்ள அசிஸ்டண்ட் கமிஷனர் அலுவலகத்திற்கு 10½ மணிக்குச் சென்று மதியம் 1 மணி வரை காத்திருந்து, ஒரு ரூபாய் கொடுத்து ஒரு விண்ணப்ப பாரம் வாங்கி, அதைப் பூர்த்தி செய்து கொடுத்தால், அங்குள்ளவர்கள், நான்கு நாட்கள் கழித்து ஒரு நாளைக்கு வரச் சொல்வார்கள். அன்றைக்குப் போனால் அன்றைக்கும் கிடைக்காது. மூன்று, நான்கு முறை அலைந்தால்தான் கிடைக்கும். அந்த விலாச மாற்றத்தை நாம் பதிய வைக்க முடியும். இப்படி இருந்தால், ஒரு அலுவலகத்தில் பணியாற்றுகிறவர் தன்னுடைய விலாச மாற்றத்தைப் பதிய வைக்கவே நான்கு நாட்கள் விடுப்பு எடுக்க இயலுமா? ஒரு தொழிலாளி தன்னுடைய கடமைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, நான்கு நாட்கள் இதற்காக அலைய முடியுமா? இப்படி விலாச மாற்றத்திற்கு ஒரு கடிதம் கொடுத்தால் போதாதா? அங்கே பணியாற்றும் அதிகாரிகள் விலாச மாற்றத்திற்குச் சென்று அது உண்மைதானா என்று பார்க்கக் கூடாதா? அதற்கு ஒரு உத்தரவை அரசு அளிக்கக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். அந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கொடுக்கும்போது, அந்தப் பேப்பரிலேயே ஏதாவது பணத்தை வைத்துக் கொடுத்தால், உடனே நடக்கிறது. இந்த முறை இப்போது யாரையும் விட்டு வைக்கவில்லை. அவைகளைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

இன்னொன்றையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆதம்பாக்கத்தில் ஒரு மகளிர் சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்தின் சார்பில் ஒரு நியாய விலைக் கடை நடத்துகிறார்கள். இந்தக் கடையில் நிறைய முறைகேடுகள் நடக்கின்றன என்று சொல்கிறார்கள். இதற்குக் காரணம், அங்கே ஒரு செல்வாக்குள்ள பெண்மணி அதற்குத் தலைவியாக இருக்கிறார். அமைச்சர்களுக்கு வேண்டியவர், அதிகாரிகளுக்கு வேண்டியவர் என்று சொல்கிறார்கள். அவர்கூட நமது மண்ணின்



மைந்தர் அல்ல, அவர் நடத்துகிற முறைகேடுகளைப்பற்றி பொதுமக்
களும் மற்றவர்களும் எத்தனையோ புகார்களை அரசாங்கத்திற்கு
அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட
வில்லை. காரணம் என்ன? ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களின்
செல்வாக்கு அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு
இடம் தந்தால், இந்தத் துறை என்னவாகும்?

(முற்பகல் 11-10)

எனவே இதுகுறித்து இதுவரையிலும் அந்தத் துறையில் நடவடிக்கை
மேற்கொள்ளப்படவில்லை என்றாலும், இனிமேலாவது நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செங்கை மாவட்டத்தில் அந்தப் பகுதியில் ஏற்கெனவே கூட்டுறவு
சங்கத்தின் சார்பில் ஒரு நியாய விலைக் கடையைத் திறந்து வைத்திருந்
தார்கள். அத்தகைய கடைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த
வேண்டுமென்று மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில்
அந்தக் கடையையும் இப்போது அங்கே மூடிவிட்டார்கள். அதற்குப்
பதிலாக வேறு கடையையும் திறக்காத சூழ்நிலையை உருவாக்கி
யிருக்கிறார்கள். இதில் அதிகாரிகளும் சேர்ந்து இப்படிப்பட்ட காரியங்
களைச் செய்கிறார்களே, இது நியாயம்தானா என்று கேட்க விரும்பு
கிறேன். இத்தகைய திட்டங்களெல்லாம் மக்கள் பயன்படுவதற்காக
இருக்கின்றனவே தவிர, அதிகாரிகள் பயன்படுவதற்காக இல்லை.
ஆனால் உண்மையில் இன்றைய தினம் அதிகாரிகள்தான் பயன்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். இத்தகைய அதிகாரிகளின் நடவடிக்கைகளைப்
பற்றி அறிய ஒரு கமிஷனை வைக்க வேண்டும். இப்படிப்பட்ட மேல்
மட்ட அதிகாரிகள் ஏற்கெனவே இருந்த நிலைமை என்ன? இன்றைக்கு
அவர்கள் இருக்கிற நிலைமை என்ன என்பதையெல்லாம் ஒரு கமிஷன்
நியமித்து விசாரணை செய்தால், பல அதிகாரிகள் அகப்படும் சூழ்
நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
இன்றையதினம் அதிகாரிகளின் இராஜ்யம்தான் எல்லா மாவட்டங்
களிலும், எல்லா மட்டங்களிலும் நடைபெறுகிறது. அதையெல்லாம்
குறைப்பதற்கான வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அப்படிச் செய்தால்தான், அமைச்சர் அவர்களுக்கே நல்ல பெயர்
ஏற்படும் என்பதை எடுத்துச் சொல்லி, உணவுப் பொருள் விநியோக
விஷயத்தை அரசு உரிய முறையில் பரிசீலனை செய்ய வேண்டும்;
ஊழியர்கள் விஷயத்தையும் பரிவோடும் அனுதாபத்தோடும் பரிசீலனை
செய்ய வேண்டும், அவர்களுக்கு அரசு ஆவன செய்ய வேண்டும்
என்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

திரு ஏ. ஜே. தாஸ்: மாண்புமிகு மேலவையின் மாற்றுத்தலைவர்
அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழகத்தில் உணவு
நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசும்
வகையில் பங்கீட்டுக் கடைகளில் இன்றைக்குப் பல குறைகளைக் காண
முடிகின்றது என்பதை முதலில் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

[திரு. எ. ஜே. தாஸ்] [1984 ஏப்ரல் 24

அரசு நல்ல முறையில் பல திட்டங்களைத் தீட்டினாலும், அவற்றின் பலன் கீழே போய்ச் சேருகிறபோது, பல பிரச்சினைகள் உருவாவதைப் பார்க்கிறோம். இது பல ஆண்டுகளாகவே நாம் பார்த்து வருகிற நிலைமையாகும். இருந்தாலும் இது ஏதோ ஒரு பழைய பிரச்சினை என்று கருதி விட்டுவிடாமல், இந்த பிரச்சினை மீது உரிய கவனம் செலுத்த வேண்டியது இந்தத் துறையின் மிக முக்கிய மான கடமையாகும்.

அடுத்து, எங்கே பார்த்தாலும், இன்றையதினம் அதிகமான அளவுக்குப் பதுக்கல் இருக்கிறது. உணவுப் பொருள்களின் விலைவாசி ஏற்றத்திற்கான காரணமே இத்தகைய பதுக்கல்கள் அதிகமாக இருப்பதுதான். இத்தகைய பதுக்கல்களைப் பிடிப்பதற்கு சமீபகாலமாக இந்தத் துறையில் வேகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைப் பார்க்கிறேன். அதற்காகப் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். சமீபத்தில் பெட்ரோல் பதுக்கலைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பல பொருள்களின் கள்ளக்கடத்தலைப் பிடித்திருக்கிறார்கள். இந்த வகையில் இந்தத் துறையினர் மிகச் சிறப்பாகப் பணியாற்றுவதைப் பார்க்கிறோம். ஒரு புறம் இந்தப் பணியைச் செய்தாலும், உணவுப் பொருள்களின் பங்கீட்டு முறையைப் பொறுத்தவரையில்,, பல் குறைபாடுகள் இருக்கின்றன. ஏழைகள் கூலி வாங்கிக்கொண்டு ஞாயிற்றுக் கிழமைகளில் பங்கீட்டுக் கடைகளுக்குப் போனால் "உங்கள் கார்டுகளுக்கு அரிசி இல்லை" என்று சொல்லுகிற நிலைமையைத்தான் பார்க்கிறோம். ஊழியர்கள் அங்கே பொருள்களை எடை போடுவதிலும் தவறு செய்கிறார்கள். மிக அதிகமான அளவுக்கு இதில்தான் தவறுகள் நடைபெறுகின்றன. வெளியே தனியார் கடைகளில் பொருள்களை வாங்கி இவற்றின் எடையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், ஏறக்குறைய 100 கிராம், 50 கிராம் அளவுக்கு எடைக் குறைவு இருப்பதைப் பார்க்கிறோம். பொதுவாக பங்கீட்டுக் கடைகளில் மத்திய தர வகுப்பினரும், ஏழை மக்களும்தான் பொருள்களை வாங்குகிறார்கள். அவர்கள் பொருள் களை வாங்கும்போது, பொருள்களை அவசர அவசரமாக எடை போடுவதும், குறைவாக எடை போடுவதும் சாதாரணமாக அங்கே இருக்கிற ஊழியர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இப்படி எடை போடுவதில் தவறு செய்வதைப் பல ஆண்டுகளாகப் பார்த்து வருகிறோம். எனவே அதிகாரிகள் இதில் அதிகமாக கவனம் செலுத்தி இதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அத்தகைய கடைகளில் பணியாற்றும் ஊழியர்கள் டீக் கடைக்கும், ஹோட்டல்களுக்கும் ஒவ்வொரு நாளும் இத்தனை கிலோ சர்க்கரை, இத்தனை கிலோ மற்ற பொருள்கள் என்று விற்பதையும் பார்க்கிறோம். அப்படி விற்கும்போதுதான், அண்மையில் கே. கே. நகரில் 5 மூட்டை அல்லது 6 மூட்டை அரிசி சர்வ கட்சியை சார்ந்தவர்களால் பிடிக்கப்பட்டதை நாம் அறிவோம். இப்படி, கடைகளில்



தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

1984 ஏப்ரல் 24] [திரு. எ. ஜே. தாஸ்]

உள்ள ஊழியர்களால்தான் தவறுகள் அதிகமாக நடைபெறுகின்றன. எனவே இவைகளையெல்லாம் அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு என்னதான் நல்ல திட்டங்களைக் கொண்டு வந்தாலும், செயல்முறைகளில்தான் பெரும் தவறுகள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரிசி கொள்முதல் செய்வதில் எல்லா சிரமங்களையும் நஷ்டத்தையும் அரசே ஏற்று பங்கீட்டு முறையை உறுதி செய்தாலும்கூட, கீழே இருப்பவர்கள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்வதால் கெட்ட பெயர் ஏற்படுகிறது. எனவே இத்தகைய தவறுகள் நடக்காத வகையில் அதிகாரிகள் அதிகமான கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லி, அதிகாரிகள் இதுகுறித்து தீவிரமாகச் செயல்பட வேண்டும் என்பதையும் சொல்லி, பதுக்கல் காரணமாக அதிகமான அளவுக்கு விலைவாசி உயர்ந்து கொண்டு போவதால் பதுக்கல்களை அரசு தடுக்க வேண்டும் என்று சொல்லி தற்போதே அரசு இதில் நடவடிக்கை எடுத்திருக்கிற நிலைமையைப் பாராட்டி, மேலும் ஊக்கம் அளிக்க வேண்டும் என்று சொல்லி என் வார்த்தையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உணவுக் கொள்கைபற்றி இந்த மேலவை உறுப்பினர்களுடைய கவனத்திற்கு வைக்கப்பட்ட குறிப்புகளையொட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பொதுவாக உணவுத் துறையைப் பொறுத்தவரையில் நடைபெற்ற விதத்தையும், வகைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டியிருப்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். இதிலே இருக்கின்ற குறைபாடுகளையும், நடைமுறைப்படுத்துகிறபோது ஏற்படுகிற விளைவு களைப் பற்றியும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்தத் துறை முழுக்க முழுக்க செம்மையாக, சிறப்பாக நடைபெறுகிறது என்று நான் சொல்லவில்லை. ஆங்காங்கு சில குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளைச் சுட்டிகாட்டுகிறபோது, அதை நீக்க வேண்டுமென்ற எண்ணத்திலேதான் இந்த அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உணவுத் துறை எப்படியெல்லாம் நடைபெறுகிறது என்று விளக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாகச் சொல் கங்களை சென்ற இரண்டாண்டுக் காலமாக கடுமையான வறட்சி யிருக்கிறோம். கொடுமையான வறட்சிக்குப் பிறகு அது முடிகிற இருந்ததையும், கொடுமையான வெள்ளச் சேதம் ஏற்பட்டதையும் நிலையிலே உணவுத் துறையிலே பெரும் பாதிப்பு ஏற்பட அதன் காரணமாக உள்ள நிலைமைகளையும் இங்கே குறிப்பிட்டு தக்க அளவிற்கு நம்முடைய மாநிலத்தில் 58 இலட்சம் டன் காட்டியிருக்கிறோம். அரிசி உற்பத்தி ஆகவேண்டி லிருந்து 60 இலட்சம் டன் வரை கடுமையாக இருந்த சூழ்நிலையில் 2 சூழ்நிலையில், வறட்சி

10 சதவீதம் வட்டி என்று வைப்பார்களானால், இந்த உணவுத் தன்மைகளிலே அதிகமான அளவு இழப்பு நமக்கு ஏற்படாமல் இருக்கும்; அதைச் செய்ய வேண்டுமென்று கூறுகிறோம். சாதாரண மாக கொஞ்சம் நமக்கு அதிகம் இருப்பு இருக்க வேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்துதான், அதிகமாக நெல் விளை கின்ற தஞ்சாவூர் மாவட்டத்திலே ஏகபோகக் கொள்முதலை அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற தன்மையில், மத்திய அரசினுடைய ஒப்பு தலைப் பெற்று, ஏகபோகக் கொள்முதலைக் கொண்டுவந்தோம். ஏகபோகக் கொள்முதலை தஞ்சாவூர் மாவட்டத்திலே கொண்டுவருகிற போது, அதனுடைய எல்லைப் புறத்திலே பிற மாவட்டங்களுக்குக் கடத்தல் அதிகமாக நடைபெறுவதால், விளைவு இருக்கிற பிற மாவட்டங்களினுடைய தாலுக்காக்களையும் இதில் சேர்க்க வேண்டு மென்று, முதலிலே சிதம்பரம் தாலுக்கா, லால்குடி தாலுக்கா மற்றனவகளையும் சேர்த்து அங்கேயும் ஏகபோகக் கொள்முதல் என்று கொண்டுவந்தோம். சிலபல தாலுக்காகக்கள் சேர்க்கப்படாமல் இருப் பதன் காரணமாக, அதன் வழியாக தஞ்சை மாவட்டத்தின் எல்லையை விட்டு கடந்து பிற மாவட்டங்களுக்கும், கேரளாவுக்கும் கூட போய் விடுகிறது என்ற தன்மையின் காரணமாக, தஞ்சை மாவட்டத்தைச் சுற்றியிருக்கிற தாலுக்காக்கள் அத்தனையிலும் ஏகபோகக் கொள் முதல் உண்டு என்று சொல்லி, அங்கு தனியார் வியாபாரம் செய்ய முடியாது என்று சொல்லி, வியாபாரிகள் வாங்குவதிலே 50 சத வீதம் லெவிக்குத் தரவேண்டும்; மீதம் 50 சதவீதத்தை அவர்களுடைய விருப்பம் போல் வெளிச் சந்தையினுடைய விலைக்கேற்றபடி விற்கலாம் என்று தந்திருக்கிறோம் நாமே ஏகபோக கொள்முதல் செய்வதன் காரணமாக உற்பத்தி செய்கின்ற உழவர் பெருங்குடி மக்களும் மற்ற வர்களும் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தினாலே, மத்திய அரசாங்கம் தடுத்தும், இதற்குமேல் கூடுதல் விலை கொடுக்கக் கூடாது என்று அவர்கள் வற்புறுத்தி எடுத்துச் சொல்லியும் கூட நாம் இருக்கிற சூழ்நிலையை வைத்து, பாதிக்கப்பட்டிருக்கிற உழவர் களும் தங்களுடைய பணிகளைச் செம்மையாகச் செய்ய வேண்டுமென் பதற்காக ஒவ்வொரு குவிண்டாலுக்கும் 35 ரூபாய் கூடுதலாகத் தருவது என்று தீர்மானித்தோம். சாதாரண ரகம் ரூ. 132, சன்ன ரகம் ரூ. 136, மிகச் சன்ன ரகம் ரூ. 140 என்ற கொள்முதல் விலைக்கு வாங்க வேண்டும் என்பது மத்திய அரசினுடைய கட்டளை; ஆனால் நாம் கூடுதலாக 35 ரூபாய் கொடுத்து ரூ. 167 சாதாரண ரகத்திற்கும், ரூ. 171 சன்ன ரகத்திற்கும், ரூ. 175 மிகச் சன்ன ரகத்திற்கும் கொடுத்து வாங்கினோம். இதைக் கொடுக்கக் கூடாது என்று அவர்கள் சொன்னாலும், நான் போய் இருக்கிற சூழ்நிலை களை எல்லாம் எடுத்துச் சொல்லி, "மத்திய இருப்பிலிருந்து நீங்கள் அரிசியையும் தர மறுக்கிறீர்கள்; நாங்களும் மக்களிடத்திலே கொள் முதல் செய்யவேண்டும்; ஆகவே வியாபாரிகள் கொள்முதல் செய்தால் தங்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்று நினைக்கிறார்கள். ஆக



இந்த 35 ரூபாய் கொடுத்தால்தான் ஓரளவுக்கு தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் சமாளிக்க முடியும்" என்ற நிலைமைகளை யெல்லாம் எடுத்துத் தெரிவித்ததற்குப் பிறகு, ஓரளவுக்கு மத்திய உணவு அமைச்சர் அந்த நிலைமைகளை ஒப்புக்கொண்டார்கள். மத்திய கொள்முதல் இருப்பிலிருந்து 80 ஆயிரம் டன் அரிசியையும், 40 ஆயிரம் டன் கோதுமையையும், மாதம் ஒன்றுக்கு வழங்குவார் களானால், இங்கே நாம் கொள்முதல் செய்து வைத்திருக்கின்ற அரிசி மத்திய இருப்பிலே இருந்து தரப்படுகின்ற அரிசி இது இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து, மாதம் தோறும் அடுத்து வருகின்ற ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் வரையிலே சமாளிக்கலாம். அடுத்த குறுவைப் பயிர் அறுவடையாகி வருகின்ற காலம் வரைக்கும். நாம் சமாளித்துத்தீரவேண்டும். அந்த அளவுக்குத் தருவார்கள் என்றால், இருப்பு பாதுகாக்கப்பட்டு வரும் என்று நாம் சொல்லி வருகின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு மீனாட்சிசுந்தரம் அவர்கள் எடுத்துச்சொன்னதைப் போல், அறுவடையெல்லாம் முடிந்துவிட்ட நிலையில், இவ்வளவுதான் நமக்குக் கிடைக்கும். கொள்முதலிலே இன்னும் கொஞ்சம் 50 ஆயிரம் டன், அதற்கும் அதிகமாகப்போனால் ஒரு லட்சம் டன் எல்லா மாவட்டங்களிலும் சேர்த்துக் கிடைக்கலாம் என்றாலும், வெள்ள பாதிப்பு, வறட்சி பாதிப்பு காரணமாக நாம் எதிர்பார்த்த அளவுக்குக் கிடைக்காது என்ற நிலையில், நமக்கு ஈடு கட்ட, உதவி செய்ய, மத்திய அரசினுடைய இருப்பில் இருந்துதான் நமக்குக கிடைக்க வேண்டும். ஆகவே 'தாருங்கள்' என்று அவர் களிடத்திலே நாம் எடுத்துச்சொன்னாலும், அதற்கு 40 ஆயிரம் டன் கொடுக்கின்ற இடத்திலேகூட 35 ஆயிரம் டன் என்று வந்து, இப்போது 25 ஆயிரம் டன் தந்து, கோதுமையும் 30 ஆயிரம் டன் தருகின்றார்கள். இப்போது 18,009 நியாய விலை கடைகளை வைத்து நாம் விநியோகம் செய்து வருகிறோம். ஒரு கோடியே 18 லட்டம் குடும்ப அட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சாதாரண மாக ஒரு வயது முதிர்ந்த ஆளுக்கு வாரம் ஒன்றுக்கு ஒரு கிலோ அரிசி வீதம் மாதத்திற்கு 4 கிலோ அரிசியும், குழந்தைகளுக்கு, சிறுவர்களுக்கு வாரம் அரை கிலோ அரிசி வீதம் 4 வாரங்களுக்கு 2 கிலோ அரிசியும் கொடுக்கப்படுகிறது. ஆக மொத்தத்திலே எவ்வளவு பேர்கள் ஒரு குடும்பத்திலே இருந்தாலும், 20 கிலோவுக்கு மேல் ஒரு குடும்பத்திற்கு இல்லை என்று நாம் சொல்லியிருந்தாலும் அந்த 20 கிலோ கூட கொடுக்க முடியாத அளவுக்கு நிலைமை இருக்கின்றது. இப்போது சென்னை, மதுரை, கோயம்பத்தூர் போன்ற இடங்களிலே நாம் ஒரு குடும்ப அட்டைக்கு 12 கிலோ அரிசிதான் கொடுத்து வருகிறோம். ஆனால் பாக்கியை ஈடுகட்டி 20 கிலோ ஆக்க, 8 கிலோ கோதுமையைத் தருகிறோம். கோதுமையை எப்படியாவது பயன் படுத்துங்கள் என்று சொல்கிறோம். 20 கிலோ அரிசி தரலாம் என்றாலும்கூட, அதற்கான அரிசி இல்லாத

தனால் 6 கிலோ அரிசி தருகிறோம். மீதி 15 கிலோ அளவுக்கு நாம் கோதுமையைத் தந்து கிட்டத்தட்ட 20, 21 கிலோ வரையிலும் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று சொல்கிறோம் நகரங்களிலே 6 கிலோ, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற பகுதிகளிலே மற்றும் மாநகரங்களிலே 12 கிலோ கொடுக்கின்ற வகையிலேகூட மாதம் ஒன்றுக்கு நாம் விநியோகம் செய்தது 80 ஆயிரம் டன் ஆக இருக்கிறது. ஒரு 3, 4 ஆண்டுகளுக்கு முன்னால், நியாய விலைக் கடைகள் மூலம் அரிசியையும், வெளிச்சந்தைக் கடைகளின் மூலம் விற்கும் அரிசியையும் பார்க்கும்போது, ஒரு 40 காசு, 45 காசு, 50 காசு வேறுபாடு இருந்தபோது, பெரும்பாலானவர்கள் நியாயவிலைக் கடைக்கு வந்து வாங்க வேண்டும் என்று இல்லாமல், ஒரு 40 காசு, 45 காசு கூடுதலாக இருந்தாலும், வெளிச்சந்தையிலே வாங்கிக்கொள்ளலாம் என்ற நிலை இருந்தபோது, மாதத்திற்கு 20 ஆயிரம் டன், 22 ஆயிரம் டன், 25 ஆயிரம் டன் அரிசிதான் விநியோகம் பண்ணினோம் இப்போது வெளிச்சந்தையிலே ரூ. 2·80, ரூ. 3·40, ரூ. 3·20 என்று விற்கும்போது, நாம் ரூ. 1·75-க்கு கொடுப்பதால், வித்தியாசம் ரூ. 1, ரூ. 1·50 அளவுக்கு இருப்பதன் காரணமாக, நியாய விலைக் கடைகள் மூலமாக வாங்கினால் அவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கும் என்ற காரணத்தினால், வெளிச்சந்தையிலே வாங்குகின்ற வன்மையைக் கொண்டிருந்தவர்களும் இங்கே வாங்குகின்ற நிலை தருவதன் காரணமாக, நாம் 80 ஆயிரம் டன் எடுத்துக்கொடுத்தாலும்கூட, வெளிச்சந்தையிலே வாங்கவேண்டிய அவசியமும் அவர்களுக்கு இருக்கின்றது. மத்திய அரசு கொள்முதல் செய்து நமக்குத் தருவது ரூ. 2·08-க்கு நாம் நியாய விலைக் கடைகள் மூலம் தருகின்ற அரிசிக்கு விலை ரூ. 1·75 கிட்டத்தட்ட 33 காசு வித்தியாசம் இருக்கின்றது. மத்திய அரசிடமிருந்து நாம் கொள் முதல் செய்து கொடுத்து, நாம் நஷ்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். அதைக்கூட உயர்த்த வேண்டுமென்று நாம் சொல்லிக்கொண்டு வருகிறோம் என்றாலும், நிலைமைகள் சரியாக வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான், இதை நாம் ஓரளவுக்குச் செய்து கொண்டு வருகிறோம். சாதாரணமாக 20 கிலோ அரிசி தரப்பார்க்கிறோம். கோதுமையைப் பயன்படுத்தும் பழக்கம் இல்லை என்று எடுத்துச் சொல்கிறோம். எல்லோருக்கும் 20 கிலோ தருவது என்று எடுத்துக்கொண்டால், மாதம் ஒன்றுக்கு எவ்வளவு என்று பார்க்க வேண்டும். எல்லோருக்கும் இருபது கிலோ தருவது என்று நாம் வைத்துக் கொண்டிருப்போமானால், மாதம் ஒன்றுக்கு 2 இலட்சத்து 28 ஆயிரம் டன் அரிசியாவது மத்திய அரசு கொடுத்து நம்மிடம் இருப்பு இருந்தால்தான் முடியும். ஆனால் பத்து கிலோ மாதம் ஒன்றுக்கு கார்டு ஒன்றுக்கு சராசரியாகக் கொடுப்பது என்று வைத்துக்கொண்டாலுங்கூட, கிட்டத்தட்ட மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சத்து பதினெட்டாயிரம் டன் வேண்டும். இப்போது நமக்கு மத்திய அரசு கொடுக்கும் 25,000 டன்னுடன் நாம் கொள்முதல் செய்து வைத்திருப்பதையும் சேர்த்து 80,000 டன் வருகிறது.



(முற்பகல் 11-30)

ஏப்ரல் திங்கள் முதல் தேதிவாக்கில் நம்மிடத்தில் கொள்முதல் செய்து இருப்பில் இருப்பது 4½ இலட்சம் டனனாகும். அதைப் பகிர்ந்து கொடுக்கும்போது, கூடுதலாகத் தேவைப்படுவதை நாம் தருகின்றபோது 3, 4 மாதங்களுக்கு நன்றாக வரும். இதை நான் மத்திய அரசுக்கு அப்போதே எழுதியிருக்கிறேன். ஜூலை, ஆகஸ்ட் செப்டம்பர், அக்டோபர் திங்களிலே அதிகமான அளவிற்குக் கொடுத்தால்தான், ஓரளவிற்கு திருப்தி செய்ய முடியும். அந்த அளவிற்குத் தர வேண்டுமென்றும் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன்.

சாதாரணமாக இந்த ஆண்டு நிலைமை சரியாக இருக்கிறது. இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி பகுதிகளில் எப்போதும் பெய்யும் மழையைவிட இப்போது பெய்த மழை 4½ மடங்கு அதிகமாகும். ஏரிகள் நிரம்பியிருக்கின்றன. குளங்கள நிரம்பியிருக்கின்றன, நிலத்தடி நீர் அதிகமாகியிருக்கின்றன, எனவே இந்த ஆண்டு குறுவை, சம்பா மற்றும் பயிர்வகைகள் மிக நன்றாக விளையக்கூடும் என்று வேளாண்மைத் துறையினர் எதிர்பார்க்கிறார்கள். அந்த அடிப்படையிலே மத்திய அரசு கூட எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அகில இந்திய அளவிலே எப்போதும் 13 கோடி டன் உணவு தானியம் கிடைக்கும் நிலை இருக்கும். ஆனால் இந்த ஆண்டு 14 கோடி டன் கிடைக்கும் என்று நான்கு நாட்களுக்கு முன்னால் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் பாராளுமன்றத்திலே கூறியிருக்கிறார். மேலும் அடுத்த ஆண்டு 15 கோடி டன் கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்திருக்கிறார். அதேபோல் தமிழகத்திலும் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், 58 இலட்சம் டன் நம் தமிழகத்திலேயே சாதாரணமாக உற்பத்தியானாலும்கூட, அதிலே சொந்த உபயோகத்திற்கு 25 சதவிகிதம் எல்லோரும் வைத்துக் கொள்கிறார்கள் என்று கணக்குப் போட்டுப் பார்த்தோமானால், அதிலே 15 இலட்சம் டன் வைத்துக்கொள்கிறார்கள். விற்பனைக்கு வரக்கூடியது 43 சதவீதம். அதில் லெவியாகக் கிடைக்கவேண்டியது 50 சதவீதம் என்று வைப்போமானால், நமக்குக் குறைந்தது 21½ இலட்சம் டன்னாவது கிடைக்க வேண்டும். ஆனால் இப்போது என்ன கிடைக்கிறது என்று பார்த்தோமானால், சாதாரண காலத்தில் 7, 8 இலட்சம் டன்தான் கிடைக்கிறது. மீதமுள்ள உற்பத்தியை எப்படியோ ஏமாற்றுகிறார்கள். யார் கண்ணுக்கும் அகப்படாமல் போய்விடுகின்றன. அதை எப்படி தடுத்து நிறுத்துவது என்பது குறித்து தீவிரமான முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரைக்கும், கிராமப் பகுதிகளில் தற்சமயம் 500 அட்டைகளுக்கு அல்லது அதற்குக் குறைந்த அளவு அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற முறையில்தான் கடைகள் இருக்கின்றன. ஆனால் நகர்ப்புறங்களிலும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 எப்ரல் 24

சென்னை போன்ற பெரு நகரங்களிலும் 2,000 அட்டைகளுக்கு ஒரு கடைவீதம் இருக்கிறது. பல இடங்களில் 1,000, 1,500 அட்டைகளுக்கு ஒரு கடை வீதம் இருக்கிறது. 2,000 அட்டைகளுக்கு மேல் தாண்டும் நிலை இருந்தால், அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சென்னை, மதுரை, கோவை போன்ற பெரிய நகரங்களில் உள்ள சங்கடம் என்னவென்றால், கடைகளுக்கான இடம் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. வாடகைக்குக் கொடுக்க முன்வர மறுக்கிறார்கள். அதிலும் நியாயவிலைக் கடைக்கு என்று கேட்டால், கட்டாயம் தர மறுக்கிறார்கள். ஏனென்றால் பாமாலின் எண்ணெய் போன்ற பொருள்கள் விற்கப்படும்போது கட்டிடத்தை வீணாக்கிவிடுகிறார்கள் என்றும், தங்களுடைய 'பிரைவசி' கெடுகிற அளவிற்கு பெரிய 'கியூ' வருகிறதென்றும், சத்தம் எல்லாம் வருகின்றது என்றும், கூட்டம் போட்டு கும்மாளம் அடிக்கிறார்கள் என்றும் கூறுகிறார்கள். இருப்பினும் அப்படிப்பட்ட நகரங்களிலும்கூட ஆயிரம் அட்டைகளுக்கு ஒரு கடைவீதம் வைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம்.

ஏற்கெனவே, அவரவர்கள் இஷ்டப்பட்ட பொருளை இஷ்டப்பட்ட நேரத்தில் வந்து வாங்குவதற்கு, 6, 7 பொருள்களை ஒரே சமயத்தில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். தினம் தினம் வந்து ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக வந்து ஒவ்வொன்றுக்கும் நேரத்தையும் எடுத்துக்கொண்டு, உழைப்பையும் செலவழித்து, ஏராளமானவர்கள், கியூ வரிசையில் வந்து நிற்பதால் தான், இந்தக் கடைகளில் எல்லாம் இந்தச் சங்கடங்கள் ஏற்படு கின்றன. அதற்குப் பிறகுதான் ஸ்டாகரிங் ( Staggering ) என்ற முறையில் வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் வந்து பொருள்களை வாங்கிக்கொள்ளுங்கள் என்று ஐந்து நாட்களைக் குறிப்பிட்டு, அந்த ஐந்து நாட்களிலே ஒவ்வொருவருக்கும் தனியாக நாள், நேரம் குறிப்பிட்டு பொருள்களை வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. எக்காரணத்தைக்கொண்டாவது இந்த நாளில் ஒருவர் வாங்கத் தவறிவிடுவாரேயானால், ஆறாவது நாளில் தவறிவிட்டதை வாங்கிக்கொள்ளலாம் என்ற அளவிற்கு ஒரு ஏற்பாட்டை ஏற்படுத்தி, அந்த முறை சென்னையில் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது சென்னையிலே மட்டுமல்ல, உலகத்திலே எங்கெங்கு பங்கீட்டு முறை இருக்கிறதோ, அங்கெல்லாம், லண்டன் போன்ற இடங்களிலே எல்லாம் பங்கீட்டு முறையில் வழங்கப்படும் பண்டங்களுக்கெல்லாம் ஸ்டாகரிங் முறை வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கிழமையில், இந்த நேரத்திற்கு வா என்று சொல்லி, குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி, நேரம் கெடாத அளவுக்கு வைக்கிறார்கள். சென்னையிலே அந்த முறையை ஏற்படுத்திய தால், சங்கடங்கள் இல்லை. பெரிய கியூக்கள் இல்லை. ஒரு பொருளுக்கு ஒரு தடவை தினமும் வந்து, ஒவ்வொரு பொருளுக்கும் பில் போட வைத்து, அங்கே வேலை பார்க்கிற 1, 2 பேர்களைக் கஷ்டப்படுத்த வேண்டியதில்லை. அவர்கள் தினமும் 400, 500 பேர்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இதனால் போகிறவர்களும் ஒரு மணி நேரத்திற்கு



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

984 எப்ரல் 24]

மேலே காத்திருக்க வேண்டியிருக்கிறது. இந்த முறையை மாற்றி, ஸ்டேகரிங் முறை ஏற்படுத்தியிருப்பது. சென்னையிலே திருப்திகரமாக இருக்கிறது. கூலி வேலை செய்பவர்களுக்கு கூலி கிடைக்கும்போது பொருள்களைத் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் சொன்னார்கள். சென்னையிலே ஏற்படுத்தியுள்ள முறையை, மற்ற பெரிய நகரங்களிலும் கொண்டு வந்தால், மக்களுடைய நேரம் மிச்சப்படும். இந்த நேரத்தில் வர வேண்டுமென்று வாங்குபவர்களுக்குத் தெளிவாக்கிவிட்டால், எல்லாப் பொருள்களையும் சேர்ந்து வாங்க பணத்தை முன்கூட்டியே சேர்க்க வேண்டுமென்று உணர்வு ஏற்பட வேண்டுமென்பதற்காகத்தான் ஒரு மாதத்திற்கு விட்டுக்கொடுத்து, பிறகு முறைப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அது ஓரளவுக்கு சென்னையைப் பொறுத்த அளவுக்குச் சரியாக வந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொது விநியோக முறையைப் பொறுத்தவரையிலும், நியாய விலைக் கடைகள் மூலமாகக் கொடுப்பதாலே நமக்கு ஓரளவுக்கு இழப்பு ஏற்படுகிறது. நியாய விலைக் கடைகளில் வழங்கும் அரிசியின் விலையைக் காட்டிலும் வெளிச் சந்தையில் விற்கும் அரிசியின் விலை அதிகமாக இருக்கிறது. வெளிச் சந்தையில் ஒரு கிலோ அரிசி ரூ. 3·80-க்கு வாங்கும் போது, நாம் ஒரு கிலோ ரூ. 1·75-க்குக் கொடுக்கிறோம். இரண்டுக்கும் ஆவரேஜ் பார்க்கும்போது ரூ. 2·70, ரூ. 2·75 வரும். இப்போது நாம் 1·75-க்கு ஒரு கிலோ அரிசி கொடுக்கிறோம். சாதாரண ரகம் இது. இதே அரிசி, ஒரு கிலோ, கர்நாடகத்திலே ரூ. 1·90, ஒரிசாவிலே ரூ. 2·20, மத்தியப் பிரதேசத்திலே ரூ. 2·14, மேற்கு வங்கத்திலே ரூ. 2·13; ராஜஸ்தானிலே ரூ. 2·06; கேரளாவிலே ரூ. 2·10; உபரி அரிசி இருக்கும் ஆந்திர மாநிலத்திலே ரூ. 1·90; மகாராஷ்டிரத்தில் ரூ. 2·45; டெல்லியில் ரூ. 1·94; பீகாரில் ரூ. 2·20; தமிழ் நாட்டில் ரூ. 1·75. இதனால் ஏற்படும் நஷ்டத்தைச் சரிக்கட்ட, மற்ற மாநிலங்களைப் பார்த்து, விலையைக் கூடுதலாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இல்லாவிட்டால் நஷ்டத்தைத் தாங்க வேண்டியவர்களாக இருக்கிறோம் இந்த நியாய விலைக் கடைகளை வைத்து நடத்துவதால் அரசுக்கு 4 கோடி ரூபாய் செலவாகிறது. எனவே நியாய விலைக் கடைகள் நடத்துவதற்கு மத்திய அரசு மானியம் தர வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். 4 கோடி ரூபாயையும் மத்திய அரசு மானியமாகத் தரவில்லை என்றாலும், 2 கோடி ரூபாயையாவது மத்திய அரசு அதில் ஏற்றுக்கொண்டால், ஓரளவுக்கு உதவியாக இருக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், நியாய விலைக் கடைகளில் வேலை பார்ப்பவர்களுக்கு சரியான ஊதியமில்லை என்று சொன்னார்கள். இப்போது 150 ரூபாய் அவர்களுக்குக் கொடுப்பது என்பது, பகுதி நேர வேலை செய்கிறார்கள் என்பதால்தான். முழு நேரமும் அவர்கள் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. குறிப்பிட்ட நேரத்தில் கடையைத் திறந்து, பொருள்களைக் கொடுக்க வேண்டுமென்பதால், 150 ரூபாய் அவர்களுக்கு தரப்படுகிறது. வேறு வேலை

பார்த்துக்கொண்டு, இந்த வேலையும் பார்க்கிறவர்களுக்கு இது சவுகரியமாக இருக்கும். வேறு வேலை இல்லாமல் இதையே நம்பியுள்ளவர்களின் சூழ்நிலை வேறுமாதிரியாகும். இதை முழு நேர வேலை என்று ஆக்கிவிட்டால், மாதம் ஒன்றுக்கு 210 ரூபாய் என்று வைத்திருக்கிற ஊதிய இலக்கணத்தை அவர்களுக்கும் ஏற்றுக்கொள்ளலாம்.

(முற்பகல் 11-40)

பகுதி நேர வேலை என்பதால்தான், அவர்களுக்கு 150 ரூபாய் என்று சம்பளத்தை நிர்ணயித்திருக்கிறோம்.

**திரு க. மீனாட்சிசுந்தரம் :** பகுதி நேரப் பணி என்று அவர்களை நியமித்தபோதே, ஓராண்டில் அவர்கள் அனைவரும் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அந்த ஆணையின் அடிப்படையில் அவர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்களா.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆணையில் எப்படி இருக்கிறது என்பது தெரியவில்லை. மறுபடியும் ஆணையைப் பார்க்கிறேன். அது குறித்து எப்படி செயல்படுவது என்றும் பார்க்கின்றேன். ஓராண்டுக்குள் என்று சொன்னால், ஓராண்டு ஆகும் சமயத்தில் இவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு கோவிந்தசாமிக்கு பதிலாக குப்புசாமியையும் குப்புசாமிக்கு பதில் குமாரசாமியையும், குமாரசாமிக்கு பதில அருணாசலத்தையும் நியமித்தால், அவர்கள் நிலைமை என்னவாகும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு க. மீனாட்சிசுந்தரம்:** அவர்களுக்கு அங்கு பயிற்சிதான் கொடுக்கிறார்கள். நிரந்தரம் ஆக்குவதற்காகத் தான் அவர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்கள். அந்த அடிப்படையில் அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படுவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அங்கே அத்தனை பொருள்களையும் சர்க்கரை, கோதுமை, மைதா, பாமாலின் போன்ற அனைத்தையும் சப்சிடி விலையில தான் கொடுக்கிறோம். குறிப்பிட்ட இந்தப் பொருள்கள் நியாய விலைக் கடைகளில் ஒரு விலைக்கும், வெளிக் கடைகளில் இன்னொரு விலைக்கும் விற்கப்படுகின்றன. அது போல் நெல்லைக் கொள்முதல் செய்யும்போது கூட, 50 சதவிகிதக் கொள்முதலைப் பொறுத்த வரையில் மட்டும் தான், லெவி விலை. மீதியுள்ள 50 சதவிகிதத்தை அவர்கள் வெளிச் சந்தையில் விற்கலாம். ஆனால் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துகின்ற பிரச்சினையைப் பொறுத்த வரையில், மத்திய அரசு இதற்கு பொறுப்பேற்க வேண்டும். இவர்களுடைய சம்பளத்தை 210 ரூபாய்க்கு உயர்த்துவது என்றால் கூட, இன்னும் அரசுக்கு 2, 3 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகும். இதையெல்லாம் தொடர்ந்து மத்திய அரசுக்குச் சொல்லி வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அதுபோல் இவையெல்லாம் லாபம் வரும் வகையில் இயங்கத் தக்க முறையில்



ஏற்பாடுகள் என்னென்ன செய்யலாம் என்பது குறித்தும் ஆலோசனை செய்யுமாறு கூட்டுறவுத் துறையையும், உணவுத் துறையையும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் நியாய விலைக் கடைகளில் சப்சிடி பொருள்களை மட்டும் வைத்துக் கொண்டு விற்பனை செய்வதானால், அவைகளில லாபம் வருவதற்கு வாய்ப்பில்லை. அதற்காகத் தான் இப்பொழுது ஒரு திட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த சப்சிடியாக வழங்கப்படுகின்ற 6 பொருள்களோடு மட்டுமல்லாமல் இன்னும் பொதுமக்கள் அதிகமாக வாங்குகின்ற இன்றியமையாத 20, 30 பொருள்களை அங்கு வைத்து விற்பனை செய்வதன் வாயிலாக லாபம் ஈட்ட முடியும்.

**திரு க. மீனாட்சிசுந்தரம்:** ஓர் உறுப்பினர் அவையில் தூங்கிக் கொண்டிருக்கிறார். அவையில் உறுப்பினர் தூங்கலாமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தூங்கக் கூடாது. ஆனால் கண்ணை மூடிக் கொண்டு சிந்திக்கலாம். (சிரிப்பு) அந்த வகையில் குறிப்பிட்ட, லாபம் வரக் கூடிய 20, 30 பொருட்களை ஹோல்சேல் விலையில் வாங்கி வெளிக் கடையில் 3 ரூபாய்க்கு சோப்பு விலை என்றால் நாம் $2\frac{1}{4}$ ரூபாய் அல்லது $2\frac{3}{4}$ ரூபாய்க்கு விற்று, அதன் மூலம் லாபம் வந்து, அந்த வகையில் இந்தக் கடைகளை நாம் செல்ப்-சர்வீஸ் கடைகளாக ஆக்கலாம். அப்போது இந்த ஊழியர்களுக்கு 300 ரூபாய், 400 ரூபாய் கூட சம்பளம் கொடுக்கின்ற நிலைமை வரலாம். அதற்குரிய உதவிகளை மத்திய அரசிடமிருந்தும் கேட்கலாம் என்று இருக்கிறோம். ஊழியர்களின் வாழ்க்கை தரம் உயர வேண்டுமென்கிற கொள்கையை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. 150 ரூபாய் சம்பளத்தை வைத்துக் கொண்டு அவர்கள் வாழ்க்கை நடத்த முடியாதுதான். சுற்றிலும் சப்சிடி பொருள்களான சர்க்கரை, மைதா, கோதுமை போன்றவற்றை வைத்துக் கொண்டு அவர்களுக்கு 150 ரூபாய் சம்பளம் கொடுத்து உட்கார வைத்தால், அவன் என்ன செய்வான் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று தான். அந்த எண்ணம் அவர்களுக்கு வராத அளவுக்கு நிலைகள் சீர்பட வேண்டும்.

**திரு க. மீனாட்சிசுந்தரம்:** இப்பொழுது 150 ரூபாய் என்று இருக்கிற சம்பளத்தை குறைந்த பட்சம் இவ்வளவு ரூபாய் என்று அதிகமாக ஆக்குவதற்காவது இந்த அரசு உடனடியாக முன்வருமா ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் அடிக்கடி குறுக்கிடாமல் அமைச்சர் பேசி முடிந்ததற்குப் பிறகு விளக்கம் பெறலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அப்படிச் செய்வதாக இருந்தால் கூட, அதற்கும் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. ஏற்கனவே நாம் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்வதைத் தான் இதற்காக வேண்டி செலவு செய்ய வேண்டியிருக்கும். மடியில் இருப்பதை வைத்துத்தானே பகிர்ந்து தர வேண்டும். நூறு ரூபாய்

கொடுக்க வேண்டுமென்று சொன்னால் கூட, கொடுக்கலாம். ஆனால் சில துறைகளுக்கு நாம் வெட்ட வேண்டியிருக்கும். கள்ளக் கடத்தல் போன்றவற்றை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த இன்றைக்கு காவல் துறை யினரை எல்லைப் பகுதிகளில் எல்லாம் நியமித்திருக்கிறோம். அரிசி, நெல் போன்ற முக்கியமான உணவுப் பொருள்களை லெவி கொடுக் காமல் லாபம் சம்பாதிப்பதற்காக வேண்டி வெளி மாநிலங்களுக்கு கடத்திப் போனால் அரிசி, நெல் போன்ற மூட்டைகளை மட்டுமல் லாமல் லாரியையும் கூட பறிமுதல் செய்து வைத்துக் கொள்ளுங்கள், அப்படியென்றால் தான் 10 நாள், 15 நாள் லாரியை அவர்கள் வாடகைக்கு விட்டு லாபம் சம்பாதிக்க முடியாத நிலையும் ஏற்படும். அந்த வகையிலாவது இதற்குப் பரிகாரம் காண முடியாதா என்ற அடிப்படையில் இதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் ஆங்காங்கே எடுக்கப்பட்டிருக்கின்றன. பொள்ளாச்சி பக்கத்திலேயும், பாலக்காட்டுக்குப் பக்கத்திலேயும், கோவை அருகிலும், கன்னியாகுமரி மாவட்டம்—கேரள எல்லைப் பகுதிகளிலும் இத்தகைய சோதனைகளை தீவிரமாக்கச் சொல்லியிருக்கிறோம். என்னதான் இருந்தாலும் கைக்கு கை பார்த்தாலும், கண்ணுக்குக் கண் பார்த்தாலும், அகப்படாமல் எப்படியோ போய்விடுகிறார்கள். அடி மட்டத்தில் வேலைபார்க்கிற எல்லோரையும் நம்பித்தான் நாம் இவை களைச் செய்யவேண்டியிருக்கிறது. இதன் காரணமாகவே செக்போஸ்டில் இருப்பவர்கள் ஒரே இடத்தில் அதிக நாட்கள் இருக்கவிடாமல் மாற்றுங்கள் என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். யாரையும் இரண்டாண்டு காலம் மூன்றாண்டு காலம் ஒரே இடத்தில் இருக்கவிடுவதில்லை. காரணம் அப்படி இருந்தால், கள்ளக்கடத்தலைச் செய்கிறவர்களுடன் இவர்களுக்கு ஒரு உறவே வந்துவிடுகிறது. ஆகவே இரண்டு மூன்று மாதங்களில் கூட மாற்றம் செய்யப்படுகிறார்கள். புள்ளிவிவரங்களை எடுத்துப் பார்ப்போமேயானால், 1983 ஆம் ஆண்டில மட்டும் 1,221 கள்ளக்கடத்தல் பதுக்கல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இதில் பதுக் கலுக்காக மட்டும் 546 வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. கடத்தலுக்காக 323 வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. கள்ளக் சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டார்கள் என்று 71 பேர்கள் பிடிக்கப் பட்டிருக்கிறார்கள். இதர வழக்குகள் 221 என்ற நிலையில் இருக்கிறது. 25 வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது. 3 வழக்குகளில் மட்டும்தான் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 70 வழக்குகள் வழக்கு மன்றத்திலே இருக்கின்றன. 121 வழக்குகளில் கடத்திச் செல்லப்பட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. 791 வழக்குகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், சென்னையில் காவல் துறை துணை ஆணையாளர்களாலும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. இந்த வகைகளில் நாம் எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு நாம் செய்து கொண்டு வருகிறோம்.

ஓட்டல் பண்டங்களின் விலைகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஓட்டல் முதலாளி களையும், அதிபர்களையும் அழைத்து நானும் பேசினேன். உணவுத் துறை செயலாளரும் பேசியிருக்கிறார். அவர்களிடம் நாங்கள் "ஓரளவுக்கு



நீங்கள் லாபம் வைத்து, குறிப்பிட்ட பெர்சன்டேஜ் வைத்து விற்றுக் கொள்ளுங்கள், உங்களுக்கு கட்டுபடியாகக்கூடிய விலைக்கு விற்கலாம்" என்று சொல்லியிருக்கிறோம். "அதிக விலைக்கு விற்றால் அதன் காரணமாக பொதுமக்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டு, பொதுமக்களிடமிருந்து கூக்குரல் எழும், 15 சதவீதம், 12 சதவீதம் அல்லது 20 சதவீதம் மட்டும் லாபம் வைத்து விற்கவேண்டுமென்று ஒரு வரைமுறை வைத்துக் கொள்ளுங்கள்" என்று தெரிவித்திருக்கிறோம். அவர்களுக்கும் கட்டுப்படி யாகாத மற்றவர்களுக்கும் வாங்கமுடியாத நிலை ஏற்படக்கூடாது என்றும் தெரிவித்தோம். இந்தக் கட்டுப்பாடு எல்லா ஓட்டல்களுக்கும் சரிப்பட்டு வராது. கூரைக்கட்டிடத்தில் ஓட்டல்கள் நடத்துகிறார்கள். ஓட்டுக் கட்டிடத்தில் ஓட்டல்கள் இருக்கின்றன. மாளிகைகளில் இருக்கின்றன. ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட ஓட்டல்கள் இருக்கின்றன. பளிங்கு மேஜை நாற்காலி போட்ட ஓட்டல்கள் இருக்கின்றன. ஆக இவைகளையெல்லாம் பார்த்து நாம் ஏ, பி, சி, டி என்று நான்கு தரங்களாகப் பிரித்து, அந்தந்த ஓட்டல்களுக்கு ஏற்றவாறு கட்டுப்படியாகக்கூடிய அளவிலும் அந்தந்த இடங்களுக்குண்டான வாடகை, மற்றும் இன்வெஸ்ட்மெண்ட் சார்ஜ், அவர்கள் போட்டிருக்கிற முதலீடுகளை கணக்கிட்டுப் பார்த்து ஏ, பி, சி, டி என்று நான்கு தரங்களாகப் பிரித்து, ஓட்டலை நடத்துங்கள் என்று சொல்லியிருக்கிறோம். விலைவாசியைப் பொறுத்த வரையில், ஓட்டலைச் சேர்ந்தவர்களே நியாயமான விலையில் விற்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதன் பிறகு ஐந்து காசு என்று ஒவ்வொரு பொருளிலும் குறைத்திருக்கிறார்கள். இந்தியா முழுவதும் பார்த்தால், ஓரளவுக்கு தமிழ்நாடுதான், என்னைப் பொறுத்த வரையில் பரவாயில்லை என்று சொல்வேன், அந்த அளவுக்கு இருக்கிறது. பம்பாய், டெல்லி, கல்கத்தா போன்ற நகரங் களில் ஒரு சாப்பாடு 8 ரூபாய், 9 ரூபாய், 10 ரூபாய் என்ற அளவில் விற்கிறார்கள். ஆனால் இங்கே சாதாரண சாப்பாடு ரூ 2.50-க்கு விற்கி றார்கள். ஒரு சாம்பார் சாதம் ஒரு ரூபாய், ஒரு தயிர் சாதம் ஒரு ரூபாய் என்ற அளவில் இரண்டு ரூபாய்கருள் ஒரு சாப்பாடு அடங்கிவிடுகிறது. இதற்கு கறி கொடுக்கிறார்கள். ஓட்டல் விலைகளை கட்டுப்படுத்த வேண்டுமென்றும் உறுப்பினர் திரு லெட்சுமிகாந்தன் அவர்கள் தெரிவித் தார்கள்: விலைகளைக் கட்டுப்படுத்த, அரசாங்கமே ஓட்டல்களை நடத்த வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். நாம் நடத்தினால் இன்னும் விலைவாசி கூடும். இட்லி 80 காசு ஆகிவிடும். ஆகவே விலைகள் குறையும் என்று சொல்வதற்கில்லை. அதற்காகத்தான் மாற்று ஏற்பாடு ஒன்று செய்திருக்கிறோம். விதவைத் தாய்மார்கள், வேறு வழியில்லாமல் பிழைக்க முடியாமல் இருப்பவர்களுக்கு, கடன் உதவி செய்து, இட்லி, தோசை போன்றவைகளைச் செய்து ஓட்டலில் 45 காசு, 50 காசு என்று விற்பனைகளை இவர்கள் 30 காசு, 25 காசு என்ற அளவில் விற்க அவர்கள் முன் வந்தால் அவர்களுக்கு கடன் உதவி செய்ய அரசு முன்வரும் என்று தெரிவித்திருக்கிறோம். பாத்திரம் வாங்க மற்ற ஏற்பாடு களைச் செய்ய சமூக நலத் துறை மூலம் ஏற்பாடு செய்திருக்கிறோம். 48 விதவைத் தாய்மார்கள் இப்படிப்பட்ட கடைகளை வைக்க சென்னையில் உதவி செய்யப்பட்டு வருகிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்,

(முற்பகல் 11-50)

அது உள்ளபடியே நல்ல பலனைத் தந்து, ஓரளவுக்கு சாதாரண நிலையில் இருக்கிற மக்களும், ஏழைகளும் பயன் பெறுகிற நிலை ஏற்பட்டால், அதன் தன்மையைக் கருதி இத்தத் திட்டத்தை விரிவாக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு ஏ. ஜே. தாஸ்:** அப்படிப்பட்ட விதவைகளுக்கு அரசாங்கத்திலாலே இடம் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அதாவது இட்லி, தோசை முதலியவைகளை மலிவு விலையில் கொடுப்பதற்கு ஏதுவாக அவர்களுக்கு அரசாங்கத்தாலே இலவசமாக இடம் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அரசாங்கமே அவர்களுக்கு இடம் ஒதுக்கித் தருவது அல்லது கட்டிடம் கட்டித் தருவது என்பது முடியாது. அவர்களாகவே சில இடங்களைச் சொல்லி அங்கே கடைகளை வைத்து நடத்த வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னால், அந்த இடம் புறம்போக்கு நிலமாக இருந்தால், அப்படிப்பட்டவர்களுக்கு குறைந்த வாடகையிலோ அல்லது வாடகையே இல்லாமலே கொடுப்பதற்கு முயற்சிக்கலாமே தவிர, நாமே கட்டிடம் கட்டிக் கொடுப்பது என்பது முடியாது. அவர்கள் பண்டம் பாத்திரங்கள் வாங்குவதற்கு ஓரளவுக்குக் கடன் அல்லது மானியம் என்ற வகையில் உதவிகளைச் செய்யலாம். தற்போது 48 பேர் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் எவ்வாறு இதனை நடத்துகிறார்கள் என்பது பற்றிய அறிக்கை வந்த பிறகு அதில் இருக்கிற குறைபாடுகளையும், நிறைவுகளையும் எண்ணிப் பார்த்து இத்திட்டத்தை மேலும் விரிவாக்கலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போதே கூட, உணவுப் பண்டங்களின் விலையை நிர்ணயித்து சட்டம் கொண்டு வந்துவிடலாம். ஏற்கெனவே ஓட்டல்களில் விற்கப்படுகிற பண்டங்களுக்கு நாம் விலை நிர்ணயிக்க சட்டம் கொண்டு வர முடியுமா, முடியாதா என்று பார்க்கிறபோது, ஆந்திர மாநிலத்தில் இப்படி ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அதை எதிர்த்து ஓட்டல் உரிமையாளர்கள் எல்லாம் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்தார்கள். 3, 4 ஆண்டுகள் உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கு நடைபெற்று சென்ற ஆண்டு உச்ச நீதிமன்றத்தால் ஒரு தீர்ப்பே வழங்கப்பட்டது. ஏழை எளிய மக்களின் நலனைக் கருதி, இன்றியமையாத உணவுப் பண்டங்களைப் பொறுத்த வரை, அதன் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமை அரசுக்கு உண்டு என்று தீர்ப்பளித்திருக்கிறது. அதற்குப் பிறகுதான் ஆந்திர மாநில முதல்வர் மாண்புமிகு திரு. என். டி. இராமாராவ் அவர்கள் சட்டத்தின் மூலம் ஓட்டல் உணவுப் பண்டங்களுடைய விலையைக் கட்டுப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டார். அப்படியே நாம்கூட இங்கே ஒரு சட்டம் கொண்டு வரலாம். ஆனால், அதனால் ஏற்படுகிற சங்கடங்கள் பல இருப்பதால்தான், கூடுமானவரை அவர்களையெல்லாம் அழைத்து, அவர்களே ஒரு "கோட் ஆப் காண்டக்ட்" என்று வைத்துக் கொண்டால்,



அதிகமாக தவறுகள் நடக்காது என்று விரும்பினோம், இல்லையென்றால், இதற்காக என்று ஒரு பட்டாலியன் அதிகாரிகளை நியமிக்க வேண்டும், அவர்கள் ஒவ்வொரு கடைக்கும் போய் ஒவ்வொரு பொருளையும் நிறுத்துப் பார்த்து 90 கிராம் இருக்க வேண்டியது, 89 கிராம்தான் இருந்தது என்றால், பின்னாலே என்னென்ன நடக்கும் என்பது நமக்கெல்லாம் தெரியும். இந்தத் தன்மைகளையெல்லாம் பார்க்கும் போது, அவர்களுக்கும் கஷ்டம், நமக்கும் கெட்ட பெயர்தான் ஏற்படும். சட்டங்கள் அதிகமாக ஆக, கட்டுப்பாடுகள் அதிகமாக ஆக, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல், குறைபாடுகள் அதிகரிக்கின்றன. கூடுமானவரை சட்டக் கட்டுப்பாடுகளைக் குறைத்துக் கொள்வோமானால், நியாயத்தின் அடிப்படையில் அவர்கள் எல்லாம் சிந்தித்துச் செயல்பட முடியும் என்று நம்புகிறோம். சட்டத்தை நிறைவேற்றிவிடலாம். ஆனால் அதை நடைமுறைப்படுத்துகிற போது ஏற்படுகிற சங்கடங்களை வைத்துதான் இன்னும் சிறிது காலம் பார்க்கலாம் என்று யோசிக்கிறோம்.

அடுத்து, ரூ. 1,500 மாதவருவாய் உள்ளவர்களுக்கும் பண்டங்கள் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் இங்கே கேட்டார்கள். தற்போது ரூ. 1,000 ஊதியம் பெறுகிறவர்களுக்கே கூட முழுமையாக வழங்குவதற்கு அரிசி போதாத நிலைதான் இருக்கிறது. தற்போது 80,000 டன் தேவைப்படுகிற நிலையில் மத்திய அரசு நமக்கு 25,000 டன் மட்டுமே தருகிறது. எனவே ரூ 1,500 என்று உச்ச வரம்பை அதிகரிப்போமானால், இன்னும் அரிசியின் தேவை அதிகமாக ஆகிவிடும். எனவே கூடுதலான அரிசி கிடைக்கும்போது, இதைச் செய்கிற சூழ்நிலையை உருவாக்க முடியும் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே தவறு செய்கிறவர்களுக்கு அதிக தண்டனை கொடுக்க வேண்டும் என்று இங்கே குறிப்பிட்டார்கள். கூடுமானவரை முதலில் சாதாரணமான தவறு செய்கிறவர்களைப் பொறுத்தவரை, முதலில் அவர்களையெல்லாம் எச்சரித்து விட்டுவிடுகிறோம். பிறகு மறுபடியும் தவறு செய்தால், வேலையை விட்டே நீக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சில பேர் பயங்கரமான தவறுகளைச் செய்து விடுகிறார்கள்; பெரிய பெரிய மூட்டைகளையே கடத்திவிடுகிறார்கள். அப்படிப்பட்ட தவறுகளைச் செய்யும்போது, முதல் தடவை அல்லது இரண்டாவது தடவை என்று பார்ப்பதில்லை. அப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கிறோம். அவ்வாறு எடுக்கப்பட வேண்டியவர்கள் அனைவரின் மீதும் நடவடிக்கை எடுத்துவிட்டோம் என்று சொல்ல முடியாது. இன்னும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய நிலையில் பலர் இருக்கிறார்கள். அதிகாரிகள் மட்டுமின்றி பொதுமக்களும் இவர்களைக் கண்காணிக்க வேண்டும். அதன் மூலமாக பொதுமக்கள் மத்தியிலே நல்ல மதிப்பு பெறுகிற அளவுக்கு நிலைமைகள் உருவாக வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். சிலபல குறைபாடுகள் இருந்தாலும்கூட நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், தொடர்ந்து அந்தச்

காலத்திலேயிருந்து நான் சொல்லுகிறேன். உணவுப் பொருள் விநியோகம் என்பது ஆரம்பம் முதலே ஆண்டுதோறும் முறையாக மெல்ல மெல்ல ஆனால் வலிவாக உறுதிபட்டுக் கொண்டே வந்து விரிவுபடுத்தப்பட்டுக் கொண்டே வந்திருக்கிறது. அந்த வகையில் நாம் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில், குற்றங்குறைகள் இருந்தாலும்கூட ஓரளவுக்கு மத்திய அரசும் மற்றவர்களும் பாராட்டத்தக்க அளவுக்குத்தான் தமிழகத்தின் பொது விநியோக முறை இருந்து வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விநியோக முறையைப் பொறுத்த வரையில் தமிழ் நாடு, மகராஷ்டிரம், மேற்கு வங்கம், கேரளம் ஆகிய மாநிலங்களில் ஒழுங்காக வைத்திருக்கிறார்கள். இந்த முறை தமிழகத்தில் மிகச் சிறப்பாக இருப்பதால் அகில இந்திய உணவுச் செயலாளர்கள் மாநாட்டை மத்திய உணவுச் செயலாளர் தலைமையில் கூட்டியபோது, "தமிழகத்திற்குச் சென்று அங்குள்ள சிலபல முறைகளை அறிந்து அவற்றைச் செயல்படுத்த வேண்டும்" என்று மற்ற மாநில உணவுச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தினார். உணவு அமைச்சர் மாநாட்டில் திரு பகவத்ஜா ஆசாத் அவர்கள்கூட இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், பொது விநியோக முறையைப்பற்றி அறியாத மாநிலங்களான மிசோரம், இமாச்சலப் பிரதேசம், நாகாலாந்து, உத்திரப் பிரதேசம், இராஜஸ்தான் போன்ற பகுதிகளுக்குத் தெளிவுபடுத்துவது நல்லது என்று முடிவு செய்யப்பட்டு, அதற்காக ஒரு கருத்து விளக்கப் படம் ஒன்று தயாரிக்க வேண்டும் என்று கருதி, அதுவும் தமிழகத்திலேதான் எடுக்க வேண்டுமென்று மத்திய அரசு கேட்டு, அதற்கான வசதிகள் வாய்ப்புகளை தமிழகம் தரவேண்டும் என்று கேட்டு, பிறகு படம் எடுக்கப்பட்டு நான்கு தினங்களுக்கு முன்பு மத்திய அரசின் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் அதோடு திருப்தி அடைந்துவிட்டோம் என்று சொல்லவில்லை. நாம் 75 பங்கு திருப்தி அடைந்துவிட்டாலும் 25 பங்கு அளவிற்குச் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதைக் கருதி அதையும் தீர்க்க வேண்டும் என்பதை உணர்ந்திருக்கிறோம்.

பொது விநியோக முறையைப்பற்றி இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மெண்ட், பெங்களூர் என்ற நிறுவனத்தின் சார்பாக டாக்டர் பாஸ்கரன் என்பவர் தமிழகத்திற்கு வந்து சில திங்கள் தங்கியிருந்து ஆராய்ந்தார்கள். அவர்கள் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டது சென்னை மாநகரத்தை. அதற்கடுத்து சேலத்தையும், அதற்கடுத்து கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தையும் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டு ஓரளவிற்கு சர்வே செய்து ஒரு ஒட்டுமொத்தமான அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள்.

"A Comprehensive Report of the Exploratory Survey of the Public Distribution System in Tamil Nadu".

என்ற அறிக்கையை இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மெண்ட் பெங்களூர் என்ற நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் பாஸ்கரன்



என்பவர் கொடுத்திருக்கிறார். நமது மாநிலத்தில் பொது விநியோக முறையில் இருக்கின்ற நிலைமைகளை ஆராய்ந்து, வேறுபல மாநிலங்களில் உள்ள நிலைமைகளையும் ஆராய்ந்து தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்:—

"Looking at the system in terms of its operation and management, it can be said that Tamil Nadu is probably one of the States where the public distribution system is well organised, is made accessible to all persons and, at the same time, is disengaged from the clutches of the private trade."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: கூடுமானவரை மாண்புமிகு உறுப்பினர்கள் கண்ணை மூடிக்கொண்டு சிந்திக்க வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பொது விநியோக முறையைச் சிறப்பாகச் செயல்படுத்தி வரும் மாநிலங்களில் தமிழகம் சிறந்து விளங்குகிறது என்று குறிப்பிட்டாக வேண்டும். எல்லா மக்களும் அணுகக்கூடிய முறையில் பொது விநியோக முறை அமைந்துள்ளது. தனியார் வணிகர்களின் இடுக்கிப்பிடி துண்டிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்து 17 ஆவது பக்கத்திலே—

"A major problem faced by this State in the distribution of commodities is due to the shortage of the supply of the commodities by the Centre".

இதில் சில்பல நெருக்கடிகள் ஏற்பட்டதற்குக் காரணம், பொது விநியோக முறையில் வழங்கும் பொருள்களுக்கு உள்ள பற்றாக்குறையை மாநில அரசு எதிர்நோக்க வேண்டிய பிரச்சினைகள்தான். பண்டங்களை வழங்குவதில் மத்திய அரசு பற்றாக்குறை அமைந்திருப்பதுதான் காரணம் என்று தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார். பக்கம் எழுபதிலே கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்:—

"In other words, the data at the aggregate level suggested that the majority of the ration cardholders, nearly 75 per cent, had not to spend more than an hour waiting for their rations. This means that the present arrangement is fairly satisfactory."

இந்தப் புள்ளிவிவரம் ஒட்டுமொத்தமாக வைத்துப் பார்க்கும்போது, குடும்ப கார்டுதாரர்களில் பெரும்பாலோர், 75 சதவீதத்திற்கு மேல் உள்ளவர்கள் ஒரு மணி என்ன உணர்த்துகிறது என்றால்,

நேரத்திற்குள் பண்டங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதுதான் ஆகவே 75 சதவீதத்தினர் ஒரு மணி நேரத்திற்குள் பெற்றுக் கொள்கிறார்கள் என்றால், அவர்கள் ஒரு மணி நேரத்திற்கு மேல் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

(நண்பகல் 12.00)

இதன் பொருள் என்னவென்றால் இப்பொழுதுள்ள ஏற்பாடுகள் திருப்திகரமாக இருப்பதேயாகும். அது மட்டுமல்லாமல் வேறு பல இடங்களில்:—

"When asked whether they had any complaints about the functioning of the ration-shop from where they received their rations, 81 per cent of the customers said that they had no complaints at all. This indicated that a large majority of them were generally satisfied with the services at the fair price shop. Shortage of goods due to defective weighing was mentioned by some. This was followed by the poor quality and lack of sufficient staff to serve them better 12 per cent. Some said that they had to wait for a long time to draw their rations"

என்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டு சிலபல குறைபாடுகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆக எடை குறைகின்ற அளவுக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். சிலபல கடைகளிலே அப்படிப்பட்ட தவறுதல்களைச் செய்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். சில இடத்திலே 'புவர் குவாலிட்டி' என்று சொன்னார்கள். சில இடத்திலே சர்வீஸ் சரியாக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 80 சதவீத கடைகளை ஒட்டு மொத்தமாகப் பார்க்கின்றபோது, சிறப்பாகத்தான் அமைந்திருக்கின்றது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். என் இவையெல்லாம் நான் சொல்லி வருகிறேன் என்று சொன்னால், ஓரளவுக்கு இருக்கின்றதை எடுத்துக்கொண்டு கடைசியிலே, Conclusion சொல்கின்றபோது கூட

"A study of the public distribution system in Tamil Nadu has shown that it is a well-organized sytem which can even serve as a model for other states follow. This is because the State Government has taken some conscious policy decisions and has tried to implement them seriously so that the consumers all over the State could derive the full benefit of this scheme."

தமிழ் நாட்டின் பொது விநியோக முறையைப்பற்றி நடத்திய ஆய்வு பொது விநியோக முறை சிறப்பாக உயர்த்தப்பட்டிருக்கிறதென்பதையும், மற்ற மாநிலங்களில் இந்த முன் மாதிரியாகக் கொண்டு பின்பற்றத் தக்க அளவுக்கு அமைந்திருக்கிறதென்பதையும் சுட்டிக்காட்டுகிறது. இதற்கு என்ன காரணம் என்றால், மாநில அரசு தெளிவான மனச் சான்றோடு கூடிய முறைகளை மேற்கொண்டு இருப்பதும், அவற்றை



நடைமுறைப்படுத்துவதில் முழு முனைப்பு உள்ளத்தோடு கவனம் செலுத்தி வருவதும், ஆக அங்களிடம் உள்ள எல்லா நுகர்வோர் களுக்கும் இந்தத் திட்டத்தின் முழு நன்மைகளும் பெறவேண்டுமென்ற அக்கறை காட்டுவதும் ஆகுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன சிலபல குறைபாடுகள் களையப்படவேண்டியதுதான். அதற்கான தக்க முயற்சிகளை அந்தந்த பட்டத்திலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மாவட்ட அளவிலும் ஒவ்வொரு கடையும் சிறப்பாக நடைபெற வேண்டுமென்று, ஒவ்வொரு ஊரிலும் கூட குழுக்கள் அமைத்திருக் கிறோம். அந்தக் குழுக்கள் அமைத்தோமே தவிர மிகச் சில இடங்களிலேதான் சிறப்பாக நடைபெறுகின்றன மற்ற இடங்களில் குழுக்கள் அமைந்திருக்கின்றன ஆனால் அதனுடைய பணிகள் செம்மையாக இல்லை. ஆகவே சின்னச் சின்ன ஊர்களிலே நடைபெறுகின்ற சிறு சிறு குறைபாடுகள், மற்றவைகளை யாராவது கவனத்திற்குக் கொண்டு வருகின்றபோதுதான், அது எழுத்துமூலமாக வருகின்றபோது, அதைக் கேட்கின்றபோது, அது சிறப்பாக அமையும்; அவை நிரூபிக்கப்படுகின்ற நிலையில் அவர்கள் மீது தண்டனை வழங்கவும், நடவடிக்கை எடுக்கவும் கூட அரசுக்கு வாய்ப்பாக அமைகிறது. அந்த வகையிலே தான் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இந்தச் சீரிய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து, இந்த உணவுக் கொள்கை மேலும் சிறப்பாக அமைய வேண்டும், செம்மையாகத் திகழ வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள்.

இங்கே புதிய உறுப்பினராக மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலாஜி கன்னிப் பேச்சாகவே முடித்துவிட்டார்; கன்னிப்பேச்சு என்று ஆரம்பித்து அடுத்த தடவை அதைக் காளைப் பேச்சாக ஆரம்பிக்கவில்லை. காளைப் பேச்சாக ஆரம்பிப்பார் என்று கருதுகிறேன்.

திரு எஸ். ஜே சாதிக் பாட்சா: துணைத் தலைவர் அவர்களே, கன்னிப் பேச்சுக்கும், காளைப் பேச்சுக்கும் என்ன வித்தியாசம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, கன்னிப்பேச்சு என்றால் ரொம்ப மென்மையாக, கொஞ்சமாக அழகாக, நாணமாக, அச்சமாக, பயிர்ப்போடு பேசுவதற்கு கன்னிப் பேச்சு என்று பெயர். கொஞ்சம் வீரமாக, தீரமாக, அழுத்தந்திருத்த மாகப் பேசுவதற்கு காளைப் பேச்சு என்று பெயர். அடுத்த தடவை காளைப் பேச்சு பேசுவார் என்று கருதுகிறேன் என்று சொல்லி, முதல் முறையாகப் பேசியதற்காக அவரையும் பாராட்டி மற்றவர்களையும் பாராட்டி அமர்கிறேன்.

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். இரண்டு பிரச்சினை—ஒன்று பொதுப் பிரச்சினை. சென்னை தனிப்பட்ட பிரச்சினை; இரண்டாவது கடைகள் மூலமாக ஸ்டாகரிங் சிஸ்டம் நகரில் இருக்கிற நியாய விலைக் பொருள்கள் விநியோகிக்கப்படுவதாகச் சொன்னார்கள் மூலமாக இப்போது என்னவென்றால், அந்த ஸ்டாகரிங் சிஸ்டத்தினால் என்னுடைய அனுபவம்

ஒரு குறிப்பிட்ட நாளில் வரச் சொல்கிறார்கள். அன்றைக்கு மண்ணெண்
ணெய், சர்க்கரை, பாமாயில், கோதுமை போன்ற பொருட்களைக்
கொடுப்பதற்காக. அந்தக் குறிப்பிட்ட நாளன்று போகும்போது ஸ்டாக்
இல்லையென்று சொல்லி விடுகிறார்கள். பிறகு சென்றால், அவர்
களுக்குக் கிடைப்பதே கிடையாது. என்னுடைய அனுபவம்
இருக்கிறது. இந்த அனுபவம் பலருக்கும் ஏற்பட்டிருக்கிறது. இப்படி
தான் அந்தக் குறிப்பிட்ட நாளிலேயே ஸ்டாக் இல்லை என்று சொன்னால் எனவே
அந்த மாதம் முழுவதும் கொடுக்கவேண்டிய பொருட்களைக் கொடுப்
பதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் தரவேண்டுமென்று கேட்கிறேன்

இரண்டாவது, ஆந்திர மாநிலத்தைப் பொறுத்த வரையில், Take
over of wholesale trade in foodgrains—உணவு தானியத்திலே மொத்த
வியாபாரத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவித்
திருக்கிறது. நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கை என்னவென்ற
விளக்கத்தையும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக்
பாட்சா அவர்கள் சொன்ன குறைபாடுகள் சிலபல இடங்களிலே இருக்
கின்றன. அதுபற்றி ஏற்கனவே என்னுடைய கவனத்திற்கு வந்திருக்
கின்றது. குறிப்பிட்ட நாளிலே, வரவேண்டும் என்று சொல்லி,
வரும்போது "ஸ்டாக் இல்லை, ஆகவே தருவதற்கு இல்லை" அப்படி
சொல்லி, கடைசி வரையிலே தராமல் இருந்துவிடுகின்றார்கள் என்று
சொல்கிறார்கள். அவர்கள் சொன்னது மாதிரி சிலபல கடைகளிலே
இந்தக் குறைபாடு இருக்கின்றது. ஆனால் இப்போதுள்ள முறை நல்ல
முறை. அவர்களுடைய நல்லநோக்கம் ஈடேற வேண்டும். குடும்ப
அட்டை கொண்டுவரும் யாரும் ஏமாற்றப்படக்கூடாது. அவர்களுக்கு உரிய
பொருள்கள் உரிய நேரத்தில் தரப்பட வேண்டும் அப்படி பொருள்கள்
போதுமான அளவுக்குப் பொருள்கள் அப்போது வந்து சேரவில்லை
என்றால், எந்த நாளில் வரும், என்றைக்குத் தருகிறோம் என்றாவது
அதிகாரிகள் சொல்ல வேண்டும் என்று நான் அந்த அதிகாரிகளுக்குச்
சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா
சொன்ன கருத்தை முன்னரே என்னுடைய கவனத்திற்கு வேறு சிலரும்
கொண்டு வந்திருக்கின்றார்கள். அது குறித்தும் நான் விவரம்
கேட்டிருக்கிறேன். அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று
கருதுகிறேன். அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்
பதையும் இந்த வாய்ப்பிலே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, முழு உணவு தானிய விநியோகத்தையும், கொள்முதலையும்
வியாபாரத்தையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு
வந்ததாக எனக்குத் தெரியவில்லை. அப்படி வந்தால், அதனுடைய
விளைவுகள் என்ன என்று சொல்லும்போது....

**திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆந்திராவிலே அப்படி அறிவித்திருப்
பதாகப் பத்திரிகையில் வந்திருக்கின்றது. நம் அரசாங்கத்தினுடைய
கொள்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதிலே பல சங்கடங்கள்
வரும், அதிலே பல சங்கடங்கள் வருகின்றபோது, நாமே கொள்முதல்
செய்ய, நாமே வியாபாரம் செய்வது என்றால், பல லட்சக்கணக்கான
வியாபாரிகள் இருக்கின்றார்கள். கொள்முதல் செய்கின்றபோது
கட்டாயமாக நாம் விதிக்கின்ற விலைக்குத்தான் வாங்க வேண்டும். ஓபன்
மார்க்கெட், மத்திய அரசு இப்போது இதை வைத்திருப்பதற்கும் காரணம்
இருக்கிறது. இரண்டு சந்தைகளும் வைத்திருப்பதற்குக் காரணம்
இருக்கிறது. நலிந்தவர்களுக்கு ஓரளவுக்குச் சலுகைகளைத் தர வேண்டும்
என்பதற்கு நியாய விலைக்கடைகள். வசதி படைத்தவர்கள் வெளிச்
சந்தையிலே எப்படியானாலும் வாங்கிக்கொள்ள வேண்டும் என்றுதான்
இருக்கிறது. கிட்டத்தட்ட 60 சத விகிதம் சர்க்கரையை அரசுக்குக் கொடுத்து
விட்டு, 40 சத விகிதம் சர்க்கரையை வெளிச்சந்தையில் விற்கலாம் என்று
அனுமதித்திருக்கிறார்கள்.

அதுபோலவே, 50 சத விகிதம் நெல்லைக் கொடுத்துவிட்டு, 50
சத விகிதத்தை வெளியிலே விற்கலாம் என்று மத்திய அரசு சொல்லி
யிருப்பதாகச் சொல்கின்றார்கள். மத்திய அரசுக்கு இப்படிப்பட்ட எண்ணம்
இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அது ஆந்திர அரசினுடைய
எண்ணமாக இருக்கலாம். ஆனால் மாநில அரசைப் பொறுத்த வரையில்
அதை ஏற்றுக் கொண்டால், அதனால் வருகின்ற விளைவுகளை நாம்
பின்னர் அனுபவிக்கவேண்டி வரும். மத்திய அரசே அப்படி ஒன்று
கேட்குமானால், அதை மீண்டும் சிந்தித்து நம் கருத்து என்ன என்பதைத்
தெரிவிக்கலாம்.

**Thirumathi TARA CHERIAN:** Sir, before accepting the
Policy Note on the Food situation in Tamil Nadu which
has been placed before the House, I would like to have
from the Hon. Minister a few clarifications. First, will
the Hon. Minister confirm the report that the soya-bean
oil that is being distributed is stinking, is not usable and
is not edible? May I know how many tonnes of this
soya-bean oil the Government have received? The Food
Department, I think, must have got the oil through the
State Trading Corporation of India. In that case, are we
returning the oil and getting the money back? In this
connection, I would like to make a suggestion. As far as
I know, people in Tamil Nadu use only groundnut-oil
and gingelly-oil for cooking purposes. Groundnut and gin-
gelly are cash crops. Just now, the Hon. Minister very
clearly said that the storage position in the various irri-
gation sources is much better. Therefore, will the Hon.
Minister think of increasing the acreage under these cash
crops by distributing more seeds to the farmers.

I would like to ask another question also. Man can not live on cereals alone. In the matter of people's food habits, we cannot draw a line and say that a person should follow only a particular food habit. If everybody becomes a vegetarian and if everybody eats only rice, we will find Tamil Nadu only in the bottom-most rung of the ladder. Therefore, we evolved a good policy of having a Tamil Nadu Meat Production Unit whereby we could get good meat. I think it is coming up near Chengal-pattu. That policy also........

Mr. DEPUTY CHAIRMAN: This opportunity is given to the hon. Members only to ask questions. If the Hon. Member had got some ideas, she could have presented them earlier. There was enough occasion for the Hon. Member to speak on the Policy Note.

THIRUMATHI TARA CHERIAN: I did not get that opportunity, Sir. I am only seeking certain clarifications.

Mr. DEPUTY CHAIRMAN: Perhaps, now it may be difficult for the Hon. Minister to answer so many points.

THIRUMATHI TARA CHERIAN: He has got a very clear mind, Sir. I want to ask a question about running canteens. I am glad that the Government are giving Rs. 1,000 to widows for running 'Iddli' shops. But is the Hon. Minister aware that the Tamil Nadu State Social Welfare Board is running several canteens in various districts of Tamil Nadu? Recently also, a week ago, one such canteen was started in the campus of the Government Royapettah Hospital and it is serving nearly 1,000 meals a day. In these canteens, food is hygienically prepared in a most economic way. Deaf and dumb girls and other physically handicapped girls are also trained in these canteens and the food is served in a beautiful way. The cost of food is very much cheaper in these canteens than in any hotel. Therefore, will the Government think of giving money for running these canteens?

I want to ask one more question, Sir. Is it not a fact that in Andhra Pradesh, Gujarat, Maharashtra and other States, several incentives are being given for starting poultry units? If Tamil Nadu also could start giving such incentives, many people will go in for starting poultry units and there would not be so much dearth of vegetables.





I want to make only one more suggestion, Sir. We, in the women's organisations, can show people how tasteful preparations could be cooked making use of wheat in an economical way. Somehow, South Indians prefer only rice and they do not find wheat preparations very palatable. The Government do not have enough people to do propaganda work in this regard. Therefore, the Government can make use of the services of the women's organisations for this purpose.

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பாமாலின் எண்ணெய்யை மத்திய அரசு வழங்கிக் கொண்டு வந்தது. பாமாலின் எண்ணெய், மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு மத்திய அரசு கொஞ்சம் சப்சிடி தந்து ஒரு கிலோ 9 ரூபாய்க்குத் தந்தோம். மலேசியா அரசு என்ன செய்ததென்றால், இந்தியா நம்மை நம்பித்தான் வாழுகிறது. இந்தியாவில் மற்ற எண்ணெய்கள் எல்லாம் விலை உயர்வாக இருக்கின்றன என்று கருதி, பாமாலின் எண்ணெய் விலையை தொடர்ந்து உயர்த்திக் கொண்டே வந்தது. இரண்டாவதாக மலேசியா நாட்டில் வேலை நிறுத்தம் ஏற்பட்டு பாமாலின் எண்ணெய் உற்பத்தி குறைந்து விட்டது. இந்த நிலைமையில், பாமாலின் எண்ணெய்யை மட்டும் நம்பி நாம் வாழ முடியாதென்ற முடிவுக்கு மத்திய அரசு வந்து சோயாபீன்ஸ் எண்ணெய்யை வாங்கலாம் என்ற முடிவுக்கு வந்தது. சோயாபீன்ஸ் எண்ணெய்யைப் பொறுத்த வரைக்கும் உலகத்தில் பல நாடுகளில் கிடைக்கின்றது. சோயாபீன்ஸ் எண்ணெய்யை பல நாடுகள் நமக்குக் குறைந்த விலைக்கு விநியோகம் செய்வதற்குத் தயாராக இருக்கின்றன. இந்நிலையில் மத்திய அரசு, பாமாலின் எண்ணெய்யும் எந்த அளவிற்கு கிடைக்கின்றதோ அதையும் வாங்கிக் கொள்ளலாம், அதோடு வேறு பல நாடுகளிலிருந்து சோயாபீன்ஸ் எண்ணெய்யும் வாங்கிக் கொள்ளலாம், அப்போது தான் மலேசியாவும் தன்னை உலகத்திலே ஏகபோக விற்பனையாளர் என்று எண்ணுவதற்கு இடம் தராத அளவிற்கு செய்ய முடியும், பாமாலின் எண்ணெய்யும் விலை குறையக் கூடும் என்று கருதியது. அதன் அடிப்படையில் தான் மத்திய அரசு சோயாபீன்ஸ் எண்ணெய்யை அதிக அளவிற்கு வாங்கினார்கள். பாமாலின் எண்ணெய்யையும் தொடர்ந்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பாமாலின் எண்ணெய்யாக இருந்தாலும், சோயாபீன்ஸ் எண்ணெய் யாக இருந்தாலும், ஒரே விலைக்குத் தான் விற்கிறோம். கடலை எண்ணெய் ஒரு கிலோ ரூ. 16-க்கு வருகிறது. நல்லெண்ணெய் ஒரு கிலோ ரூ. 19 அல்லது ரூ. 20-க்கு வருகிறது. தேங்காய்

எண்ணெய் 38 ரூபாய்க்குப் போயிருக்கிறது. தேங்காய் எண்ணெய் கேரளாவிலேயே 35 ரூபாய்க்கு விற்கிறது. தேங்காய் எண்ணெய் விலை இந்த அளவிற்கு போனதற்குக் காரணம் தேங்காய்கள் அதிகம் பாழ்பட்டு விட்டதென்று சொல்கிறார்கள்.

சோயாபீன்ஸ் எண்ணெய்யைப் பொறுத்த வரைக்கும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் கூறியதைப் போல, சில இடங்களில் கொதிக்க வைக்கிறபோது துர்நாற்றம் ஏற்படுகிறதென்றும், சகிக்கவில்லை என்றும் சொன்னார்கள். ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் தலைவர் ஐந்து நாட்களுக்கு முன் வந்திருந்தபோது, இந்தக் குறைபாட்டை நான் அவரிடம் எடுத்து சொன்னேன். அதற்கு அவர், பல இடங்களில் அதைக் கொதிக்க வைக்கும்போது துர்நாற்றம் வருகிறதென்றும், கொதிப்பு அடங்கி ஆறிய பிறகு துர்நாற்றம் அறவே இல்லையென்றும், அந்த துர்நாற்றத்தை அகற்றுவதற்கு ரசாயன முறையில் ஏதாவது மாற்றம் செய்யலாமா என்று ஆராய்ந்து கொண்டிருப்பதாகவும், ஆனால் ஆறியதற்குப் பிறகு அந்த நாற்றமில்லை என்றும் கூறினார். நானும் சில இடங்களுக்குச் சென்றபோது இது குறித்து விசாரித்தேன். பலர் இதை மறுக்கவில்லை. சிலர் இந்த நாற்றம் வருவதால் எண்ணெய்யை வீணாக்கி விட்டதாகச் சொன்னார்கள். அதற்காக விளம்பரத்தை நன்றாகச் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். ஆனாலும், நான் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் தலைவரிடம் பாமாலின் எண்ணெய்யே அதிகம் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறியிருக்கிறேன்.

"தமிழக மக்கள் அதிகம் பயன்படுத்துவதும், தமிழக மக்களுக்கு அதிகம் பழக்கப்பட்டு விட்டதும் பாமாலின் எண்ணெய்யாகும். இரண்டாவது, எண்ணெய்யை அதிகம் பயன்படுத்துகிற பழக்கத்தைத் தமிழக மக்கள் கொண்டிருக்கிறார்கள். சமையல் காரியங்களுக்கு பல விதங்களில் பயன்படுத்துகிறார்கள். இந்தியாவில் உள்ள வேறெந்த மாநில மக்களும் இந்த அளவிற்குப் பயன்படுத்தவில்லை. ஆகவே கூடுமான வரையில் உங்களுக்கு வருகிற பாமாலின் எண்ணெய்யில் அதிகப் படியாக தமிழகத்திற்கு ஒதுக்கித் தருங்கள்" என்று அவரிடம் சொல்லியிருக்கிறேன். அவரும் கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறார்.

இட்டிலி போன்ற உணவுப் பொருள்களை, அரசாங்கம் விற்கிற அளவிற்குரிய தன்மை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய திட்டத்தைப் போட்டு சமூக நலத் துறை மூலமாக அனுப்புவார்களேயானால், சமூக நலத் துறையும் உணவுத் துறையும் கலந்து அதை எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தி சாதாரண மக்களுக்கு நல்ல பயக்கு மளவிற்குக் கொண்டுவர முடியுமோ அந்த அளவிற்குக் கொண்டு வர இந்த அரசு சிந்திக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்



கிறேன். அதற்கு ஒரு பிரபோசலைப் போட்டு சமூக நலத் துறை மூலமாக உணவுத் துறைக்கு அனுப்பி வைக்கும் படியாகக் கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பிறகு ஆலோசித்து ஓரளவிற்குப் பாதுகாப்பு தர முடியும்.

**திருமதி தாரா செரியன்:** இந்த மாதிரி கேண்டீன் ஆரம்பிப்பதற்கு எங்களுடைய அமைப்புக்கும் அரசு உதவி செய்யுமா.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அப்படிக் கூடச் செய்யலாம். சமூக நலத் துறை மூலமாக செயற்குறிப்பு வந்தால், ஆராய்ந்து பார்த்து, என்ன செய்யலாம் என்பதை அரசு முடிவு செய்யும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 25—4—1984, புதன்கிழமை காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-15)

## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

149. மதுரா சர்க்கரை நிறுவனத்தை தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்திற்கு ஒப்படைத்தல் குறித்து தொழில் துறையின் 27—12—83 ஆம் நாளிட்ட 1572 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1983ஆம் ஆண்டு மதுரா சர்க்கரை நிறுவனம் (தொழில் நிறுவனத்தை மாற்றுதலும்-கையகப்படுத்தலும்) அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 18/1983) 33 (4) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

150. சென்னையிலுள்ள ஜெர்மன் தொழுநோய் தணிப்புக் கழகத்திற்குச் சொந்தமான இருபத்தியொன்று மோட்டார் வண்டிகளுக்கு வரி வீதங்களில் சலுகை குறித்து, உள்துறையின் (போ. க. I) 20—1—84 ஆம் நாளிட்ட 207 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

151. 1982-83 ஆம் ஆண்டிற்குரிய இந்திய தணிக்கைத்துறைத் தலைவரின் (வருவாய் வரவுகள்) அறிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) ஆம் பிரிவின்கீழ், அவை முன் வைக்கப்பட்டது]

152. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய வடிசாலை விதிகளில் செய்யப்பட்ட திருத்தங்கள் குறித்து, மதுவிலக்கு ஆயத்துறையின் III, 7—2—84 ஆம் நாளிட்ட 154 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

[ 1984 ஏப்ரல் 24

153. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய வடிசாலை விதிகளில் செய்யப்பட்ட திருத்தங்கள் குறித்து, மதுவிலக்கு ஆயத்துறையின் III, 8—2—84 ஆம் நாளிட்ட 171 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) ஆம் பிரிவின்கீழ், அவை முன் வைக்கப்பட்டது].

154. வருவாய்த்துறையின் 9—7—1884 ஆம் நாளிட்ட 419 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட வெட்டு மரங்களையும் ஏனைய உற்பத்திப் பொருட்களையும் நீக்குவதற்காக விதிக்கப்படுகின்ற உரிமை வரியை முறைப்படுத்துவதற்கான விதிகளில் செய்யப்பட்ட திருத்தங்கள் குறித்து, வன-மீன் துறையின் 28—1—80 ஆம் நாளிட்ட 93 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-A ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

155. வாழையின் அனைத்து வடிவுகளும் வேளாண் விளை பொருளாக அறிவிக்கப்பட்டது குறித்து, வேளாண்மைத்துறையின் 3—1—1984 ஆம் நாளிட்ட 15 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின்கீழ், அவை முன் வைக்கப்பட்டது].

156. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் வாழையின் அனைத்து வடிவங்களையும் விளை பொருள்களாக வாங்குதல்-விற்பனை செய்தல் மீதான கட்டுப்பாட்டு வரிசைக்கு அரசின் நோக்கத்தை அறிவித்தது குறித்து, வேளாண்மைத் துறையின் 3—1—84 ஆம் நாளிட்ட 15 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1954) 29 (4) ஆம் பிரிவின்கீழ், அவை முன் வைக்கப்பட்டது].

157. அரசு மேற்கொண்ட ஆய்வுடன் கூடிய 1981-82 ஆம் ஆண்டிற்குரிய தமிழ்நாடு வேளாண் தொழில்கள் நிறுவனத்தின் 16 ஆவது ஆண்டு அறிக்கை [(தமிழ்-ஆங்கிலம்) 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) ஆம் பிரிவின்கீழ், அவை முன் வைக்கப்பட்டது].

158. கும்பகோணம், சோழன் பொறியியல் கழகத்தின் 1982 ஆம் ஆண்டிற்குரிய எட்டாவது ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) ஆம் பிரிவின்கீழ், அவை முன் வைக்கப்பட்டது].

159. கும்பகோணம், சோழன் பொறியியல் கழகத்தின் 1983 ஆம் ஆண்டிற்குரிய ஒன்பதாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) ஆம் பிரிவின்கீழ். அவை முன் வைக்கப்பட்டது].



1984 ஏப்ரல் 24]

160. 1981-82 ஆம் ஆண்டிற்குரிய தமிழ்நாடு கரும்புப்பண்ணைக் கழகத்தின் ஆண்டு அறிக்கையும், கணக்குகளும் [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) ஆம் பிரிவின்கீழ், அவைமுன் வைக்கப்பட்டது].

161. 1981-82 ஆம் ஆண்டிற்குரிய பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 ) 619 (A) ஆம் பிரிவின்கீழ், அவை முன் வைக்கப்பட்டது].

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

*98. தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

99. தமிழ்நாட்டில் 1983-84 ஆம் ஆண்டிற்கான சாலை மேம்பாட்டு திட்டங்கள் குறித்த ஆய்வும் 1984-85 ஆம் ஆண்டிற்குரிய திட்டங்களும் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

100. செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

101. தமிழ்நாடு தீயணைப்புத்துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

102. மாநில ஆயத் தீர்வைத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

103. தமிழ்நாடு காவல் துறை பற்றிய ஆய்வுரை, 1983-84 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

104. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் குறித்த கொள்கைகளும், திட்டங்களும், 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

105. சின்கோனாத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

106. 1984-85 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத்துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

107. 1984-85 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத்துறை பற்றிய வணிக சம்பந்தமான வரவு செலவுத் திட்டம் (ஆங்கிலம்).

*108. மீன்வளத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

---

* 21—4—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

109. 1984-85 ஆம் ஆண்டிற்கான மின்வளத்துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

110. 1973-74 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் இந்திய தணிக்கைத்துறை தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கை மீது 1977—79 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழு அளித்த எட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய இருபத்தி நான்காவது அறிக்கை.

111. மிகைச் செலவினை முறைப்படுத்துவதில் ஏற்பட்ட காலதாமதம் குறித்த பொதுக்கணக்குக் குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கை.

* 112. மருத்துவம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 113. மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 114. இந்திய முறை மருத்துவம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 115. 1984-85 ஆம் ஆண்டில் மருத்துவப்பணி மற்றும் குடும்ப நலம் பற்றிய செயல்வினை முறைத்திட்டம் (ஆங்கிலம்).

* 116. 1984-85 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்வி பற்றிய செயல்வினை முறைத்திட்டம் (ஆங்கிலம்).

* 117. 1984-85 ஆம் ஆண்டின் மருத்துவம் பற்றிய செயல்வினை முறைத்திட்டம் (ஆங்கிலம்).

* 118. 1984-85 ஆம் ஆண்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து, ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாநில சுகாதார போக்குவரத்து, மருந்துப்பொருள் கட்டுப்பாட்டு நிருவாகத் துறைகள் பற்றிய செயல்வினை முறைத்திட்டம் (ஆங்கிலம்).

* 119. காற்று-நீர் மாசு கட்டுப்படுத்தல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

---

* 23—4—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.



## இணைப்பு I.

(5 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 139-க்கான விடையைக் காண்க.)

இம்மாநிலத்தில், செயற்பட்டுவரும், அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகளின் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், அவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத பிற ஊழியர்கள் ஆகியோருக்கு உரிய பணிப்பாதுகாப்பு வழங்கவும் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட, தனியார் பள்ளிகள் (வரன் முறைச்) சட்டம், 1973 மற்றும் அதன் கீழ் விதிகள் ஆகியவைகள் இயற்றப்பட்டு 1—12—74 முதல் இம்மாநிலத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளன. இச்சட்டம், மாநிலத்தில் செயற்படும், ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைத் தனியார் பள்ளிகட்குப் பொருந்தும்.

2. இச்சட்டம், செயற்படத் துவங்கியவுடன், இதனை எதிர்த்து 1,300-க்கும் மேற்பட்ட நீதிப்பேராணை மனுக்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் தனியார் பள்ளி நிர்வாகிகளால் தொடுக்கப்பட்டன. இவ்வழக்குகளை சிறுபான்மையினர், சிறுபான்மையினர் அல்லாதார் ஆகிய இருதரப்பினைச் சேர்ந்த பள்ளி நிர்வாகிகளும் தொடுத்தனர் இவற்றுள் சிறுபான்மயினர் அல்லாதார் மட்டும், சுமார் எண்ணூற்றிற்கும் மேற்பட்ட நீதிப்பேரணை மனுக்களைத் தொடுத்தனர். இவ்வழக்குகள் நிலுவையில் இருந்தகாலமான 1974-75 ஆம் ஆண்டுகளில் மேற்சொன்ன பல வழக்குகளில் மேற்படி சட்டம் மற்றும் அதன் முக்கிய பெரும்பான்மையான பிரிவுகள், தங்கள் பள்ளிகட்குச் செல்லாது என சிறுபான்மையினர் அல்லாதார் தொடுத்த பல வழக்குகளிலும் தடையுத்தரவுகள் சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகிகளால் பெறப்பட்டன. ஆனால், உயர்நீதிமன்றத்தின் 17—12—75 நாளிட்ட, தீர்ப்பில் மேற்சொன்ன சிறுபான்மையினர் அல்லாதாரால் தொடுக்கப்பட்ட பல வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. அதன் பின்னரும் மீதமிருந்த வழக்குகள் யாவும் மேற்சொன்ன 17—12—75 நாளிட்ட தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு 4—10—76 அன்று தள்ளுபடி செய்யப்பட்டு விட்டன. எனவே அவர்கள் பெற்ற தடை உத்தரவுகளும் 4—10—75 அன்று உடன் முற்றுப்பெற்றுவிட்டன. எனவே 1975 ஆம் ஆண்டில்தான் சிறுபான்மையினர் அல்லாதாரால் மேற்சொன்ன சட்டமும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் தங்கள் பள்ளிகட்கு பொருந்தாது என தொற்றுக் கணக்கான தடை உத்திரவுகள் பெறப்பட்டன. அவைகள் யாவும் 4—10—76 அன்று உடன் முடிந்துவிட்டன. இவை தவிர 1975 ஆம் ஆண்டிற்குப் பின்னரும் சிறுபான்மையினர் அல்லாதாரால் நடத்தப்படும் சிற்சில பள்ளிகள் அவ்வப்பொழுது தமிழ்நாடு தனியார் பள்ளிகள் வரன்முறை சட்டத்திற்கெதிராக வழக்குகள் பதிவு செய்து ஒன்றிரண்டு தடை உத்தரவுகள் பெற்று வருகின்றன. அவைகளை நீக்குவதற்கும் உரிய முயற்சிகள் அவ்வப்போது அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்சொன்ன 1974–75 ஆண்டு வழக்குகள் ஒன்றிரண்டு வழக்குகளில் பள்ளி நிர்வாகிகள் உச்சநீதிமன்றம் சென்று மேல் முறையீடுகள் செய்துள்ளனர். வழக்குகள் இன்னமும் நிலுவையில் உள்ளன. ஆரம்ப மற்றும் நடுநிலை பள்ளி நிர்வாகிகள் சங்கச் செயலாளர் திரு பினாகபாணி என்பவரால் உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண் 1464/80-ல் உச்சநீதிமன்றம் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் வரன்முறை விதிகள், 1974-ன் பிரிவு 9 (2) (சி) அதாவது புதிய பள்ளிகள் துவங்கவும் தற்பொழுதுள்ள பள்ளிகளை நடுநிலைப், பள்ளியாகவோ உயர்நிலைப் பள்ளியாகவோ உயர்த்தவோ கட்டளை நிதி (Endowment) ஏற்படுத்த வேண்டும் உரிய அதிகாரியின் அங்கீகாரம் பெற வேண்டும், அதற்குரிய நிபந்தனைகள் தொடர்பான விதி மட்டும் அச்சங்கத்தைச் சார்ந்த நிர்வாகிகளின் பள்ளிகட்குப் பொருந்தாது என தடையுத்திரவு வழங்கி உள்ளது. அத்தடை தற்பொழுதும் அமுலில் உள்ளது. வழக்கு முடியும் வரையிலான நிரந்தரத் தடையுத்தரவாக இதனை உச்ச நீதிமன்றம் வழங்கி உள்ளது. இவ்வாறு பல்வேறு காலகட்டங்களில் பெறப்பட்ட தடையுத்தரவால் ஆசிரியர்கள் எவரும் பாதிக்கப்பட்டதாக தகவல் இல்லை.

## இணைப்பு II.

(22 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக் குறிப்பைக் காண்க.)

20—1—80 நாளிட்ட கல்வித்துறை அரசு ஆணை எண் 166-ன்படி முன்னாள் இருமுனைப்பாட ஆசிரியர்களுள் தகுதிவாய்ந்தவர்களை மேல்நிலை வகுப்புகளில் தொழிற்பாட போதனை செய்ய அனுமதிக்கப்பட்டவர்கள் இதில் உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் போலவே சிறப்பூதியம் பெற அவர்கள் தொழிற்பாடத்துடன் பொதுப் பாடத்தையும் வாரத்திற்கு 24 பாடவேளைகளுக்கு குறையாமல் பணியாற்றவேண்டும். பொதுப்பாடங்களை நடத்த முதுகலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். பின்னர்

பிறகு தொழிற்பாட போதனைக்கு ஒதுக்கப்பட்ட ஒரு வாரத்திற்கான பாடவேளைகள் 20 லிருந்து 18 ஆக குறைக்கப்பட்டன. இதனை பிறகும் மேற்கூறிய வகையைச் சேர்ந்த தொழிற்பாட ஆசிரியர்கள் மேற்கூறிய நிபந்தனையைப் பூர்த்தி செய்யாத நிலையிலும் தொடர்ந்து சிறப்பூதியம் பெற்றுவந்தனர். இதனால் அதிகப்படியாக சிறப்பூதியம் பெற்ற நிலையும், அதனை திரும்பப் பிடித்தம் செய்யவேண்டிய நிலையும் தோன்றியது. ஆனால், அரசின் 16—4—84 நாளிட்ட கடித எண் 102870/மே.நிக, 1/80, 22-ல் தொழிற்பாட ஆசிரியர்கள் சிறப்பூதியம் பெற அவர்கள் வாரத்திற்கு 24 பாட வேளைகள் பணியாற்ற வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்த நிபந்தனை நீக்கப்பட்டுவிட்டது. மேற்கண்ட பாடவேளை நிபந்தனையினால் ஏற்கெனவே சிறப்பூதியத்தை பெறாதவர்களுக்கும் அவர்கள் இழந்த சிறப்பூதியத்தை மீண்டும் பெறவும் அரசு ஆணையிட்டு உள்ளது. ஆகவே சுட்டிக் காட்டப்பட்டது போன்ற வழக்கு அடிப்படையாக தீர்க்கப்படுவிடும். மேலும் பிரச்சினைகள் நீடிக்காது.



## இணைப்பு III.

(24 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### I. தமிழகத்தில் உணவு நிலைமை.

1. அரிசி நிலைமை.—கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததின் காரணமாக தமிழகத்தின் உணவு முனையில் ஒரு சங்கடமான நிலை உருவானதை இம்மாமன்றம் நன்கு அறியும். பருவ மழை தவறியதின் காரணமாக குறுவை 1982 பட்டத்திலும், சம்பா 1983 பட்டத்திலும் நெல் உற்பத்தி கணிசமாக பாதிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1983 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவக்காற்று மழை பொய்த்ததின் காரணமாக பெரும்பாலான நீர்த்தேக்கங்களுக்கு போதிய அளவு நீர் வரத்து இல்லாத காரணத்தினால் குறுவை சாகுபடிக்கு உரிய காலத்தில் பாசனத்திற்காக நீர் விடப்படவில்லை. பல நீர்த் தேக்கங்களில் போதிய அளவுக்கு தேக்கமும் இல்லை.

2. சாதாரணமாக, தமிழகத்தில் 26·500 இலட்சம் ஹெக்டேர்களில் நெல் பயிரிடப்படும். குறுவை, கார் பட்டங்களில் சுமார் 3·330 இலட்சம் ஹெக்டேர்களில் நெல் பயிரிடப்படும். ஆனால் நடப்பு பயிராண்டில் 1·350 இலட்சம் ஹெக்டேர்களில்தான் குறுவை, கார் சாகுபடி செய்யப்பட்டது. சம்பா பட்டத்தில் சாதாரணமாக 15·740 லட்சம் ஹெக்டேர்களில் நெல் பயிரிடப்படும். ஆனால் இந்த ஆண்டு 16·695 லட்சம் ஹெக்டேர்களில் நெல் பயிர் செய்யப்பட்டது. தாளடி, பிஷானம் பட்டத்தில் 3·020 இலட்சம் ஹெக்டேர்களில் நெல் பயிரிடப்படும். ஆனால் இந்த ஆண்டு 1·791 இலட்சம் ஹெக்டேர்களில்தான் பயிரிடப்பட்டது. நவரைப் பட்டத்தில் 0·810 இலட்சம் ஹெக்டேர்களிலும், சொர்ணவாரி பட்டத்தில் 3·600 இலட்சம் ஹெக்டேர்களிலும் நெல் பயிரிடப்படும். இந்த ஆண்டு நவரைப் பட்டத்தில் 3·652 இலட்சம் ஹெக்டேர்களிலும், சொர்ணவாரி பட்டத்தில் 0·810 இலட்சம் ஹெக்டேர்களிலும் நெல் பயிரிடப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே நடப்பு ஆண்டில் மொத்தத்தில் 26·500 இலட்சம் ஹெக்டேர்களுக்கு பதிலாக 24·298 இலட்சம் ஹெக்டேர்களில் தான் நெல் பயிரிடப்படும். குறைவுபடும் விஸ்தீர்ணம் 2·202 இலட்சம் ஹெக்டேர்கள்.

3. அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரை 1983–84 ஆம் ஆண்டில மொத்த அரிசி உற்பத்தி 53·93 இலட்சம் டன்களாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் டிசம்பர் '83 மாதத்தில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பினாலும், பிப்ரவரி 1984-ல் காலந் தவறி பெய்த மழையின் பாதிப்பின் காரணமாகவும் உற்பத்தியில் ஏறக்குறைய 4 இலட்சம் டன்கள் அளவிற்கு குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இந்த ஆண்டு நிகர அரிசி உற்பத்தி சுமார் 50 இலட்சம் டன்களாக இருக்கும்.

4. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏறக்குறைய 4·25 இலட்சம் ஏக்கர்களில் குறுவை பயிரிடப்படும். சாதாரணமாக மேட்டூர் அணை பாசனத்திற்காக ஜூன் மாதம் 12-ஆம் தேதி திறக்கப்படும். ஆனால் சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ந் தேதிதான் திறக்கப்பட்டது. இம்மாவட்டத்தில் நிலத்தடி நீரைமட்டும் பயன்படுத்தி ஏறக்குறைய 1·25 இலட்சம் ஏக்கர்களில்தான் குறுவை நெல் பயிரிடப்பட்டது. இதன் காரணமாக கணிசமான அளவு குறுவை நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

5. பெரும்பாலான நீர்த் தேக்கங்களுக்குப் போதிய அளவு நீர்வரத்து இல்லாததின் காரணமாக நீண்டகால நெல் பயிருக்கு பதிலாக நடுத்தர கால நெல்லை பயிர் செய்து மாநிலத்தில் அரிசி உற்பத்தி பாதிக்கா வண்ணம் தக்க முனைப்பான நடவடிக்கைகளை விவசாயத் துறை மேற்கொண்டது. மாநிலம் முழுவதிலும் விவசாயிகளுக்கு நடுத்தர கால நெல்லை பயிரிடுமாறு ஆலோசனை கூறப்பட்டது. அதற்குத் தேவையான விதைகளை விநியோகிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தில் சாதாரணமாக 7 இலட்சம் ஏக்கர்களில்தான் சம்பா நெல் பயிரிடப்படும். ஆனால் கடந்த ஆண்டு குறுவைப் பட்டத்தில் ஏறக்குறைய 3 இலட்சம் ஏக்கர்களில் குறுவை பயிரிடப்படவில்லை. ஆனால் சம்பா பட்டத்தில் அதை நிறைவு செய்யும் வகையில் 10 இலட்சம் ஏக்கர்களில் நீண்டகால நெல்லுக்குப் பதிலாக நடுத்தரகால நெல் பயிரிடப்பட்டது. டிசம்பர் மாதம் பெய்த மழையினால் தஞ்சை மாவட்டத்தில் நெற்பயிருக்குக் கணிசமான சேதம் ஏற்பட்டது. அதுபோன்று தென் ஆற்காடு, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களின் சில பகுதிகளில் வெள்ளத்தால் நெல் பயிர் பாதிக்கப்பட்டது.

6. தஞ்சை மாவட்டத்தில் அரசு ஏகபோக கொள்முதல் திட்டத்தை அறிவித்த நேரத்தில் அத்திட்டத்தை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் விவசாயிகள் பலர் வழக்கு தொடர்ந்து அந்த ஆணைக்கு இடைக்கால தடை பெற்று நெல்லை தஞ்சை மாவட்டத்திலிருந்து பல்வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் சென்ற காரணத்தினால் கொள்முதல் பெரிதும் பாதிக்கப்பட்டது. பிறகு சென்னை உயர் நீதி மன்றம் அரசு ஏகபோக கொள்முதல் திட்டத்தையும், ஏகபோக கொள்முதல் திட்டப் பகுதிகளை விட்டு நெல்லை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடையும் சரியானதென்று தீர்ப்பு அளித்தது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து நாட்டின் உச்ச நீதிமன்றத்திலும் மாநில அரசுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. உச்ச நீதிமன்றமும் தமிழக அரசுக்குச் சாதகமாக தீர்ப்பு அளித்துள்ளது.

7. பருவ மழை தவறியதினால் தமிழகத்தில் அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்ட நிலையிலும், வெளிச்சந்தையில் அரிசியின் விலையை நிதானமாகவும், கட்டுப்பாட்டிற்குள்ளும் வைத்துக்கொள்வதற்கு போர்க்கால அடிப்படையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதர மாநிலங்களில் வெளிச் சந்தையில் அரிசியை வாங்கும் பணியை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மேற்கொண்டது. பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம், ஆந்திரா போன்ற பிற மாநிலங்களில் 1·52 இலட்சம் டன்கள் அரிசியைக் கொள்முதல் செய்து குடும்ப அட்டைகளுக்கு வழங்கியது.



மாநில முழுவதும் 18,000-க்கு மேற்பட்ட நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டைகளுக்கு குறைந்த விலையில் அரிசி வழங்ியதன் மூலம் வெளிச்சந்தையில் அரிசி விலை உயராமல் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டிருந்ததை இந்த அரசின் சிறந்த சாதனை என்பதை இம்மாமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகின்றேன்.

8. வெளி மாநிலங்களில் வெளிச் சந்தையில், அதிக விலை கொடுத்து வாங்கியும், தமிழகத்திற்குள் ஏகபோக கொள்முதல் திட்டம் செயல்படும் பகுதிகளில் கொள்முதல் விலைகளுக்கு மேலாக கூடுதலாக விலை கொடுத்து நெல்லை வாங்கியதாலும் அரிசியின் அடக்க விலை உயர்ந்தது. அதனால் ஏறக்குறைய 110 கோடி ரூபாய் அளவிற்கு நட்டத்தை அரசு ஏற்க வேண்டியுள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

9. தமிழகத்தில் பருவ மழை பொய்த்ததின் காரணமாக நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் பொது விநியோகத்திற்கு அதிக அரிசி ஒதுக்கீடு செய்யும்படி நாம் மத்திய அரசை கோரியிருந்தோம். 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து மார்ச் 1983 வரை மத்திய அரசு மத்திய தொகுப்பிலிருந்து அரிசி ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை. இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமரையும், மத்திய உணவுத்துறை அமைச்சரையும் நேரில் சந்தித்து நெருக்கடியான நேரத்தில் தமிழகத்திற்கு அரிசி கொடுத்து உதவ வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். மாநில அரசின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதற்கொண்டு அரிசியை ஒதுக்கீடு செய்தது.

மத்திய அரசு ஒதுக்கீடு செய்த அரிசியின் அளவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| மாதம்/வருடம். (1) | மாத ஒதுக்கீடு. (2) டன்களில். |
|---|---|
| ஏப்ரல், மே 1983 .. .. .. .. | 15,000 |
| ஜூன், ஜூலை, ஆகஸ்டு 1983 .. .. .. | 25,000 |
| செப்டம்பர், அக்டோபர் 1983 .. .. .. | 30,000 |
| நவம்பர், டிசம்பர் 1983 மற்றும் சனவரி 1984 .. | 40,000 |
| பிப்ரவரி, மார்ச் 1984 .. .. .. | 35,000 |

1983 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் முதற்கொண்டு, மார்ச் 1984 வரை
மத்திய அரசு 3·55 இலட்சம் டன்கள் அரிசியை பொது விநியோகத்
தேவைக்கென இம்மாநிலத்திற்கு வழங்கியுள்ளது. அதுமட்டுமின்றி
ஏற்கனவே மாதம் ஒன்றுக்கு 4,000 டன்கள் என்ற அளவிற்கு வழங்கப்
பட்டு வந்த கோதுமை ஒதுக்கீட்டை மாதம் ஒன்றுக்கு 30,000 டன்கள்
என்ற அளவிற்கு உயர்த்தி வழங்கியுள்ளது. மத்தியத் தொகுப்பிலிருந்து
அரிசியையும், கோதுமையையும் நமது கோரிக்கையின்பேரில் ஒதுக்கீடு
செய்ததற்கு இச்சமயத்தில் மத்திய அரசுக்கு தனது நன்றியை இந்த
அரசு தெரிவித்துக் கொள்கிறது.

## பொது விநியோகத் தேவை.

10. தமிழகத்தில் குடும்ப அட்டைகளுக்கு பொது விநியோகத்
திட்டத்தின் கீழ் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. 1983 ஆம் ஆண்டு
ஜனவரி மாதம் வரை வருமான பாகுபாடின்றி அனைத்து குடும்ப கார்டு
களுக்கும் அரிசி வழங்கப்பட்டது. ஆனால் தமிழகத்தில் பருவ மழை
தவறியதன் காரணமாக அரிசி உற்பத்தி குறைந்த நிலையில் அரசின்
கைவசம் இருந்த இருப்பு நிலைமைகளை கவனத்தில் கொண்டு மாத
வருமானம் 1,000 ரூபாய்க்குக் குறைவாக உள்ள குடும்பங்களுக்கு மட்டும்
அரிசி விநியோகம் செய்வது என்று அரசு முடிவு செய்து 1—2—1983
முதல் செயல்படுத்தி வருகின்றது. அதுமட்டுமின்றி, சென்னை, மதுரை,
கோயம்புத்தூர் போன்ற மாநகராட்சிப் பகுதிகளில் குடும்பக் கார்டுகளுக்கு
வழங்கப்படும் அரிசியில் 60 விழுக்காட்டை அரிசியாகவும், மீதி 40 விழுக்
காட்டை கோதுமையாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

11. பொது விநியோக திட்டத்தின்கீழ் தற்போதைய விலையில்
குடும்ப கார்டுகளுக்கும். முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்கும்
மாதம் ஒன்றுக்கு ஏறக்குறைய 80,000 டன்கள் அளவிற்கு அரிசி
தேவைப்படுகிறது. இதன் அடிப்படையில் ஒரு ஆண்டுக்கு நமக்குத்
தேவைப்படும் அரிசி ஏறக்குறைய 10 இலட்சம் டன்களாகும். அது
மட்டுமின்றி குறைந்தது 2 இலட்சம் டன்கள் அளவிற்காவது மூடை
யிருப்பு வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். குறுவைப் பட்டத்
தில் அதாவது அக்டோபர் 1983 முதல் டிசம்பர் 1983 வரை 1.16
இலட்சம் டன்கள், அரிசிக்கு ஈடான நெல்லும் அரிசியும் கொள்
முதல் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சம்பா, நவரைப் பட்டங்
களில் 9 இலட்சம் டன்கள் அரிசி கொள்முதல் செய்ய இலக்கு
நிர்ணயிக்கப்பட்டு 6—3—1984 வரை ஏறக்குறைய 3 இலட்சம் டன்
களுக்கு ஈடான அரிசியும் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டது.
மாவட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கொள்முதல் இலக்கை அடை
வதற்கு தக்க முயற்சிகளை முனைப்பாக மேற்கொள்ளும்படி அனைத்து
மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.



## II. நெல் அரிசி கொள்முதல்:

12. நியாயவிலைக் கடைகளின் மூலம் குடும்ப அட்டைகளுக்கு
விநியோகம் செய்வதற்கும், கல்வி நிலையங்களுடன் இணைந்து உள்ள
மாணவர் உணவு விடுதிகள், அனாதை இல்லங்கள் போன்ற நிறுவ
னங்களில் உள்ளவர்களுக்கு வழங்குவதற்கும் முதல் அமைச்சர்
சத்துணவுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கும் தேவைப்படும் அரிசியை
விவசாயிகளிடமிருந்தும் வர்த்தக லெவி முறையிலும் கொள்முதல்
செய்யப்படுகிறது.

13. கடந்த ஆண்டு சனவரி மற்றும் பிப்ரவரி திங்களில பொது
விநியோகத்திற்குத் தேவைப்படும் அரிசியையும், எதிர்கால தேவைக்கு
ஒரு கணிசமாக முடை இருப்பை ஏற்படுத்திக் கொள்ளவும், காவிரி
பாசனப் பகுதிகளான தஞ்சாவூர் மாவட்டம், தென் ஆற்காடு மாவட்
டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார்கோயில், திருச்சி மாவட்டத்தில்
குளித்தலை, முசிறி, திருச்சி மற்றும் லால்குடி ஆகிய வட்டங்களில்
விவசாயிகளிடமிருந்து நெல்லை அரசே ஏகபோகமாக கொள்முதல்
செய்வதென முடிவு எடுக்கப்பட்டு அத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.
இப்பகுதிகளில் தனியார் மொத்த வியாபாரிகள் செயல்பட அனுமதிக்கப்
படவில்லை. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடிக்
கொள்முதல் நிலையங்களைத் திறந்து அவற்றின் மூலம் விவசாயி
களிடமிருந்து நெல்லை வாங்கியது. மாநிலத்தின் இதர பகுதிகளில்
தொடர்ந்து 50 விழுக்காடு வர்த்தக லெவி மூலம் கொள்முதல்
செய்யப்பட்டது.

14. 1983 ஆம் ஆண்டு சம்பா பட்டத்தில் 2.22 இலட்சம்
டன்கள் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது. இதில் 1.49 இலட்சம்
டன்கள் அரிசிக்கு ஈடான நெல் ஏகபோக கொள்முதல் திட்டத்தின்
கீழ் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்கப்பட்டது.

15. 1983 ஆம் ஆண்டு குறுவை பட்டத்தில் போது அரசு ஏக
போக கொள்முதல் திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உடை
யார்பாளையம், அரியலூர் வட்டங்களுக்கும், புதுக்கோட்டை மாவட்டத்
தில் அறந்தாங்கி, ஆலங்குடி, ஆவுடையார்கோவில் ஆகிய வட்டங்
களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு குறுவை பட்டத்
தில் மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு போதிய நீர் வரத்து இல்லாத
காரணத்தினால் குறுவை சாகுபடி காவிரி கழிமுகப் பகுதிகளுக்கு
(Delta) உரிய காலத்தில் பாசனத்திற்காக நீர் விடப்படவில்லை.
இதனால் இப்பகுதிகளில் குறுவைச் சாகுபடி கணிசமான அளவுக்குப்
பாதிக்கப்பட்டது. தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக
மாநிலத்தில் உள்ள இதர நீர்ப்பாசன தேக்கங்களுக்கும் போதிய
அளவு நீர் வரத்து இல்லாததினால் பொதுவாக குறுவை, கார் பயிர்
விவசாயம் பாதிக்கப்பட்டு நெல் உற்பத்தியும் கணிசமாகக் குறைந்தது.
ஆயினும் அரசு எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளின் காரண
மாகவும், ஏகபோக கொள்முதல் திட்டப் பகுதிகளில் விவசாயிகளுக்கு
ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் கொள்முதல் விலைகளுக்கு மேலாக

ஒரு குவிண்டாலுக்கு ரூ. 35 அரசு வழங்கியதன் காரணமாகவும், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 1—10—1983 முதல் 31—12—1983 வரை 1.63 இலட்சம் டன்கள் நெல்லை கொள்முதல் செய்தது ஒரு சாதனையாகும். மாநிலம் முழுவதிலும் 1983 குறுவை பட்டத்தில் மொத்தத்தில் 1.16 இலட்சம் டன்கள் அரிசிக்கு ஈடான நெல்லும் அரிசியும், ஏகபோக கொள்முதல் திட்டம் மற்றும் வர்த்தக லெவியின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது.

16. 1984 ஆம் ஆண்டு சம்பா பட்டத்திலும் அதே கொள்முதல் கொள்கையைப் பின்பற்றுவது என அரசு முடிவு செய்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு காலந்தாழ்ந்து ஆகஸ்டு மாதத்தில் தான் நீர் விடப்பட்டதால் நெல் விவசாயமும் காலந்தாழ்ந்து தான் செய்யப்பட்டது, எனவே ஏற்கனவே எதிர்பார்த்ததுபோல, சம்பா நெல் அறுவடை சனவரி மாதத்திற்குள் முடியவில்லை. மேலும் டிசம்பர் மாத இறுதியில் எதிர்பாராத முறையில் பெய்த அதிக மழையின் காரணமாக அறுவடையும் பெருமளவில் பாதிக்கப்பட்டது. எனவே ஏகபோக கொள்முதல் திட்டத்தை 31—3—1984 வரை அரசு நீட்டித்துள்ளது. இதன் விளைவாக, 50 சதவீத வாணிபர் லெவிமுறை 1—4—1984 முதல் இப்பகுதிகளில் அமலில் இருக்கும். 1984 ஆம் ஆண்டு சம்பா பட்டத்தில் மாநிலம் முழுவதிலும் 6—3—84 முடிய 3.00 இலட்சம் டன்கள் அளவுக்கு அரிசியும், நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவமழை பொய்த்ததைத் தொடர்ந்து வடகிழக்குப் பருவமழையும் உரிய காலத்தில் பெய்யாமல் இருந்த ஒரு சூழ்நிலையிலும் ஏறக்குறைய 3 இலட்சம் டன்கள் அரிசி அளவுக்கு இதுவரையில் நெல்லும் அரிசியும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதிலிருந்து அரசு கொள்முதலில் எத்தகைய முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதை இம்மாமன்றம் உணரும் என்று நம்புகிறேன்.

17. அரசு ஏகபோக கொள்முதல் திட்டத்தின்கீழ் நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலைகளுக்கு மேலாகக் கூடுதல் விலை கொடுப்பதன் காரணமாக இத்திட்டத்தை மற்றப்பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. ஆனால் விளையும் நெல் அனைத்தையும் அரசே கொள்முதல் செய்வது என்ற ஒரு நிலையை மேற்கொண்டால் வெளிச் சந்தையில் அரிசியின் வரத்து கணிசமாகக் குறையும். பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகளின் மூலம் அரிசி அதிகமான அளவில் வழங்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். அத்தேவையை பூர்த்தி செய்ய கொள்முதல் அதிக அளவில் செய்ய வேண்டிய ஒரு கட்டாய நிலைமையும் உருவாகும். எனவே தான், அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்த பின் ஏகபோக கொள்முதல் திட்டத்தை காவிரி பாசனம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் மட்டும் அமல்படுத்தினால் போதுமானது என்று அரசு முடிவு செய்தது.



## கொள்முதல் விலைகள்

18. கடந்த ஆண்டு நெல் கொள்முதல் விலைகள் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

| ரகம். (1) | விலை (குவிண்டாலுக்கு). (2) ரூ. | பை. |
|---|---|---|
| சாதாரண ரகம் .. .. .. | 122 | 00 |
| சன்ன ரகம் .. .. .. | 126 | 00 |
| மிகச் சன்ன ரகம் .. .. .. | 130 | 00 |

அரசு ஏகபோக கொள்முதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்த பகுதிகளில் வறட்சி அலவன்சாக ஒரு குவிண்டாலுக்கு கொள்முதல் விலைகளுக்கு மேலாக ரூ. 15, 7—9—83 வரை வழங்கப்பட்டது.

19. நெல் உற்பத்தி செய்யும் விவசாயிக்கு கட்டுப்படியாகும் விலையைத் தர வேண்டுமென்பதை இந்த அரசு வற்புறுத்தி வருகின்றது. ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 150 அல்லது குறைந்தது கோதுமைக்குத் தரப்படும் கொள்முதல் விலையாகிலும் தர வேண்டுமென்று விவசாய விளைபொருள்கள் விலைகள் ஆணைக் குழுவிற்கு இந்த அரசு பரிந்துரைத்தது. ஆனால் நெல் கொள்முதல் விலையை நிர்ணயிப்பது என்பது பற்றி பல மாநிலங்களின் கருத்தையும் கேட்டபின், விவசாய விளைபொருள்கள் விலைகள் ஆணைக்குழு தன்னுடைய பரிந்துரையை மத்திய அரசுக்குத் தெரிவிக்கின்றது. மத்திய அரசு அவற்றை எல்லாம் பரிசீலித்தபின் கொள்முதல் விலைகளை நிர்ணயித்து அறிவிப்பு செய்கின்றது. மத்திய அரசு நிர்ணயிக்கும் விலைகளுக்கும் மேலாக கூடுதலாக விலை தரக் கூடாதென்று மத்திய அரசு கண்டிப்பாகத் தெரிவித்துள்ளது.

20. 1983–84 ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு நெல் கொள்முதல் விலையை கடந்த ஆண்டு விலைகளுக்கு மேலாக ஒரு குவிண்டாலுக்கு ரூ. 10 என்று உயர்த்தி கீழ்க்கண்டவாறு அறிவித்தது:—

| ரகம். (1) | விலை (குவிண்டாலுக்கு) (2) ரூ. | பை. |
|---|---|---|
| சாதாரண ரகம் .. .. | 132 | 00 |
| சன்ன ரகம் .. .. | 136 | 00 |
| மிகச் சன்ன ரகம் .. .. | 140 | 00 |

தஞ்சை மாவட்டம், திருச்சி, தென்னாற்காடு, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் அரசு ஏகபோக கொள்முதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து உரிய காலத்தில் விவசாயத்திற்கு நீர் விடாத காரணத்தால் மின்சார, டீசல் மோட்டார் இவற்றைக்கொண்டு நிலத்தடி நீரைப் பயன்படுத்தி, கூடுதலாக செலவு செய்தும், பருவ மழை தவறிய நிலையில் துணிச்சலாக, பயிர் பாதிக்கப்படக் கூடிய ஒரு அபாயத்தையும் எதிர்நோக்கி நெல் விவசாயத்தில் ஈடுபட்ட காரணத்தினால் அந்தப் பகுதிகளில் ஏற்கனவே கொள்முதல் விலைகளுக்கு மேலாக ஒரு குவிண்டாலுக்கு ரூ. 15 கொடுத்து வந்ததை 8—9—83 முதல் ரூ. 35 ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டது. ஏகபோக கொள்முதல் திட்டம் செயல்படுத்தும் பகுதிகளில் விவசாயிகள் அரசாங்கத்திற்கு நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்கும் சாதாரண நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 167, சன்னரக நெல்லுக்கு ரூ. 171, மிகச் சன்னரக நெல்லுக்கு ரூ. 175 தரப்படுகின்றன; பொதுவாக நெல்லுக்குக் கொள்முதல் விலைகளுக்கு மேலாக மாநில அரசுகள் கூடுதலான விலை கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசு ஒரு நிலையை மேற்கொண்டு இருந்த போதிலும் தமிழகத்திலுள்ள சூழ்நிலையில் இத்தகைய கூடுதலான விலை கொடுக்க வேண்டுமென்ற அவசியத்தை மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி இதற்கு ஒப்புதல் அளிக்கும்படியும், ரிசர்வ் வங்கி மூலமாக நெல் கொள்முதல் செய்வதற்குத் தேவைப்படும் நிதியை சகாய வட்டியில் வழங்க ஆணையிடும்படியும் மாநில அரசு கேட்டுக்கொண்டது. மத்திய அரசு நிதியினை வழங்க ஒப்புக்கொண்ட போதிலும், இந்திய ரிசர்வ் வங்கி நெல் வாங்குவதற்கு சகாய வட்டியை அளிக்கவில்லை. வழக்கமான 12.5 சதவீத வட்டிக்குப் பதிலாக 18 சதவீதம் நாம் தருகிறோம்.

## III. பொது விநியோக முறை.

21. தமிழகம் முழுவதிலும் பொது விநியோக முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. 18,009 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் நகரப் பகுதிகளில் 1,956 நியாய விலைக் கடைகளும், கிராமப் பகுதிகளில் 16,053 நியாய விலைக் கடைகளும் இயங்கி வருகின்றன. இந்த நியாய விலைக் கடைகள் அனைத்தும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இதர ஏஜென்சிகள் ஆகியவை நடத்தி வருகின்றன என்பதும், தனியார் வியாபாரிகளிடம் பொது விநியோகத் திட்டம் ஒப்படைக்கப்படவில்லை என்பதும் தமிழகத்தில் செயல்பட்டு வரும் பொது விநியோகத் திட்டத்தின் ஒரு சிறப்பான அம்சமாகும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 5,036 நியாய விலைக் கடைகளையும், கூட்டுறவுச் சங்கங்கள் 12,905 நியாய விலைக் கடைகளையும், இதர ஏஜென்சிகள் 68 நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன.



22. தமிழகம் முழுவதிலும் பொதுக் கணக்கெடுப்பு செய்தபின் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 118.88 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி கோதுமை, சர்க்கரை, பாமாயில், மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

### அரிசி.

23. நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைகளுக்கு அரிசி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததன் காரணமாக வறட்சி நிலைமை ஏற்பட்டு அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டது. அதே நேரத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசியின் தேவையும் கணிசமாக உயர்ந்தது. இதன் காரணமாக அரிசியின் கையிருப்பு குறைந்து வரக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது. இவையெல்லாம் அரசு உன்னிப்பாக பரிசீலனை செய்தபின் மாத வருமானம் ரூ. 1,000-க்கு குறைவாக உள்ள குடும்பங்களுக்கு மட்டும் அரிசி வழங்குவதென்று முடிவை மேற்கொண்டு 1—2—83 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழகத்திலுள்ள 118.88 லட்சம் குடும்ப அட்டைகளில் மாத வருமானம் ரூ 1,000-க்கு மேலாக உள்ள அட்டைகள் 5.48 லட்சமாகும். மீதியுள்ள 113.40 லட்சம் குடும்பங்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

24. 1983-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு முன்பு வயது வந்த நபருக்கு வாரம் ஒன்றுக்கு 1 கிலோவும், குழந்தைக்கு ½ கிலோவும் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு 20 கிலோ இவற்றில் எது குறைவோ அந்த அளவிற்கு அனைத்து மாவட்டங்களிலும் அரிசி விநியோகம் செய்யப்பட்டு வந்தது. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரிசி உற்பத்தி குறைவு என்ற காரணத்தினால் அம்மாவட்டத்தில் வயது வந்த நபர் ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு 1½ கிலோவும், குழந்தைக்கு ¾ கிலோவும் ஒரு மாதத்திற்கு ஒரு குடும்ப அட்டைக்கு 28 கிலோ இவற்றில் எது குறைவோ அது வழங்கப்பட்டு வந்தது. ஆனால் வறட்சி நிலைமை ஏற்பட்டு பொது விநியோக திட்டத்தின்கீழ் கூடுதலாக அரிசி தேவைப்பட்ட காரணத்தினால் அந்த அளவிற்கு வழங்குவதற்கு இருப்பு நிலைமை இடம் கொடுக்காத காரணத்தினாலும் மத்திய தொகுப்பிலிருந்து நாம் கோரிய அளவிற்கு அரிசி கிடைக்காத நிலையிலும் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டு வந்த அரிசியின் அளவு பற்றி மீள்பரிசீலனை செய்து 1—6—83 முதற்கொண்டு புதியதொரு திட்டத்தை வகுத்தது. அந்த திட்டத்தின்படி சென்னை, கோயம்புத்தூர், மதுரை போன்ற மாநகராட்சிப் பகுதிகளில் நெல்/அரிசி உற்பத்தி இல்லாததால், அப்பகுதிகளில் ஏற்கனவே உள்ளது போல் தொடர்ந்து அதே அளவில் அரிசி விநியோகம் செய்வது என்று முடிவு செய்தது. ஆனால் பொது விநியோகத்தில் மத்திய அரசு கூடுதலாக கோதுமை ஒதுக்கீடு செய்த சூழ்நிலையில் ஒரு குடும்பத்திற்கு வழங்க வேண்டிய மொத்த அளவில் 60 விழுக்காட்டை அரிசியாக

மீதி 40 விழுக்காடை கோதுமையாகவும் வழங்குவது என்ற முடிவும் மேற்கொள்ளப்பட்டது. உதாரணமாக ஒரு குடும்ப அட்டைக்கு 20 கிலோ வழங்க வேண்டுமென்றால், அதில் 12 கிலோவை அரிசியாகவும் மீதி 8 கிலோவை கோதுமையாகவும் வழங்கப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு குடும்ப அட்டைக்கு அதிக பட்சம் 28 கிலோ உணவு தானியங்கள் வழங்கப்படுகிறது. அதில் 60 சதவிகிதம் அரிசியாகவும் 40 சதவிகிதம் கோதுமையாகவும் வழங்கப்படுகிறது. மாநிலத்தின் இதர பகுதிகளில் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு 6 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது. 1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் வரை பொது விநியோகத் திட்டத்தின் கீழும், சத்துணவு திட்டத்திற்கும் மொத்தத்தில் 8.66 லட்சம் டன்கள் அரிசி வழங்கப்பட்டுள்ளது.

### அரிசியின் சில்லறை விற்பனை விலை

25. நியாய விலைக் கடைகள் மூலம் சாதாரண ரக அரிசி ஒரு கிலோ ரூ 1.75, சன்ன ரக அரிசி ரூ 2.00, மிகச் சன்ன ரக அரிசி ரூ 2.15 என்ற விலைகளில் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த விலைகள் 1—2—81 முதற்கொண்டு அமலில் உள்ளது. ஆனால் அதற்குப்பின் மத்திய அரசு நெல்லின் கொள்முதல் விலைகளை உயர்த்தியபோது மத்திய தொகுப்பிலிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையையும் உயர்த்தியது. நம் மாநிலத்தில் உயர்த்தப்பட்ட விலைகளைக் கொடுத்து நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்த போதிலும் அரிசியின் சில்லறை விலையை இந்த அரசு உயர்த்தவில்லை. இதர மாநிலங்களில் வெளிச்சந்தையில் ஒரு குவிண்டால் அரிசி சராசரி ரூ 310 முதல் ரூ 370 வரை என்ற அளவிற்கு அதிக விலை கொடுத்து நாம் கொள்முதல் செய்தபோதிலும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலேயே அரிசி விநியோகம் செய்யப்பட்டது இதன் காரணமாக கடந்த ஆண்டு ஏறக் குறைய 110 கோடி ரூபாய் அளவிற்கு அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு மானியமாக வழங்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆயினும், நுகர்வோரின் நலனைக் கருத்திற்கொண்டு அரிசியின் சில்லறை விலைகளை உயர்த்தாமல் இந்த அளவிற்கு நட்டத்தை அரசு ஏற்றுக்கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு பொது விநியோக திட்டத்தின் கீழ் அரிசியை வழங்கி வருவதை இம்மன்ற உறுப்பினர்கள் பாராட்டுவார்கள் என்று இந்த அரசு நம்புகிறது.

### லெவி கோதுமை

26. பொதுவிநியோக திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைகளுக்கு வழங்குவதற்கு மத்திய அரசு லெவி கோதுமையை ஒதுக்கீடு செய்து வருகின்றது. 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை மாதம் ஒன்றுக்கு 4,000 டன்கள் என்ற அளவில் கோதுமையை ஒதுக்கீடு செய்து வந்தது. இதை மே மாதத்தில் 20,000 டன்களாகவும், ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரை மாதம் ஒன்றுக்கு 25,000 டன்களாகவும், செப்டம்பர் மாதம் முதற்கொண்டு மாதம் ஒன்றுக்கு 30,000 டன்களாகவும் உயர்த்தி வழங்கி வருகின்றது. பருவ மழை தவறியதன் காரணமாக தமிழகத்தின் அரிசித்



தேவை அதிகரித்த நிலையில் கூடுதலாக கோதுமையை ஒதுக்கீடு செய்யும்படி மாநில அரசு கேட்டுக் கொண்டது அந்தக் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 4,000 டன்கள் என்ற அளவில் வழங்கி வந்ததை 30,000 டன்கள் அளவிற்கு உயர்த்தி வழங்கி வருகிறது. வறட்சி காலங்களில் வெளிச்சந்தையில் அரிசியின் விலை கணிசமாக உயரும் போது மக்கள் கோதுமையை நியாய விலைக் கடைகளில் வாங்குகின்றனர். மத்திய அரசு அதிக அளவு கோதுமையை இருப்பில் வைத்துள்ளது. மேலும் அது அதிக கோதுமையை இறக்குமதி செய்யும் நிலையில் உள்ளது. ஆகவே, கோதுமையின் உபயோகத்தினை பழங்காலந்தொட்டு அரிசி உபயோகித்துவரும் இடங்களில் அதிகப்படுத்துவது முக்கிய தேவையாகும். அரிசியையே நம்பியிருத்தல் பாதுகாப்பாகாது. தற்போது நகர்ப்புறங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு 15 கிலோ கோதுமையும், கிராமப் புறங்களில் ஒரு மாதத்திற்கு 10 கிலோ கோதுமையும் வழங்கப்பட்டு வந்ததை 20 கிலோவாகவும் மலைப் பிரதேசங்களில் 30 கிலோவாகவும் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. நியாய விலைக் கடைகளில் வழங்கப்பட்ட கோதுமை ஒரு கிலோ ரூ 1.75 என்ற விலையில் 20—4—83 வரை வழங்கப்பட்டு வந்தது. மத்திய அரசு கோதுமையின் கொள்முதல் விலையை உயர்த்தியதையொட்டி, பொது விநியோகத்திற்கு வழங்கப்படும் கோதுமையின் விலையையும் உயர்த்தியது. அதன் அடிப்படையில் கோதுமையின் விலை 1 கிலோ ரூ 1.87 என நிர்ணயிக்கப்பட்டு 21—4—83 முதல் அமலில் இருந்து வருகிறது.

27. 1983 ஆம் ஆண்டில் தமிழகத்தில் நியாய விலைக் கடைகள் மூலமாக குடும்ப கார்டுகளுக்கும் மொத்த நுகர்வோருக்கும் 2,04,811 டன்கள் கோதுமை விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

### கோதுமைப் பொருட்கள்

28. நியாயவிலைக் கடைகள் மூலமாக மைதா, ரவை ஆகிய கோதுமைப் பொருட்கள் குடும்ப அட்டைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு நகர் புறங்களில் 10 கிலோ மைதாவும் கிராமப்புறங்களில் 5 கிலோ மைதாவும் தரப்படுகிறது. எல்லா இடங்களிலும் 5 கிலோ ரவையும் தரப்படுகிறது. ரொட்டி, சேமியா தயாரிப்போர் போன்ற மொத்த நுகர்வோருக்கு மைதாவை அரசு நிர்ணயித்த விலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கி வந்தது. ஆனால் வெளிச் சந்தையில் மைதா தாராளமாகக் கிடைக்கக் கூடிய ஒரு சூழ்நிலையில் மொத்த நுகர்வோர் அதிக அளவில் தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் மைதா வாங்குவதில்லை.

29. தமிழகத்தில் 1982-83 ஆம் ஆண்டில் 35 உருளை மாவு ஆலைகள் இருந்தன. 1983-84 ஆம் ஆண்டில் மத்திய அரசு நான்கு புதிய உருளை மாவு ஆலைகளுக்கு உரிமங்கள் வழங்கியுள்ளது. தற்போது தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தைத் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் உருளை மாவு ஆலை உள்ளது. இவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்திலும் உருளை மாவு ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக அந்தந்த

மாவட்டங்களுக்குத் தேவையான கோதுமைப் பொருட்களை அந்தந்த மாவட்டத்திலேயே பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி ஏற்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் புதிய உருளை மாவு ஆலை கட்டப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தற்போது மொத்தத்தில 39 உருளை மாவு ஆலைகள் உள்ளன. அவற்றின் மொத்த அரவைத் திறன் மாதம் ஒன்றுக்கு 73,370 டன்களாகும். ஆனால் மத்திய அரசு டிசம்பர் 1983 வரை மாதம் ஒன்றுக்கு 30,000 டன்களை ஒதுக்கீடு செய்து வந்தது. ஜனவரி 1984 முதல் இதை 38,000 டன்களாக உயர்த்தி வழங்கி வருகிறது. உருளை மாவு ஆலைகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் கோதுமையை மாநில அரசு ஆலைகளுக்குப் பிரித்து கொடுக்கிறது.

30. கோதுமை உருளை மாவு ஆலைகள் உற்பத்தி செய்யும் மைதா, ரவையில் 50 விழுக்காட்டை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகமும் கூட்டுறவு சங்கங்களும் எடுத்து நியாய விலைக் கடைகள் மூலமாகவும், மொத்த நுகர்வோருக்கும் விநியோகம் செய்து வருகின்றன. மீதி 40 விழுக்காட்டை உருளை மாவு ஆலைகள் வெளிச்சந்தையில் விற்க அனுமதிக்கப்பட்டுள்ளன. மைதா, ரவை ஆகிய இரண்டு பொருட்களுக்கு மட்டும் அரசு சட்டபூர்வமாக விலைகளை நிர்ணயித்துள்ளது. தவிர, ஆட்டா ஆகிய இதர பொருட்களுக்கு விலைக்கட்டுப்பாடு எதுவும் இல்லையாது. மைதா, ரவையின் சில்லறை விலை 1 கிலோ ரூ. 3·05.

31. கோதுமை உருளை மாவு ஆலைகள் தரமான கோதுமைப் பொருட்களை உற்பத்தி செய்கின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கு உதவி ஆணையாளர் ஒருவரும், தொழில் நுட்ப உதவியாளர்களும் உணவுத் துறையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். உதவி ஆணையர், உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையர் அலுவலகத்திலிருந்துகொண்டு செயல்பட்டு வருகின்றார். மேலும், உருளை மாவு ஆலைகள் உற்பத்தி செய்யும் கோதுமைப் பொருட்கள் தரமானவைதானா என்பதைச் சோதனை செய்வதற்கு ஒரு ஆய்வுக் கூடமும் ஆணையர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வகத்திற்கு அங்கீகாரமும் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது கோதுமை உருளைமாவு ஆலைகள் உற்பத்தி செய்யும் பொருள்களின் மாதிரி எடுக்கப்பட்டு அவை மத்திய ஆய்வகத்திற்கு வேடலிக்கு அனுப்பப்பட்டு அங்கே ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்படுகின்றன. 1983 ஆம் ஆண்டில் கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கு மத்திய தொகுப்பிலிருந்து 3,60,000 டன்கள் கோதுமையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### லெவி சர்க்கரை.

32. குடும்ப அட்டைகளுக்கு நியாய விலைக் கடைகளின் மூலம் லெவி சர்க்கரை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடும்ப அட்டைகளுக்கு நபர்களின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு 425 கிராம் வீதம் வழங்கப்பட்டு வந்தது. மத்திய



அரசு 1983 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை இந்த மாநிலத் திற்கு மாதம் ஒன்றுக்கு 20,531 டன்கள் லெவி சர்க்கரையை ஒதுக்கீடு செய்து வந்தது அதை நவம்பர் மாதம் முதற்கொண்டு 21,289.9 டன்களாக உயர்த்தி மாதம் ஒன்றுக்கு கூடுதலாக 758 டன்கள் சர்க்கரையை தற்போது ஒதுக்கீடு செய்து வருகிறது. இதன் காரணமாக குடும்பக் கார்டுகளுக்கு வழங்கப்பட்டு வந்த சர்க்கரையின் அளவு நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 425 கிராம் என்பதை 450 கிராம் என உயர்த்தி 1—1—84 முதற்கொண்டு வழங்கப்பட்டு வருகிறது. லெவி சர்க்கரை நாடு முழுவதிலும் ஒரே விலையில் விற்கப்பட்டு வருகிறது. 1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை லெவி சர்க்கரை ஒரு கிலோ ரூ. 3.75 என்ற விலையில் குடும்பக் கார்டுகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. மத்திய அரசு இந்த விலையை 1—2—1984 முதற்கொண்டு ரூ. 4.00 என மாற்றியமைத்ததால் தற்போது நியாய விலைக் கடைகளில் லெவி சர்க்கரை ஒரு கிலோ ரூ. 4·00 என்று விற்கப்பட்டு வருகிறது. 1983 ஆம் ஆண்டில் 2,35,811 டன்கள் லெவி சர்க்கரை நியாய விலைக் கடைகள் மூலமாக குடும்ப அட்டைகளுக்கும், அரசு மருத்துவ மனைகள், கல்வி நிலையங்களுடன் இணைந்த உணவு விடுதிகள், அனாதை இல்லங்கள் போன்ற மொத்த நுகர்வோருக்கும் வழங்கப்பட்டது. பண்டிகைக் காலங்களில் கூடுதலாகவும் சர்க்கரை வழங்கப்பட்டது.

### மண்ணெண்ணெய்.

33. தமிழகத்தில் நியாய விலைக் கடைகள் மூலமாக மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மத்திய அரசு மண்ணெண்ணெயை ஒவ்வொரு மாதமும் மாநில அரசுகளுக்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. தமிழகத்திற்கு ஒரு மாதத்திற்கு சுமார் 69,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது ஆனால் மத்திய அரசு சுமார் 45,000 கிலோ லிட்டர்கள் என்ற அளவில் தான் ஒதுக்கீடு செய்து வருகின்றது. சமீபத்தில சென்னை, தஞ்சாவூர், திருச்சி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டபோது அப்பகுதிகளில் கூடுதலாக மண்ணெண்ணெய் தேவைப்பட்டது. மத்திய அரசு கூடுதலாக 5,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை ஒதுக்கீடு செய்தது.

34. நியாய விலைக் கடைகளைத் தவிர கவண்டிக்காரர்கள் மூலமாகவும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சென்னை நகரைப் பொறுத்த வரையில் 964 வண்டிக்காரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தினம் ஒன்றுக்கு 100 லிட்டர் வீதம் பொது மக்களுக்கு வழங்குவதற்காக மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் 1,812 கவண்டிக்காரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தினம் ஒன்றுக்கு 50 லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. குடும்ப அட்டைகளின் தேவையை விநியோகம் செய்த பின் மண்ணெண்ணெய் மீதம் இருக்குமானால் நிலைமையை அனுசரித்து மாவட்டங்களிலுள்ள கவண்டிக்காரர்களுக்கு பூர்த்தி செய்த

காரர்களுக்கு தினம் ஒன்றுக்கு 100 லிட்டர்கள் அளவிற்கு உயர்த்தி வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்படி வழங்கப்படும் மண்ணெண்ணெயை இவர்கள் வீதிதோறும் எடுத்துச் சென்று பொது மக்களுக்கு வழங்கி வருகின்றனர். இவர்களைத் தவிர மண்ணெண்ணெய் தொழிலையே வாழ்க்கைக்கு நம்பியிருக்கக்கூடிய சில்லரை பதிவுச் சான்றிதழ் பெற்ற 2,547 தனியார் வியாபாரிகளுக்கும் அரசு மண்ணெண்ணெய் வழங்கி வருகின்றது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் 500-க்கு அதிகப்படாத அளவில் குடும்ப அட்டைகளை இணைத்து அவற்றிற்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சில்லரை பதிவுச் சான்றிதழ் பெற்ற 7,227 மண்ணெண்ணெய் வியாபாரிகள் உள்ளனர். அவர்கள் பல்வேறு பொருட்களையும் விற்பனை செய்கின்றனர். மண்ணெண்ணெய் தொழிலை மட்டும் வாழ்க்கைக்கு நம்பியிருக்கும் தனியார்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவது போலவே தங்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று சில வியாபாரிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அந்த வழக்கில் பொது விநியோக திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் விநியோகத்தை அரசு செய்வதை ஏற்றுக் கொண்ட சென்னை உயர் நீதிமன்றம் தனியார் வியாபாரிகளைப் பொறுத்தவரையில் வித்தியாசம் எதுவும் காட்டக் கூடாது என்றும், மண்ணெண்ணெய் தொழிலையே வாழ்க்கைக்கு நம்பியிருந்த வியாபாரிகளுக்கு மட்டும் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்ற ஆணையை ரத்து செய்து தீர்ப்பு அளித்தது. ஆனால் பொது விநியோக முறையில் குடும்ப அட்டைகளுக்கும் பதிவுச் சான்றிதழ் பெற்ற அனைத்து தனியார் வியாபாரிகளுக்கும் வழங்கும் அளவிற்கு மத்திய அரசின் ஒதுக்கீடு இல்லை. அனைத்து தனியார் வியாபாரிகளுக்கும் மண்ணெண்ணெய் தரவேண்டுமென்றால் பொது விநியோக திட்டம் பாதிக்கப்படும். நாம் அனைத்து குடும்பங்களுக்கும் அட்டைகளை வழங்கிவிட்டு மண்ணெண்ணெய் வழங்குவோம் என்ற உறுதியும் தந்தபின் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்குவதற்கு போதிய அளவு மண்ணெண்ணெய் கிடைக்காவிடில் பொது விநியோக திட்டத்தை நாம் செயல்படுத்த முடியாமல் போய்விடும். நியாய விலைக்கடைகள் மூலம் அரசு நிர்ணயித்த விலையில் அரசு நிர்ணயித்த அளவுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதை நம்மால் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது. அதே நேரத்தில் தனியார் வியாபாரிகள் மூலம் மண்ணெண்ணெய் சில்லரை விநியோகம் இருக்குமானால் ஆயிரக்கணக்கான தனியார் வியாபாரிகளை கண்காணிப்பது மிக சிரமமானதொரு காரியமாகும். சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்மீது நாட்டின் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

35. சென்னை மாநகராட்சியிலும் மாவட்ட தலைமையகத்திலுள்ள நகராட்சிப் பகுதிகளிலும் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு 10 லிட்டர்கள் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. இதர நகராட்சி மற்றும் நகரிய பகுதிகளில் ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 6 லிட்டர் வீதமும், நகர பஞ்சாயத்து பகுதிகளில் மாதம்



ஒன்றுக்கு 5 லிட்டர் வீதமும், கிராமப்பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு 3 லிட்டர் வீதமும் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெயில் மீதம் இருக்குமானால் நகரியம் மற்றும் நகராட்சிப் பகுதியிலுள்ள குடும்ப அட்டைகளுக்கு மாதமொன்றுக்கு 10 லிட்டர் அளவிற்கு உயர்த்தி வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

36. மத்திய அரசு கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மண்ணெண்ணெய் விநியோகத்தில் இரு விலைக் கொள்கையை கொண்டு வந்தது பற்றி கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் பரிசீலனைக்குப் பின் அந்த திட்டத்தை மத்திய அரசு 16—3—1983 முதற்கொண்டு கைவிட்டு விட்டது. தற்போது மண்ணெண்ணெயை ஒரே விலையில்தான் மத்திய அரசு வழங்கி வருகிறது.

37. மண்ணெண்ணெயின் மொத்த வியாபார விலை, சில்லரை விலை சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு லிட்டர் மண்ணெண்ணெயின் சில்லரை விலை ரூ. 1·89 முதல் ரூ. 2.17 வரை உள்ளது.

### வனஸ்பதி.

38. வெளிச் சந்தையில் வனஸ்பதியின் விலை உயரும்போது பொதுமக்களுக்கு தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் அங்காடிகளிலும், கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் அங்காடிகளிலும் வனஸ்பதி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வனஸ்பதியை உற்பத்தி செய்யும் ஆலைகள் தாங்கள் உற்பத்தி செய்யும் வனஸ்பதியில் 70 விழுக்காட்டை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் வழங்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. ஆனால் வெளிச் சந்தையில் வனஸ்பதி கிடைக்கும்போது பொதுமக்கள் இந்த நிறுவனங்கள் நடத்தும் கடைகளுக்கு வந்து வனஸ்பதியை வாங்குவதில்லை. ஆயினும் பொதுமக்களுக்குத் தேவைப்படும் அளவிற்கு வனஸ்பதியை எடுத்து விநியோகம் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

### பாமாலின்.

39. நியாய விலைக் கடைகளின் மூலம் குடும்ப அட்டைகளுக்கு விநியோகம் செய்ய வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாமாலின் எண்ணெயை மத்திய அரசு வழங்கி வருகின்றது. 1983-ஆம் ஆண்டு துவக்கத்தில் மாதம் ஒன்றுக்கு 2,930 டன்கள் எண்ணெயை ஒதுக்கீடு செய்து வந்தது. ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு

மாதத்திற்கு 1 கிலோ வழங்க வேண்டுமென்றால் கூட சுமார் 12,000 டன்கள் தேவைப்படும். எனவே ஒதுக்கீட்டை கணிசமாக உயர்த்தி வழங்கும்படி மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தி வந்தது. மத்திய அரசும் நம் கோரிக்கையை ஏற்று ஒதுக்கீட்டை படிப்படியாக உயர்த்தி செப்டம்பர் 1983-லிருந்து மாதம் ஒன்றுக்கு 7,500 டன்கள் வீதம் நவம்பர் மாதம் வரை வழங்கியது. டிசம்பர் 1983-ல் 6·500 டன்களும், ஜனவரி 1984-ல் 7,000 டன்களும் ஒதுக்கீடு செய்தது. பிப்ரவரி மாதத்திற்கு 7,500 டன்களை ஒதுக்கிய போது 4,000 டன்களை பாமாலின் எண்ணெயாகவும், மீதி 3,500 டன்களை சோயாபீன் எண்ணெயாகவும் வழங்க ஆணையிட்டுள்ளது.

40. இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெயை மத்திய அரசு நிறுவனமான ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனிடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எடுத்து விநியோகம் செய்கின்றது. சென்னை துறைமுகத்தில் இந்த எண்ணெய் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்கு வழங்கப்படுகிறது. இதை மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எடுத்துச் சென்று தான் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கும், கூட்டுறவு சங்கங்கள் நடத்தும் நியாய விலை கடைகளுக்கும் வழங்கி வருகின்றது. மத்திய அரசு செய்யும் ஒதுக்கீடு முழுவதையும் அந்த மாதத்திலேயே பெற இயலவில்லை. காரணம் வெளிநாடுகளிலிருந்து பாமாலின் எண்ணெய் எந்த அளவுக்கு வருகிறதோ அதைப் பொறுத்துத்தான் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் வழங்குகின்றது. சென்னையிலிருந்து தமிழகம், கர்நாடகம் மற்றும் கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெயை மத்திய அரசின் ஒதுக்கீட்டின்படி ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் வழங்கி வருகிறது. வெளி நாடுகளிலிருந்து போதிய அளவுக்கு எண்ணெய் வந்து சேராவிட்டால் ஒதுக்கீடு முழுவதும் நமக்கு வழங்கப்படுவதில்லை. இந்த நிலைமை பற்றி மத்திய அரசுக்கும் தெரிவித்துள்ளோம். 1982–83 ஆம் ஆண்டில் எண்ணெய் (நவம்பர் 1982 முதல் அக்டோபர் 1983 வரை) மத்திய அரசு தமிழகத்திற்கு 55,530 டன்களை ஒதுக்கீடு செய்தது. அந்த எண்ணெய் முழுவதையும் எடுத்து பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

41. சமையல் எண்ணெய் வரத்து ஒதுக்கீட்டை விட குறைவாக இருப்பதன் காரணமாக ஒவ்வொரு மாதமும் கையிருப்பை அனுசரித்து குடும்ப அட்டைகளுக்கு எவ்வளவு பாமாலின் எண்ணெய் வழங்கவேண்டும் என்பதை அரசு முடிவு செய்கிறது. தற்போது சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகராட்சி பகுதிகளில் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு ஒரு கிலோ என வழங்கப்பட்டு வருகிறது. இதர நகரப் பகுதிகளில் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ வீதம் வழங்கப்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளில் 3 மாதத்திற்கு ஒரு முறை ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ வீதம் வழங்கப்படுகிறது. தற்போது



பாமாலின் சில்லறை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 9 நுகர்வோரின் நலனைக் கருதி நம் மாநிலத்தில் பாமாலின் எண்ணெய் மற்ற மாநிலங்களில் உள்ள விலைகளை விட குறைவான சில்லறை விலையில் விற்கப்படுகிறது.

42. பாமாலின் எண்ணெயை டின்களில் அடைத்து சென்னையில் நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. டின்களில் அடைக்கப்பட்ட பாமாலின் எண்ணெயை மத்திய அரசு நிறுவனம் (Ganesh Flour Mills) வழங்குகிறது. இந்த நிறுவனத்திற்கு மாதம் ஒன்றுக்கு சுமார் 1,000 டன்கள் எண்ணெயை மத்திய அரசு ஒதுக்கீடு செய்கிறது. இது 2 கிலோ, 4 கிலோ டின்களில் விநியோகம் செய்யப்படுகிறது. விநியோகமும் சீராக நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தில் டின்களில் அடைக்கப்பட்ட பாமாலின் எண்ணெய் நியாய விலைக் கடைகள் மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்குத்தான் வழங்கப்பட்டு வருகின்றது. இருப்பு நிலையை அனுசரித்து இது குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படுகிறது. தற்போது மாதம் ஒன்றுக்கு குடும்ப அட்டைக்கு 2 கிலோ டின் ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஒரு 4 கிலோ டின் என்ற முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

## IV. பொது விநியோக திட்டத்தை சீரமைத்தல் கண்காணித்தல்.

43. பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் அரசு நிர்ணயித்த விலையில் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் நியாய விலைக் கடைகள் மூலமாக அத்தகைய பண்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், அவை குடும்ப அட்டைதாரர்களுக்கு சேராமல் சில சமயங்களில் தவறான முறையில் சுயநல நோக்கத்தோடு கள்ளச்சந்தையில் விற்கப்படுகிறது போன்ற புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. மேலும், நியாய விலைக்கடைகள் செயல்படுவதில் சில குறைபாடுகள் உள்ளன என்பது பற்றியும் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பொது விநியோகம் சீராக செம்மையாக நடைபெற வேண்டும் என்பதில் இரண்டு விதமான கருத்துக்கள் இருப்பதற்கு நியாயமில்லை. அத்திட்டத்தைச் செயல்படுத்தும்போது நடைமுறையில் காணப்படும் குறைபாடுகளையும் தவறுகளையும் களையவேண்டியது மிக அவசியம் என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன் அறிவிப்பின்றி சென்னை நகரிலும், மாவட்டங்களின் சுற்றுப்பயணத்தின் போதும் நியாய விலைக்கடைகளைப் பார்வையிடுவதிலிருந்து இத்திட்டத்தின் பயன் முழுமையாக பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டுமென்பதில் இந்த அரசு எந்த அளவுக்கு அக்கறை கொண்டுள்ளது என்பதை உணரலாம்.

44. நியாய விலைக்கடைகளின் செயல்முறையை சீராக்கவும் அவற்றை உன்னிப்பாக கண்காணிக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. நியாயவிலைக்கடைகள் திட்டம் செயல்படுவதை ஆய்வு செய்வதற்கு மாநில அளவில் தலைமைச்

சேயலாளரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில் அரசு அலுவலர்களும், அரசு அலுவலர் அல்லாதவர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர். மாவட்ட அளவில் அரசு அலுவலர்களையும், அரசு அலுவலர்கள் அல்லாதவர்களையும் உறுப்பினர்களாக கொண்ட குழு அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை நகரைப் பொறுத்த வரையில் இந்த ஆலோசனைக்குழு உணவு பொருள் வழங்குதுறை ஆணையரின் தலைமையில் அமைக் கப்பட்டுள்ளது. வட்ட அளவிலும், இத்தகைய ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் உணவு விவாதத்தின்போது நியாய விலைக் கடைகளைக் கண்காணிக்க ஒவ் வொரு கடைக்கும் ஒரு குழுவை அமைக்க வேண்டியதின் அவசி யத்தை அங்கத்தினர்கள் தெரிவித்தனர். அரசு இக்கருத்தைப் பரி சீலனை செய்து தமிழகத்திலுள்ள ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும் ஒரு குழுவை நியமிக்க ஆணையிட்டது. நகரப் பகுதிகளில் உள்ள கடைகளைப் பொறுத்தவரையில் 9 அங்கத்தினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் 2 அல்லது 3 உறுப்பினர்கள் மகளிராக இருக்கவேண்டும் என்றும், அந்தப் பகுதியில் வசிக்கும் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர் களை நியமிக்க வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளைப் பொறுத்தவரை அந்தக் குழுவில் 5 அங்கத்தினர்கள் இருக்க வேண்டும் என்றும் அவற்றில் ஒருவர் மகளிராகவும், ஒருவர் அரசு அலுவலராகவும், மீதி 3 உறுப்பினர்கள் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களாக இருக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்துள்ளது. மாநில அளவில் ஒரு குழுவும், வட்ட அளவில் 166 குழுக்களும், 18,009 நியாய விலைக் கடைகளுக்கு விழிப்புக் குழுக்களும் இயங்கி வருகின்றன. நியாய விலைக் கடை களுக்கு அனுப்பப்படும் உணவுப் பொருட்கள் அங்கு சேர்வதில்லை யென்றும், இடையிலேயே அவை விற்கப்படுவதாக புகார்கள் வந்தன. இத்தகைய தவறுகள் நடக்காவண்ணம் தடுக்க நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்பட்ட உணவுப் பொருட்கள் வந்து சேர்ந்துவிட் டனவா என்பதை கடையின் விழிப்புக் குழுவின் அரசு அலுவலர் உறுப்பினர் நேரில் பார்த்து, இருப்பு புத்தகத்தில் ஒப்பமிட்டபின் தான் உணவுப்பொருட்களை வழங்க வேண்டுமென்று ஆணையிடப் பட்டுள்ளது.

45. நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற பொருட்கள் மட்டும் வழங்கினால் போதாது என்றும் இதர அத்தியாவசியப் பண்டங்களான புளி, மிளகாய், மஞ்சள், வெல்லம், பருப்பு வகைகள் ஆகியவற்றையும் பொதுமக்களுக்கு விற்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும் இன்னும் தீவிரமாக செயல்படுத்தும் வகையில் அனைத்து பொருட் களையும் வைத்து விற்பனை செய்ய வேண்டும் என்று கூட்டுறவு சங்கங்களுக்கும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகத்திற்கும் அரசு அறிவுரை வழங்கியுள்ளது:



46. நியாய விலைக் கடைகள் சரியான முறையில் இயங்குகின்ற னவா, அவற்றில் குடும்ப அட்டைகளுக்கு உணவுப் பொருட்கள் வழங் கப்படுகின்றனவா அல்லது போலி பில்கள் தயாரித்து அப்பொருட்களை குடும்ப அட்டைகளுக்கு வழங்காமல் தவறான வழியில் எடுத்துச் செல்லப்படுகிறதா என்பதைத் தீவிரமாக கண்காணிப்பதற்கு விழிப்புப் பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு வட்ட ஆட்சியர், ஒரு துணை வட்டாட்சியர் மற்றும் இதர அலு வலர்கள் கொண்ட ஒரு விழிப்பு பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. சென்னை நகரைப் பொறுத்தவரையில், துணை ஆணையாளர் (நகரம்) அலுவலகத்தில் 1 கண்காணிப்பாளரும் 5 தணிக்கை ஆய் வாளர்களும் கொண்ட நான்கு விழிப்புப் பணிக்குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த விழிப்பு பணிக்குழுக்கள் நியாய விலைக் கடை களைத் தணிக்கைக்கு எடுத்துக் கொண்டு கணக்குகளைத் தீவிரமாக சோதனை செய்து அக்கடைக்கு வழங்கப்பட்ட பொருட்கள் அனைத் தும் இருப்புக் கணக்கில் கொண்டு வரப்பட்டுள்ளதா, குடும்ப அட்டை களுக்கும் வழங்கப்பட்டனவா என்பதை சோதனை செய்கின்றனர். அது மட்டுமின்றி பொருட்கள் வழங்கப்பட்டதற்கு பட்டியல் தயாரித்ததை வீடுதோறும் சென்று அப்பொருட்களை உண்மையில் குடும்ப அட்டைதாரர்கள் பெற்றனரா என்றும் விசாரணை செய்யப் படுகிறது. இத்தகைய சோதனைகளில் உண்மையில் பொருட்களை வழங்காமல் வழங்கியதாக போலிப் பட்டியல்கள் தயாரித்த விவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதற்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பணியாளர்களில் 8 நபர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 48 நபர்கள் தற்கால பணியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளனர். 12 பணியாளர்களின் ஊதிய உயர்வை நிறுத்திவைத்து ஆணை பிறப்பிக் கப்பட்டுள்ளது. மற்ற பணியாளர்கள் மீது நடவடிக்கைகள் தொடரப்பட்டு வருகின்றன.

47. மேலும், வீடுதோறும் சென்று குடும்ப அட்டைகளைச் சோதனை செய்வதன்மூலம் போலி அட்டைகளைக் கண்டுபிடித்து நீக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சென்னை நகரைப் பொறுத்த வரையில் 27,450 போலி அட்டைகள் கண்டு பிடிக்கப் பட்டு நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

48. அதே போன்று, மாவட்டங்களிலும் நியாய விலைக் கடை களில் விநியோகம் சரியான முறையில நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்கும்படி, வட்ட வழங்கு அலுவலர்களுக்கு அறிவுரை வழங் கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனி ஆய்வாளரும் 750 குடும்ப அட்டை களைத் தணிக்கை செய்ய வேண்டுமென்றும் அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன. ஏப்ரல் 1983 முதல் நவம்பர் 1983 வரை மாவட்டங் களில் 2,756 நியாய விலைக் கடைகள் சோதனைக்கு உட்படுத்தப் பட்டன. அவற்றில் பதியப்பட்டு இருந்த அட்டைகளில் 17.45 இலட்சம் குடும்ப அட்டைகள் தணிக்கை செய்யப்பட்டன. அதில் 29,408 போலி அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப்பட்டன. அது மட்டுமின்றி ஒரே

குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப அட்டைகள் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டு 5,164 குடும்ப அட்டைகள் நீக்கம் செய்யப்பட்டன.

49. நியாய விலைக் கடைகளின் கணக்குகளைத் தீவிரமாக சோதனை செய்ததின் மூலமும், வீடுதோறும் சென்று குடும்ப அட்டைகளுக்கு உண்மையிலேயே பொருட்கள் வழங்கப்பட்டதா என்பதை சோதனை செய்வதன் மூலமாகவும், போலி பில்கள் தயாரித்தும், ஒரு குடும்ப அட்டைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பில்கள் தயாரித்தும் பொருட்கள் தவறான வழியில் எடுக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முறைகேடுகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது தக்க நடவடிக்கைகளை அந்த நியாய விலைக் கடைகளை நடத்திவரும் நிறுவனங்கள் எடுத்து வருகின்றன.

50. விழிப்புப் பணிக்குழுக்கள் ஆற்றுகின்ற பணியை ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்து அந்த ஆய்வினை உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கும்படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்படும் அறிக்கையை உணவுப்பொருள் வழங்குதுறை ஆணையாளர் மீள் ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரைகளை வழங்கி வருகின்றார்.

51. நியாய விலைக் கடையில் தவறுகள் ஏதேனும் காணப்பட்டால் உடனடியாக அவற்றை சம்பந்தப்பட்ட அலுவலருக்கு தொலைபேசி மூலம் தெரிவிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை நகரைப் பொறுத்த வரையில் கூட்டுறவு துறை கூடுதல் பதிவாளருக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலைமண்டலம் மேலாளருக்கும் குறைபாடுகளை தொலைபேசி மூலம் தெரிவிக்கலாமென பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இத்தகைய புகார்களைத் தெரிவிக்க உணவுப்பொருள் வழங்குதுறை ஆணையாளர் அலுவலகத்திலும் ஒரு தனி தொலைபேசி எண் 842807 அமைக்கப்பட்டுள்ளது. அதன் விவரமும் பொது மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## V. கிராமந்தோறும் நியாய விலைக் கடைத் திட்டம்

52. நகரப் பகுதிகளிலுள்ள நியாய விலைக் கடைகளில் அனைத்து அத்தியாவசிய பண்டங்களையும் கிடைப்பது போலவே கிராமப் புறங்களிலுள்ள மக்களுக்கும் இந்த வசதிகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கிராமந்தோறும் நியாய விலைக்கடைகள் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. தஞ்சாவூர், தென் ஆற்காடு, தர்மபுரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்படுத்தி வருகிறது. இந்த 4 மாவட்டங்களிலும் சேர்ந்து மொத்தத்தில் 4,277 நியாய விலைக் கடைகளை இந்த நிறுவனம் நடத்தி வருகிறது. சென்னை நீங்கலாக இதர மாவட்டங்களில் இந்த திட்டத்தை கூட்டுறவு சங்கங்கள் செயல்படுத்தி வருகின்றன, கூட்டுறவுத் துறையில் இத்திட்டத்தின் கீழ் 11,577 கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன.



53. கிராமங்களிலுள்ள நியாய விலைக் கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை, மைதா, ரவை, பாமாலின், மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இந்த நியாய விலைக் கடைகளின் மூலம் அரிசியும், கோதுமையும் வழங்கியதின் மூலம், பருவ மழை தவறியதன் காரணமாக தமிழகத்தின் பல பகுதிகளில் வறட்சி ஏற்பட்டிருந்த நிலையில் வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயராமல் தடுக்க இவை பெரிதும் பயன்பட்டது என்பதை எடுத்துக்கூற கடமைப்பட்டுள்ளேன். அதிகக்கடைகளை திறக்கவேண்டும் என்ற அவசியமில்லை, இருப்பினும் சிறப்பான இடங்களில், அதன் தகுதி மற்றும் தேவைக்கேற்ப கடைகள் திறப்பது ஆய்வு செய்யப்பட்டு தேவைப்பட்டால் கடைகள் திறக்கப்படும்.

## VI. வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள்.

54. அத்தியாவசியப் பண்டங்கள் நியாயமான விலையில் அனைவருக்கும் கிடைக்க வகை செய்யும் முறையிலும், அப்பொருள்களில் தனியார் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தவும், அத்தியாவசிய பண்டங்கள் சட்டம் 1955—ன் பிரிவு 3-ன் கீழ், கீழ்க்கண்ட வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளை தமிழக அரசு பிறப்பித்துள்ளது:—

(1) தமிழ்நாடு நெல் அரிசி வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1974

(2) தமிழ்நாடு மைதா மற்றும் கோதுமைப் பொருட்கள் வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1974.

(3) தமிழ்நாடு வனஸ்பதி வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1973.

(4) தமிழ்நாடு மண்ணெண்ணெய் வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1973.

(5) தமிழ்நாடு நிலக்கடலை மற்றும் நிலக்கடலை பொருட்கள் வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1974.

(6) தமிழ்நாடு பருப்பு வகைகள் வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1978

(7) தமிழ்நாடு சர்க்கரை வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1981.

55. இந்த வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளின்கீழ், குறிப்பிட்ட அளவுக்கு மேல் ஒரு வணிகர் இருப்பு வைத்திருந்தாலும், வியாபாரம் செய்தாலும் அதற்கு உரிமம் பெற வேண்டும் என்ற விதி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளின் கீழ் உரிமம்

பெறுவதும் அவற்றைப் புதுப்பிப்பதும் சங்கடமாக உள்ளது என்பதால் அனைத்து பொருட்களையும் வியாபாரம் செய்ய ஒரே உரிமம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வியாபாரிகள் அரசின் முன் வைத்தனர். அக்கோரிக்கையைப் பரிசீலனை செய்து மண்ணெண்ணெய், சர்க்கரை நீங்கலாக மற்ற அனைத்து அத்தியாவசியப் பண்டங்களுக்கும் ஒரே வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை ஒன்று வெளியிட மத்திய அரசின் இசைவை அரசு பெற்றுள்ளது. அந்த ஆணை 1—4—84 முதல் அமல் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் வழக்குகளும் மேல் முறையீடுகளும்.**

56. அத்தியாவசிய பண்டங்கள் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் சீராக கிடைக்கவும், பதுக்கலை வெளிக் கொணரவும், கள்ளச் சந்தையை ஒழிக்கவும் மத்திய அரசு 1955 ஆம் ஆண்டு அத்தியாவசிய பண்டங்கள் சட்டத்தின் கீழ் இந்த அரசு பல கட்டுப்பாடு ஆணைகளை பிறப்பித்துள்ளது. இந்த கட்டுப்பாடு ஆணைகளை மீறி அத்தியாவசியப் பண்டங்களை வியாபாரிகள் அல்லது மற்றவர்கள் கையிருப்பு வைத்திருந்தால் அல்லது ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்து சென்றால், கட்டுப்பாடு ஆணைகளை செயல்படுத்த அனுமதிக்கப் பட்டுள்ள அலுவலர்கள் கைப்பற்றுகை செய்து மாவட்ட ஆட்சியர் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற கூடுதல் மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வருவாய் அலுவலருக்கு அறிக்கை சமர்ப்பிக்கிறார்கள் அந்த அறிக்கை பெற்றபின் மாவட்ட ஆட்சியர் அல்லது அவர் அனுமதி பெற்ற அலுவலர் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ள பண்டங்களை பொறுத்த மட்டில் கட்டுப்பாடு ஆணைகளின் விதிகள் மீறப்பட்டிருப்பதாக அவர் நம்பினால் அப்பண்டங்களை பறிமுதல் செய்தும் அப்பண்டங்களை கொண்டு செல்ல உபயோகிக்கப்பட்ட கோணிப்பைகள், பெட்டிகள், வண்டிகள், லாரிகள் முதலியவற்றை பறிமுதல் செய்தும் ஆணை வெளியிடலாம். அந்த ஆணைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் 1—9—82-க்கு முன் மாவட்ட குற்றவியல் நீதிமன்றங்களில் மேல் முறையீடுகள் சமர்ப்பித்தனர். இம்மேல் முறையீடுகளை விரைவில் விசாரித்து தீர்ப்பளிக்கவும் கள்ளச் சந்தை, பதுக்கல், கொள்ளை லாபம் அடித்தல் போன்ற செயல்களில் ஈடுபடும் சமூக விரோதிகளை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் மத்திய அரசு 1955 ஆம் ஆண்டின் அத்தியாவசியப்பண்டங்கள் சட்டத்தில் சில திருத்தங்களை 1981 ஆம் ஆண்டு கொண்டு வந்தது. அத்திருத்தங்களின் படி அத்தியாவசியப் பண்டங்களின் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்படும் ஆணைகள் மீது மேல் முறையீடுகளை மாவட்ட குற்றவியல் நீதிமன்றங்களுக்கு மாறாக மாநில அரசே விசாரித்து தீர்ப்பளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி இம்மாநிலத்தில் மொத்தம் 16 மாவட்ட குற்றவியல் நீதிமன்றங்களில் கவனிக்கப்பட்டு வந்த அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தில் சம்பந்தப்பட்ட மேல்முறையீடுகள் 1—9—82 முதல் அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றன. 1984 ஜனவரி திங்கள் முடிய



கிட்டத்தட்ட 900 மேல்முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளன. அவற்றில் 400 மேல்முறையீடுகள் வரை விசாரிக்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளன.

**உணவுப் பொருள் வழங்கு துறை குற்றப் புலனாய்வுப் பிரிவு.—**

57. உணவுப் பொருள் வழங்கு துறை, குற்றப் புலனாய்வு பிரிவு ஒரு காவல்துறைத் துணைத் தலைவர் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இத்துறையில் 3-காவல் துறை கண்காணிப்பாளர்கள், 8 துணை கண் காணிப்பாளர்கள், 22-ஆய்வாளர்கள், 20-உதவி ஆய்வாளர்கள், 14 தலைமைக் காவலர்கள், 22 முதல் நிலைக் காவலர்கள், 110 இளநிலைக் காவலர்கள் மற்றும் 52 ஓட்டுநர், காவலர்கள் ஆகியவர் நிர்வாகப் பணி யாளர்களாக உள்ளனர் இப்பிரிவிடம் நெல், அரிசி, சர்க்கரை, கோதுமை சிமெண்ட், நிலக்கடலை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள பலவகைப்பட்ட கட்டுப்பாடு ஆணைகளை நிறைவேற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது தவிர, அத்தியாவசியப் பண்டங்களைப் பொது மக்களுக்கு விநியோகம் செய்வது சரியாக நடைபெற்று வருகிறதா என்பதைக் கண்காணிப்பதிலும் உணவு பொருள் வழங்கு துறையினருக்கு இப்பிரிவு உதவி வருகிறது.

58. சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய 6 நகரங்களில் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955-ன்கீழ் நடைபெறும் குற்றங்களை விசாரிப்பதற்காகவே, சிறப்பு நீதிமன்றங்கள் தனியாக 1—9—1982 முதல் இயங்கி வருகின்றன.

59. 1983-ம் ஆண்டு, 1,221 வழக்குகளை இப்பிரிவு பதிவு செய்தது இவைகளில் பதுக்கலுக்காக 546 வழக்குகள் கள்ளக்கடத்தலுக்காக 323 வழக்குகள், கள்ளச்சந்தையின் கீழ் 71 வழக்குகள் மற்றும் 281 இதர வழக்குகளும் உள்ளடங்கும்.

60. பதிவு செய்யப்பட்ட 1,221 வழக்குகளில், 98 வழக்குகளில் நீதி மன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில 25 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டது. 3 வழக்குகளில் விடுதலை செய்யப்பட்டது. 70 வழக்குகள் இன்னும் விசாரணையில் உள்ளன. 121 வழக்குகளில் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 797 வழக்குகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், சென்னை நகர துணை ஆணையாளர்களிடமும் விசாரணையில் உள்ளன.

61. 1983-ம் ஆண்டில் ரூ. 1.28 கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டன. அதில் ரூ. 29.93 லட்சம் மதிப்புள்ள பொருள்கள் அரசுக்குப் பறிமுதல் செய்யப்பட்டன மற்றும் 167-லாரிகள் 12 வேன்கள், 5 பைகர்கள் 2 டிராக்டர்கள், 3 கார்கள் உள்பட ரூ. 2 கோடி மதிப்புள்ள மொத்தம் 264 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

62. பெட்ரோலியம் பொருட்களில் அமைப்பாக நடந்துவந்த பல்வேறு குற்றங்களை மே 83-ல் கண்டுபிடித்தது இப்பிரிவின் சாதனையாகும். இப்பிரிவு பல்வேறு திடீர் சோதனைகளைச் செய்து, 8,820 லிட்டர் டீசல், 600 லிட்டர் பெட்ரோல், 10,650 லிட்டர் மண்ணெண்ணெய், 2,600 லிட்டர் கருப்பு எண்ணெய் (Black oil) மற்றும் 150 லிட்டர் சேப் எண்ணெய் (சுமார் ரூ. 70,000 மதிப்புள்ளவை) கைப்பற்றியது மற்றும் 19 நபர்கள் கைது செய்யப்பட்டனர். தவிர, 27,000 லிட்டர் டீசல், 24,000 லிட்டர் பெட்ரோல், ஒரு காலியான லாரி மற்றும் ஒரு பியட் கார் (மொத்த மதிப்பு ரூ. 14 லட்சம்) கலப்படம் மற்றும் திருட்டுக் குற்றங்களில் ஈடுபட்டிருந்த போது பிடிக்கப்பட்டன. மேற்கூறிய வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

## VII. அரிசி அரவை ஆலைகளை நவீனமயமாக்குதல்.

63. அரிசி அரவை ஆலைகளை நவீனமயமாக்கும் திட்டத்தை மத்திய அரசு 1970-ல் அறிவித்தது. அரிசி அரவை ஆலைகளை நவீனமயமாக்கினால், கூடுதல் அரிசி கண்டு முதல், குருணை தவிர்ப்பு, நல்ல தரமுள்ள தவிடு பெறுதல் ஆகிய நன்மைகள் அடையலாம் தேவையற்ற திட்டுதல் இம்முறையில் தவிர்க்கப்படுவதால், நல்ல சத்துள்ள அரிசி கிடைக்கிறது. நல்ல தரமுள்ள தவிட்டினை உபயோகித்து விலை மதிப்புள்ள சமையல் எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. அரவை ஆலைகளில் தயாரிக்கப்படும் உமியை அடுப்புகளை எரிக்கப் பயன்படுத்தலாம் என்பதால் வெக்கவைப்பதற்கான செலவு கணிசமாக குறைகிறது.

64. தமிழ்நாட்டில் 17,005 அரிசி ஆலைகள் உள்ளன, இவற்றில் 16,959 ஆலைகள் ஒற்றை அல்லர் ஆலைகள், மீதமுள்ளவை அல்லர், அல்லர் மற்றும் ஷெல்லர், ஷெல்லர் வகையைச் சேர்ந்தவை. எல்லா வகையான அரிசி ஆலைகளுக்கும் நவீனமயமாக்க வேண்டிய காலக்கெடு 1984, ஜூலை 31-ம் தேதியாகும். இதுவரை, 381 அல்லர் மற்றும் ஷெல்லர், மல்டிபிள் அல்லர் ஷெல்லர் ரக ஆலைகளும் 1078 ஒற்றை அல்லர் ஆலைகளும் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

65. நவீனமயமாக்கும் திட்டத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு மத்திய அரசு மாநிலத்திலுள்ள ஒற்றை அல்லர் அரிசி ஆலைகளை நவீனமயமாக்க ஒரு திட்டத்தினை அறிவித்துள்ளது இத்திட்டத்தின் விவரம் வருமாறு:—

| திட்டம். (1) | வழங்கப்பட்டுள்ள தொகை. (2) |
|---|---|
| | ரூபாய். |
| (1) ஒவ்வொன்றும் ரூபாய் 10,000 வீதம் 15 செய்முறைப் பிரிவுகள் அமைக்க. | 1,50,000 |
| (2) ரூ. 10,000 வீதம் 10 கருத்தரங்குகள் நடத்த, | 1,00,000 |
| (3) 450 அரிசி ஆலைகளுக்கு மானியம் வழங்குவது | 22,50,000 |
| மொத்தம் .. | 25,00,000 |





66. மேலே இனம் 3-ல் உள்ள மானியத்தொகையில் நவீனமயமாக்கத் தேவையான இயந்திரங்கள் வாங்கும் செலவில் 50 விழுக்காடு அளவினை மத்திய அரசும் மாநில அரசும் சமமாக ஏற்கும். மீதமுள்ள 50 விழுக்காடு பணத்தை, அரிசி அரவை ஆலை உரிமையாளர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் ஏற்க வேண்டும் அல்லது வங்கி அல்லது பிற நிறுவனங்கள் மூலம் நிதியுதவி பெற்றுக்கொள்ள வேண்டும்.

67. மத்திய அரசு இதுவரை 15 செய்முறைப் பிரிவுகள் அமைக்கவும் 6 கருத்தரங்குகள் நடத்தவும் ரூ. 2,10,000 தந்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த திட்டச் செயலாக்க குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது, செய்முறைப் பிரிவுகள் அமைப்பதற்கான இயந்திரங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன இதுவரை 5 கருத்தரங்குகள் கீழ்க்கண்டவாறு நடத்தப்பட்டுள்ளன:—

| மாவட்டத்தின் பெயர். (1) | | | கருத்தரங்கு நடந்த நாள் (2) |
|---|---|---|---|
| தென்னாற்காடு | .. | .. | 21—10—1983 |
| மதுரை | .. | .. | 20—11—1983 |
| வடஆற்காடு | .. | .. | 27—12—1983 மற்றும் 28—12—1983 |
| செங்கற்பட்டு | .. | .. | 29—1—1984 |
| பெரியார் | .. | .. | 17—2—1984 |

68, இக்கருத்தரங்குகளில் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நவீனமயமாக்குவதினால் ஏற்படும் நன்மைகள் விளக்கிக் கூறப்படுகின்றன இதனால் அவர்கள் இத்திட்டத்தை மேற்கொள்ளச் செய்ய வாய்ப்பு கிடைக்கிறது இவ்வரசு இத்திட்டத்தை செயல்படுத்தி இதன் மூலம் கிடைக்கும் முழு நன்மைகளையும் அடைய வழிவகை செய்யும்

## VIII. விலைவாசி நிலைமை

### அரிசி விலை.

69. தமிழகத்தில் பெரும்பாலும் மக்கள் அரிசி உணவையே சாப்பிடுகின்றனர் வெளிச் சந்தையில் சாதாரண ரக அரிசியின் சில்லறை விலை இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 1 கிலோ ரூ. 2.60 லிருந்து ரூ. 4.10 வரை இருந்தது கடந்த ஆண்டு இதே காலத்தில் சாதாரண ரக அரிசியின் விலை 1 கிலோ ரூ. 2.40 லிருந்து ரூ. 4.20 வரை இருந்தது இந்த ஆண்டு விலை உயர்வுக்கு காரணம் தமிழ் நாட்டில் பருவமழை தவறியதன் காரணமாக நெல் விளைச்சல் கணிசமாக பாதிக்கப்பட்டதாகும் ஆனால் வெளிச்சந்தையில் அரிசி கிடைக்கவில்லை என்ற புகார்கள் இல்லை தமிழகத்தில் நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டதால் வெளிமாநிலங்களிலிருந்து அதிக அளவில் அரிசியை கொண்டு வந்து விற்கவியார் வியாபாரிகள் ஊக்குவிக்கப்பட்டனர்.

## புஞ்சை தானியங்கள்

70. பிப்ரவரி 1984-ல், சோளம், கம்பு, ராகி, போன்ற புஞ்சை தானியங்கள் சில்லரை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 1.70 லிருந்து ரூ, 2,60 வரை நிலவி வந்தது. கடந்த ஆண்டு இதே காலத்தில் இவற்றின் விலை ரூ. 1.55 லிருந்து ரூ. 2.25 வரை இருந்தது. இந்த விலை உயர்வுக்கு காரணம் பருவ மழை தவறியதன் காரணமாக சிறு தானியங்களின் உற்பத்தியும் பாதிக்கப்பட்டது தான் வெளிச் சந்தையில் விலை ஏற்றம் காணப்பட்டபோது தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ராகியை வெளிச் சந்தையில் வாங்கி 1 கிலோ ரூ. 1.70-க்கு நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகம் செய்தது.

## கோதுமை

71. கோதுமையைப் பொறுத்தவரை தமிழகத்தின் தேவைக்கு வட மாநிலங்களிலிருந்துதான் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. வெளிச் சந்தையில் பிப்ரவரி 1974-ல் கோதுமையின் சில்லரை விலை 1 கிலோ ரூ, 2,50 என்ற அளவில் இருந்தது கடந்த ஆண்டு 1 கிலோவின் விலை ரூ, 2.70.

## பருப்பு வகைகள்.

72. பருப்பு வகைகளைப் பொறுத்தவரை தமிழகம் ஒரு பற்றாக்குறை மாநிலமாகும். நமுடைய ஓராண்டு தேவை ஆறு லட்சம் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழகத்தின் மொத்த உற்பத்தி சுமார் 65,000 டன்களாகும். எனவே, மீதி 5·35 லட்சம் டன்கள் பருப்பு வகைகளுக்கு வட மாநிலங்களான ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் மற்றும் ஆந்திரா போன்ற மாநிலங்களைத்தான் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

துவரம் பருப்பைப் பொறுத்தவரையில் பிப்ரவரி 1984-ல் சராசரி சில்லரை விலை 1 கிலோ ரூ. 8·05 ஆக இருந்தது. சென்ற ஆண்டில் சில்லரை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 6. 15 ஆக இருந்தது.

உளுத்தம்பருப்பின் சாராசரி சில்லரை விலை பிப்ரவரி 1984-ல் கிலோ ஒன்றுக்கு ரூ. 6·75 ஆக இருந்தது. கடந்த ஆண்டு ஒரு கிலோ ரூ. 5·25 ஆக இருந்தது.

பச்சைப் பருப்பின் சில்லரை விலை 1 கிலோ ரூ. 6·05 ஆக இருக்கிறது. இது கடந்த ஆண்டு ரூ. 4·65 ஆக இருந்தது. பிப்ரவரி 1984-ல் கடலைப் பருப்பின் தற்போலதைய சராசரி சில்லரை விலை ஒரு கிலோ ரூ. 5·25 ஆக இருந்தது.



கடந்த ஆண்டு இதன் விலை 1 கிலோ ரூ. 3·65 ஆக இருந்தது. இவ்வாறு அனைத்து பருப்பு வகைகளிலும் விலைகளில் ஏற்றம் காணப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் உற்பத்தியாகும் வடமாநிலங்களில் பருப்பு உற்பத்தி குறைந்த காரணத்தினால், அம்மாநிலங்களிலிருந்து வரத்து மிகவும் குறைவாக உள்ளது. மேலும், உற்பத்தியாகும் மாநிலங்களிலேயே விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் தமிழகத்திலும் பருப்பு வகைகளின் விலைகள் அதிகமாக உள்ளன. தமிழகத்தில் பருப்பு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க விவசாயத் துறையினர் தீவிரமான முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். தமிழகத்தில் நமது தேவையின் அளவுக்கு உற்பத்தியை அதிகரிக்கும் வரை, பிற மாநிலங்களைத் தான் நாம் நம்பியிருக்க வேண்டியுள்ளது.

## வெளிச் சந்தை சர்க்கரை.

73. பிப்ரவரி 1984-ல் வெளிச் சந்தையில் சர்க்கரையின் சில்லரை விலை ஒரு கிலோ ரூ. 4·60-விருந்து ரூ. 5·00 வரை நிலவி வந்தது. கடந்த ஆண்டு இதே காலத்தில் அதன் விலை ரூ. 4·20-விருந்து ரூ. 4·70 வரை இருந்தது. 1981-82 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது, 1982-83 ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தி சுமார் 22 விழுக்காடு குறைவாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வெளிச் சந்தை சர்க்கரையை சர்க்கரை ஆலைகள் விற்பதற்கு மத்திய அரசு அனுமதிக்கும் அளவைப் பொறுத்தே வெளிச் சந்தையின் சர்க்கரை விலை அமையும்.

## சமையல் எண்ணெய்

74. நிலக்கடலைப் பயிர் உற்பத்தியைப் பொறுத்தவரை தமிழகம் சாதாரண ஆண்டில் தன் தேவைக்குப் போதுமான அளவிற்கு உற்பத்தி செய்யும் மாநிலமாகும். ஆனால் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு நிலக் கடலை மற்றும் நிலக் கடலைப் பொருட்களை எடுத்துச் செல்ல தடை ஏதும் இல்லையென்ற காரணத்தினால் தமிழகத்தில் உற்பத்தியாகும் நிலக்கடலை முழுவதும் நம் தேவைக்கே பயன்படுகிறது எனக் கூற முடியாது. வெளி மாநிலங்களில் விலை உயர்ந்து காணப்படும்போது இங்கிருந்து அம்மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அதே போன்று தமிழகத்தில் நிலவும் விலையை அனுசரித்து மற்ற மாநிலங்களிலிருந்து கடலை எண்ணெய் வரக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

1982-83 ஆம் ஆண்டில் குளிர்கால பயிரின் உற்பத்தி, 1981-82 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது 32 விழுக்காடு குறைவாக உள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. கோடை மற்றும் குளிர்

காலம் ஆகிய இரு பருவ காலங்களில் நிலக் கடலையின் உற்பத்தி 1981–82 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது, 1982–83 ஆம் ஆண்டில் 22 விழுக்காடு அளவிற்கு உற்பத்தி குறைந்துள்ளது மதிப்பிடப்பட்டுள்ளது.

சமையல் எண்ணெய் வகைகளைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டின் தேவை, உற்பத்தி, பற்றாக்குறை, கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளன.—

| | எண்ணெய் வகை. (1) | ஆண்டுக்கான தேவை. (2) | ஆண்டு உற்பத்தி. (3) | பற்றாக் குறை. (4) |
|---|---|---|---|---|
| | | (இலட்சம் டன்களில்) | | |
| 1. | கடலை எண்ணெய் .. | 1·74 | 1·44 | 0·30 |
| 2. | நல்லெண்ணெய் .. | 0·96 | 0·59 | 0·37 |
| 3. | தேங்காய் எண்ணெய் | 0·30 | 0·15 | 0·15 |
| | மொத்தம் .. | 3·00 | 2·18 | 0·82 |

கடலை எண்ணெயைப் பொறுத்த வரையில் பிப்ரவரி 1984-ல் 1 கிலோ ரூ. 14·30 முதல் ரூ. 16·70 வரை இருந்து வந்தது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 1 கிலோ ரூ. 13·40 முதல் ரூ. 16·35 வரை இருந்தது. நல்லெண்ணெயின் விலை பிப்ரவரி 1984-ல் 1 கிலோ ரூ. 17·50 முதல் ரூ. 20·00 வரை நிலவி வந்தது. நல்லெண்ணெயைப் பொறுத்த வரையில், தமிழகம், ஆந்திரம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களையே தன் தேவைக்கு நம்பியுள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் எள் உற்பத்தி 1981–82 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 29 விழுக்காடு அளவிற்கு குறைந்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.

தேங்காய் எண்ணெயின் தேவைக்கு தமிழகம் கேரள மாநிலத்தையே முழுவதும் நம்பியுள்ளது. ஆனால் வறட்சியின் காரணமாகவும், தென்னை மரங்களுக்கு ஏற்பட்ட நோயின் காரணமாகவும் அம்மாநிலத்திலேயே விலை மிகவும் உயர்ந்துள்ளது. அதன் காரணமாக தமிழகத்திலும் தேங்காய் எண்ணெயின் விலை உயர்ந்து காணப்படுகிறது.

75. மிளகாய் வற்றலின் விலை பிப்ரவரி 1984-ல் 1 கிலோ ரூ. 6·00-லிருந்து ரூ. 11·00 வரையில் இருந்தது. கடந்த ஆண்டு இதே காலத்தில் இதன் விலை ரூ. 7·00-லிருந்து ரூ. 12·00 வரை இருந்தது. தற்போது வெளிச் சந்தையில் புதிய சரக்கு வரத்து வருவதன் காரணமாக அதன் சில்லரை விலை கணிசமான அளவில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



76. புளியைப் பொறுத்த வரையில் சில்லரை விலை 1 கிலோவிற்கு பிப்ரவரி 1984-ல் இருந்தது ரூ. 3·50 முதல் ரூ. 9·00 வரை ரூ. 5·00-லிருந்து ரூ. 8·50 வரை கடந்த ஆண்டு இதே காலத்தில் தனியாவின் சில்லரை விலை 1 கிலோவிற்கு நிலவி வந்தது. ரூ. 7·00 வரை இருந்தது. கடந்த ஆண்டு ரூ. 5·00-லிருந்து ரூ. 7·75-லிருந்து ரூ. 7·50 ஆக இருந்தது. இதன் விலை ரூ.

77. அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளில் ஏற்றம் காணப்படும்போது, உணவுத்துறை அலுவலர்கள் அந்தப் பொருட்களை வாணிபம் செய்யும் வர்த்தக சங்கங்களையும், வர்த்தகர்களையும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி விலைவாசியைக் கட்டுப்படுத்த வும், நியாயமான விலையில் மக்களுக்கு கிடைக்கும் வகையில் வழி செய்யவும் நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொண்டு வருகின்றனர்.

நாம் குடும்ப அட்டைகளுக்கு பொது விநியோக திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகள் மூலமாக பாமாலின் எண்ணெயை விநியோகம் செய்கின்ற காரணத்தால் வெளிச் சந்தையில் சமையல் எண்ணெயின் விலை ஏற்றத்தை நிதானத்திற்குள்ளும் கட்டுப் பாட்டிற்குள்ளும் வைத்துக்கொள்ள முடிந்தது.

மேலும் பல்வேறு வர்த்தக கட்டுப்பாடு ஆணைகளை செயல் படுத்துவதன் மூலமும் வர்த்தகர்கள் ஒரு சமயத்தில் தாங்கள் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கப் பட்டிருப்பதாலும் உணவுப் பொருள் வழங்கு துறை அலுவலர்களும், உணவு வழங்கு துறை குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலர்களும் வியாபாரிகளின் வியாபார தலங்களைப் பார்வையிட்டு வருவதாலும், அத்தியாவசியப் பண்டங்களைப் பதுக்கி வைக்காமல் கண்காணிக்கப் படுகிறது.

78. அண்மையில், வெளிச் சந்தையில் தேயிலையின் விலை மிகவும் உயர்ந்து காணப்பட்டதையொட்டி, தேயிலை வாணிபம் செய்யும் முக்கிய நிறுவனங்களின் பிரதிநிதிகளை அழைத்து உணவுத்துறை செயலாளர் அவர்களுடன் கலந்துரையாடினார். 1 கிலோ தேயிலை ரூ. 30-க்கு அதிகப்படாமல் விற்க அவர்கள் ஒப்புக் கொண்டனர். உணவு விடுதி உரிமையாளர்களுடன் உணவுத் துறை அதிகாரிகள் அடிக்கடி பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார்கள். இதன் பயனாக தமிழ்நாட்டில் உணவுப் பண்டங்களின் விலை ஓரளவிற்கு கட்டுப் பாட்டிற்குள்ளேயே இருக்கிறது என்றால் மிகையாகாது. அரசு இதனை கவனமாக கண்காணித்து வரும். உணவு விடுதி உரிமையாளர்கள் அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க ஏழை மக்களுக்கு மதிய உணவுப் பொட்டலங்களை ஒன்று ரூ. 1 என்ற விலையில் விற்பதாகவும் உறுதி அளித்துள்ளார்கள். இதனால் ஏழை மக்கள் ஒரு வேளையாவது மலிவான உணவருந்தும் வாய்ப்பை உருவாக்கலாம் என்று நம்புகிறோம்.

## IX. நுகர்வோர் பாதுகாப்பு

நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் பல நாடுகளில் வலுவாகக் காலூன்றி சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. உற்பத்தியாளர், வணிகர் ஆகியோருடன் நுகர்வோருக்குள்ள உரிமைகளை நிலை நாட்டும் ஒரு இயக்கமே நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம். நுகர்வோர் இயக்கத்தை ஊக்குவிக்க இந்த அரசு சில முனைப்பான நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

(1) நுகர்வோர் நலன் காக்க தலைமைச் செயலக அளவில் உணவுத் துறை செயல்படும். இத்துறையின் பெயரும் "உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என மாற்றப்படுகிறது.

(2) துறைத் தலைவர் அளவில் உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர், "உணவுப் பொருள் வழங்குதல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர்" என அழைக்கப்படுவார்.

(3) மாவட்ட அளவில் மாவட்ட வழங்கு அலுவலர் நுகர்வோர் பாதுகாப்புக்கு பொறுப்பேற்பார்.

(4) மாவட்ட அளவில் நுகர்வோர் பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றில் மாதர் சங்கங்கள் குழு அளவில் ஈடுபட ஊக்குவிக்கப்படும்.

(5) இந்த இயக்கத்திற்கு சட்ட பூர்வ ஆதரவு தர இந்த அரசு உத்தேசித்துள்ளது.

## X. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

79. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு நிறுவனம் ஆகும். இது 1972 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் தமிழக அரசின் முகவராக நெல் கொள்முதல் செய்வதிலும், கொள்முதல் செய்த நெல்லை அரிசியாக்கி அந்தக் கிட்டங்கிகளில் சேமித்து வைத்து பொது விநியோகத்திற்கும் அரசின் மற்ற சமூக நலத் திட்டங்களுக்கும் வழங்கி வரும் பணியில் ஈடுபட்டுள்ளது. அதுமட்டுமின்றி தமிழகத்திற்கு மத்திய தொகுப்பிலிருந்து மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் அரிசி, லெவி கோதுமை, லெவி சர்க்கரை, பாமாயில் ஆகிய பொருட்களை இந்திய உணவு வர்த்தக கழகத்திலிருந்தும், ஸ்டேட் டிரேடிங் கார்பரேஷன் போன்ற நிறுவனங்களிலிருந்தும் எடுத்து அவற்றை விநியோகம் செய்யும் பொறுப்பை ஏற்றுள்ளது. இம்மந்தோறும் நியாய விலைக் கடைகள் திட்டத்தின்கீழ் தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் 4,277 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றது. தவிர, நகரப் பகுதிகளிலும் 618 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றது.





80. தமிழக அரசின் முகவராக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நெல், அரிசியை கொள்முதல் செய்கின்றது. வர்த்தக லெவி திட்டத்தின் கீழ் லெவி கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்தி வர்த்தகர்கள் அரசுக்கு செலுத்தும் லெவியைப் பெற்று வருகின்றது. அதுமட்டுமின்றி அரசு ஏகபோக கொள்முதல் திட்டம் அமுலில் இருக்கும் தஞ்சாவூர், தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் நேரடி கொள்முதல் நிலையங்களை திறந்து விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்குகின்றது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏறக்குறைய 500-க்கு மேற்பட்ட நேரடி கொள்முதல் நிலையங்களை திறந்து செயல்படுத்தி வருகின்றது. மற்ற மாவட்டங்களிலும், வெளிச் சந்தையில் நெல்லின் விலை அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைகளுக்குக் கீழாக சரியுமானால் அதனால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் தடுக்கும் முறையில் விலை ஆதரவு திட்டத்தின்கீழ் நேரடி கொள்முதல் நிலையங்களைத் திறந்து அவற்றின் மூலம் அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைகளில் விவசாயிகள் தாமாக முன்வந்து அளக்கும் நெல்லை வாங்க ஏற்பாடுகள் செய்துள்ளது. 1983 ஆம் ஆண்டு குறுவைப் பட்டத்தில் நேரடி கொள்முதல் நிலையங்களில் 1·13 இலட்சம் டன்கள் அரிசிக்கீடான நெல்லையும், லெவி திட்டத்தின்கீழ் 2,458 டன்கள் அரிசியும் ஆக மொத்தம் 1·16 இலட்சம் டன்கள் அரிசிக்கீடான நெல்லையும், அரிசியையும் கொள்முதல் செய்துள்ளது. சம்பா 84 பட்டத்தில், 6—3—1984 வரை 3 இலட்சம் அரிசி டன்களுக்கீடான நெல்லையும் அரிசியையும் கொள்முதல் செய்துள்ளது.

81. குறுவை நெல் சாதாரணமாக வட கிழக்குப் பருவ காற்று மழை தொடங்கும் நேரத்தில் அறுவடைக்கு வருகின்ற காரணத்தினால் ஈரப்பதம் அதிகமாக இருக்கும். ஈரமாக உள்ள நெல்லை விவசாயிகளிடமிருந்து வாங்குவதில் வர்த்தகர் தயக்கம் காட்டுவார்கள் அல்லது விலைகளை மிகவும் குறைத்து வாங்குவார்கள். ஆனால், இந்நிறுவனம் 25 விழுக்காடு வரை ஈரமுள்ள நெல்லையும் விவசாயிகளிடமிருந்து வாங்கியது. எதிர்பாராத முறையில் இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மழை பெய்த காரணத்தினால் நெல்லில் ஈரப்பசை மிகவும் அதிகமாக இருந்தது. இதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்ற ஒரு அக்கறையினால் அந்த நெல்லையும் வாங்கலாமென்று மாநில அரசு அனுமதித்ததின் பேரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஈர நெல்லையும் விவசாயிகளிடமிருந்து நேரடி கொள்முதல் நிலையங்களில் வாங்கியது.

82. மத்திய அரசு தமிழகத்திற்கு மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யும் அரிசியை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தமிழக அரசின் சார்பாக எடுத்து வருகின்றது. 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதற்கொண்டு 1984 பிப்ரவரி வரை 3,20,000 மெட்ரிக் டன்கள் அரிசியை மத்திய அரசு மத்திய தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்தது. அந்த அரிசி முழுவதையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எடுத்து பொது விநியோகத்திற்கு பயன்படுத்தியுள்ளது.

83. கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததின் காரணமாக தமிழகத்தில் நெல் விளைச்சல் கணிசமாக பாதிக்கப்பட்டது. பொது விநியோகத்திற்குத் தேவைப்படும் அரிசியை வெளிச் சந்தையில் கொள்முதல் செய்ய, அரசு அனுமதித்ததின் பேரில் 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து பஞ்சாப், ஹரியானா, ஆந்திரம், மத்தியப்பிரதேசம், உத்திரப் பிரதேசம், டெல்லி போன்ற பிற மாநிலங்களில் 1·52 இலட்சம் டன்கள் அரிசியை வாங்கியது. இதன் மதிப்பு சுமார் ரூ. 50 கோடியாகும்.

84. பொது விநியோக திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளுக்கு குடும்பக் கார்டுகளுக்கு வழங்குவதற்கு தேவைப்படும் அரிசியை இந்த நிறுவனம் தான் கூட்டுறவு சங்கங்களுக்கும் இதர நிறுவனங்களுக்கும் வழங்கி வருகின்றது. 1983 ஆம் ஆண்டில் வறட்சி நிலையின் காரணத்தினால் பொது விநியோகத் தேவை மிகவும் அதிகரித்தது. இந்த ஆண்டில் மொத்தத்தில் 8·66 இலட்சம் டன்கள் அரிசியை நியாய விலைக் கடைகளுக்கு விநியோகத்திற்காக இந்த நிறுவனம் வழங்கியுள்ளது.

85. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் அரசாங்கத்தின் மொத்த வியாபார முகவராக செயல்பட்டு வருகின்ற போதிலும், நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகின்றது. கிராமந்தோறும் நியாய விலைக் கடைகள் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளது போல் 4,277 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றது. இந்த நியாய விலைக் கடைகளின் மூலம் குடும்பக் கார்டுகளுக்கு வழங்கும் பொருள்கள் தவிர மற்ற இன்றியமையாப் பொருட்களையும் இந்த நிறுவனம் விற்பனை செய்து வருகின்றது. இந்த கிராம நியாய விலைக் கடைகளின் மொத்த விற்பனை 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 20·22 கோடியாகவும் 1981–82-ல் ரூ. 37·97 கோடி ஆகவும், 1982–83-ல் ரூ. 32·50 கோடியாகவும் இருந்தது.

86. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்யும் நெல்லை அரவை செய்து அரிசியை கிட்டங்கிகளில் வைத்திருந்து பொது விநியோகத்திற்கு வழங்குகின்றது. தமிழகத்தின் அரசு நிர்ணயித்துள்ள விலைகளில் கொள்முதல் செய்த நெல்லிலிருந்து தயாரிக்கப்படும் அரிசியின் அடக்க விலைகள் குவிண்டாலுக்கு கீழ்க் கண்டவாறு அமைகின்றது:—

| | ரூ. |
|---|---|
| சாதாரண ரகம் .. .. .. .. | 271·55 |
| சன்ன ரகம் .. .. .. .. | 278·55 |
| மிகச் சன்ன ரகம் .. .. .. .. | 284·95 |

ஏகபோக கொள்முதல் திட்டத்தின் கீழ் வாங்கும் நெல்லுக்கு கொள்முதல் விலைகளுக்கு மேலாக ரூ. 35 கூடுதலாகக் கொடுக்கின்ற காரணத்தினால் அப்பகுதிகளில் கொள்முதல் செய்யும் நெல்லிலி



ருந்து தயாரிக்கப்படும் அரிசியின் அடக்க விலைகள் குவிண்டாலுக்கு கீழ்க்கண்டவாறு அமைகின்றது:—

| | ரூ. |
|---|---|
| சாதாரண ரகம் .. .. .. .. | 329·60 |
| சன்ன ரகம் .. .. .. .. | 336 10 |
| மிகச் சன்ன ரகம் .. .. .. .. | 342·50 |

மத்திய தொகுப்பிலிருந்து இந்திய உணவுக் கழகம் கீழ்க்கண்ட விலைகளில் அரிசியை வழங்குகின்றது:—

| | குவிண்டாலுக்கு ரூ. |
|---|---|
| சாதாரண ரகம் .. .. .. .. | 208 |
| சன்ன ரகம் .. .. .. .. | 220 |
| மிகச் சன்ன ரகம் .. .. .. .. | 235 |

வெளிச் சந்தையில் இந்த நிறுவனம் வாங்கும் அரிசியின் விலை ஒரு குவிண்டாலுக்கு சராசரி ரூ. 310 முதல் ரூ. 370 என்று அடக்கமாகிறது. ஆனால் நியாய விலைக் கடைகளில் சாதாரண ரக அரிசி ஒரு கிலோ ரூ. 1·75, சன்ன ரக அரிசி ஒரு கிலோ ரூ. 2, மிகச் சன்ன ரக அரிசி ஒரு கிலோ ரூ. 2·15 என்ற விலைகளில் விற்பனை செய்வதால ஏற்படக்கூடிய இழப்பை தமிழக அரசு ஏற்றுக் கொள்கிறது.

87. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் கோதுமையை எடுத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தன்னுடைய நியாய விலைக் கடைகளுக்கும் வழங்கி வருகின்றது. 1983 ஆம் ஆண்டில் இந்திய உணவுக் கழகத்திடமிருந்து 2·11 லட்சம் மெட்ரிக் டன்கள் கோதுமையை எடுத்து அதில் 1·[illegible]3 லட்சம் டன்கள் கோதுமையை விநியோகித்துள்ளது. கோதுமை உருளை மாவு ஆலைகளில் தயாரிக்கப்படும் மைதா, ரவை ஆகியவற்றில் 60 விழுக்காடு அளவிற்கு பொது விநியோகத்திற்கு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி தன்னுடைய நியாய விலைக் கடைகளில் குடும்பக் கார்டுகளுக்கு வழங்குவதற்கு தேவைப்படும் மைதா, ரவையையும் ரொட்டி தயாரிப்போர் போன்ற மொத்த நுகர்வோருக்கு தேவைப்படும் மைதாவையும் எடுத்து இந்த நிறுவனம் வழங்கி வருகின்றது. 1983 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் 44,261 டன்கள் மைதாவையும், 11,633 டன்கள் ரவையையும் விநியோகம் செய்துள்ளது.

88. மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் லெவி சர்க்கரையை தமிழக அரசின் முகவராக இந்த நிறுவனம்தான் கையாள்கிறது. 1983 ஆம் ஆண்டில் 2·28 லட்சம் டன்கள் சர்க்கரையை இந்த நிறுவனம் சர்க்கரை ஆலைகளிலிருந்து எடுத்துள்ளது. கையிருப்பிலிருந்த சர்க்கரையைச் சேர்த்து இந்த ஆண்டில் மொத்தத்தில் 2·53 லட்சம் டன்கள் சர்க்கரையை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தன்னுடைய நியாய விலைக் கடைகளுக்கும் பொது விநியோகத்திற்கு வழங்கியுள்ளது. வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலையைக் கட்டுப்படுத்தும் வகையில் வெளிச் சந்தை சர்க்கரையையும் 1 கிலோ ரூ. 4·75-க்கு இந்த நிறுவனம் வழங்கி வருகிறது.

89. மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் பாமாலின் எண்ணெயை இந்நிறுவனம்தான் கையாள்கிறது. சென்னை துறைமுகத்தில் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேசனிடமிருந்து அந்த எண்ணெயை எடுத்து பல்வேறு மாவட்டங்களுக்கும் டேங்கர்கள் மூலம் அனுப்பி கூட்டுறவு நிறுவனங்களுக்கும் நியாய விலைக் கடைகளுக்கும், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்கும் வழங்கி வருகின்றது.

90. மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் லெவி சிமிண்டின் ஒரு பகுதியை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கையாள்கிறது. இந்நிறுவனம் எடுக்கும் சிமிண்டை பெரும்பாலும் பர்மிட்தாரர்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது. 1983 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 38,085 மெட்ரிக் டன்களை விற்றுள்ளது.

91. தமிழக அரசு செயல்படுத்திவரும் சமூக நலத் திட்டங்களில் இந்நிறுவனம் பெரும் பங்கு கொண்டுள்ளது. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்குத் தேவைப்படும் அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் ஆகிய பொருட்களை இந்நிறுவனம்தான் வழங்கி வருகின்றது. ஒரு மாதத்திற்கு சுமார் 18,000 டன்கள் அரிசியையும் 2,500 டன்கள் பருப்பு வகைகளையும், 900 டன்கள் சமையல எண்ணெயையும் சத்துணவு தயாரிப்பதற்காக வழங்கி வருகின்றது. இந்நிறுவனம் 4 மாவட்டங்களில் சத்துணவு மையங்களுக்கு இந்த பொருட்களை எடுத்துச் சென்று வழங்கும் பொறுப்பை ஏற்றுள்ளது. பிற மாவட்டங்களில் உள்ள சத்துணவு மையங்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் பொருள்களை எடுத்துச் சென்று வழங்குகின்றது. அவற்றிற்குத் தேவைப்படும் பொருள்களை இந்நிறுவனம்தான் வழங்கி வருகின்றது. சத்துணவுத் திட்டத்திற்குத் தேவைப்படும் பருப்பு வகைகளை இந்நிறுவனம் கொள்முதல் செய்துள்ளது. மொத்தத்தில் ரூ. 15·12 கோடி மதிப்புள்ள 32,649 டன்கள் பருப்பு வகைகளை இந்நிறுவனம் 1983 ஆம் ஆண்டில கொள்முதல் செய்துள்ளது.

காவல் துறை, தீயணைப்புத் துறையிலுள்ள அலுவலர்களுக்கு மான்ய உதவித் திட்டத்தின்கீழ் உணவுப் பொருள்கள் வழங்கும் திட்டத்தை இந்நிறுவனம் செயல்படுத்தி வருகின்றது. அதே போன்று சமுதாயத்தில் ஊனம் உற்றோருக்கும், வயதானவர்களுக்கும் வழங்கும் அரிசியை இந்த நிறுவனம்தான் வழங்கி வருகின்றது.



92. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், கொள்முதல் செய்யும் நெல்லை அரைத்து அரிசியாக்க வேண்டியுள்ளது. இந்த நிறுவனத்திற்குச் சொந்தமாக 13 நவீன அரிசி அரவை ஆலைகள் உள்ளன. இவற்றில் 6 ஆலைகள் தஞ்சாவூர் மாவட்டத்திலும், மீதி ஆலைகள் பிற மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் இந்த நவீன அரிசி அரவை ஆலைகளை ஏற்றுக்கொண்ட பின்பு அவற்றை மேம்படுத்த எடுத்த நடவடிக்கை காரணமாக 1981-82 ஆம் ஆண்டில் 1·10 லட்சம் டன்களிலிருந்து 1·45 லட்சம் டன்களாக அரைவைத் திறன் உயர்ந்துள்ளது. அது மட்டுமின்றி 1977 ஆம் ஆண்டில் உமியைக் கொண்டு செயல்படும் உலைகலன்களை அமைத்ததன் காரணமாக உலைக்கலன் எண்ணெயை உபயோகப்படுத்துவது தவிர்க்கப்பட்டது. அதன் காரணமாக 1977 ஆம் ஆண்டு முதல் 1983 டிசம்பர் மாத இறுதி வரை இந்த நிறுவனத்திற்கு 3·14 கோடி ரூபாய் சேமிப்பு ஆகியுள்ளது. இந்த நவீன அரிசி அரவை ஆலைகள் தொடர்ந்து மின் வசதி பெறும் வகையில் தனி வசதிகள் 9 அரவை ஆலைகளில் 1983-84 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் அரிசி அரவை ஆலைகளில் 1·37 லட்சம் டன்கள் நெல் அரவை செய்யப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் வரை 1·50 லட்சம் டனகள் நெல் அரவை செய்யப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது ஏறக்குறைய 37,000 டன்கள் அளவிற்கு கூடுதலாக நெல் அரவை செய்யப்பட்டுள்ளது.

ரூ. 200 லட்சம் செலவில் தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி வட்டத்தில் எருக்கூரில் ஒரு நவீன அரிசி ஆலை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆலை அமைக்கப்பட்டபின் அரிசி தயாரிப்போடு, அரிசி தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நவீன அரிசி ஆலையில் நாளொன்றுக்கு 100 மெ. டன்கள் நெல் அரவை செய்யப்படும். 15 முதல் 20 டன்கள் எண்ணெயை அரிசி தவிட்டிலிருந்து எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது, அவ்வாறு எடுக்கப்படும் எண்ணெயிலிருந்து நாளொன்றுக்கு 5 டன்கள் அளவிற்கு தவிடு எண்ணெய் சுத்திகரிப்பு செய்யப்படும். இந்த ஆலையை அமைப்பதற்காக தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

93. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற அனைத்துப் பொருட்களையும் சேமித்து வைத்து விநியோகம் செய்ய வேண்டியிருக்கின்ற காரணத்தினால் இதற்குத் தேவையான கிட்டங்கிகளை அமைத்து வருகின்றது. இதுவரையில் 13 நவீன அரவை அரிசி ஆலைகளில் 1,51,000 டன்கள் அளவிற்கு சேமிப்பு கிட்டங்கிகளை ரூ. 3·59 கோடி செலவில் கட்டியுள்ளது. அதுமட்டுமின்றி 43 வட்ட தலைமையகங்களில் 3·34 கோடி ரூபாய் செலவில் 1·25 லட்சம் டன்கள் அளவிற்கு சேமிப்பு கிட்டங்கிகளை கட்டியுள்ளது. தற்போது 19 இடங்களில் 44,350 டன்கள் சேமிப்பு வசதி கொண்ட கிட்டங்கிகள் ரூ. 180 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

94. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெயை கையாள்கிறது. இதை சென்னையிலிருந்து மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் சென்று விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் மாவட்டங்களில் இந்த எண்ணெயை சேமித்து வைக்க வசதியில்லை. எனவே, சென்னை நகரத்தில் 5 இடங்களிலும், மற்ற மாவட்டங்களில் 15 இடங்களிலும் சுமார் 4,000 டன்கள் அளவுக்கு சமையல் எண்ணெயை எடுத்து வைக்கக் கூடிய சேமிப்பு வசதியை சுமார் ரூ. 72 லட்சம் செலவில் அமைப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டு 12 இடங்களில் 1,400 டன்கள் அளவுக்கு சேமிப்பு வசதியை ஏற்படுத்த வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி சென்னை துறைமுகத்தில் சமையல் எண்ணெயை சேமித்து வைப்பதற்கு 3,000 டன்கள் சேமிப்பு வசதியை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு சென்னை துறைமுக அபிவிருத்தி நிலையத்திற்குள் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## XI. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

95. தமிழ்நாடு மாநில சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 1958-59 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனம் விஞ்ஞான ரீதியில் விவசாய விளை பொருள்கள், எண்ணெய் வித்துக்கள், உரங்கள் மற்றும் ஏனைய விளை பொருள்களை தமிழகம் முழுவதும் சேமித்து வைப்பதற்கு நவீன முறையில் கிடங்குகளை கட்டியுள்ளது. இவற்றில் தனி நபர்கள், கூட்டுறவு இயக்கங்கள், தமிழக அரசு சார்பு நிறுவனங்கள், மத்திய அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் இதர தனியார் நிறுவனங்கள் தங்கள் சரக்குகளை நவீன முறையில் சேமித்து வைக்க உதவி வருகிறது. இந்நிறுவனம், இதன் கிடங்குகளில் சரக்கு வைப்பவர்களுக்கு உதவியாக சரக்குகளை வாங்கி அடுக்க ஆவன செய்து வருகின்றது. இந்நிறுவனம், கூட்டுறவு சங்க கிடங்குகள், அரிசி ஆலை கிடங்குகள், மற்றும் தனி நபர் கிடங்குகளுக்குச் சென்று சரக்குகளுக்கு மருந்து அடித்தல் மற்றும் புகை மருந்து அடித்தல் போன்ற பணியையும் ஆற்றி வருகின்றது.

96. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகை ரூ. 6 கோடி. இந்நிறுவனத்திற்கு 31—3—1983 வரை செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 4·41 கோடி. இந்தத் தொகை தமிழக அரசாலும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தாலும் சரிசமமாக செலுத்தப்பட்டு உள்ளது 1983-84 ஆம் ஆண்டிற்கான பங்குத் தொகை ரூபாய் நாற்பது லட்சம் இரு பங்குதாரர்களிடமிருந்து சமபங்காக பெறப்பட்டது. இதையும் சேர்த்து செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 4·81 கோடி ஆகின்றது.



97. இந்நிறுவனம் 31—3—1983 வரை 100 கிடங்குகளை 35 இடங்களில் கட்டியுள்ளது. இவற்றின் சேமிப்பு கொள்ளளவு 2·47 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். 1983-84 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் மேலும் 31,900 டன்கள் கொள்ளளவு கொண்ட 11 கிடங்குகளை கட்டத் திட்டமிட்டுள்ளது. இந்த ஆண்டு முடிவிற்குள் அவற்றில் 17,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 6 கிடங்குகள் கட்டி முடிக்கப்படும். மீதியுள்ள 5 கிடங்குகளின் கட்டுமானப் பணி தொடங்கப் பெற்று 1984-85 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும். இவற்றின் கொள்ளளவு 14,500 மெட்ரிக் டன்கள் ஆகும். 1984-85-ல் 26,109 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு கொண்ட 9 கிடங்குகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டு முடிவில் இந்நிறுவனத்தின் வசமுள்ள கட்டப்பட்ட கிடங்குகளின் மொத்த கொள்ளளவு 3·05 லட்சம் மெட்ரிக் டன்களாக இருக்கும். இந்நிறுவனம் 35 இடங்களில் சொந்த கிடங்குகளையும், 20 இடங்களில் வாடகைக் கிடங்குகளையும் நடத்தி வருகின்றது.

98. கடந்த 5 ஆண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டிய லாபத்தின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| | ஆண்டு. | லாபம் (ரூபாய் இலட்சங்களில்). |
|---|---|---|
| | (1) | (2) |
| 1. | 1978-79 .. .. .. .. | 38·63 |
| 2. | 1979-80 .. .. .. .. | 22·35 |
| 3. | 1980-81 .. .. .. .. | 24·62 |
| 4. | 1981-82 .. .. .. .. | 69·31 |
| 5. | 1982-83 .. .. .. .. | 84·58 |

1982-83 ஆம் ஆண்டிற்கான லாப ஈவுத் தொகை, செலுத்தப்பட்ட மூலதனமான ரூ. 220·50 இலட்சத்தில் ஆறு சத விகிதம் என அறிவிக்கப்பட்டு அதற்குரிய தொகை தமிழக அரசுக்கும் மத்திய கிடங்கு நிறுவனத்திற்கும் ரூ. 12·10 லட்சம் வீதம் வழங்கப்பட்டு விட்டது.

இந்நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டின் கணக்குகள் தணிக்கைக்குப் பின்பு இயக்குநர் குழுவின் முன் 30—8—1983 அன்று வைக்கப்பட்டு பின்பு 26—9—1983 அன்று பங்குதாரர் கூட்டத்தில் வைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டது.

(28)

## பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| வினாக்கள்-விடைகள் .. .. .. .. | 105-125 |
| . ஒழுங்குப் பிரச்சினை— | |
| 'முரசொலி' பத்திரிகையில் வந்த செய்தி குறித்து .. .. .. .. .. | 125-127 |
| . அறிவிப்புகள்— | |
| (1) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்து .. .. .. .. .. | 128 |
| (2) சென்னைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்கள் மூவரைத் தேர்ந்தெடுப்பது குறித்து .. .. | 128-129 |
| (3) அண்ணா பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு மேலவையிலிருந்து ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பது குறித்து .. .. | 129 |
| (4) அவை நிகழ்ச்சி நிரல் குறித்து .. .. | 155 |
| 4. சட்டமன்ற மேலவைத் தலைவர் தேர்தல் .. .. | 130-150 |
| 5. அரசின் தீர்மானங்கள்— | |
| (1) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் .. .. .. | 150-151 |
| (2) அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் .. .. .. | 151-152 |
| (3) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் .. .. .. .. | 152-153 |
| (4) தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் .. .. | 154-155 |
| (5) பொருத்தவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு .. .. | 156-182 |
| 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 182-183 |

143901

D

V21,32'N,80

N84.209.1-371



## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

புதன்கிழமை, 1984 ஏப்ரல் 25.

சித்திரை 13, ரக்தாட்சி, திருவள்ளுவராண்டு—2015

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### *Power Tariff*

*145 *Q.*—Thiru S. J. SADIQ PASHA : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Planning Commission has asked the Tamil Nadu Electricity Board to revise the Power Tariff in Tamil Nadu; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) மத்திய திட்டக்குழு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலையைப் பலப்படுத்தும் வகையில் மின் கட்டணத்தை மாற்ற வேண்டியதின் அவசியத்தை திரும்பத்திரும்ப வலியுறுத்தி வந்துள்ளது.

(இ) மின் கட்டணம் அவ்வப்பொழுது மாற்றியமைக்கப்படுகிறது. கடைசியாக 16—5—83 முதல் மின் கட்டணம் திருத்தியமைக்கப்பட்டது.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** திட்டக் குழுவின் ஆலோசனையை இந்த அரசு ஏற்றுக்கொண்டதா ? அல்லது திட்டக் குழுவின் ஆலோசனைக்கு இந்த அரசு மறுப்பு ஏதாவது தெரிவித்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** திட்டக்குழு ஆண்டுத் திட்டத்தை வரையறுக்கிறபோது, நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டுமென்ற வகையில் இத்தகைய ஆலோசனைகளை வழங்குகிறது. நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டுமென்று சொல்வதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று மத்திய திட்டக் குழு சொல்வதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: இவ்வாறு அவர்கள் சொல்வதுபோல் மின் கட்டணத்தை மாநில அரசு உயர்த்தாத காரணத்தால், நம்முடைய மாநிலத்திலுள்ள மின் உற்பத்தித் திட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவா? அவர்கள் சொல்வதுபோல் உயர்த்தினால், மத்திய திட்டக் குழுவின் உதவியை மாநில அரசு பெற்று மின் திட்டங்களை பெருக்க வாய்ப்பு இருக்கும் அல்லவா? இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நிலக்கரியின் விலை உயர்த்தப்படுவதாலும், நிலக்கரியைக் கொண்டு வருகிற வகையில் ரயில்வே கட்டணம் அதிகமாகிக்கொண்டே வருவதாலும், மின் வாரியம் நஷ்டத்திற்கு ஆளாகின்றது. மின்சார உற்பத்தித் திட்டங்களை நாம் நிறைவேற்றுவதில் குறைவு ஏதாவது ஏற்பட்டால் போதுமான அளவில் ஆண்டுத் திட்டங்களை அதிகப்படுத்துவதிலும் பிரச்சினை இருக்கிறது. ஆகவேதான் அவர்கள் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள். ஆனால் மின் கட்டணத்தை உயர்த்துவது குறித்து அதைப் பயன்படுத்துபவர்களுடைய தாங்கும் சக்தியைப் பொறுத்துதான் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே நாம் மின் கட்டணத்தை உயர்த்துவதற்குப் பதிலாக நிலக்கரி மற்றும் துணைப் பொருள்களின் விலையை உயர்த்தாமலிருப்பதே நல்லது என்கிற கருத்தைச் சொல்லி வருகிறோம்.

## Government Siddha Medical College, Palayamcottai.

*146. Q.—THIRU S. J. SADIQ PASHA : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is any proposal with the Government to upgrade certain Departments in the Government Siddha Medical College, Palayamcottai: and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(இ) உடல் தத்துவம், குணபாடம், உடற்கூறுகள், நோய் நாடல் ஆகிய பிரிவுகளை மேல் நிலைப்படுத்துவதற்காக அடிப்படையான அலுவலர்கள் நியமனம் செய்து தேவைப்படுகின்ற கருவிகள், இருக்கைகள் முதலிய உபகரணங்கள் வாங்குவதற்கான திட்டம் 1984-85-ம் நிதியாண்டில் செயல்படுத்தப்பட இருக்கிறது.



திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மருத்துவக் கல்லூரியை உயர்த்துவது பற்றி இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உயர்த்தக் கருதியுள்ள மருத்துவக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள்? அவர்கள் படித்து முடித்து வெளியே வரும்போது, வேலை வாய்ப்புக்கான உத்தரவாதம் எதையாவது இந்த அரசு வைத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இது 1984-85 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவிருக்கிறது என்று சொன்னேன். இதற்காக நாம் மாணவர்களிடமிருந்து மனுக்கள் பெற்று அவர்களை 'செலக்ட்' செய்ய வேண்டியிருக்கிறது. மொத்தம் 12 துறைகள் இருக்கின்றன. 12 துறைகளில் 4 துறைகளை மட்டும் போஸ்ட் கிராஜுவேட் துறைகளாக உயர்த்தியிருக்கிறோம். இனிமேல் தான் உறுப்பினர் அவர்கள் சொன்னதுபற்றி பார்க்கவேண்டும். அதற்காக ஆசிரியர்களை நியமனம் செய்வதைப் பொறுத்தவரை, உடற்கூறுகளுக்கு பேராசிரியர் ஒருவர், ரீடர் ஒருவர், துணை விரிவுரையாளர் ஒருவர் இப்படி ஒவ்வொரு துறைக்கும் போஸ்ட் கிராஜுவேட்டுக்காக பேராசிரியர்களையும், ரீடர்களையும் நியமித்திருக்கிறோம். உறுப்பினர் சொன்னதுபற்றி இனிமேல்தான் பார்க்கவேண்டும்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாணவர்களைச் சேர்க்கும்போது பிற்பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உரிய ஒதுக்கீடு, இடங்கள் உரிய முறையில் கொடுக்கப்படுமா? அல்லது இப்பொழுது குற்றச்சாட்டுகள் சொல்வதுபோல், நேர்முகத் தேர்வு முறை தேவையில்லை என்று இந்த அரசு கருதுகிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, எந்த நேரத்திலும் அப்படித்தேவையில்லை என்று சொன்னது கிடையாது. இந்த போஸ்ட் கிராஜுவேட் துறைகளைப் பொறுத்தவரையில், இதற்கும் இதே முறையைத்தான் பின்பற்றி வருகிறோம்.

## வெளிநாட்டு தமிழ் மாணவர்கட்கு மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு

*147. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வெளிநாட்டுத் தமிழ் மாணவர்களுக்கு, மருத்துவக் கல்லூரிகளில் ஒதுக்கப்படும் இட ஒதுக்கீட்டை உயர்த்தும் கருத்தேதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

(உ) அவர்களை மாநில அரசு தேர்ந்தெடுக்கும் முறையில், மத்திய அரசு ஏதேனும் மாற்றம் செய்ய விரும்புகிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) ஆம்.

[ 1984 ஏப்ரல் 25

**திரு க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளில் வெளிநாட்டுத் தமிழ் மாணவர்களுக்கென்று இடம் ஒதுக்குவது குறித்து வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் என்ன? அவர்கள் தங்களது தாய்மொழியை தமிழ்மொழியாகக் கொண்டிருக்கவேண்டுமா? பெற்றோரில் ஒருவர் தமிழராக இருக்கவேண்டுமா? தமிழ்நாட்டில் பிறந்து வெளிநாட்டில் படித்திருக்கவேண்டுமா? இது பற்றிய விவரம் என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** Candidates of Tamil Nadu origin residing in foreign countries who by themselves and whose parents continue to be Indian citizens and hold Indian passports;

who by themselves have become foreign citizens and whose parents are also foreign citizens;

who have become foreign citizens but whose parents continue to be Indian citizens and hold Indian passports;

இதுமாதிரி மூன்று பிரிவுகளாகப் பிரித்து மூன்று முறையிலும் கூட சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த வகையில் 22 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, வெளிநாட்டுத் தமிழ் மாணவர்களைச் சேர்க்கும்போது, அந்தமான்-நிக்கோபார் பகுதி மாணவர்களுக்கென்று இடம் ஒதுக்கப்படுகிறதா? அப்படி இட ஒதுக்கீடு தந்தால், அங்கே தமிழ் மீடியத்தில் படித்த மாணவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களைச் சேர்க்க முன்னுரிமை கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, அவர்களுக்காக ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில்தான் தேர்வு செய்யப் படுகிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே பிற மாநிலங்களில் நம்முடைய தமிழ்க் குடும்பங்களில் தமிழ் மாணவர்கள் இருந்துவருகிறார்கள். அவர்களுக்கும் நம்முடைய மாநில மருத்துவக் கல்லூரிகளில் இடம் கொடுக்கப்படுகிறதா? அப்படி இதுவரை இல்லாவிட்டால் இனிமேலாவது அப்படிச் செய்யப்படுமா?

(முற்பகல் 10-10)

எஞ்சினீயரிங் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், யார் யார் மனு போட்டிருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் இடத்தை ஒதுக்கியிருந்தோம். இன்னும் சொல்லப் போனால், பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரை அத்தகைய மாணவர்களுக்கு இடத்தை ஒதுக்கிக் கொடுத்துவிட்டோம். ஆனால் மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், ஒரு பிரச்சினை ஏற்பட்டது. அதாவது மாணவர்கள் அத்தனை பேருக்கும் நாம் இடம் கொடுத்திருக்கிறோம். ஆனால் மெடிகல் கவுன்சில் ஆப் இந்தியா என்ற அமைப்பிற்கு திரு. சின்ஹா என்பவர் தலைவராக இருக்கிறார். நான் அவரிடம் வாதாடியே இத்தகைய அட்மிஷன்களைப் பொறுத்தவரை, 'ரேட்டிபை' செய்ய வேண்டும் என்று கேட்டேன். ஆனால் அவரோ 'ரேட்டிபை' செய்த பிறகுதான் மாணவர்களைச் சேர்த்திருக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். இந்த நிலைமைதான் இப்போது இருக்கிறது. நாம் கூட முதலில் 'ரேட்டிபிகேஷன்' வாங்கிவிடலாம் என்றுதான் நினைத்தோம். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "அதைப்பற்றி இப்போது பார்க்க வேண்டாம், மாணவர்களை உடனடியாகச் சேர்த்துவிட்டு பிறகு அவர்களோடு நாம் வாதாடிப் பெறலாம்'' என்று திட்டவட்டமாகத் தெரிவித்த வகையில்தான் அவர்களை நாம் சேர்த்திருக்கிறோம்.

**திரு க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, அயல் நாடுகளைச் சேர்ந்த 22 மாணவர்களை மருத்துவக் கல்லூரியில் சேர்த்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதிலும் தமிழ் மாணவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டதாகவும் சொன்னார்கள். அவ்வாறு வெளிநாடுகளிலிருந்து சேர்க்கப்பட்ட மாணவர்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து சேர்க்கப்பட்டார்கள்? அவர்களில் ஸ்ரீலங்காவிலிருந்து சேர்க்கப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** துணைத் தலைவர் அவர்களே, நான் முதலில் அளித்த விடைக்கு ஒரு சிறு திருத்தம் செய்ய விரும்புகிறேன். அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களுக்குப் பதில் சொல்லும்போது, மருத்துவக் கல்லூரியைப் பற்றியும், பொறியியல் கல்லூரியைப் பற்றியும் குறிப்பிட்டேன். அதோடு விவசாயக் கல்லூரியிலும் 7 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது நினைவுபடுத்தியதால், அதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கேட்ட வினாவைப் பொறுத்தவரை, ஸ்ரீலங்கா மாணவர்களைப் பொறுத்தவரை, ஏற்கனவே 5 இடங்களை 'ரிபேட்ரியேட்ஸ்' என்ற அடிப்படையில் ஒதுக்கியிருக்கிறோம். இப்போது இந்தப் பிரச்சினை



உருவான பிறகு, விண்ணப்பித்த அத்தனை பேர்களையும் நாம் சேர்த்திருக்கிறோம்: அயல்நாடுகள் எவை எவை என்பதைப் பொறுத்த வரையில், அதாவது சேர்க்கப்பட்ட 22 மாணவர்களைப் பொறுத்த வரையில், மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** துணைத் தலைவர் அவர்களே, பிற மாநிலங்களில் படிக்கும் மாணவர்கள் 'சென்ட்ரல் ஸ்கூல் ஆப் எஜு கேஷன்' என்ற சிலபஸ் அடிப்படையில் படிக்கிறார்கள்; அவர்களுடைய மதிப்பெண்களும் இங்கே நம்முடைய மாநிலத்தில் படிக்கிற மாணவர்களின் மதிப்பெண்களும் அதிகமான அளவுக்கு வித்தியாசப் படுகின்றன; அதன் காரணமாக 'சென்ட்ரல் ஸ்கூல் ஆப் எஜுகேஷன்' அடிப்படையில் படிக்கிற மாணவர்களுக்கு அதிக இடம் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது என்ற பொதுவான கருத்து இருந்து வருகிறது. அப்படி இருக்கும்பட்சத்தில் 'சென்ட்ரல் ஸ்கூல் ஆப் எஜுகேஷன்' மாணவர்களுக்கு என்று தனியாக ஒரு சில குறிப்பிட்ட அளவுக்கு இட ஒதுக்கீடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** துணைத் தலைவர் அவர்களே, இது சட்டப்படியாக ஸ்டாச்சுட்டரியாக இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** துணைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஸ்ரீலங்கா மாணவர்களைப் பொறுத்த வரையில், ரேட்டிபிகேஷனை இந்தியன் மெடிகல் கவுன்சில் அளிக்க முன்வரவில்லை, நம்முடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் இப்போது சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் நிலைமை என்ன? அவர்கள் நிலைமை திரிசங்கு சொர்க்கமாகிவிடுமே? இது குறித்து தமிழ்நாடு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அத்தகைய மாணவர்களின் அட்மிஷனை 'ரெகுலரைஸ்' செய்ய என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** துணைத் தலைவர் அவர்களே, அத்தகைய மாணவர்களின் நிலைமை திரிசங்கு சொர்க்கமாகி விட நிச்சயமாக இடம் கொடுக்கமாட்டோம். நாம் ஏற்கெனவே அவர்களைக் கல்லூரியில் சேர்த்துக் கொண்டிருக்கிறோம் அதுமட்டுமல்ல,

We are confident that we can persuade the Central Government to accept it and we also know how to make them accept it.

போராடிக்கூட நாம் அதைப்பெற்றுவிடத் தயாராக இருக்கிறோம். எனவே, அவர்களின் அட்மிஷனுக்கு எதிராக எதுவும் குறுக்கே வராமல் பார்த்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

## பேசின் பிரிட்ஜ் அனல் மின் உற்பத்தி நிலையம்

*148 வினா—திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு சுற்றுப் புற சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் உள்ள பேசின்பிரிட்ஜ் அனல் மின் உற்பத்தி நிலையத்தினால், காற்றின் தூய்மை பாதிக்கப்பட்டு, அந்த வட்டாரத்தில் வாழும் மக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படுவதாக அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்:** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** துணைத்தலைவர் அவர்களே, அரசுக்கு முறையீடு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருந்தாலும், இந்தக் கேள்வியையே முறையீடாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த வட்டார மக்கள் பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தின் புகை காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதால்; அந்த மாசினை நிறுத்த என்ன நடவடிக்கைகளை அரசு எடுக்கும் அல்லது மாநகராட்சி மூலமாக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, பொதுமக்களிடமிருந்து அரசுக்கு புகார் ஏதும் வரவில்லையே தவிர, இப்படி காற்றை மாசுபடுத்துகிற ஆலைகள் 31—3—1984-க்குள் வாரியத்திடம் பதிந்து கொள்ள வேண்டும் என்றும் 'அப்ளை' செய்ய வேண்டும் என்றும் போட்டிருக்கிறோம். அதற்காக முறையில் பேசின் பிரிட்ஜ் மின் நிலையம் தன்னைப் பதிந்து கொண்டிருக்கிறது. அதற்கான காலக்கெடுவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் மாசைக் கட்டுப்படுத்தும் டிரீட்மெண்ட் பிளாண்டை அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன்:** தனியார் நடத்துகிற தொழிற்சாலைகளிலிருந்து வரக் கூடிய கழிவுகள் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதிப்பதால், தனியார் தொழிற்சாலைகளைக் கட்டுப்படுத்துகிற இந்தச் சட்டம் கூட்டுறவுத் துறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்க்கரை ஆலை போன்ற ஆலைகளிலிருந்து வருகின்ற கழிவுகளால் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு பாதிப்பு ஏற்படுவதால், அவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு சொ. நீ. இராசேந்திரன்:** நிலம், நீர், காற்று ஆகியவற்றை சுத்தப்படுத்த வேண்டும் என்பதில் மைய அரசினர் அக்கறை எடுத்துக்கொண்டு இந்தக் கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தனியார் நடத்துகிற ஆலைகளுக்கு மட்டுமல்லாமல், அரசு நடத்துகிற, கூட்டுறவுத் துறையிலே நடத்துகிற எல்லா ஆலைகளுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும். இந்தச் சட்டத்திலே யாருக்கும் விதிவிலக்கு இல்லை. ஆகவே எந்த ஆலையாக இருந்தாலும், மாசு படாமல் சுற்றுப்புறம் இருக்கக்கூடிய அளவிற்கு 'டிரீட்மெண்ட் பிளாண்ட்' அமைக்க வேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம். ஆனால் மற்ற ஆலைகளுக்கு இந்த பிளாண்ட்டை அமைக்க காலக்கெடு கொடுப்பது போல இவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. குறிப்பிட்ட காலத்திற்குள் அதற்கான முயற்சியை எடுப்பதற்கு அவர்கள் தவறி விட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்தச் சட்டத்திலே வழிவகை இருக்கிறது.

**திரு. சி. இராமலிங்கம்:** பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் உற்பத்தி ஆரம்பித்து கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு மேலாகிறது. அப்போதெல்லாம் தூசு படிந்து பாதிப்பு ஏற்படாமல் இப்போது மட்டும் ஏன் ஏற்பட்டது? அதை அமைக்கும் காலங்களில் வீடுகள் இருந்தன. இப்போதும் அங்கே வீடுகளைக் கட்டிக்கொண்டு தூசு படிகிறது என்று சொல்வதன் பொருள் என்ன? இந்த நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமானால், கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே அதை அங்கேயே நிரந்தரமாக வைக்க அரசு ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்:** அந்த அனல் மின்சார நிலையத்தால் தற்போது பயன்படுத்தப்படும் நிலக்கரியில் 30 விழுக்காடு சாம்பல் உள்ளது. அதிலிருந்து மாசு ஏற்படுவதைத் தடுக்க Electrostatic Precipitator வடிப்பான்கள், தூசி தடுப்பான்கள் ஆகியவற்றை நிறுவி சரிவர பராமரிக்க வேண்டும். பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் வரும் தூசியைத் தடுக்க Electrostatic Precipitator பொருத்தப்பட்டுள்ளது. ஆனால் அங்கு பயன்படுத்தும் நிலக்கரியில் சாம்பல் அளவு அதிகமாக இருப்பதால் அதிலிருந்து வெளிவரும் தூசியை Electrostatic Precipitator மூலமாக நிரம்படத் தடுக்க முடியவில்லை. தற்போது பொருத்தப்பட்டுள்ள தூசி தடுப்பான்களை மேம்படுத்த வேண்டும் என்று இந்த அரசாங்கம் அந்தத் துறையைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இதற்கான முயற்சிகளை அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி, சரியான கேள்வி. ஆலையை நடத்துகிறவர்களும் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்று. இந்த வாரியம் அமைக்கப்பட்ட பின்னர், ஏற்கெனவே இருந்து வருகிற காற்றை மாசுபடுத்தும் தொழிற்சாலைகள், ஆலைகள் போன்றவைகள் இந்த

வாரியத்தில் பதிந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்திருக்கிறோம். அதற்கு ஆறு மாதம் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. புதிதாக தமிழகத்திலே உருவாக இருக்கிற ஆலைகள் இனிமேல் அனுமதி பெற்றுத்தான் ஆரம்பிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அனல் மின் நிலையம் ஏற்கெனவே இந்த முறையைக் கையாண்டு கொண்டிருக்கிறது. மேலும் நல்ல முறையிலே தடுப்பான்களை வைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் விடப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஜே. தாஸ்: அந்தப் பகுதியிலிருந்து புகார்கள் வரவில்லை யென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பகுதியில் வாழ்கிற பெரும்பாலான மக்கள் ஏழைகள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று எண்ணுகிறேன். ஆகவே ஏழை மக்கள் வாழ்கிற பகுதியிலே ஏற்படுகிற இந்த நிலைமையை கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏழை மக்கள் வாழ்கிற பகுதியில் தூசி படிந்து சுகாதாரக் குறைவு இருப்பதால், அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, அனைத்து மக்களையும், மனித சமுதாயத்தையும் பாதுகாக்கவேண்டும், புராதனப் பொருள்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே எந்தத் தொகுதியிலே எந்த ஆலைகள் காற்றை மாசுபடுத்துகின்றனவோ அந்த ஆலைகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அதை மாற்றுவதற்கான முயற்சியும் அறிவுறுத்தப்படுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வி. ஜெயலட்சுமி: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியிலுள்ள ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் உள்ள தூசி அங்குள்ள மக்களுக்கு மிகவும் சுகாதாரக் கேடு விளைவிப்பதோடு அங்குள்ள விவசாய நிலங்களைப் பாழ்படுத்துகின்றது. வேளாண்மையையும் பாழ்படுத்துகிறது; மேனேஜிங் டைரக்டரிடம் எடுத்துக் கூறிய பிறகு, அங்குள்ள விவசாயிகள் ரோஸ்டேட்டிங் பிரிசிபிடேட்டர் பொருத்தியிருக்கிறார்கள். ஆனால் இப்போது வெளியேறுகின்ற தூசியை சரியான முறையில் கட்டுப்படுத்த முடியாத வகையில் இன்னும் அந்தக் காற்று அசுத்தமாகத் தான் இருக்கிறதென்று பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அது விஷயமாக உடனே இந்த அரசு கவனித்து இன்னும் பலமான தூசி தடுப்பான்களை அங்கு நிறுவுவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, கேள்வி பேசின் பிரிட்ஜைப் பற்றியதாக இருந்தாலும் கூட, அங்கே சிமெண்ட் ஆலையைப் பற்றிக் கேட்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கின்ற அதிகபட்சமான சிமெண்ட் ஆலைகள் இன்னமும் இந்த முயற்சியை எடுக்கவில்லை. சிமெண்ட் ஆலைகளின் சுற்றுப்புறத்தில் இருக்கின்ற மக்களும் சரி, பயிர்களும் சரி, நாசமாவதற்கான முயற்சி நடந்து கொண்டிருக்கின்றது. சிமெண்டைத்தான் சுவாசிக்கிறார்கள்; சாப்பிடுகிறார்கள். இந்த அளவிற்கு அதிகமாக மாசுபடக் கூடிய ஆலைகள் இருப்பதை வாரியம் அறிந்து அதை மாற்றி அமைப்பதற்கான முயற்சி எடுக்கவேண்டுமென்று அந்த சிமெண்ட் ஆலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. உடனடியாகச் செய்ய முடியாது. அவைகளுக்குக் காலக்கெடு கொடுத்து, அதற்குள் அவைகள் அங்கு தடுப்பான்களை வைக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. காலக் கெடுவுக்குள் அவர்கள் செய்யாவிட்டால், அந்த ஆலைகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அங்கு தடுப்பான்களை வைக்க முயற்சி எடுப்பதற்கு இந்த வாரியம் முயற்சி எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: துணைத் தலைவர் அவர்களே, சுற்றுப்புறச் சூழ்நிலை பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தால் பாதிக்கப்படுகிறது என்று சில நாட்களுக்கு முன்னாலே ஒரு அமைச்சர் சொன்னதாகப் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இந்த பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் அங்கிருந்து அகற்றப்படும் என்று செய்தி வந்திருக்கின்றது. இப்போது சில நாட்களுக்கு முன்னாலே அந்த மின் நிலையம் அகற்றப்படமாட்டாது என்று செய்தி வந்திருக்கிறது. இதில் எது உறுதியானது என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். அப்படி அகற்ற வேண்டுமென்ற ஒரு கருத்து அரசாங்கத்தில் இருந்ததா என்பதையும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இது நல்ல கேள்வி. இந்த வாரியம் உருவாக்கப்பட்டதே தொழிற்சாலைகளை அடைப்பதற்காக அல்ல, எந்தத் தொழிலாளர்களும் பாதிக்கப்படுவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டமோ, வாரியமோ அல்ல. நிலம், நீர், காற்று முதலியவைகளை அசுத்தப்படுத்தும் தொழிற்சாலைகள் எதுவாக இருந்தாலும் முறையான தடுப்பான்கள் அல்லது மாசு தடுப்பான்கள் வைப்பது என்கிற முறையில் அவைகளுக்கு அறிவுறுத்தப்பட்டு காலக்கெடு கொடுக்கப்படும். அதற்குள் அவர்கள் செய்து முடிக்காவிட்டால், மத்திய அரசு கொண்டுவந்திருக்கிற இந்தக் கடுமையான சட்டம் பயன்படுத்தப்படும். இதற்கு யார் பொறுப்புதாரர்களோ, அந்த ஆலையை நிறுவியவர்கள், தொழில் அதிபர்கள், மேனேஜிங் டைரக்டர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று சட்டத்திலே இடம் கொடுக்கப்

பட்டிருக்கிறதென்று, அந்த ஆலையை மூடுவதற்கு இந்தச் சட்டத்திலே இடமில்லை, வாரியமும் அதற்கான முயற்சியை எடுக்கவில்லை. ஆகவே அந்த மின்னாள் தீர்மானத்தின் போது கொத்தவலையில் அதற்கான நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களும் இதற்கான முடிவு எடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கடுமையான சட்டத்திற்குப் பயந்து ஆலைகளை மூடினால், வாரியம் பொறுப்புதாரி அல்ல.

**திரு. எல். ஜெயசந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூரில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீர் பாலாற்றில் கலந்து குடிநீர் பாதிக்கப்படுகிறது. இது குறித்து ஏற்கெனவே பல புகார்கள் அரசுக்கு வந்து பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன. இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, மன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வி பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தைப் பற்றியது. இப்போது டானரிகளைப் பற்றிக் கேட்கிறார்கள். இவையன்றி ஆம்பூர், வாணியம்பாடி, இராணிப்பேட்டை, திண்டுக்கல் முதலிய இடங்களில் நிறைய இருப்பதால் தனியாகக் கேள்வி கேட்டால், விவரமான பதில் கொடுக்கப்படும்.

## சத்துணவு மையங்களில் இரவு நேரக் காவலர்களை நியமித்தல்

*149 கேள்வி— **திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு சத்துணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) சத்துணவு மையங்களில் திருட்டுகள் நடைபெறுவதைத் தடுக்கும் பொருட்டு, பகுதி நேர, இரவு நேரக் காவலர்களை நியமிக்கும் கருத்தேதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன்:** (அ) மற்றும் (ஆ) சத்துணவு மையங்களில் திருட்டுகள் நடைபெறுவதைத் தடுக்கும் பொருட்டு இரவு நேரக் காவலர்களை நியமிக்கும் கருத்தொன்று ஆராயப்பட்டு வருகிறது.

**திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஆம்பூர் பகுதியில் கடந்த காலங்களிலே, இதுவரை எவ்வளவு திருட்டு நடைபெற்றிருக்கிறது? எங்கெல்லாம் திருட்டு நடைபெற்றிருக்கிறது? எத்தனை காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன்:** துணைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு திருட்டுகள் நடைபெற்றிருக்கின்றன என்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. குறிப்பாக பாலர் மையங்களில் இராயபுரங்களிலே இருக்கிற மையங்களில் திருட்டுகள் நடைபெறுகின்றன. அவைகளைப் பாதுகாப்பதற்காக இரவு நேரக் காவலர்களைப் பகுதி நேர ஊழியர்களாக நியமிக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அப்படிப் பாலர் பள்ளிகளாக இருக்கின்றவைகள் 27,840 பள்ளிகள் ஆகும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, பாலர் பள்ளிகளைத் தவிர....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'துணைத் தலைவர் அவர்களே' என்று சொல்லலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மன்னிக்கவும் மாண்புமிகு துணைத் தலைவரவர்களே....

**டாக்டர் ம.பொ. சிவஞானம்:** அந்த ஆசனத்தில் அமர்ந்திருக்கும்போது 'தலைவரவர்களே' என்று சொல்வதிலே சட்டரீதியாக தவறு எதுவும் இல்லை என்பது என்னுடைய அபிப்ராயம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த பாலர் பள்ளிகளைத் தவிர, தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் சத்துணவு மையங்கள் இருந்து வருகின்றன. பொதுவாக, தொடக்கப்பள்ளிகளில் சத்துணவுப் பொருள்களைப் பாதுகாப்பதற்குரிய தனி அறை கிடையாது. அப்படி இல்லாதது பாதுகாப்பற்ற நிலையை உருவாக்குகிறது. எல்லா மையங்களிலும் தனியாகக் கட்டிடங்கள், சத்துணவு வழங்குவதற்கு என்று கிடையாது. பாதுகாப்பற்ற அளவில் அந்தக் கட்டட அமைப்பு இருக்கிறது. அதற்குரிய வாய்ப்பு அதற்கு வேண்டிய மற்ற வசதிகள் இல்லாத காரணத்தினாலேயே, பொருள்கள் திருடுபோவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே இரவு நேரக் காவலர்களை நியமிப்பதோடுகூட பாதுகாப்பான அறைகளை ஏற்படுத்துவதற்கு எல்லா இடங்களிலும் உள்ள சத்துணவு மையங்களில் ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு இரா. சௌந்திரராஜன்:** துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 61,675 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒரே நேரத்தில் எல்லா சத்துணவு மையங்களுக்கும் கட்டடம் கட்டுவது என்பது அரசால் செய்ய முடியாததாகும். படிப்படியாக கட்டிடங்கள் கட்டிக்கொண்டு வருகிறோம். பொருள்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற முறையிலே கட்டுகிறோம். அந்த முறையில் மிக விரைவில் எல்லா இடங்களிலும் இத்தகைய அறைகள் கட்டுவதற்கு வழிவகை செய்யலாம்.

**திரு. அ. ப. சிவராமன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருட்டுக்களைத் தடுக்கும் அளவில், இன்று மையங்களுக்காக கட்டுகின்ற கட்டிடங்களின் அமைப்புகளில் மாற்றம் ஏதாவது இருக்கின்றதா? இதற்கு சுற்று மதில் சுவர் கட்டப்படுமா என்பதைப் பற்றியும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன்:** துணைத் தலைவர் அவர்களே, முதலில் ஒரு மாதிரியான கட்டிடங்களைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். அதிலே திருட்டுக்கள் நடப்பதற்கு வாய்ப்புக்கள் இருப்பது கண்டு தற்போது அந்தக் கட்டிடங்கள் கட்டுவதிலே சில மாற்றங்கள் செய்யப்பட்டு ஓரளவுக்கு பாதுகாப்பான முறையிலே கட்டப்படுகின்றன. மேலும் அதற்கான கதவுகள்கூட ஸ்டீல் இரும்பு கதவுகளைப் பொருத்த வேண்டும் என்று சொல்லி, தற்போது அதற்கேற்ப கட்டிடங்கள் கட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டு வருகின்றது. சுற்றிலும் காம்பவுண்ட், சுற்றுச்சுவர் கட்டுவதுபற்றி கேட்டிருக்கின்றார்கள். எல்லா இடங்களிலும் உள்ள சத்துணவு மையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கில்லை. சில இடங்களில் கட்டப்படுகிறது. சில இடங்களில் கட்டப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** துணைத் தலைவர் அவர்களே, அந்த சத்துணவுக் கூடங்களில் வேலை பார்ப்பவர்களே திருடிக்கொண்டு போவதாக பல புகார்கள் வந்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்து, அதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன்:** துணைத் தலைவர் அவர்களே, திருட்டுப் போயிருக்கிறது என்பதைப் பற்றி புகார்கள் வந்திருக்கின்றன, ஆனால் அங்கே பணி செய்கின்றவர்கள் திருடிக்கொண்டுப் போகின்றார்கள் என்ற அளவுக்கு இதுவரையிலே புகார்கள் இல்லை. அந்தப் புகார்கள் மீது காவல் துறையினர் உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகின்றார்கள்.

*Housing Board Rental Quarters*

*150 Q.—THIRU A. J. DOSS (on behalf of Thiru P. Munuswamy): Will the Hon. the Minister for the Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that a number of Government Servants who have been allotted Housing Board Quarters on rental basis in Coimbatore Town continue to occupy the same for years together even after their transfer to some other places; and

(*b*) If so, the reasons therefor?





**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா:** (அ) ஆம்

(இ) அரசு அலுவலர்களை ஆண்டின் மத்தியில் மாற்றும்போது அவர்களின் குழந்தைகளுடைய கல்வி இடையில் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அடுத்த கல்வி ஆண்டுவரை அவர்களின் குடியிருப்புகளை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருக்கின்றனர். கல்வி ஆண்டுக்குப் பிறகும் குடியிருப்பவர்களை உடனடியாக காலி செய்ய முறைப்படி நோட்டீஸ் கொடுத்து ஒதுக்கீட்டினை வீட்டு வசதி வாரியம் இரத்து செய்து வருகிறது. இது தவிர மாற்றம் செய்யப்பட்ட ஊர்களில் உடனடியாக குடியிருப்பு கிடைக்காதவர் வாரிய அனுமதி பெற்று அதிக வாடகை கொடுத்துகொண்டு குடியிருந்து வருகின்றனர்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குடியிருப்புகளில் இருப்பவர்கள் அவர்கள் மாற்றப்பட்டிருந்தாலும் மூன்று நான்கு ஆண்டுகளாக, தொடர்ந்து இருந்து கொண்டு வருவதனால், அந்த இடங்களுக்கு மாற்றப்பட்டவர்களுக்கு இடம் கிடைக்காத கஷ்டம் இருக்கின்றது. அதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா:** துணைத் தலைவர் அவர்களே கோயம்பத்தூரைப் பொறுத்தவரையிலே, இந்த நிலை அதிகமான அளவுக்கு இருக்கின்றது. ஏறக்குறைய 24 பேர்கள் சில ஆண்டுகளாக ஒரே இடத்திலே வசித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களும் காலி செய்ய வேண்டும் என்று அவர்களுக்கெல்லாம் அறிவிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் காலி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(முற்பகல் 10-30)

**டாக்டர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, இந்த 150 ஆவது எண்ணுள்ள கேள்வியில் 'வீட்டு வசதி வாரியம்' என்பதற்குப் பதிலாக அச்சுப் பிழை செய்யப்பட்டதில், 'வீட்டுவ சதி வாரியம்' என்று இருக்கிறது. இதுபோன்ற குறை வராமல் பார்த்துக்கொள்வார்களா? (சிரிப்பு)

**சலவைத் தொழிலாளர்களுக்கும் நாவிதர்களுக்கும் வீடுகள் ஒதுக்கிக் கொடுத்தல்.**

* 151 வினா—திரு. சி. ஆர். கோலப்பா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சலவைத் தொழிலாளர்களுக்கும், நாவிதர்களுக்கும் ஐந்து விழுக்காடு வீடுகள் ஒதுக்கப்படுவது போன்று, தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் ஐந்து விழுக்காடு வீடுகள் ஒதுக்கித்தரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) இல்லை எனில், இனியாவது அரசு இதனைப் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) துணைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதி மாற்று வாரியம் கட்டும் குடியிருப்புகள் அனைத்தும் அகற்றப்பட்ட குடிசைப்பகுதியில் வசித்து வந்தவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. அகற்றப்பட்ட குடிசைப்பகுதிகளில் வசித்துவந்த அனைவருக்கும் சாதி, மதம், இனம், மொழி பேதமின்றி குடியிருப்புகள் வழங்கப்படும். பல குடிசைப் பகுதிகளில் ஆதி திராவிடர், சலவைத் தொழிலாளர்கள் பெரும்பான்மையினர் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் வீடுகள் வழங்கப்படுகின்றன. எனவே அப்பகுதிகளில் வழங்கப்பட்ட குடியிருப்புகள் 5 விழுக்காடுக்கும் மேலாக இருக்கும்.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ஆர். கோலப்பா: துணைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 5 விழுக்காடு சலவைத் தொழிலாளர்களுக்கும், நாவிதர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் அவைகளுக்கு அவர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து, அதை எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருப்பதால், பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இந்த இரு சமுதாய மக்கள் அந்த வீடுகளைப் பயன்படுத்திக்கொள்ளமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டப்படும் அந்தக் குடியிருப்புகளில் இந்த இரண்டு சமுதாய மக்களுக்கும் பத்து விழுக்காடு கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: துணைத் தலைவர் அவர்களே, இது குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினுடைய வீடுகள் ஒதுக்குவது சம்பந்தமான கேள்வி. குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்த வரையில் யார் யார் குடிசைகளில் குடியிருக்கிறார்களோ அவர்களைக்





கணக்கெடுத்து அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதில் விழுக்காடு என்ற அளவிற்குப் பார்த்தால், அதிகமான அளவிற்கு யார் குடிசையில் இருக்கிறார்களோ, அவர்களில் ஆதிதிராவிடர்களாக இருந்தாலும், மற்ற வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தரப்படுகிற வீடுகளுக்குப் பணம் அதிகமாக இருக்கிறதென்றும், அதற்கு அவர்கள் பணம் கட்டுவதில் சிரமங்கள் இருக்கின்றன என்றும், அதற்காக வேறு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர் கோரினால் அந்த நடவடிக்கை எடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆர். கோலப்பா: ஆதிதிராவிட மக்களுக்கும், மீனவ சமுதாய மக்களுக்கும் இப்போது ஹட்கோ குடியிருப்பு வீடுகள் அமைத்துக்கொண்டு வருகிறது. அதன் மூலமாக இந்த இரு சமுதாய மக்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா: ஆதிதிராவிடர்களுக்கும் மீனவ சமுதாயத்திற்கும் உள்ளது தனித் திட்டம். அந்தத் திட்டத்திலே கொண்டு போய் இவர்களைச் சேர்க்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் வேண்டுமானால் இவர்களுக்குத் தனியாகத் திட்டம் போட முடியும் என்று கேட்டால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இந்த இரண்டு பிரிவினர்களைத் தவிர ஏனைய பிரிவினருக்கும் இதிலே எத்தனை விழுக்காடு ஒதுக்கப்பட்டிருக்கிறதென்ற விவரம் அரசிடம் இருக்கிறதா? சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு இந்த வீட்டுவசதி வாரியத்திலே ஏதேனும் இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவா? இப்போது ஒதுக்கப்படாவிட்டாலும், குடியிருப்பதற்கு இடமில்லாமல் பலர் தவிக்கிற காரணத்தினாலே, அறையிலேயே இருக்கவேண்டிய நிலை இருக்கிற காரணத்தினாலே வருங்காலத்திலாவது அவர்களுக்கு ஒரு சில வீடுகளை ஒதுக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் திரு க. மீனாட்சிசுந்தரம் ஒரு நல்ல ஆசிரியர். கேள்வி, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகளை ஒதுக்குவதற்காக எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகளைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் வீட்டுவசதி வாரிய வீடுகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்ற ஒரு பொதுக் கோரிக்கையை இங்கே எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது வீட்டுவசதி வாரியத்திலே இருக்கிற இடங்களுக்கு யார் யார் விண்ணப்பம் கொடுக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் வாய்ப்புக்கள் வருகிற நேரத்திலே தரப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனாலும், சட்டமன்றம் நடைபெறுகிற சென்னை மாநகரத்திலே வேண்டுமென்று தனியாகக் கேட்பார்களானால் அது குறித்து அதிகாரிகளிடத்திலே பேசி அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நான் அவர்களுக்குத் துணையாக இருப்பேன்.

திரு. ஏ. மயில்சாமி: [illegible] வாரிய [illegible] சேர்க்கப்படுகிற காரணத்தால், ஆசிரியர்களுக்கு [illegible] ஆகவே ஆசிரியர்களுக்கு என்று தனி [illegible] அடிப்படையிலே [illegible] ஒதுக்க அரசிடம் திட்டமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: இன்றைக்கு [illegible] மாநில அரசு ஊழியர்கள், மத்திய அரசு ஊழியர்கள் என்றும் தனித்தனியாக [illegible] வருகிறோம். ஆசிரியர்கள், அரசு ஊழியர்களாக ஆகவேண்டுமென்று நீண்ட நாள் கோரிக்கை விடுத்து [illegible] சம்பளம் பெறும் நிலைக்கு வந்திருக்கிறார்கள். அதிலே சேர்ந்து கொண்டால் நல்லதாக இருக்குமென்று நினைக்கிறேன்.

திரு. கி. ரா. [illegible]: துணைத் தலைவரவர்களே, ஆசிரியர்களுக்காக தனி வீட்டு வசதி வாரியம் அமைப்பது குறித்து [illegible] என்று மாண்புமிகு முதல்வரவர்களே பொது விழாவிலே குறிப்பிட்டார்கள். ஆசிரியர்களுக்குத் தனி வீட்டு வசதி வாரியம் [illegible] எந்த நிலையில் இருந்தாலும்கூட, இப்போது இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசு ஊழியர்களில் 3 லட்சம் பேர்களாக ஆசிரியர்கள் இருப்பதால், அவர்களுக்கென்று குறிப்பிட்ட சதவிகிதத்தை [illegible] செய்தால்தான், அவர்கள் நியாயம் பெற முடியுமென்ற அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு மயில்சாமி அவர்கள் கேட்டார்கள். ஆகவே ஆசிரியர்களுக்கென்று தனி [illegible] குறித்து இப்போது முடிவெடுக்கவில்லை என்றாலும், [illegible] பரிசீலனை செய்து, நல்ல முடிவை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: ஆசிரியர்களைத் தனியாக ஒதுக்கக்கூடாதென்று கருதுகிறோம். அனைவரோடும் சேர்ந்திருக்க வேண்டும், எல்லோருடனும் சேர்ந்திருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இரண்டாண்டுக்கு முன்னதாக விழாவிலே ஆசிரியர்களுக்கென்று தனியாக வீட்டு வசதி வாரியம் அமைக்கப்படுமென்று கூறினார்கள். அதற்குப் [illegible] இந்த அரசின் சாதனை மலரை வெளியிட்டபோது, [illegible] தனியாக வீட்டு வசதி வாரியம் அமைக்கப்படுகிறது என்று [illegible] பட்டிருந்தது. அதுபற்றி இந்த அவையில்கூட [illegible] இப்போது தொடர்புடைய அமைச்சரவர்கள், [illegible] ஒதுக்கக்கூடாதென்று சொல்கிறார்கள். [illegible] அமைச்சரவர்களுடைய கருத்தும் ஒன்றாக [illegible] முதல்வர் கருத்து சரியா அல்லது [illegible]

(முற்பகல் 10-40)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு அமைச்சர் இங்கே ஒரு நல்ல செய்தியைச் சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் கூறிய அந்த அறிவிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாக இங்கே சொன்னார். அதுகுறித்து இதற்கு முன்பும் இந்த மேலவையில் பள்ளிக் கல்வியை இயக்குநர் அனுப்பிய கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் இருப்பதாகவும், உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவியைப் பெற்று ஆசிரியர்களுக்காக தனி வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை பரிசீலித்திருப்பதாகவும் சொல்லப்பட்டது. அதுபற்றி மேலும் விவரத்தை மாண்புமிகு அமைச்சர் இங்கே தெரிவித்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா:** இப்பொழுதே சில இடங்களில் ஆசிரியர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து ஆசிரியர்களுக்காக தனியாக வீடுகள் கட்டுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். எந்தெந்தப் பகுதியில ஆசிரியர் பிரதிநிதிகளுக்கு இதை அமைக்கவேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறதோ அங்கெல்லாம் வீடு கட்டுவதற்காக தனியாக ஆசிரியர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, அதற்கு ஆதரவாக அவர்கள் இருந்து அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.

**திரு. சி. இராமலிங்கம்:** யார் வீடு கேட்டாலும் தனக்கு சொந்த இல்லையென்று எழுதிக் கொடுக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நமது இந்து சம்பிரதாயப்படியும், மத சம்பிரதாயப் படியும் பார்க்கும்போது, தாத்தா சொத்து குடும்பச் சொத்து. அதை "அவிபக்த குடும்பச் சொத்து" என்று சொல்லுவார்கள். அப்படி லட்சக் கணக்கான வருமானம் வரக்கூடிய பல வீடுகளை வைத்திருப்பவர்கள் எல்லாம் இதிலே இருக்கிறார்கள். அப்படி அவிபக்த குடும்பச் சொத்துக்கள் இருக்கின்றவர்களுக்கு எல்லாம் ஏன் வீடு கொடுக்க வேண்டும் என்பது தான் என்னுடைய கேள்வி. இதைப் பரிசீலனை செய்து இனிமேலாவது வீடு வழங்கும் போது, முறையாக சொத்து இல்லாதவர்களுக்கு மட்டும் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா:** அவர்கள் பாகம் பிரிக்கிறார்களா ஒன்றாக இருக்கிறார்களா என்பதைப்பற்றியெல்லாம் வீட்டு வசதி வாரியம் கேட்பதில்லை. விண்ணப்பிக்கிறவர்களுக்கு வீடு இருக்கிறதா என்று கேட்டால், இல்லையென்று எழுதுகிறார்கள். அவர்களுடைய குடும்பம் எப்படி இருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் நம் ஆராய்வ தில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அறிந்து யார் யார் சேர்ந்து சொத்தை ப[illegible] வைத்திருக்கிறார்கள், யார் யாருக்கு ஏற்கனவே வீடு இருக்கிறது போன்ற விவரங்களைத் தந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.



**திரு. சி. இராமலிங்கம்:** அப்படிப்பட்ட விதிமுறைகளை அதிலே சேர்க்கலாம் அல்லவா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சினை.

### 'முரசொலி' பத்திரிகையில் வந்த செய்தி குறித்து.

*திரு. ஆர். டி. சீத்தாபதி.—துணைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்ப விரும்புகிறேன். நேற்றைய தினம் இடம் ஒதுக்கீடு பிரச்சினையில் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. சாதிக் பாட்சா "யாருக்கு எந்த இடம் ஒதுக்குவது" என்ற பிரச்சினையைக் எழுப்பினார். அதிலே நானும் என்னுடைய கருத்தைத் தெரிவித்திருக் கிறேன். இன்றைய தினம் 'முரசொலி' பத்திரிகையில் அந்தச் செய்தி வந்திருக்கிறது. அதை நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். "கேள்வி நேரம் முடிந்த பிறகு, இரோ அவர் இப்போது இல்லை, எப்போதும் இல்லை, இப்பொழுது அது முன் மாதிரியாக அமைந்துவிட்டால் எதிர்காலத்தில் அப்படி அமையும். அதற்கான வாய்ப்புகளை தாங்கள் தருவீர்களா" என்று அப்போது நான் கேட்டேன். அதற்கு "ஒழுங்குப் பிரச்சினையாக அவர் கேட்டார். அதில் தவறு இல்லை" என்று நீங்கள் ரூலிங் கொடுத்ததாக பத்திரிகையில் வந்திருக்கிறது. முரசொலியைப் பொறுத்தவரையில், நான் நன்றாக அறிவேன். காரணம் அண்ணன் கலைஞர் அவர்கள் பிறந்த நாளைக்கூட அது இறந்த நாள் என்று அறிவிக்கும், அப்படித்தான் இந்தச் செய்தியும் வந்திருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இப்பொழுது நான் என்ன பண்ண வேண்டும் என்பதைச் சொல்லலாம். ஒழுங்குப் பிரச்சினை என்ன?

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** நான் ஒழுங்குப் பிரச்சினை குறித்து கேட்டுக்கொள்வது என்னவென்றால் நீங்கள் அப்படி ஒரு ரூலிங் கொடுக்கவில்லை. "அவர் ஒழுங்குப் பிரச்சினை தான் கேட்டார். அதில் தவறு இல்லை" என்று நீங்கள் தெரிவிக்கவில்லை. இன்று அப்படி ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆகவே நீங்கள் அதுகுறித்து ஒரு தீர்ப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1984 ஏப்ரல் 25

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இது ஒழுங்குப் பிரச்சினை ஆகாது. ஒரு பிரச்சினை குறித்து ஒரு உறுப்பினர் பேசியிருக்கிறார். மாண்புமிகு துணைத் தலைவர் அல்லது தலைவர் அது குறித்து ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். இந்தக் கருத்துக்கள் பத்திரிகையில் சொல்லப்படுகின்றன. சொல்லப்படும் கருத்துக்கள் சரிதானா, சரியில்லையா என்பது ஒழுங்குப் பிரச்சினைக்குள்ளே வராது. அது உரிமைப் பிரச்சினைக்குள்ளே வரும். ஆகவே உறுப்பினர் "நான் ஒன்று சொன்னேன், பத்திரிகையில் ஒன்று போட்டிருக்கிறார்கள்", அல்லது "நீங்கள் ஒன்று சொன்னீர்கள், பத்திரிகையில் வேறு ஒன்று போட்டிருக்கிறார்கள்" என்று சொன்னால், அதை உரிமைப் பிரச்சினையாக எழுப்பினால், அதைப்பற்றி நான் ஆராய்ந்து ஒரு முடிவு கட்ட முடியும். அதை ஒழுங்குப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, ஒரு தீர்ப்பு வழங்க இயலாது. ஆனால் ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர்களோ, மற்றவர்களோ இந்த அவையிலே பேசுகிற கருத்துக்களை மாறுபாடு இல்லாத வகையில் பத்திரிகைகள் பிரசுரிக்க வேண்டு மென்ற ஒரு கருத்தை மட்டும் முரசொலிக்கோ அல்லது மற்ற பத்திரிகைகளுக்கோ அல்ல, எல்லா பத்திரிகைகளுக்கும் பொதுவாக நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேனே தவிர இந்தப் பிரச்சினையை ஒரு ஒழுங்குப் பிரச்சினையாகக் கருத இயலவில்லை என்ற கருத்தை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சித்தாபதி என்னுடைய பெயரைச் சொல்லிய தால் நான் சில கருத்துக்களைச் சொல்கிறேன். நான் பேசும்போது காங்கிரஸ் கட்சியின் சார்பில் தலைவர் இங்கே இல்லையே என்று கேட்டு, அதற்கு ஒரு காலவரையறை என்ன என்றுதான் நான் கேட்டேன். எத்தனை ஆண்டுக்காலம் பொறுத்திருக்கவேண்டுமென்று நான் கேட்கவில்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கருத்திலிருந்து, அதாவது நேற்று சொன்ன கருத்திலிருந்து ஏதாவது மாறுபாடு உண்டா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நேற்று நாவலர் சொல்லும்போது விளக்கங்கள் கேட்கலாம் என்றுதான் சொன்னார்கள். விளக்கங்கள் கேட்க உரிமையுண்டு என்ற அடிப்படையில் சொன்னார்கள். அதற்கு மாறுபாடாக ஏதாவது வந்திருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நேற்று எழுப்பிய பிரச்சினை ஒழுங்குப் பிரச்சினை என்ற அளவில் தான் நான் எடுத்துக் கொண்டு பதில் சொன்னேன். அவரும் அதைத்தான் சொன்னார்.

**திரு. ஆர். டி. சித்தாபதி:** நான் கேட்க விரும்புவது, நேற்று நான் கேட்ட கேள்விக்கு என்ன பதிலை தாங்கள் அளித்தீர்களோ அது வரவேண்டுமென்பதுதான். அது வரவேண்டுமென்றுதான் நான் எதிர் பார்த்தேன்.



1984 ஏப்ரல் 25 ]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பேச்சைப் பொறுத்த வரையில், என்ன பேசியிருக்கிறார்கள், பத்திரிகையில் என்ன வந்திருக்கிறது என்று நான் ஆராய்ந்து பார்த்துத்தான் முடிவு சொல்லமுடியும். அது சரியாக இருக்கிறதா, சரியாக இல்லையா என்று தீர்மானமாகச் சொல்ல வேண்டுமென்றால், இங்கே எடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளை எடுத்து வைத்துக்கொண்டு, பத்திரிகையில் வருகிற செய்திகளையும் வைத்துக்கொண்டு, பத்திரிகையில் மாறுபாடாக எழுதியிருக்கிறார்களா என்பதை நான் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால்தான், எந்த முடிவையும் சொல்ல இயலும். ஆகவே ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்பி அதற்கு உடனே பதில் சொல்வது என்பது இயலாத காரியம். பத்திரிகையில் தவறாகப் போட்டிருக்கிறார்கள், தவறாக எழுதியிருக்கிறார்கள் என்று உறுப்பினர் கருதினால், அதை எழுத்து மூலமாக உரிமைப் பிரச்சினையாகக் கொடுத்தால், தனியாக தீவிரமாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரலாம். ஒரு கருத்தை மட்டும் பொதுவாகச் சொல்கிறேன். எந்தப் பத்திரிகையாக இருந்தாலும், இங்கே நடக்கிற நிகழ்ச்சிகளை, நடவடிக்கைக் குறிப்புகளை கருத்துமாறுபாடு இல்லாமல், தவறான முறையில் இல்லாமல் அல்லது திரித்துக்கூறாமல் சரியான முறையில் பிரசுரிக்க வேண்டுமென்று எல்லாப் பத்திரிகைகளையும் நான் கேட்டுக்கொள்வேன். ஆகவே ஒழுங்குப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு அதற்காக ஒரு விவாதம் எழுப்பவோ முடிவோ சொல்ல முடியாது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறபோது, தன்னுடைய கற்பனா சக்தியை விரித்து, கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளை இறந்த நாளாக 'முரசொலி' வெளியிடும் என்று தன்னுடைய அபிலாஷைகளைத் தெரிவித்துக் கொள்ளக்கூடிய முறையில் பேசுவது முறையா? அப்படிப் பேசுவதால், வேறு பத்திரிகை களில் இது இறந்த நாளா, பிறந்த நாளா என்று செய்திகள் வெளிவரக் கூடுமே? ஆகவே அப்படிப்பட்ட வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அன்பார்லிமெண்டரி வார்த்தை என்று நான் அதைக் கருதவில்லை. பத்திரிகையில் அதுமாதிரி போட்டிருக்கிறார்கள் என்று அவர் சொல்கிறார். பத்திரிகையில் பிறந்த நாளை இறந்த நாளாகப் போடுகிறார்கள் என்பதாக அவர் தான் சொல்கிறார். அவர் சொல்வது உண்மையா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. அது அன்பார்லிமெண்டரி வார்த்தை, அது அவைக் குறிப்பில் இருக்கக்கூடாது என்று டாக்டர் கலைஞர் அவர்கள் கருத்துச் சொன்னால், நான் அது பற்றி முடிவு செய்யலாம். (இருக்கட்டும் என்று டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் சொன்னார்கள்). இருக்கலாம் என்று அவர்களே சொல்வதால், அது இருக்கட்டும்.

## 3. அறிவிப்புகள்.

### (1) அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேரவைக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு (Senate) தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுள் இருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இத்தேர்தல் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவப்படி, ஒற்றை மாற்று வாக்கு மூலம் நடைபெறும். இத்தேர்தலுக்குக் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது:—

| | |
|---|---|
| நியமனத்தாள்கள் வந்துசேர கடைசி நாளும், நேரமும். | 26—4—1984 நண்பகல் 12·00 மணி. |
| நியமனத்தாள்கள் ஆய்வு செய்யப் படும் நாளும், நேரமும். | 26—4—1984 பிற்பகல் 1·00 மணி. |
| நியமனத்தாள்கள் திரும்பப் பெற கடைசி நாளும், நேரமும். | 27—4—1984 நண்பகல் 12·00 மணி. |
| வேட்பாளர் பட்டியலை வெளியிடு வதற்கான கடைசி நாளும், நேரமும். | 27—4—1984 பிற்பகல் 1·00 மணி. |

தேர்தல் இருப்பின், அதற்கான நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

நியமனத்தாள்களும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் அகர வரிசைப் பட்டியலும், மேலவைச் செயலாளரிடமிருந்து, அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(முற்பகல் 10.50)

### (2) சென்னைப் பல்கலைக்கழகப் பேரவைக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்கள் மூவரைத் தேர்ந்தெடுப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சென்னைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு (செனட்) தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுள் மூவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இத்தேர்தல் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவப்படி, ஒற்றை மாற்று வாக்கு மூலம் நடைபெறும். இத்தேர்தலுக்குக் கீழ்க்கண்ட நாட்கள், நேரம், வாக்குப் பதிவுமுறை மூலம் நடைபெறும் நாட்களென முடிவு செய்யப் பட்டுள்ளது:—

| | |
|---|---|
| வேட்பு மனுக்கள் பெற்றுக் கொள்வதற் கான கடைசி நாளும், நேரமும். | 26—4—1984 நண்பகல் 12 மணி. |



| | |
|---|---|
| வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்தல். | 26—4—1984 பிற்பகல் 1 மணி. |
| வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறு வதற்கான கடைசி நாளும், நேரமும். | 27—4—1984 நண்பகல் 12 மணி. |

தேவை ஏற்படின் வாக்குப் பதிவு நடைபெறும். நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

வேட்புத் தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

### (3) அண்ணா பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு மேலவையிலிருந்து ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அண்ணா பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு (சிண்டிகேட்) ஓர் உறுப்பினர் மேலவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதற்காக கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் வரையறுக்கப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| நியமனத்தாள்கள் வந்து சேர கடைசி நாளும், நேரமும். | 26—4—1984 நண்பகல் 12 மணி. |
| நியமனத்தாள்கள் ஆய்வு செய்யப் படும் நாளும், நேரமும். | 26—4—1984 பிற்பகல் 1 மணி. |
| நியமனத்தாள்களைத் திரும்பப் பெற கடைசி நாளும் நேரமும். | 27—4—1984 நண்பகல் 12 மணி. |

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் வாக்கெடுப்பு நடைபெறும். வாக்கெடுப்பிற்கான நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 1. சட்டமன்ற மேலவைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சி நிரலின் அடுத்த இனம் இந்திய அரசியலமைப்பின் 182-வது பிரிவின்படி மேலவைத் தலைவர் அவர்களைத் தேர்ந்தெடுப்பதாகும். அப்பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளரின் வேட்புத்தாள்கள் செயலாளரிடம் கொடுக்கப் பட்டுள்ளன. மேலவை விதி 4, துணை விதி (4)-ன்படி, தலைவர் பதவிக்கு முறைப்படி மொழியப்பட்டுள்ள வேட்பாளரின் பெயரையும் அவரை முன்மொழிந்தவர் பெயர்களையும், வழிமொழிந்தவர் பெயர்களையும் இந்த அவையில் படிக்க வேண்டும். அதன் விவரம் வருமாறு:—

| வரிசை எண். | வேட்பாளரின் பெயர். | முன்மொழிந்தவர் பெயர். | வழிமொழிந்தவர் பெயர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | டாக்டர் ம. பொ. சிவஞானம். | திரு. இராம. வீரப்பன் | திரு. எஸ். இராகவானந்தம். |
| 2 | டாக்டர் ம. பொ. சிவஞானம். | திரு. எ. ஜே. தாஸ் | திரு. பி. முனுசாமி |
| 3 | டாக்டர் ம. பொ. சிவஞானம். | திரு. பா. ரா. தாமஸ் | திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் |

ஆக, ஒரே ஒரு வேட்பாளர் பெயர் மட்டுமே மேலவைத் தலைவர் பதவிக்கு மொழியப்பட்டிருப்பதால், நான் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் இம்மேலவையின் தலைவராக, ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார் என மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். (கரவொலி)

இப்பொழுது, மேலவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்களுக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலவைத் தலைவர் அவர்களை, அவை முன்னவரும் பிரதான எதிர்க் கட்சியான காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் அவர்கள் தம் இருக்கைக்குச் சென்று அமரும் வரை உறுப்பினர் அனைவரும் எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(பின்னர், மேலவையின் முன்னவர் மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் அவர்களும் மேலவை காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் திரு எ. ஜே. தாஸ் அவர்களும், மேலவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்களை அவர் *அமர்ந்திருந்த இடத்திலிருந்தும் அழைத்து வந்து மேலவைத் தலைவர் இருக்கையில் அமர வைத்தனர்.)





(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அவை உறுப்பினர்களே, என்னை ஒருமனதாக மேலவையின் தலைவராக இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுத்ததற்காக இங்குள்ள அரசியல் கட்சிகளுக்கும் மற்றும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எனது மனப் பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்தச் சிறப்பு மிக்க அவைக்கு, தொடர்ந்து இரண்டாவது முறையாக இங்கேயுள்ள உறுப்பினர்கள் அனைவருடைய ஒருமித்த ஆதரவோடும், ஒருமித்த கருத்தோடும் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதற்கு நான் இந்த அவையின் உறுப்பினர்கள் சார்பிலும், நாங்கள் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், அமைச்சரவையின் சார்பிலும் எங்களுடைய பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும், இவைகளுக்கெல்லாம் மேலாக எங்கள் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவை நீண்டகாலமாகத் தமிழகத்தினுடைய சட்டமன்ற வரலாற்றில் ஒரு மிகச் சிறந்த மரபை உருவாக்கிக் கொண்டிருக்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க அவையாகும். இந்த அவையில் சான்றோர்கள் பலர் இந்த அவையின் தலைவராக வீற்றிருந்து இதற்குப் பெருமை சேர்த்து தந்திருக்கிறார்கள், சிறப்புக்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள், அந்தச் சான்றோர்கள் வரிசையில் மிகச் சிறப்பான இடத்தைத் தாங்கள் வகித்து தமிழுக்கு உயர்வு தருகிற சின்னமாக, தமிழ்ச் சமுதாயத்தினுடைய பிரதிநிதியாக தாங்கள் முதன் முறையாக தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களாலே "தமிழையே இந்த அரியாசனத்தில் அமர்த்துகிறேன்" என்று கூறப்படுகிற சிறப்பைப் பெற்று, இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டீர்கள். அதைத் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் மிகச் சிறந்த பணி புரிந்து இந்த அவையினுடைய மிகச் சிறந்த மரபைப் பாதுகாத்து நல்ல முன்மாதிரியை இந்த அவையின் உறுப்பினர்களிடத்திலே உருவாக்கி பெருமை பெற்றிருக்கிறீர்கள். தொடர்ந்து இரண்டாவது முறையாக தாங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது, இந்த அவையில உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருமனதோடு தங்களுக்கு ஆதரவைத் தெரிவித்து தேர்ந்தெடுத்திருப்பது தங்களுடைய பெருமையை, இந்த அவையின் பெருமையை மேலும் உயர்த்துவதாக அமைந்திருக்கிறது. இந்த அவையினுடைய நடவடிக்கைகள் ஒரு காலத்திலே ஆங்கிலத்திலேதான் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆங்கிலத்திலேதான் நடைபெற முடியும் என்ற நிலைமை நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மாறி கடைசியாக தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, முழுமையாகத் தமிழிலேயே

நடைபெறுகிற தமிழ்நாடு சட்டமன்ற மேலவையாக மாதிரி சிறப்பு அடைந்து வருகிறது. அதற்கு முழுக்காரணமாக, முத்திரை குத்துவது போல தாங்கள் தமிழ் ஆய்ந்த அறிஞராக, சான்றோராக இந்தத் தலைமைப் பொறுப்பேற்றிருப்பது பொருத்தமாக அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட சிறப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிற இந்த அவைக்குத் தாங்கள் மேலும் சிறப்பை அளித்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட தங்களை நான் மீண்டும் இந்த அவையின் உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலே, கட்சிகளின் சார்பிலே பாராட்டுகிற அதே நேரத்தில் தங்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுப்பதற்குத் துணைபுரிந்த பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம், அவர்கள் கூட்டணியைச் சார்ந்த உறுப்பினர்கள், சுயேச்சை உறுப்பினர்கள், கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்த அவையின் சார்பிலே நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஜே. தாஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவைக்குத் தாங்கள் இரண்டாவது முறையாகத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். தாங்கள் சுதந்திர வீரராகவும், விடுதலை வீரராகவும் பணியாற்றி, தமிழனுடைய தலைமகனாக விளங்கி, இந்த அவையை நல்ல முறையிலே கடந்த ஆறு ஆண்டுகளாக தமிழிலே இயக்கி தமிழ் புத்துணர்ச்சி பெறக்கூடிய அளவிற்கு இந்த அவையை நடத்தி வந்திருக்கிறீர்கள். தாங்கள் ஏழ்மையில் வளர்ந்து ஏழைக் குடிமகனாக விளங்கி, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் பணிபுரிந்து, பிறகு தேசிய மகனாக விளங்கி, விடுதலைப் போராட்டத்திலே கலந்துகொண்டு பாரம்பரியமிக்க தலைவராக விளங்குகிறீர்கள். உங்களை காங்கிரஸ் கட்சியின் சார்பாகப், பாராட்டி அனைத்துக் கட்சிகள் சார்பாகப் பாராட்டி, அமைகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தாங்கள் இன்று இந்த அவையினுடைய தலைவராக மீண்டும் பொறுப்பேற்று இருக்கையில் அமர்கிற நேரத்தில் 12 ஆண்டுகளுக்கு முன்பு 1972 ஆம் ஆண்டு இதே ஏப்ரல் திங்களில் தாங்கள் மேலவைத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்ற நிகழ்ச்சி என்னுடைய நெஞ்சில் நிழலாடுகிறது. அப்போது கூறிய தங்களைப் பற்றிய சிறப்புரைகளை மீண்டும் நான் இங்கே நினைவுபடுத்துவது, தங்களோடு அந்தக் காலத்திலே விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்கெல்லாம் ஞாபகம் இருக்கும் என்றாலுங்கூட, தங்களைப் போன்றவர்களுடைய வாழ்க்கையை இளைய தலைமுறையினர் தெளிவாக அறிந்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக மீண்டும் நினைவூட்டுவது, என்னுடைய கடமையென்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 11.00)

1927 ஆம் ஆண்டுதான் தாங்கள் சென்னையிலே நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில் அன்சாரி அவர்கள் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில்—காங்கிரஸ் கட்சியிலே தங்களை உறுப்பினராக ஆக்கிக் கொண்டீர்கள். அப்படி உறுப்பினராக ஆக்கிக்கொண்ட இரண்டு ஆண்டுகளுக்குள் எல்லாம் சைமன் கமிஷன் பகிஷ்கரிப்புப் போராட்டம் கொழுந்து



விட்டு எரிந்த அந்தக் காலக் கட்டத்தில் நீங்கள் கைது செய்யப்பட்டவர்கள். 1930 ஆம் ஆண்டு உப்புச் சத்தியாகிரகத்திலே தாங்கள் பங்கு கொண்டு அடக்குமுறைக்கு ஆளாகி போலீசாருடைய தடியடிப் பிரயோகத்தை ஏற்றுக்கொண்டு தங்களுடைய உடலிலே தியாகத் தழும்புகளை, விழுப்புண்களைப் பெற்றவர்கள் நீங்கள். 1932 ஆம் ஆண்டு, அன்றிருந்த அடக்குமுறைச் சட்டம், கூட்டம், ஊர்வலம் இவைகள் நடத்துவதற்கு தடை உத்தரவு என்ற பெயரால் 144-வது சட்டப்பிரிவை உபயோகித்த நேரத்தில் அந்த உத்தரவை மீறி அன்றைக்குக் கைதுசெய்யப்பட்டு சிறைக்கோட்டம் சென்றீர்கள். அந்தக் காலக் கட்டத்திலே தான் விடுதலைப் போராட்ட இயக்கத்திலே தமிழனுக்கும் பங்கு இருக்க வேண்டும்; தமிழ் மொழிக்கும் அந்த விடுதலை வீர உணர்வை உருவாக்குகின்ற ஆற்றல் உண்டு என்பதை நிரூபிக்கின்ற வகையில் "தமிழா, துள்ளி எழு" என்கின்ற தலைப்புள்ள ஒரு துண்டு அறிக்கை வெளியிட்டு, திருவல்லிக்கேணிப் பகுதியிலே அதைத் தங்கள் கையாலேயே விநியோகித்த நேரத்தில் கைது செய்யப்பட்டவர்கள். அதன் காரணமாகக் கொஞ்ச நாள் சிறைவாசம் அனுபவித்தீர்கள், 1941 ஆம் ஆண்டு இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி தாங்கள் அந்த எதேச்சாதிகார அரசாலே கைது செய்யப்பட்டவர்கள். 1942 விடுதலைப் போராட்டத்தில் தாங்கள் கைது செய்யப்பட்டு 15 மாதங்கள் சிறைச்சாலை வேலூர் என்றும், தஞ்சாவூர் என்றும், அமராவதி என்றும் பல்வேறு சிறைச் சாலைகளில் அதிலும் தமிழகத்திலே இல்லாத வேறு மாநிலத்திலே உள்ள அமராவதி சிறைச்சாலையில், கொடுமையான சிறைச்சாலையில் 11 மாதங்கள் துன்பத்தை அனுபவித்து எடை குறைந்த நிலையில், ஆனாலும் எஃகு உள்ளம் மாறாத அளவு அன்றைக்குத் தியாக சீலராக அந்தச் சிறைச் சாலையிலே இருந்து வெளி வந்தீர்கள். இந்திய நாடு விடுதலை பெற்ற பிறகும் கூட, தங்களுடைய போராட்ட உணர்வு மங்கிவிடவில்லை. சுதந்திர இந்தியாவிலே போராட்டமா என்கின்ற அந்த எண்ணம் மிஞ்சித்தும் எழாமல், நல்லவைகளுக்காக, தேவைகளுக்காக, உரிமைகளுக்காக எந்தக் காலத்திலும் போராடலாம்; போராட்டத்திற்கும் சேர்த்துத்தான் சுதந்திரம் பெற்றிருக்கின்றோம் என்கின்ற அந்த உணர்வோடு, தேவிகுளம், பீர்மேடு தமிழகத்திலே இணைய வேண்டும் என்பதற்காகவும், திருத்தணி எல்லைப் பிரச்சனைக்காகவும், கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்தோடு சேர வேண்டும் என்பதற்காகவும் தாங்கள் நடத்திய போராட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகமும் தங்களோடு தோளோடு தோள் நின்றது. அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே எங்களை ஆளாக்கிய எங்களை எண்ணுகிற நேரத்தில் நான் இறும்பூதெய்துகின்றேன். ஒரு காங்கிரஸ்காரராக இருந்தீர்கள் என்பது மாத்திரமல்ல, கதர் சட்டை அணிந்த காரணத்தாலே நீங்கள் காங்கிரஸ்காரர் என்று நீங்கள் விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை. பத்தோடு பதினொன்று. அத்தோடு இதுவொன்று என்கின்ற காங்கிரஸ்காரராக இருந்ததில்லை. பத்தரை மாத்துப் பசும்பொன்னாக காங்கிரஸ் இயக்கத்திலே தியாகச் சுடராக வாழ்ந்தீர்கள். கதர் ஆடை உடுத்தி இருந்தாலும், நீங்களே தக்களியிலே நூல் நூற்று, இராட்டையிலே நூல் நூற்று அப்படிக் கதர் ஆடை உடுத்திய காங்கிரஸ் தியாகி நீங்கள். தேசத்திற்கு நீங்கள் ஆற்றியிருக்கிற தொண்டு அளவிடமுடியாத ஒன்றாகும். நீங்கள் யாத்திருக்கிற இலக்கியங்கள்

சிலப்பதிகாரத்துக்கு நீங்கள் சேர்த்திருக்கின்ற சிறப்பு, கட்டபொம்மனுக்கு, கப்பலோட்டிய தமிழனுக்கு தமிழகத்திலே நீங்கள் தந்திருக்கிற வடிவம்—இவைகள் எல்லாம் என்றும் போற்றிப் பாராட்டத் தக்க ஒன்று என்பதை நான் இந்த நேரத்திலே ஞாபகப்படுத்துகின்றேன். தாங்கள் மேலவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, இன்று நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கடந்த 22 ஆண்டுகளாக இந்த அவை நடந்துகொண்டிருக்கிறது. இந்த 22 ஆண்டுகளாக இருந்து வந்த சம்பிரதாயம் இன்று முதல் மாற்றப்பட்டு தமிழிலே நடவடிக்கைகள் அனைத்தும் நடக்கிறதென்றால், அப்படிப்பட்ட சம்பிரதாயத்தை மாற்றிய பெருமை நமது மதிப்பிற்குரிய திரு ம. பொ. சி. அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழில் நடக்கவில்லை என்று சொன்னார்கள் என்று அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். ஆக 1972 ஆம் ஆண்டிலே தங்களை மேலவைத் துணைத் தலைவராக இங்கே உட்கார வைத்த அந்தக் காலக் கட்டத்திலே இந்த அவை தமிழிலே, தமிழுக்குச் சிறப்பம்சம் தந்து முழுமைத்துவம் ஏற்பட்டு, நடக்குமென்கின்ற அந்த நிலைக்கு வித்திடப்பட்டது என்பதை நான் மறந்துவிட்டவர்களுக்கு ஞாபகப்படுத்துவதற்காகச் சொல்கின்றேன். தாங்கள் இந்த அவையிலே, தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது ஒன்றைச் சொன்னீர்கள்.

"மேலவையிலே உறுப்பினராவது இது முதல் முறையல்ல. 20 ஆண்டுகளுக்கு முன்பு, 1952-ல் மேலவைக்கு சட்டப்பேரவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தேன். அன்றைக்கும் இன்றைக்கும் உள்ள ஒரு மாறுதலை நான் பார்க்கிறேன். அன்று முதியவர்கள் நிறைந்திருந்தார்கள், இளைஞர்களிலே ஒருவனாக நான் வந்தேன். இன்று இளைஞர்கள் நிறைந்திருக்கின்றார்கள். முதியவர்களில் ஒருவனாக நான் வந்திருக்கிறேன்" என்று சொன்னீர்கள். இப்போது உங்கள் பட்டியலில் நானும் ஒருவனாகச் சேர்ந்திருக்கிறேன். நானும் நாவலர் அவர்களும் சேர்ந்திருக்கின்றோம். தாங்கள் 1971 ஆம் ஆண்டு....

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** என்னைவிட இளைஞர்தான் நீங்களும்.

**டாக்டர் மு. கருணாநிதி:** 1971 ஆம் ஆண்டு, மயிலாப்பூர் மக்கள் உங்களை மறந்துவிட்ட நேரத்தில், உங்கள் இல்லம் நாடி நானும் நாவலர் அவர்களும் வந்தபோது, எங்களுடைய கண்ணீரால் உங்கள் கன்னத்தைக் குளிப்பாட்டினோம். கடந்த கால வரலாறுகள் என்றைக்கும் பசுமையாக நினைவிலே இருக்கும் என்பதை நானும் மறந்துவிடவில்லை. நாவலர் அவர்களும் மறந்துவிட முடியாது முயற்சித்தாலும், தாங்களும் மறந்திருக்க மாட்டீர்கள். அந்த நேரத்திலே, தாங்கள் இந்த அவையினுடைய துணைத் தலைவர் பொறுப்பை ஏற்றபோது, இன்னொன்றையும் சொன்னீர்கள்.





"சட்டப் பேரவையிலே நான் இடம் பெறத் தவறிவிட்ட பின்னர், மாநில பார்லிமெண்டரி அரசியலிலிருந்தே ஒதுங்கத்தான் நான் விரும்பினேன். ஆனால் மக்கள் மத்தியிலே இருந்து தொண்டுபுரிய விரும்பினேன். நான் விரும்புகின்ற கொள்கையை இந்தப் பேரவை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே ஆளுங்கட்சியான தி. மு. க. வும், முதல்வர் கலைஞரும், அவரது அமைச்சரவையும், என் கருத்துக்களை நான் இந்த மன்றத்திற்கு வெளியே இருந்து சொல்வதைவிட, இந்த மன்றத்திலே வந்து சொல்வது மிகத் தேவை என்று எண்ணி, என்னுடைய உழைப்பு, இங்கு கொஞ்சம் பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்று முதல்வர் கருதி, இந்த மாமன்றத்திற்கு என்னை வரவழைத்ததோடு இங்கு துணைத் தலைவராக இருப்பதற்கும் வாய்ப்பளித்தனர். அதற்காக நன்றி" என்று சொன்னீர்கள். அந்த நன்றி உணர்வு என்றைக்கும் பட்டுப்போகாது. அன்று தாங்கள் மொழிந்த அந்த மொழி என்னுடைய உள்ளத்திலே என்றென்றைக்கும் பசுமையாக இருக்கும். இடையிலே எத்தனையோ புயல், எத்தனையோ சூறாவளிகள் எல்லாம் வீசினாலும்கூட, ஒருவர் ஒருவரை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்கின்ற அறிஞர் அண்ணா அவர்களுடைய அந்த மொழிகளுக்கு ஏற்ப, என்றென்றும் உங்களை மதிக்கின்றவன் என்கின்ற முறையில் அதைப் போலவே நீங்களும் மற்றவர்களை எத்தனையோ அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கிடையிலே மதிக்கக் கற்றவர்கள் என்ற முறையிலே இந்த மாமன்றத்தின் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பது சாலவும் பொருத்தமுடையது என்று கூறி, தங்களை மீண்டும் இந்த பொறுப்பினை, மேலவைத் துணைத் தலைவர், பிறகு தலைவர், மீண்டும் தலைவர் என்கின்ற அளவுக்கு தொடர்ந்து இந்தப் பொறுப்பினை தங்களுக்கு அளித்த ஆளுங் கட்சிக்கும் என்னுடைய நன்றியைக் கூறி அமைகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த அவையிலே ஆசிரியர்கள்-பட்டதாரிகள் முற்போக்கு முன்னணியின் சார்பிலே தங்களைப் பாராட்டுவதற்கு எனக்குக் கிடைத்த வாய்ப்பினை நான் ஒரு பெருமையாகக் கருதுகிறேன். நான் மட்டுமல்ல, இந்த அவையிலே உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தங்களை மேலவைத் தலைவராகப் பெற்றதற்குப் பெருமைப்படுகின்றார்கள் என்பதைக் கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம். இந்த நிலையில் நான் ஒரு வேளை இந்த அவையிலே இருந்துகொண்டு தங்களைப் பாராட்டினாலும், தமிழகத்திலே மூலை முடுக்குகளிலேயுள்ள ஆசிரியர்களும் பட்டதாரிகளும், தாங்கள் இந்த மேலவையிலே தலைவராக வீற்றிருக்கும் காட்சியைக் கண்டு களித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். தங்களை தமிழகத்திலே. செந்தமிழ் காவலராகவும், முதுமை இருந்தாலும் இளம் உள்ளத்துடன் தேசிய ஒருமைப்பாட்டின் முத்திரையாகத்தான் உங்களை நாங்கள் பார்க்கிறோம்.

ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற முறையிலே, கடந்த 6 ஆண்டுக் காலமாகவும், அதற்கு முன்னாலும் எங்களுடைய பிரச்சினைகள் வந்த காலத்திலே எல்லாம், அதிகமாக அக்கறை காட்டி, அன்பு பாராட்டி எங்களுக்கு வாய்ப்பு வழங்கியிருக்கின்றீர்கள். அந்த வாய்ப்பினைத் தொடர்ந்து, அதிகமாகக்கூட வழங்கவேண்டும் என்று தங்களை இந்த நல்ல நேரத்திலே வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக ஒன்றைச் சொல்லியிருக்கின்றார்கள். தங்களைப் பொறுத்தவரையிலே, தமிழகத்திலே அறியாதவர் ஒருவரும் இல்லை. ஆனால் தாங்கள் 1978 ஆம் ஆண்டில் மேலவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, இந்த மாநிலத்தின் முதல்வர் அவர்கள் கூறிய கருத்து என் மனதின் முன் வருகின்றது.

"தமிழைப் பேசி, தமிழை எழுதி, தமிழகத்திலே தமிழ்ப் புத்துணர்ச்சியை வளர்த்திருக்கின்றீர்கள் தமிழர்களால் அதிகமாக நேசிக்கப்படுகின்றீர்கள். தாங்களும் தமிழர்களை நேசிக்கின்றீர்கள். மாநிலத்தின் அரியாசனத்திலே,தங்களை தமிழை வீற்றிருக்கச் செய்திருக் கிறோம்" என்று சொன்னார்கள்.

தங்கள் பெயரைப்பற்றிக்கூட விமர்சிக்கும்போது, சிவம் என்பதற்கு தர்மம் என்றும். ஞானம் என்பதற்கு பகுத்தறிவு என்றும் சொல்லி, தர்மத்தை பகுத்தறிவால் ஆய்பவர்கள் என்று சொல்லி, தங்களைப் பாராட்டி, மேலவையிலே நீதி, நேர்மை நிலைநாட்டுவீர்கள் என்ற முறையிலே தங்களைப் பாராட்டினார்கள், வாழ்த்தினார்கள். நான் சார்ந்திருக்கின்ற என் கட்சி சார்பிலும், மாநிலத்தில் பட்டதாரிகள் ஆசிரியர்கள் பெருமக்கள் சார்பிலும். தங்களை மீண்டும் மேலவைத் தலைவராகக் கொண்டுவந்ததற்கு பாராட்டுவதோடு, ஒரு கருத்தையும் கூற விரும்புகிறேன். தங்களுடைய சுய சரிதையிலே கல்வி என்பதற்கு ஒரு இலக்கணத்தைக் கூறியிருக்கின்றீர்கள்.

(முற்பகல் 11-10)

பூர்வத்தால் வளர்வதுதான் கல்வி என்ற இலக்கணத்தை உலகம் ஆதிசேஷையா அவர்கள் விமர்சிக்கும்போது சொன்னார்கள். மாநிலத்திலே எப்படி, எம். ஏ., எம். எஸ்ஸி. பட்டம் கொடுக்கப் படுகிறதோ, அதுபோல நம்முடைய மாநிலத்திலே ஒரு காலத்திலே ப. பொ. சி. என்ற பட்டம் உருவாக்கப்பட்டு வழங்கப்படும் என்று கூறினார்கள்.

தங்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டத்தைக் கொடுத்து தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது. அதுபோலவே, தாங்கள் இன்று தங்களை மேலவைத் தலைவராக ஏற்று எங்களைப் பெருமைப்படுத்திக்கொண்டதோடு மட்டுமல்ல, பேரவையையே தாங்கள்





பெருமைப்படுத்தியிருக்கிறோம் என்று கூறி, முடிவாக தமிழ்த்தாய் வாழ்த்திலே கடைசி இரண்டு அடிகளிலே கூறியிருக்கிற வாசகத்தைக் கூற விரும்புகிறேன்.—

"உன் சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே."

என்ற அடிகளைக்கூறி, தாங்கள் வாழ்க, வாழ்க, என்று எங்கள் அமைப்பின் சார்பில் வாழ்த்தி, நன்றிகூறி முடிக்கிறேன்.

**திரு. க. அருணாசலம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் தாங்கள் மறுபடியும் இரண்டாவது முறையாக தலைமை வகித்துப் பதவி வகிக்க முன்வந்துள்ள இந்தச் சமயத்தில், காந்தியார் தொண்டர்களின் சார்பாக எங்களுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்,

தாங்கள் காந்தியடிகளின் தலைமையிலே புது மாதிரியான யுத்தத் திலே, கத்தி இல்லா இரத்தமில்லா யுத்தத்திலே ஈடுபட்டு உலகத்திற்கு ஒரு புது வழி காட்டினீர்கள். யுத்தத்தில் வீரர்களாக இருந்தவர்கள் அதோடு நின்றுபோயிருக்கின்றார்கள். ஆனால் தாங்களோ தொடர்ந்து அந்தப் பணியில் ஈடுபட்டு. புது உலகத்தை உண்டுபண்ண வேண்டுமென்று பாடுபட்டுக்கொண்டு வருகிறீர்கள், அதிலே வெற்றியும் பெற்றீர்கள்.

காந்தியடிகள்தான் முதன் முதலில் தாய்மொழி என்ற ஒன்று இருக்கிறது. அது எங்கும் இருக்க வேண்டும், எதிலும் இருக்க வேண்டும், எப்போதும் இருக்க வேண்டும். அத்தோடு வேறு மொழிகளும் பயில வேண்டுமென்று சொல்லி, அதை நிலைநாட்டினார்கள். தாங்களும் அதே வழியில் பயின்று, தமிழ் மொழி என்றும், எங்கும், எதிலும் இருக்க வேண்டுமென்று சொல்லி, உறுதிப்படுத்தி, அதன்படியே நடந்து காட்டுகின்றீர்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தில் இன்றும்கூட எங்கும், எதிலும் தமிழ் இல்லை. இன்றும் ஆங்கிலம் புகுந்துகொண்டிருக்கிறது. அதையும் விரைவில் மாற்றுவதற்கு வழி கண்டாக வேண்டும்; உங்கள் தலைமையிலே அந்த நிலைமை உண்டாக வேண்டும். எங்கும் தமிழ்மொழி, எதிலும் தமிழ் மொழி என்கிற அதே சமயத்தில் பல மொழிகளிலேயும் நாம் வல்லுநர்களாக ஆக வேண்டும், உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்கு வழிகாட்ட வேண்டுமென்று அந்த முறையிலே தாங்கள் வழிகாட்டியிருக்கிறீர்கள்.

இந்த நேரத்திலே மட்டும் மனித நேயம் இருந்தால் போதாது; தேச ஒற்றுமை இருந்தால் போதாது; ஒருமைப்பாட்டு உணர்வு இருந்தால் போதாது; ஆன்மநேய ஒருமைப்பாட்டின் மூலமாக உலக ஒற்றுமைக்காக வாழ வேண்டுமென்பதிலேயும், அந்தச் சமயத்திலே தனித் தனி சுதந்திரத்தையும் விட்டுக்கொடுக்காமல், தாங்கள் முன்னணியில் நின்று வற்புறுத்தி வருகிறீர்கள். காந்தியடிகள் ஆன்மா மிக்க திருப்தி

அடையும். பார்லிமெண்டரி அரசாங்கத்திற்கு காந்தியடிகள் அதிக
முக்கியத்துவம் கொடுக்காதிருந்தாலும்கூட, அதையும் தாங்கள்
பயன்படுத்தி மனிதன் உயர வேண்டும், மனித சமுதாயம் உயர
வேண்டும், மக்கள் விழிப்புடையவர்களாக ஆக வேண்டுமென்று
சொல்லி, அந்த வழியிலே தொடர்ந்து தங்கள் தொண்டினை ஆற்றிக்
கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் நீடூழி வாழவேண்டும். நம் மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்கள் தான் துணைத் தலைவராக ஆகும்போது
ஒன்றைச் சொன்னார்கள். "நீங்கள் என்றும் தலைவராகவே
எங்களுக்கு இருக்கவேண்டும்" என்று சொன்னார்கள். அதையே
நான் மறுபடியும் சொல்லி, எதிர்காலத்திலே வருகிற அங்கத்தினர்கள்
தங்களை ஏற்று, தங்களை வழிகாட்டியாகக் கொண்டு, தங்களுடைய
வாழ்வை வளப்படுத்திக்கொள்வார்கள் என்று தெரிவித்து, மகிழ்ச்சியுடன்
வாழ்த்தி வரவேற்று அமர்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மேலவைத் தலைவர்
அவர்களே, தாங்கள் தமிழக வரலாற்றிலும், இந்திய வரலாற்றிலும் ஒரு
தனி வரலாற்றை பல துறைகளிலே படைத்தவர்கள். தாங்கள் கா
சபையிலே 1927 ஆவது ஆண்டிலே சேர்ந்தவர்கள் என்று சொன்
னார்கள். நான் பிறந்ததே அதற்குப் பிறகு ஐந்து ஆண்டுகள் கழித்துத்
தான் என்று பார்க்கிறபோது, கிட்டத்தட்ட 53 வயதாகிற என்னைப்
போன்ற பலருக்கே தங்களுடைய அரசியல் வாழ்க்கை நீண்ட நெடியதாக
இருக்கிறதென்பதையெல்லாம் பார்க்கிறோம். அரசியலிலேயும், தமிழ்
இலக்கியங்களிலேயும் வரலாறு படைத்தது போல, இந்த மேலவை
யினுடைய தலைவர் பதவியிலேயும் தாங்கள் ஒரு வரலாற்றைப்
படைத்திருக்கிறீர்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இரண்டாவது முறையாக நீங்கள் மேலவை உறுப்பினர்களாலே
தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். இதுவரை தமிழக
மேலவையில் இரண்டு முறை தலைவராக இருந்தவர் டாக்டர் செரியன்
அவர்கள், அவர் 2 தடவை தலைவராக இருந்திருக்கிறார்கள். ஆனால்
டாக்டர் செரியன் அவர்கள் தலைமையைப் பார்க்கும்போது, அவர்
துணைத் தலைவராக இருந்து, பிறகு இரண்டு முறை தலைவராக
இல்லை. தாங்கள் துணைத் தலைவராக 6 ஆண்டுகள் இருந்து,
அதற்குப் பிறகு தலைவராக 2 தடவை பொறுப்பேற்கும் நல்ல
நிலைமையை நல்ல முறையிலே மேலவை உறுப்பினர்கள் உருவாக்கி
யிருப்பது தனி வரலாறு என்பதைச் சொல்லத் தேவையில்லை.
தங்களுடைய வாழ்க்கையைப் பார்க்கிறபோது, பனிக் கட்டிதான்
ஞாபகத்திற்கு வருகிறது. ஆங்கிலத்தில் 'ஐஸ் கியூப்' என்று சொல்லு
வார்கள். அது தண்ணீரில் மிதக்கும்போது, கிட்டத்தட்ட மூன்றில் ஒரு
பங்கு தண்ணீருக்கு வெளியிலேயும், மூன்றில் இரண்டு பங்கு
தண்ணீருக்கு உள்ளேயும் இருக்குமென்று சொல்லுவார்கள். அதைப்
போல உங்கள் வாழ்க்கையை வைத்துப் பார்க்கும்போது, மேலவைத்
தலைவர் பதவி என்பது எல்லோருக்கும் மேலாகத் தெரியும் ஒன்றாக
இருக்கிறது என்றாலும், தங்களுடைய வாழ்க்கையின் பெரும் பகுதி
தற்சமயம் மற்றவர்களுடைய கண்ணுக்கு மறைந்து இருக்கும் ஒன்றாகத்





தான் கருத வேண்டியிருக்கிறது. தங்களுடைய வாழ்க்கையை எண்ணிப்
பார்க்கிறேன். தாங்கள் காங்கிரஸ் கட்சிக்காரராக இருந்து, நாங்கள்
உங்களிடம் தொடர்பு கொண்டபோது, 1946-லே தமிழரசுக் கழகத்தைத்
தாங்கள் ஆரம்பித்து, அதனால் காங்கிரஸ் கட்சியில் பிரச்சினை ஏற்பட்டு,
காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் தமிழரசுக் கழகத்திலும் உறுப்பினரா
இருக்கலாமா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டு அப்போதிருந்த பெருந்
தலைவர் திரு. காமராஜர் அவர்களுக்கும், தங்களுக்கும் இதனால்
பிரச்சினை ஏற்பட்டு, பிரச்சினை நேரு அவர்களிடம் போய், தாங்கள்
காங்கிரஸ் கட்சியில் இருக்கலாமா அல்லது தமிழரசுக் கழகத்தில் இருக்
கலாமா என்ற பிரச்சினை வந்து, தமிழரசுக் கழகம் தேவை என்று
சொல்லி, தாங்கள் வந்தபோது நாங்களெல்லாம் உங்களோடு இருந்
தவர்கள். எவ்வளவு கஷ்டமான வருத்தமான முடிவைத் தாங்கள்
எவ்வளவு சிரமத்தோடு எடுத்தீர்கள் என்பதை நாங்கள் அறிவோம்.
ஒரு காங்கிரஸ்காரன் என்ற முறையிலே உங்கள் வாழ்க்கையை முடித்துக்
கொள்வதைவிட, தமிழ்நாட்டுக்கும், தமிழுக்கும், தமிழ் இலக்கியத்
திற்கும், தமிழ் மக்களுக்கும் பாடுபடுவேன் என்று சொல்லி, தமிழ்,
தமிழ்நாடு, தமிழ் மக்கள்தான் முக்கியம் என்று முடிவெடுத்து,
நல்ல முறையிலே அந்த இயக்கத்தை நடத்தினீர்கள். அதற்கப்பாலே,
தமிழ் இனத்தோடு ஒன்றுபட்டு நிற்கும் வாழ்க்கையோடு, தமிழ் இலக்
கியத்திற்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டினுடைய எல்லைப்புறத்தைக்
காப்பாற்ற போராடியதை மறக்க முடியாது. எனக்கு முன்னாலே
பேசியவர்கள் சொன்னதுபோல, தமிழ்நாட்டின் எல்லையை,
தென்னெல்லை, திருத்தணியைக் காப்பாற்ற எவ்வளவு காரியங்கள்
ஆற்றினீர்கள் என்பதை அறிவோம். இதோடு, தமிழ் இலக்கியத்
திற்கு தாங்கள் ஆற்றிய பணி மிகச்சிறப்பானதாகும். 110 புத்தகங்கள்
எழுதி, தமிழ் இலக்கியத்திற்கும் சிறப்பான சேவையைச் செய்திருக்
கிறீர்கள். நீங்கள் செய்த சேவையைப் பாராட்டி, தமிழக முதல்வர்
அவர்கள், தங்களுக்கு மேலவையின் தலைவர் பதவியை அளித்
தார்கள். மீண்டும், தாங்கள் தமிழுக்கு செய்யும் காரியங்கள்,
சேவைகளைக் கருதி, இரண்டாம் முறை தலைவர் பதவியைத்
தங்களுக்கு அளித்திருக்கிறார்கள். தாங்கள் தமிழகத்திற்கும், தமிழ்
இலக்கியத்திற்கும் இன்னும் சிறந்த சேவை செய்ய வேண்டுமென்று
கருதித்தான் இந்த மேலவையின் தலைவர் பதவியைப் பெற்றிருக்
கிறீர்கள் என்று கருத வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் ஆட்சியிலே தமிழுக்குப் பல சிறப்புகள் செய்யப்பட்டிருக்
கின்றன. 2, 3 நாட்களுக்கு முன்னாலே தஞ்சைக்குச் சென்றிருந்
தேன். கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலே ஒரு பெரிய விழா. தமிழ்வேள்
உமாமகேஸ்வரனார், ந.மு. வேங்கடசாமி நாட்டார் நூற்றாண்டு விழா
கொண்டாடப்பட்டது. உங்களுக்குத் தெரியும், பல முறை தமிழ்ச் சங்கத்
திற்கு வந்திருக்கிறீர்கள். தி. சு. ம. பே போன்றவர்கள், தங்களைப்
போன்றவர்கள் அவர்கள் அறிந்தவர்கள். தமிழகத்தில் தமிழ்ப்
பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்ற கருத்து, தமிழ்வேள்
உமாமகேஸ்வரனாரின் கனவு, நினைவாகும் முறையிலே தஞ்சையிலே
தமிழ்ப் பல்கலைக் கழகத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.

என்பதை நாம் எல்லோரும் அறிவோம். தமிழுக்குப் பல்கலைக் கழகம் அமைத்து, தமிழக அரசு சிறந்த சேவை செய்திருக்கிறது. தமிழ் படித்த புலவர்கள், புறநானூறு காலத்திலிருந்து ஏழ்மையிலே வாழும் நிலையைப் பார்க்கிறோம். தாங்களும், அந்தக் காலத்தில் எவ்வளவு ஏழ்மையில் இருந்தீர்கள் என்பதை அறிவோம். அப்படி ஏழ்மையில் வாழும் புலவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய் கொடுத்து, நல்லதொரு காரியத்தை தமிழக அரசு செய்திருக்கிறதென்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-20)

அதைப்போல மூன்றாவதாக, தமிழ் படித்த புலவர்கள், தமிழ் ஆசிரியர்கள் எல்லாம் தமிழகத்திலே தலைமையாசிரியர்களாக ஆக வேண்டுமென்ற கோரிக்கை கிட்டத்தட்ட 35 ஆண்டுகளாக இருந்து வந்தது. இருந்தாலும் கூட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலேதான் இங்கே இருக்கக் கூடிய தமிழ் ஆசிரியர் பிரதிநிதிகள் எல்லாம், தமிழ் ஆசிரியர்கள் எல்லாம் தலைமையாசிரியர்களாக ஆகக் கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். இப்படி தமிழுக்கு பல முக்கியமான காரியங்களையெல்லாம் ஆற்றியிருக்கிற இந்த ஆட்சியும் தமிழக முதல்வர் அவர்களும், இந்தக் கட்சியைச் சேர்ந்த நாங்களும் மீண்டும் தாங்கள் மேலவைத் தலைவர் பதவிக்கு வந்திருப்பதன் மூலமாக தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் சேவை செய்ய வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொண்டு தாங்கள் பல்லாண்டு காலம் இளமையோடு வாழ்ந்து இந்த மேலவைத் தலைவர் பதவிக்கும், தமிழுக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆழ்ந்தறிந்த தமிழ் கொள்கைக் களஞ்சியமாக விளங்குகின்ற நீங்கள் மீண்டும் இரண்டாவது முறையாக இம்மேலவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, அதுவும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் பெரு மகிழ்ச்சியைத் தருகின்ற ஒன்றாகும். ஆழ்ந்த தமிழ்ப் பற்றும்; மிக நீங்காத வகையில் அமைந்த நாட்டுப் பற்றும், பழுத்த அரசியல் அனுபவமும், சிறந்த பண்பாடும் கொண்ட தாங்கள் சான்றோர்கள் குழுமியிருக்கின்ற இந்த மேலவைக்குத் தலைவராக ஆகியிருப்பது உள்ளபடியே மிகவும் பொருத்தமுடைய ஒன்றாகும். மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் இங்கே கோடிட்டுக் காட்டியதுபோன்று, தாங்கள் அரசியலில் ஆரம்பக் காலத்திலிருந்து ஈடுபாடுகொண்டிருக்கிறீர்கள். பல்வேறு கொள்கைப் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறீர்கள். அதனால் ஏற்படுகின்ற இழப்புகள், இன்னல்கள் ஆகிய அத்தனையையும் தாங்கி வந்திருக்கிறீர்கள். தொல்லைகளையும் துயரங்களையும் தாங்குகின்ற அளவுக்கு





உள்ளம் வலிமை பெற்றுள்ளீர்கள். 6 முறைக்கு மேல் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டு சிறைச்சாலைக்குச் செல்லுகின்ற அளவுக்கு தன் கொள்கைப் பிடிப்பைச் சிறப்பாகக் கடைப்பிடித்துக் காட்டியிருக் கிறீர்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவற்றைத் தான் வரிசையாக கோடிட்டுக் காட்டினார்கள். கொள்கையை ஏற்றுக் கொள்கிறவர்கள் நாட்டிலே பல பேர் இருப்பார்கள். இன்னும் சொல்லப் போனால், சில பேர் கொள்கையைத் தாங்குபவர்களாக இருப்பார்கள். ஆனால் சில பேர் கொள்கையைத் தழுவுவோர்களாகவும் இருப்பார்கள். என்று பார்க்கும் கொள்கைக்காகவே தன்னை ஒப்படைத்தவர்கள் தான் இருப்பார்கள். அந்த போது, விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் தன்னை ஒப்படைத்து, அந்தக் வகையிலே கொள்கைக்காகவே எல்லா வகையிலும் நின்று, கொள்கை வெற்றி பெறுவதற்காகவே நினைப்பையும், அறிவையும், ஆற்றலையும் தங்கள் நேரத்தையும், என்பதை இந்த நாடு நன்றாக அறியும். பயன்படுத்தியிருக்கிறீர்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை இந்த அவையில் இருக்கிற உணர்வார்கள். அந்த அளவிலே எல்லோ பேரும் மிகத் தெளிவாக அரவணைப்பையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் ருடைய அன்பையும், இந்த அவையில் இருக்கிற அத்தனை என்பதோடு மட்டுமல்லாமல், நன் மதிப்பையும் பெற்று உறுப்பினர்களுடைய நம்பிக்கையையும், தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட் மீண்டும் மேலவையினுடைய மிக மிகச்சிறந்ததாகும். தாய்மொழிப் டிருப்பது எல்லா வகையிலும் தாய் நாட்டுக்கு உள்ளபடியே பற்று கொண்டிருக்கிற ஒருவர் தான் முடியும் என்பதை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த தொண்டையாற்ற வருகிறீர்கள். மறைந்த தமிழ் தென்றல் வகையில் தாங்கள் விளங்கி தாய்மொழிப் பற்று தான் உண்மையான தாய் திரு. வி. க. அவர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நாட்டுப் பற்றுக்கு வழிகோலும் இணங்க தாய் மொழிப் பற்று அடிப் அதை வலியுறுத்துவதற்கு வளர்க்க முடியும் என்பதை நிரூபிக்கும் படையில் தான் நாட்டுப்பற்றை பற்றுக்கொண்டு சிறந்த முறையில் வகையில் நீங்கள் சிறந்த நாட்டுப் ஆற்றியிருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கும்போது, நாட்டுப் பணிகளை தலைமுறையினருக்கு மிகச் சிறந்த எடுத்துக் இது வருங்காலத் காட்டாக விளங்குவதாகும்.

அது மாத்திரமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே சிறப்பாக எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க, தாங்கள் நீண்ட பெரும் காலமாகவே இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டிருக்கிறீர்கள். 3 ஆம் வகுப்புக்கு மேல் நீங்கள் பள்ளிக்குப் போகவில்லை என்று நீங்களே முன்பு சொல்லியிருக்கிறீர்கள். அப்படி இருந்தும், நீங்களாகவே படித்து, தேர்ந்து, இலக்கியப் புலமை பெற்று, தமிழ் ஆர்வம் கொண்டு, இலக்கியங்களை எல்லாம் துருவி ஆராய்கிற பணிகளையெல்லாம் ஏற்று, பெற்றிருக்கிறீர்கள். அதோடு சிலப்பதி அதற்கான திறமையையும் எடுத்து விளக்கத் தக்க அளவுக்கு, காரத்தை நாட்டு மக்களிடத்தில் என்று போற்றப்பட்டு, சிலப்புச் எல்லோராலும் 'சிலம்புச் செல்வர்' தாங்கள் நாட்டுப்பணிகளை ஆற்றி பட்டத்தை பெறும் அளவுக்கு

யுள்ளது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்று, பண்டிதர்களுக்கு மட்டுமே என்று இருந்த, பண்டிதர்களுக்கு உள்ளே மட்டும் புழங்கு கின்ற அளவுக்கு இருந்த சிலப்பதிகாரத்தை சாதாரண பாமர மக்களும் புரிந்துகொள்ளும் அளவுக்குக் கொண்டு வந்த தொண்டை நீங்கள் செய்தது மிகப் பெரிய தொண்டு, மிகச் சிறந்த தொண்டு. நாட்டுக்கு நீங்கள் ஆற்றிய அரிய செயல், நெஞ்சையள்ளும் சிலப் பதிகாரம் என்று பாரதியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது. தமிழகத்தினுடைய சிறந்த நாகரிகம், பண்பாடு தமிழர்கள் பற்றிய சிறந்த வரலாறு, தமிழர்களுடைய வீரம், தமிழர்களுடைய திறம், தமிழர்களுடைய ஆட்சி முறையினுடைய தன்மை, தமிழ்ப் பெண்டிர்களுடைய கற்பு, தமிழர்கள் எந்தெந்த கருத்துக்களுக்கு ஆக்கம் தந்தார்கள். தமிழர்கள் எந்தெந்த கருத்துக் களைப் போற்றி, பாராட்டி, வாழ்த்தி, வளர்த்தி, வரவேற்று வந்திருக் கிறார்கள். எந்தெந்த கருத்துக்களை நிலைநாட்டுவதற்குக் காரணமாக இருந்தார்கள். எப்படிப்பட்ட நேர்மையைக் கையாள வேண்டும் என்பதிலே காரணமாக, கவனமாக இருந்தார்கள். எப்படிப்பட்ட நீதிக்கு உடன்பட்டு, உறுதுணையாக, உடந்தையாக இருந்தார்கள் என்பதைப்பற்றியெல்லாம் முழுமையான அளவுக்குத் தெளிக்கின்ற, நாம் தெரிந்துகொள்கின்ற அளவுக்கு ஒரே ஒரு இலக்கியம் காப்பியம் உண்டு என்றால், அது தமிழகத்தைப் பொறுத்தமட்டில், சிலப்பதிகாரம் தான். தமிழகத்தின் நாகரிகம் முழுவதையும் எடுத்துச் சொல்லி, சேர நாட்டு, சோழ நாட்டு, பாண்டிய நாட்டு நாகரிகத்தையும் எடுத்துச் சொல்லி, பல்வேறு நாடுகளின் வரலாற்றை எடுத்துக் சொல்லி, பண்பாட்டையும் எடுத்துச் சொல்லி அந்த வகையில் தமிழகத்தையே படம் பிடித்துக் காட்டுகிற ஒரு பெரும் இலக்கியம் உண்டென்றால், அது சிலப்பதிகாரம் தான்.

கம்ப இராமாயணம் உண்டு. அதிலே கவி நயம் உண்டு. அணி நயம் உண்டு. சொல்லழகும் உண்டு. ஆனால் அதிலே வருகிற கருத்துக்கள் எல்லாம் தழுவிய இலக்கியமாகத்தான் இருக்கிறதே தவிர, இங்கேயே தோன்றிய இலக்கியம் அல்ல. கம்பன் தந்த தமிழ்ப் பண்பாடுகள் எல்லாம் அதிலே புகுத்துவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளே தவிர, அந்தக் காவியம் முழுவதும் வடநாட்டுக் கதையைத் தழுவிய ஒன்றுதான்.

சீவக சிந்தாமணியும் வடநாட்டுக் கதைகளைத் தழுவிய ஒன்றுதான். பெருங்கதையும் வடநாட்டுக் காவியங்களைத் தழுவியதுதான். மற்ற காவியங்கள் எல்லாம், சிறப்பித்துச் சொல்லப்பட்டவையெல்லாம் வழுவிய கதை களைத் தவிர, தமிழ்நாட்டைச் சார்ந்த பண்பாட்டை எடுத்துச் சொல்வதாக இல்லை. நான் ஏன் இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், தமிழக மக்களுக்கு உணர்ச்சியை எழுப்பிவிட்டு, உணர்வுகளை



ஊட்டிவிட்டு, பாமர மக்களுக்கும் இந்தச் சாதனைங்களைச் சொல்ல வேண்டுமென்பதில் தாங்கள் முழு கவனமும் கொண்டு; கருத்தைச் செலுத்தி நாடெங்கும் அன்றாடம் இத்தகைய கருத்துகளைப் பரப்புகிற சிறந்த பணிகளைச் செய்ததால்தான், இன்றைக்கு நாடே உங்களைப் போற்றவும் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறது. நானும் கடமைப் பட்டிருக்கிறேன்.

கட்டபொம்மன் பற்றியும், வ. உ. சி. பற்றியும் நாடு அறிந்திருக்க வேண்டும். ஒரு நாட்டில் தோன்றிய புகழ் மிக்க, வீரமிக்க, பெருமை மிக்க வரலாற்றை ஒரு நாடு மறந்துவிடுமேயானால், எதிர்காலத்தில் எழுச்சி பெறவே முடியாது. ஆகவே அப்படிப்பட்டவர்களுடைய வரலாறு மக்களுடைய காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும். அவர்களுடைய சிந்தனைகளிலேயே இருக்க வேண்டும். இதுபற்றிய தன்மையில் ஈடுபாடு இருக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் வீரத்தை நிலை நாட்டிய ஒரு வீர மகனின் வரலாறு இந்தக் காலத்தில் இருக்கிற இளைஞர்களின் உள்ளத்திலே படியவேண்டுமென்ற நோக்கத்தோடு, அழுத்தந்திருத்தமாகவும், ஆணித்தரமாகவும், வாதப்பிரதிவாதங்களுடைய தன்மையின் அடிப்படையிலும் விளக்கங் களோடு தாங்கள் கட்டபொம்மனுடைய வரலாற்றை எடுத்து நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தியிருப்பது ஒரு புத்துணர்ச்சியாக இருக்கிறது. ஆகவே வாழ்ந்து, மறைந்து வாழ்ந்து, இடைக்காலத்தில் வாழ்ந்து மறுபடியும் மறுமலர்ச்சி பெறவேண்டுமென்று கூறுகிற தமிழகத்திற்கு மறுமலர்ச்சி ஏற்படுத்த உறுதுணையாக இருக்கத்தக்க வகையில் கட்டபொம்மனின் வரலாறும், அதற்காக தாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிற செயல்களும் மிகமிகப்பயன்படும். அதைப் போலத்தான், வ. உ. சி. அவர்களுடைய தன்மையை மறந்துவிடாமல் உள்ளபடியே வீரத்தை நிலைநாட்டிய தலைமைகளை நாடு மறந்து போகக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தி, வ. உ. சி.-யினுடைய வரலாற்றை நீங்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறீர்கள். அதைப்போல 110-க்கு மேற்பட்ட நூல்களை, சந்தேகத்திற்கு இடம்கொடாமல் தெளிவாக எடுத்து வெளியிட்டிருக்கிறீர்கள். தாங்கள் எதைச் சொன்னாலும், தெளிவாக திட்பமாக சொல்லக்கூடியவர்கள். கொண்ட கருத்துக்களை திட்பமாகச் சொல்லக்கூடியவர்கள். அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்வீர்கள். திருத்தமாக, தெளிவாக எடுத்துச் சொல்வீர்கள் என்ற வகையில் எல்லோராலும் பாராட்டப்படுகிற தன்மையைப் பெற்றவர்கள்

"நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று"

என்று வள்ளுவப் பெருந்தகை எடுத்துச் சொல்லிய இலக்கியத்திற் கேற்ற இலக்கணமாகத் திகழ்கிறீர்கள். சாதாரணமாக ஒன்றைச் சொல்வார்கள். 'நயம்பட உரை' என்று. நயம்பட உரை என்ற பாங்கு எல்லாக் கட்டத்திலும், எல்லா வகைகளிலும் வேண்டும். அந்த அளவிற்கு நயம்பட என்பதை அடிப்படையாக எடுத்துச் சொல்கிறீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழகத்தினுடைய அரசியலுக்கு

தமிழகத்தினுடைய மறுமலர்ச்சிக்கு, சிறப்புக்குத் தேவைப்படுகிற கருத்துக்களுக்கேற்ப தங்களுடைய பணி அமைந்திருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தமிழக மாநில தன்னாட்சி வேண்டுமென்றும், மத்தியில் குறைந்த அதிகாரங்களைக்கொண்ட கூட்டாட்சி வேண்டுமென்றும், முழுத் தன்மை கொண்ட மாநில சுய ஆட்சி வேண்டுமென்றும் தொடர்ந்து அதற்கான காரணங்களுடன் வற்புறுத்தி வருகிறீர்கள். அந்தக் கருத்துக்கள் இன்றைய தினம் ஆக்கம் பெற்று வருகின்றன, ஊக்கம் பெற்று வருகின்றன. அந்தக் கருத்துக்களில் நாம் வெற்றி பெற வேண்டும். வெற்றி பெறுவதற்கு சிந்தனையும் செயலும் வேண்டும். சிந்தனையில்லாமல் சொல்லும் வராது, செயலும் கிடையாது. ஆகவே நல்ல செயல்கள் வரவேண்டுமானால், நல்ல சிந்தனை பிறக்க வேண்டும். அப்படிப்பட்ட அளவுக்கு இப்போது நாட்டுக்கு அத்தகைய கருத்துக்கள் மிகமிகத் தேவை. அத்தகைய சிறந்த கருத்துக்களைத் தாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறீர்கள். அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லி வருகிறீர்கள். இந்தக் கருத்துக்களின் காரணமாக நாட்டில் இருக்கிற பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தெளிவு பெறுகிற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதற்காக நாடு உங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-30)

இங்கு எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததுபோல், சட்டமன்றப் பணிகளில் தாங்கள் ஈடுபட்டு சிறப்பான முறையில் பணியாற்றி பலருடைய பாராட்டுதல்களையும், போற்றுதல்களையும் பெற்றிருக்கிறீர்கள்

1952 முதல் 1954 வரையில் இந்த அவையில் உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். 1967 முதல் 1971 வரை சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகு இந்த அவையில் 1972 முதல் 1978 வரை துணைத் தலைவராக விளங்கியிருக்கிறீர்கள். 1978 முதல் 1984 வரை இந்த அவையின் தலைவராக விளங்கினீர்கள். மீண்டும் இங்கே தலைவராக அமர்கிற சிறப்புக்குரிய தன்மையை, இங்கே பல உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லிப் பாராட்டியது, ஒரு தனிப் பெருமை தருகிற ஒன்றாகும். உள்ளபடியே இது இந்த அவைக்குத் தனிப் பெருமையைத் தருகிற ஒன்றாகும். அனைவருமே பூரிப்படையத் தக்க ஒன்றாகும். தாங்கள் 78 வயதான தன்மையிலும் உள்ள வலிவு பெற்றிருக்கிறீர்கள். அந்த உள்ள வலிவோடு தாங்கள் பல்லாண்டுக் காலம் வாழ்ந்து, இந்த நாட்டுக்கும் அவைக்கும் பணியாற்றுவதோடு இங்கே நாட்டுப்பற்றை ஊட்டவும் சிறந்த பண்பாடுகளை வெளிப்படுத்தவும் உதவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எல்லா வகைகளிலும் நாம் வளர்ந்து கொண்டிருந்தாலும், நாட்டின் பொதுப் பண்பாடு என்பது நாளுக்கு நாள் குறைகிறது என்பதால், அத்தகைய நல்ல பண்பாட்டிற்கு ஆக்கம் தந்து ஊக்கம் தந்து, பண்பாட்டை வளர்க்கிற சான்றோர்கள் பலரும்.



தோன்ற வேண்டும். அவர்களில் ஒருவராகத் தாங்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்று மீண்டும் மீண்டும் சொல்லி, தாங்கள் மேலவையின் தலைவராக மீண்டுமொருமுறை அனைவராலும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதிலும் அனைத்துக் கட்சிகளாலும் அத்தனை உறுப்பினர்களாலும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதால், உங்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு மேலவை உறுப்பினர்களே, மேலவையின் தலைவர் பொறுப்பில் இன்று மீண்டும் அமர்ந்த பிறகு, என்னுடைய முதல் கடமையாக நான் கருதுவது, இந்த அவைக்குப் புதிதாக வந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களை வாழ்த்தி வரவேற்பதாகும். சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்தும் ஆசிரியர் தொகுதியிலிருந்தும், பட்டதாரிகள் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற உறுப்பினர்களையும், என்னைப் போன்று நியமிக்கப்பட்டு இங்கே இடம் பெற்றிருக்கிற புதிய உறுப்பினர்களையும் அவைத் தலைவன் என்ற முறையில் மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும் வரவேற்று, வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன். பழைய உறுப்பினர்கள் நடந்து கொள்ளும் முறையைப் பார்த்தறிந்து, கேட்டறிந்து, படித்தறிந்து புதிய உறுப்பினர்களும் நல்ல மரபைப் பின்பற்றி என்னோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குத் தேவை அதுதான். ஆதலால் முதலில் அதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

பழைய உறுப்பினர்களான டாக்டர் கலைஞரைப் போன்றவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு மீனாட்சிசுந்தரம் மற்றும் திரு லெட்சுமி காந்தன் போன்றவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் சொல்ல வேண்டியதில்லை. இந்த மன்றத்திற்கே ஒரு தனி மரபு உண்டு. இந்த மன்றத்திற்கு ஒரு தனிப் பண்பாடு உண்டு. இந்த மன்றத்திற்கு ஒரு தனிப் பாரம்பரியம் உண்டு. அவற்றையெல்லாம் மேலும் வளர்க்க வேண்டும். அந்த இடத்திலேயே நிற்க வேண்டும் என்று கூட நான் வேண்டமாட்டேன். அதை மேலும் வளர்க்க வேண்டும், மென்மேலும் வளர்க்கவேண்டும் என்ற வகையில் என்னோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே என்னைப் பாராட்டிய அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் இருக்கிறேன். [illegible]யும் உருக்கத்தோடு, எத்தகைய குறைபாடுகளும் இன்றி, எத்தகைய [illegible]த்தாக்கலும் இன்றி, என்னை மாண்புமிகு உறுப்பினர்கள் [illegible]டியது என்னுடைய பணியை [illegible]றது என்றுதான் [illegible] விரும்புகிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்லும்போது, 1972 ஆம் ஆண்டு நான் இங்கே வந்தபோது முதியவனாக வந்தேன் என்று கூறினார்கள், அதற்கு அப்புறம் 12 ஆண்டுகள் போய்விட்டன. அதனாலே பெருங்கிழவன் என்று சொன்னாலுங்கூட பொருத்தம்தான். தவறில்லை. ஆனால், இன்றும் என் கையில் எழுதுகோல் தான் இருக்கிறதே தவிர, ஊன்றுகோல் இல்லை, ஆகவே நீங்களெல்லாம் வாழ்த்தியதற்குத் தகுதியுடையவனாகவே நான் பாடுபடுவேன் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1952 ஆம் ஆண்டில் நான் இங்கே வந்ததை 1972 ஆம் ஆண்டில் நினைவூட்டினேன், 1978 ஆம் ஆண்டிலும் நினைவூட்டினேன். இன்றைக்கும் நினைவூட்டுவது சரியென்றே கருதுகிறேன். காரணம் அது என்னுடைய மனதில் இன்னும் மாறாத பசுமையாக இருந்து வருகிறது. அன்றைக்கு இருந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு இல்லை. எனவே அவர்களையெல்லாம் இங்கே நினைவு கூர்வது நன்றிக்கு அறிகுறியாக இருக்கும் என்று கருதுகிறேன். 1952 ஆம் ஆண்டில் இராஜாஜி அவர்கள்தான் முதலமைச்சராக இருந்தார்கள். அவர் மேலவை உறுப்பினராகத்தான் அப்போது இருந்தார். அப்போது பாராளுமன்றத்தில் நிதியமைச்சராக இருந்த திரு ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் அங்கிருந்து ஓய்வுபெற்று இங்கே வந்து இடம் பெற்றிருந்தார்கள். 82 வயதான திரு சர்க்கரை செட்டியார் அவர்கள் இங்கே இடம் பெற்றிருந்தார்கள். அதைப்போலவே டாக்டர் மகமது உஸ்மான் அவர்களும் இருந்தார்கள். அவரைப் பிடித்துக் கொண்டுவந்து தான் இருக்கையில் அமர்த்துவார்கள். அவ்வளவு முதுமையாக இருந்தவர். அதுமட்டுமல்ல, முதுமையாக இருந்த மூதாட்டிகளும் இருந்தனர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் இரண்டு கண்ணும் தெரியாத நிலையில் அவரை இங்கே பிடித்துக் கொண்டுவந்து ஆசனத்தில் அமர வைத்துவிட்டுப் போய்விடுவார்கள். அவருடைய சுப்புலட்சுமி அவர்களும் அப்படியே. சகோதரி பிடித்துக்கொண்டு வந்து வைத்து அமர்த்துவார்கள். அவர்களையும் ஆளமுதியவர்கள் மத்தியிலே நான் இருந்த காலத்தை நினைத்துப் பார்க்கும் போது, அவர்கள் எல்லாம் பாடுபட்டு, பேசி, எழுதி, நடந்து வரையறுத்து விட்டுப்போன அந்தப் பண்பாட்டு வரம்பு இருக்கிறதே, அதிலே நின்று நடத்தி உங்களுக்கு உதவி புரிவேன் என்று உறுதி கூறுகிறேன்.

இன்னும் நான் நன்றி செலுத்த வேண்டும் என்று நினைக்கிறேன். 1952 ஆம் ஆண்டிலே பெருந்தலைவர் திரு காமராஜ் அவர்கள் என்னுடைய வீட்டிற்கு வந்து நான் சட்டமன்றத்திற்குப் போக வேண்டுமென்றார். அப்போது அவர் நான் எதிர்க் கட்சியிலிருந்து காங்கிரசுக்காக வாதாடுவேன் என்று நினைத்துச் சொன்னார். அப்போது திரு இராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை வரும் என்று எதிர்பார்க்காத சூழ்நிலையில் என்னை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தார்கள். அந்த ஒரே காரணத்திற்காக நான் உள்ளே வர அப்போது ஒப்புக்கொண்டேன். என்னை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு காங்கிரஸ் ஆட்சி





அமைந்துவிட்டதால், பெஞ்சில் அமர வேண்டிய நிலை எப்போதுமே ஏற்படவில்லை. அப்போது முதல்தான் என்னுடைய பணி துவங்கியது. அந்த நிலையிலே நான் ஆட்சிக்கு உறுதுணையாக இருந்தேன். ஒன்றை நான் உறுதியாகச் சொல்கிறேன். நான் ஆட்சிக்கு உறுதுணையாக இருப்பது, ஆட்சிக்குப் பக்கத்திலே இருப்பது என்று எடுத்துக்கொண்டு கொள்கை தமிழர்கள் அனைவருக்கும் பொதுவாக இருக்குமானால்தான், அது ஒரு கட்சிப் பிரச்சினையாக இருக்குமானால், எதிரும் புதிருமான சூழ்நிலையில் அகப்பட்டுக்கொண்டால், நான் போராடவேண்டும் என்ற பயம் இருக்கும்—நான் வரமாட்டேன். சட்டமன்றத்திற்கு வருவதே இல்லை என்று உறுதியோடு இருந்த என்னை முதலிலே மாற்றியவர்கள் திரு இராஜாஜி அவர்களும், அண்ணா அவர்களும்தான். "நீங்கள் எங்களுக்குத் தேவை" என்ற வார்த்தையைச் சொல்லி 1957-லே ஒரு முறை அண்ணா அவர்களும், நாவலர் அவர்களும் வந்தார்கள் 1962-லே ஒரு முறை வந்து "நீங்கள் எந்தத் தொகுதியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றாலும் எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் எதிர்த்தாலும் பரவாயில்லை. உங்களை ஆதரிக்கிறோம்" என்று சொன்னார்கள். அதை நான் ஏற்கவில்லை. எனக்கென்னவோ சட்டமன்றத்திலே அவ்வளவு ஆர்வம் இல்லை. வெளியேயிருந்து கொடுக்கும் குரல்தான் வலிவாக இருக்கும் என்று எண்ணினேன். அப்போது அப்படிக் குரல் கொடுக்க உடம்பு பொருத்தமாக இருந்தது. இரத்தத் திமிர் என்று சொல்லுகிறார்களே அதுவும் அந்த எண்ணத்தைக் கொடுத்திருக்கலாம். அப்படி உள்ளே வந்த பிறகு அந்த இரண்டு பேரும் என்னை அனுப்பிவிட்டுப் போய்விட்டார்கள். இந்தக் காட்சியை அவர்களுடைய ஆன்மா என்னை வாழ்த்துகிறது. இந்தக் ஆன்மாவை நம்புவதால் சொல்லுகிறேன், முதலிலே காணுகிறேன். என்னை பாராளுமன்ற அரசியலில் கொண்டு வந்து அவர்கள்தான் போனார்கள். அடுத்த நிலையிலே காங்கிரசிலிருந்து விட்டுவிட்டுப் சொன்னார்கள். அப்படி வெளியேறிய வெளியேறிய நிலையைச் 1957 தேர்தலிலே, 1962 தேர்தலிலே "தேசிய என்னாலும் கூட, கொடுப்பது" என்ற வார்த்தை ஜாலத்தைக் சக்திகளுக்கு ஆதரவு காங்கிரசை ஆதரித்தது. அதற்குக் காரணம், கொண்டு எனது இயக்கம் தயவு இருந்தா எல்லைப் பிரச்சினை தீரவில்லை, ஆளும் கட்சியின் ஒழிய முடியாது என்பதுதான். இப்போது வாய்ப்பு கிடைப்பதால் அதை நினைவூட்டுகிறேன். சட்டமன்றத்திலே தமிழரசுக் கழக உறுப்பினர் ஒருவரும் இல்லை. கேரள மன்றத்திலே ஒருவரும் இல்லை, ஆந்திர மன்றத்திலே ஒருவரும் இல்லை. நாடாளுமன்றத்திலே இல்லை, திருத்தணி பிரிந்ததையும், கன்னியாகுமரி பிரிந்ததையும் இந்தச் சட்ட மன்றம் ஏற்க ஒப்புக்கொண்டது. அரசியல் சட்டப்படி கேரள சட்டமன்றமும், ஆந்திர சட்டமன்றமும் கொடுக்க இசைந்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இந்த மூன்று சட்டமன்றங்களும் நிறைவேற்றிய பிறகு நாடாளுமன்றத்திலே சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து எல்லைகளை மாற்றியமைக்க வேண்டும். இவ்வளவுக்கும் பிறகு இந்தச் சாதனையை பத்திரிகைகளின் ஆதரவோடும், கட்சிகளின் ஆதரவோடும் என்னால் செய்ய முடிந்தது என்றால், ஆளும் கட்சியான காங்கிரஸ் எவ்வளவு உதறித் தள்ளினாலும், உதைத்துத் தள்ளினாலும், தமிழ் நாட்டின்

எல்லைகள் மீட்கப்பட வேண்டும் என்று எனக்குள்ள பற்றுதான் காரணம். அன்றைக்கு சென்னையைக் காத்திரா விட்டால், இன்றைக்கு சண்டிகார் கதிக்கு சென்னை ஆகியிருக்கும் என்பதை நான் நன்றி உணர்வோடு நினைக்கிறேன். திரு இராஜாஜி அவர்கள் சென்னைக்காக கை கொடுத்தார்கள். தமிழ் நாடு என்று பெயர் வைக்க பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே இங்கே தீர்மானம் நிறைவேற்றி ஒத்துழைத்தார்கள். இப்போதுள்ள முதல்வர் அவர்களுடைய அமைச்சர வைக்கும் அவருடைய கட்சியினருக்கும் முதலிலே நான் நன்றி சொல்ல வேண்டும். நான் அவர்கள் கட்சியைச் சார்ந்தவன் அல்ல என்றாலும், அவர்கள் பலத்தைக் கொண்டுதான் இந்தத் தலைவர் பதவியில் என்னால் வந்து அமர முடிகிறது என்பதை நன்றியோடு நான் சொல்லியாகவேண்டும். அவர்கள் தேசியத்திற்கு எந்த அளவிற்கு சொல்லி முடியுமோ, தெய்வீகத்திற்கு எந்த அளவிற்கு இழுக்க முடியுமோ—இழுக்க சொன்னால் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இதைத் மறுக்கமாட்டார்கள் என்று நினைப்பதால் இதையும் சேர்த்தே சொல்லுகிறேன்—அந்த அளவிற்கு முடிந்த வரைக்கும் இந்த நாட்டிலே பிளவுபட்ட சக்திகளை ஒன்றுபடுத்தக் கைகொடுக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

மகாராஷ்டிர சட்டமன்ற மேலவைத் தலைவர் இங்கே வந்தார். "வீர சவர்க்காருக்கு நாங்கள் பம்பாயில் நினைவாலயம் வைக்கப் போகிறோம். அதற்காக நீங்கள் சிபார்சு செய்து இந்த அரசிடம் உதவி வாங்கிக் கொடுங்கள்" என்று என்னை அவர் கேட்டுக்கொண்டார். நானும் கொஞ்சம் அரை மனதோடு முதல்வர் அவர்களைச் சந்தித்தேன். அவர் லோகமானிய திலகருடைய பிள்ளை வழிப் பேரர். முதல்வரும் சந்திக்க வைத்து அவரை அறிமுகப்படுத்தி அவர்கள் உதவி கேட்கிறார்கள் என்று கூறி "நானும் சேர்ந்து கையேந்துகிறேன்" என்று கூறி கையை நீட்டினேன். மறு கணமே தன்னுடைய அலுவலரை அழைத்து 'செக்' புத்தகத்திலே கையெழுத்துப் போட்டு ஐம்பதாயிரம் ரூபாயை முதல்வர் அவர்கள் கொடுத்தபோது, மகாராஷ்டிர மேலவைத் தலைவர் அவர்களே அதிர்ச்சி அடைந்துவிட்டார்கள்.

(முற்பகல் 11-40)

"இது என் சொந்தப் பொறுப்பிலே இருந்து" என்று சொன்னார்கள். "அரசு பொறுப்பிலே இருந்துதான் நான் உங்களைக் கொடுக்கச் சொல்லிக் கேட்டேன்" என்றேன். "அதைப் பிறகு பார்ப்போம்; இப்போது வந்தவரை வெறும் கையோடு அனுப்பவேண்டாம்; எனது சொந்தப் பொறுப்பில் இருந்து தருகின்றேன்" என்றார். இதையெல்லாம் பார்க்கின்றபோது, என்னுடைய உடம்பு இதைவிடப் புளிப்பதற்கு வேறு என்ன இருக்கமுடியும்? எப்போதும் நான் உணர்வுகளால் வாழவில்லை. கொள்கை என்ற உணர்வுகளால்தான் வாழ்கிறேன். உங்களுக்கே தெரியும், விருந்துக்கு வருகிறபோதெல்லாம் விளம்பரப் பட்டவன் என்று. உயிர் வளர்க்கும் அளவுக்குத்தான் நான் உணவை



உட்கொள்கிறேன்; உடல் வளர்க்க நான் உணவு உட்கொள்ள முடிய வில்லை. நான் என்னுடைய உணர்வுகளால் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அந்த உணர்வுகளுக்கு கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு எல்லா கட்சிகளின் ஒத்துழைப்புக்கு நான் பாடுபட்டால்தான், என் காலத்தின் உணர்வுகளை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியுமோ அதைச் செய்ய முடியும். நான் குடும்பத்தில் பேரப் பிள்ளைகளைப் பெற்றிருக்கிறேன், அப்படி என் கொள்கைகளுக்கு, என் உணர்வுகளுக்குப் பிள்ளைகளை இங்கே நான் காணுகிறேன்; பேரப் பிள்ளைகளைக் காணுகிறேன். என் காலத்தில் முடியாதவற்றை நிறைவேற்றி வைக்கும் நம்பிக்கையோடு இந்த மகத்தான பொறுப்பை ஏற்கிறேன்.

திரு. தாமஸ் அவர்கள், ஆசிரியர்களும் பட்டதாரிகளும் நான் தலைவராக வந்ததற்கு மகிழ்ச்சி அடைகிறார்கள் என்று சொன்னார்கள்; மறு கணத்திலேயே அவர்களுக்கு உணர்ச்சி வந்துவிட்டது; பல்கலைக் கழகம் தங்களுக்குப் பட்டம் தந்திருக்கிறதென்று சொன்னார்கள். நான் பட்டதாரி ஆகித்தான் ஆசிரியர்களும், பட்டதாரி ஆசிரியர்களும் வரவேற்கிறார்கள், பாராட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு வளர்வதற்கு எல்லோருமே தான் கைகொடுத்திருக்கிறார்கள். யாரையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இன்னும் கூட நாவலர் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். நான் எப்படி யெல்லாம் பேசுவேன் என்று சொன்னார்கள். அவரைப்போலவே தான் நானும் பேசிக்கொண்டு வருகிறேன். இது புதிது அல்ல, நான் திரும்பத் திரும்பச் சொல்லுவது நமது மாநிலத்திற்கு கூடுதல் அதிகாரங்கள் தேவை. ஒருமைப்பாட்டிற்கு கேடு அற்ற வகையிலே இந்த மாநிலத்திற்கு கூடுதல் அதிகாரங்கள் தேவை. நான் இந்தப் பொறுப்பு ஏற்றுங்கூட நல்ல வார்த்தைகளால் அங்கீகரிக்கப்படுகின்ற போது எனக்குக் கவனம் எங்கோ தான் செல்கிறது. அந்த என்னைக் களை எல்லாம் புரிந்து தமிழக மக்கள் நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன். தமிழக அரசும் கூடுதல் அதிகாரங்களைப் பெற்று மக்களுடைய வாழ்க்கைத் தேவைகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டும். அதே மாதிரி எல்லா மாநிலங்களும் நிறைவேற்றி தேசம் ஒரு வலிவான நாடாக இருப்பதை எண்ணிப் பார்ப்பதற்கு ஆண்டவன் என்னை வாழ வைப்பான் என்று நம்புகின்றேன். இப்போது வயது 78 என்று யாரோ சொன்னார்கள் என்று கேள்விப்பட்டேன். ஒரு கவலையும் வேண்டாம். இந்த 6 ஆண்டுகளையும் நான் முற்றுவிப்பேன் என்று உறுதிகொள்கிறேன். உங்களுடைய வாழ்த்தினுடைய பலத்தோடு இந்த 6 ஆண்டுகள் முழுவதும் இருந்து சபையை நடத்துவேன். திரும்பத் திரும்ப நான் வேண்டுகிறேன். முன்னோர்கள் எல்லாம் எப்படிக் கண்டார்கள். நான் பொறுப்பு ஏற்ற உடனே சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்புகள் அவ்வளவையும் படித்துப்பார்த்தேன். அவைகள் எல்லாம் ஆங்கிலத்திலே இருந்தன. என் ஆங்கில ஞானம் சொற்ப அளவுதான். அதுவும் அங்காங்கே பயின்று கொண்டதுதான். ஆனால் சில பேருக்கு ஆங்கில ஞானம் எவ்வளவு உண்டோ அந்த அளவுக்கு எனக்கு ஆங்கில ஞானம் உண்டு. அதை வைத்து என்னால் சரிப் படுத்திக் கொள்ள முடிந்தது. அதையெல்லாம்படித்துப் பார்த்தேன்.

இந்தியாவுக்கே பார்லிமெண்டரி ஞானத்தைக் கொடுத்தது இந்த மன்றம் தான். காரணம் மகாகனம் சீனிவாச சாஸ்திரி, டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் எல்லாம் இந்த மன்றத்தில் இருந்து இந்தியாவின் பார்லிமெண்டுக்கே வழிகாட்டி இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் கூட நீங்கள் படித்து இருப்பீர்கள்; இல்லையானாலும் ஒரு முறை எடுத்துப் படித்துவிடுங்கள். உங்களுடைய உள்ளங்கள் வலிமை பெறுவதற்கு அவர்களுடைய நடவடிக்கைகள் எல்லாம் வழிகாட்டியாக இருக்கும். 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற நூலை எழுதியபோது இரண்டாவது முறையாக சட்ட மன்ற நடைமுறையைப் படிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டு படித்தேன். நான் மீண்டும் எல்லோரும் பாராட்டியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றத்தின் விதிமுறைப்படி, இந்த மன்றத்தின் மரபுகளின்படி நாம் நடந்து கொள்வோமானால் இந்த மன்றம் இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருக்கிறது, இருக்கும், இருக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் கைகூப்பி வணங்கிக் கேட்டுக்கொண்டு எனது நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன்.

## 5. அரசின் தீர்மானங்கள்.

### (1) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156 ஆவது விதியின்படி 1984-85 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

என்று முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156 ஆவது விதியின்படி 1984-85 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக் கிணங்க தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2 (1) ஒழுங்குமுறை விதிகளிணங்க 1984—85 ஆம் நிதி



ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்குக் கீழ்க்காணும் நிகழ்ச்சிநிரலை வரையறுக்கிறேன்:—

| | |
|---|---|
| வேட்பு மனுக்கள் வரப் பெறுவதற்கான நாளும் நேரமும். | 26—4—84 நண்பகல் 12·00 மணி. |
| வேட்பு மனுக்கள் சரிபார்ப்பதற்கான நாளும் நேரமும். | 26—4—84 பிற்பகல் 1·00 மணி. |
| வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும் நேரமும். | 27—4—84 நண்பகல் 12·00 மணி. |

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஒன்பது பேருக்கு மேற்படின் தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

### (2) அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173 ஆவது விதியையொட்டி 1984-85 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173 ஆவது விதியையொட்டி 1984-85 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒற்றை மாற்று வாக்குமூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2 (1) ஒழுங்குமுறை விதிக்கிணங்க, 1984-85 ஆம் நிதியாண்டிற்கான அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்கண்ட நிகழ்ச்சிநிரலை வரையறுக்கிறேன்:—

| | |
|---|---|
| வேட்பு மனுக்கள் வரப்பெறுவதற்கான நாளும் நேரமும். | 26—4—84 நண்பகல் 12.00 மணி. |
| வேட்பு மனுக்கள் சரி பார்ப்பதற்கான நாளும் நேரமும். | 26—4—84 பிற்பகல் 1.00 மணி. |
| வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும் நேரமும். | 27—4—84 நண்பகல் 12.00 மணி. |

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஆறு பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின், வாக்குப்பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப் படும்.

## (3) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"இந்த அவையின் உறுப்பினர் திரு ம. சங்கரலிங்கம் அவர்களது சட்டமன்ற மேலவையின் உறுப்பினர் காலம் 20—4—1984 அன்று முடிவடைந்து விட்டதால் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகச் சட்டம், 1971, பிரிவு 18-ன்கீழ் உள்ள துணைப் பிரிவு (2)-ல் அடங்கிய "ஏனைய இரண்டாம் நிலை உறுப்பினர்கள்", என்ற தலைப்பின் கீழ்வரும் (h) உட்பிரிவின் கீழ் இந்த அவை, அந்த பல்கலைக் கழக நிர்வாகக் குழுவுக்கு மாண்புமிகு மேலவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இந்த அவையின் உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:—

"இந்த அவையின் உறுப்பினர் திரு ம. சங்கரலிங்கம் அவர்களது சட்டமன்ற மேலவையின் உறுப்பினர் காலம் 20—4—1984 அன்று முடிவடைந்து விட்டதால் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகச் சட்டம், 1971. பிரிவு 18-ன்கீழ் உள்ள துணைப் பிரிவு (2)-ல் அடங்கிய "ஏனைய இரண்டாம் நிலை உறுப்பினர்கள்", என்ற தலைப்பின் கீழ்வரும் (h) உட்பிரிவின் கீழ் இந்த அவை, அந்த பல்கலைக் கழக நிர்வாகக் குழுவுக்கு மாண்புமிகு மேலவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இந்த அவையின் உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு உறுப்பினர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கென கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| நியமனத்தாள்கள் வந்து சேர கடைசி நாளும், நேரமும். | 26—4—1984 காலை 10.30 மணி. |
| நியமனத்தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும், நேரமும். | 26—4—1984 காலை 11.30 மணி. |
| நியமனத்தாள்களை திரும்பப் பெற கடைசி நாளும், நேரமும். | 27—4—1984 காலை 11.30 மணி. |

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் வாக்கெடுப்பு நடைபெறும்.

நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## (4) தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மைத் துறையின் 24—3—1981 நாளிட்ட 645 ஆம் எண் அரசாணையில் மாற்றியமைக்கப்பட்ட தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினராக திரு காடுவெட்டி கண்ணப்பன், எம்.எல்.சி. சட்டமன்ற மேலவையினால், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959), 8 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும்;

மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினரின் பதவிக்கால அளவு மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் (a) பகுதியின்கீழ், 23—3—1984 அன்று முடிவடைந்துள்ளதாலும்;

எனவே, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8 ஆவது உட்பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியினையொட்டி, மேற்சொன்ன குழுவின் உறுப்பினராக இருக்க, சட்டமன்ற மேலவையின் உறுப்பினர் ஒருவரை இம்மன்றம் தேர்ந்தெடுக்க வேண்டும்."

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"வேளாண்மைத் துறையின் 24—3—1981 நாளிட்ட 645 ஆம் எண் அரசாணையில் மாற்றியமைக்கப்பட்ட தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினராக திரு காடுவெட்டி கண்ணப்பன், எம். எல். சி. சட்டமன்ற மேலவையினால், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959), 8 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும்;

மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினரின் பதவிக்கால அளவு மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் (a) பகுதியின்கீழ், 23—3—1984 அன்று முடிவடைந்துள்ளதாலும்:



எனவே, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8 ஆவது உட்பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியினையொட்டி, மேற்சொன்ன குழுவின் உறுப்பினராக இருக்க, சட்டமன்ற மேலவையின் உறுப்பினர் ஒருவரை இம்மன்றம் தேர்ந்தெடுக்கவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்களை 26—4—1984 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்குள் செயலாளரிடம் சேர்க்கவேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 26—4—1984 வியாழக்கிழமை பிற்பகல் 1·00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 27—4—1984 வெள்ளிக்கிழமை நண்பகல் 12·00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் தேர்தல் நடைபெறும். தேர்தலுக்கான நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (4) அவை நிகழ்ச்சி நிரல் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் 25 மற்றும் 26 ஆம் நாட்களில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதம் 27 ஆம் தேதி எடுத்துக் கொள்ளப்படும்.

(முற்பகல் 11-50)

## 5. அரசின் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (5) மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"அவைமுன் வைக்கப்பட்டுள்ள மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"அவைமுன் வைக்கப்பட்டுள்ள மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் தங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

424 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 267 நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் உள்ளன. 70 தொடக்க சுகாதார நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் மட்டுமே உள்ளன. ஏனையவற்றிற்கு, அரசு 1984-85 ஆம் ஆண்டில் 18 லட்சம் ரூபாய் இறுதிச் செலவில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்களைக் கட்டும் பணியை மேற்கொள்ளக் கருதியுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் இன்றைக்குத் தமிழகத்திலே சரியாகச் செயல்படவில்லை. எந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போனாலும், மக்களுக்குச் சரியாக மருந்துகள் கிடைப்பதில்லை. ஒருசில ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்துகள் இருந்தாலும் அங்கே டாக்டர்கள் இருப்பதில்லை. பாதிக் கணக்கில் டாக்டர்கள் இருப்பதில்லை. ஏழை எளிய கிராம மக்கள் பயன் அடைவதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் இன்றைக்கு இந்த அவல நிலை காணப்படுகின்றது. இதைப் போக்க அரசு தீவிரமான நடவடிக்கை எடுத்து, ஏழை எளிய கிராம மக்களுக்கு மருந்துகள் கிடைக்க வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆஸ்பத்திரிக்குச் சென்றால் அங்கே டாக்டர் இல்லை என்ற நிலை இருக்குமானால், அந்த நோயாளியின் நிலை என்னவாகும்? ஆகவே இதையும் போக்குவதற்கு வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

@ 184-289-ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளன.



அடுத்தாற்போல், கிராம மக்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. இப்போது 1984-85 ஆம் ஆண்டில் மேலும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதுபோல் அரசு நல்ல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருந்தாலும் கிராமங்களுக்குப் போய்ப் பார்த்தால் அங்கே ஊர்திகள் கிடையாது. ஏழை எளிய மக்களின் சுகாதார மேம்பாட்டுக்காகக் கொண்டு போகப்பட்ட ஊர்திகள் பழுதடைந்து கிடப்பதைப் பார்க்கிறோம். "ஏன் இப்படி இருக்கிறது, என்று கேட்டால் "நாங்கள் அனுப்பி வைத்திருக்கிறோம், போனது இன்னும் திரும்பி வரவில்லை" என்று பதில் சொல்கிறார்கள். ஆகவே பழுதடைந்த ஊர்திகளைச் சரிசெய்து அனுப்பிவைத்து, மக்களுக்கு வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மலேரியா நோயை ஒழிப்பதற்கென்று 1958 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1977 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசின் திருத்தப்பட்ட திட்டத்தின்படி நிறைவேற்றப்பட்டு வருகின்றது. திருத்தப்பட்ட செயற்திட்ட பணிகளின்படி அடிப்படைச் சுகாதாரப் பணியாளர்கள் கிராமப் பகுதியில் ஒவ்வொரு வீட்டிற்கும் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை சென்று மலேரியா நோயினால் எவரேனும் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்று கண்டறிய வேண்டும். ஆனால் தற்போது இது உண்மையாகவே நடைபெறுகிறதா என்பதை ஆராய வேண்டும்.

இன்றைக்கு இந்த அரசு எவ்வளவோ காரியங்களை கிராம மக்களுக்குச் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறது. அந்த எண்ணம் ஈடேறுகிறதா என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு மலேரியா நோயினால், மலேரியா மூளை காய்ச்சலினால் கிராம மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே தான், கிராமத்திற்கு அதிகாரிகள் சென்று, பணிகள் உண்மையில் நடைபெறுகின்றனவா என்பதைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சென்னை நகரிலே மலேரியா அதிகமான அளவில் பரவியிருக்கிறது. ஏன் பரவாது? இன்றைக்கு எங்கு பார்த்தாலும் கொசு. பலமுறை இதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். சென்னை நகரத்திலே கொசுத் தொல்லை மக்களுக்கு அதிகமாக இருக்கிறது. இந்தக் கொசுவை ஒழிப்பதற்கு கொடுக்கப்பட்ட மருந்தையும் அதிகாரிகள் சாப்பிட்டுவிட்டதாக பத்திரிக்கையில் செய்தி வந்தது.

(மாற்றுத் தலைவர் திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா தலைமை)

4 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மருந்துகளை அதிகாரிகள் எப்பாா. விட்டு விட்டார்கள். எப்படி மக்களுக்கு மருந்து வந்து சேரும்? கொசுவை ஒழிக்கக் கொடுத்த 4 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மருந்துகளை அதிகாரிகள் சாப்பிட்டால் கொசு எப்படிப் போகும்? பல மடங்கு பெருகி பட்டாளமாகத்தான் வரும். இந்த அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து சஸ்பெண்ட் செய்து பிறகு அவர்கள் கோர்ட்டுக்குப் போய் மறுபடியும் அந்தப் பதவிக்கே வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆகவே இதற்கெல்லாம் விரைவில் முடிவு காண வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாற்றுத் தலைவர் அவர்களே, கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு 'சஸ்பென்ஷன்' ஆர்டர் போட்ட பிறகு அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். தெளிவாக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அவர்கள் கோர்ட்டுக்குப் போய் அங்கே தற்காலிகமாக வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றால், அதற்கு அரசாங்கம் பொறுப்பல்ல. பல நடவடிக்கைகளை எடுக்கிறோம். அவர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். அந்த உரிமையை வைத்துக் கொண்டு கோர்ட்டு கொடுத்துள்ள ஜட்ஜ்மெண்டை வைத்துக்கொண்டு மீண்டும் பதவியில் சேரும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இங்கே கோர்ட் பற்றி நாம் பேச முடியாது. பேசினால் மாண்புமிகு உறுப்பினரவர்களே குறை சொல்லுவார்கள். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். தயவு தாட்சண்ணியமின்றி நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு தாஸ் அவர்கள் அதைப் பாராட்டுவார்கள் என்று நினைத்தேன். நடவடிக்கை எடுப்பதில் அரசு உறுதியாக இருக்கிறதென்று சொல்லுவார்கள் என்று நினைத்தேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** நடவடிக்கை எடுத்ததை ஒருவிதத்திலே பாராட்டினாலும் இந்த நடவடிக்கைகளை சரியான முறையிலே எடுக்காததால் அவர்கள் கோர்ட்டுக்குப்போய் வெற்றிபெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. கோர்ட்டிலே கொடுத்த தீர்ப்பு கமிஷனரதான் சஸ்பெண்ட் செய்ய வேண்டும். அரசாங்கம் செய்யக்கூடாது என்பதுதான். இதையெல்லாம் கவனித்து நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிராது. 4 லட்சம் ரூபாய் பணத்தையும் சாப்பிட்டுவிட்டு மக்களை எல்லாம் கொசுவைவிட்டு கடிக்க வைத்தவர்கள் மீண்டும் வந்து பதவியில் அமர அனுமதி தரக்கூடாது. அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் முன்பே இதைக் கவனித்திருந்தால் இந்த இடைஞ்சல் ஏற்பட்டிராது என்று நினைக்கிறேன்.

யானைக்கால் நோய் கியூலெக்ஸ் வகை கொசுக்களினால் பரவுகிறது. தேசிய யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் 19 நோய்க் கட்டுப்பாடு பிரிவுகளும், 33 யானைக்கால் நோய் சிகிச்சைப்



பிரிவுகளும் நோய் ஆய்வுப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் செயல்பட்டு வந்தாலும் இன்றைக்கு யானைக்கால் பரவிக் கொண்டே வருகிறது. இதற்குக் காரணம் என்ன? இங்கே உள்ளவர்கள் இதைக் கவனிப்பதில்லை. அரசு மருந்துகளைக் கொடுக்கிறது. இதற்காகப் பல கோடி ரூபாயை அனுமதிக்கிறோம். அமைச்சரவர்கள் பாடுபடுகிறார்கள். எல்லாக் காரியங்களும் நடக்கின்றன. ஆனால் இங்கே சரியாகப் பணியாற்றவில்லை, நான் இங்கே உள்ள குறைகளைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து உணவுக் கலப்படத்தைத் தடுத்தல் பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். உணவு எங்கே கலப்படம் இல்லாமல் இருக்கிறது? எதிலும் கலப்படம். எங்கும் கலப்படம். இன்றைக்கு பெரும்பாலான மக்கள் நாகரீகத்திற்காகவும் அவசியத்திற்காகவும் ஓட்டல்களில் சாப்பிடுகிறார்கள். அங்கே கலப்படம் அதிகமாக இருக்கிறது. அதுபற்றி எந்தவித நடவடிக்கையும் இல்லை. ஏதோ 10 கேஸ், 20 கேஸ் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் கடுமையான நடவடிக்கை இல்லை. எதில் எடுத்தாலும் கலப்படம் இருக்கிறது. இதற்கு அதிகாரிகள்தான் காரணம். இதை அமைச்சரவர்கள் போய்ப் பார்க்க முடியுமா? மேலே உள்ள பெரிய அதிகாரிகள் பார்க்க முடியுமா? இங்கே உள்ளவர்கள் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து பெற வேண்டியதை பெற்றால் வந்து விடுகிறார்கள். அதற்காக ஸ்பெஷல் ஸ்குவாட் போட்டு அந்த இடத்தில் என்ன நடக்கிறதென்று பார்த்து பிடித்தால் அவர்கள் பயப்படுவார்கள். இன்றைக்குக் கலப்படம் சர்வசாதாரணமாக நடக்கிறது. இன்றைக்குக் கலப்படத்தால்தான் பல வியாதிகள் வருகின்றன.

(நண்பகல் 12–00)

ஆகவே கலப்படத்தைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகள் போய் பார்க்கிறார்கள் என்பதோடு மாத்திரம் நின்றுவிடக் கூடாது. இங்கே இருக்கின்ற சில அதிகாரிகள் செய்கின்ற தவறுகள் காரணமாகத்தான் கலப்படத்தைத் தடுக்க முடியவில்லை. அதன் காரணமாக நோய்கள் வருகின்றன. ஓட்டல்களில் அதிகாரிகள் மட்டும் போய்ப் பார்த்தால் போதாது. அதிகாரப் பற்றற்ற குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அந்த அதிகாரப் பற்றற்ற குழுவில் பொது சேவையில் ஈடுபட்டுள்ளவர்களை, அதிகாரப் பற்றற்றவர்களை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும். அவர்கள் திடீரென்று ஓட்டல்களில் போய்ப் பார்த்து இன்னின்ன சுகாதாரக் கேடுகள், இன்னின்ன ஓட்டல்களில் இருக்கின்றன என்று அமைச்சருக்குத் தெரிவித்தால் அமைச்சர் உடனே நடவடிக்கை எடுக்க அது வாய்ப்பாக அமையும். இதையும் மாண்புமிகு அமைச்சர் செய்ய வேண்டும்.

அடுத்து இன்றைக்கு தொழுநோயாளிகளை நாம் பார்க்கிறோம். இது பற்றி பத்திரிகையில் கூட செய்தி வந்தது, 1½ கோடி பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், இந்தியாவில் மட்டும் 40

லட்சம் தொழு நோயாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அதில் தமிழ்நாட்டில் மட்டும் 7 லட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் செய்தி வந்தது. வீதிகளிலே எங்கே பார்த்தாலும் தொழுநோய் பிச்சைக்காரர்கள் இருப்பதை நாம் பார்க்கிறோம்: மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் மட்டும் தான் இந்நோயாளிகள் அதிகம். அதாவது 7 லட்சம் பேர் என்றால் தமிழகத்தில் மட்டும் தொழு நோயாளிகள் அதிகமாவதற்குக் காரணம் என்ன என்பதைப்பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும்: இந்த நோயை எப்படியாவது தடுக்க வேண்டும்: ஆரம்பத்திலிருந்தே பள்ளிப் பிராயத்திலிருந்தே இந்த நோயைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் ஒரு வேளை தொழுநோயாளிகளின் எண்ணிக்கையை 7 லட்சத்திலிருந்து 5 லட்சமாகக் குறைக்கலாம் என்று கருதுகிறேன்: அப்படிச் செய்தாவது வீதிகளிலே எங்கெங்கு பார்த்தாலும் தொழுநோயாளிகள், தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கின்ற போக்கைத் தடுக்க வேண்டும்.

அடுத்து குடும்ப நலத் திட்டத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை: ஏற்கனவே குடும்ப நலத் திட்டம்பற்றி பிரச்சாரம் செய்வதில் 32 ஸ்தாபனங்கள் ஈடுபட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் விட்டுவிட்டு ஏதோ தனி ஸ்தாபனமாக இருக்கின்ற ஒரு அமைப்புக்காக 1 கோடியே 30 லட்சம் ரூபாய் கொடுப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது, இது என்ன அக்கிரமம்?

மாண்புமிகு டாக்டர் எச் வி. ஹண்டே: எதைப்பற்றி உறுப்பினர் கூறுகிறார் என்று விரிவாக, விளக்கமாகச் சொன்னால் நான் பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

திரு ஏ. ஜே. தாஸ்: குடும்ப நலத் திட்டத்தை குடிசை மக்களிடையே பிரச்சாரம் செய்ய "உழைக்கும் மாதர் மன்றம்" என்ற பெயரில் இருக்கின்ற ஒரு அமைப்புக்கு தனிப்பட்ட அமைப்புக்கு 1 கோடியே 30 லட்சம் ரூபாய்க்கு சிபாரிசு செய்திருக்கிறார்கள். புராஜெக்ட் ரிப்போர்ட்டில் கூட அவர்கள் கையெழுத்து போடவில்லை. ஆனால் ஏற்கனவே 32 நல்ல ஸ்தாபனங்கள் இதற்காக இருக்கின்றன. அவற்றை நாம் 'ரிகக்னைஸ்' பண்ணியிருக்கிறோம், அப்படி இருந்தும்கூட தனிப்பட்ட முறையில் பெயர் வைத்துக் கொண்டிருக்கிற இந்த அமைப்புக்குப் பணம் வழங்க சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதில் உள்ள அம்மையாருக்கு 2 ஆயிரம் ரூபாய்:

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஏதோ கற்பனை செய்து கொண்டு உறுப்பினர் சொல்கிறார். அப்படி ஒன்றும் இடையாது. அதற்கான கமிட்டியில் உறுப்பினரும் இருக்கிறார். பிரச்சாரத்திற்காக என்று டெப்யூட்டி டைரக்டர் ஒருவர் இருக்கிறார். திட்டவட்டமாகச் சொல்கிறேன், அப்படி ஒன்றும் இடையாது. ஏதோ கற்பனையாக அப்படி யாராவது சொல்லியிருந்தால். உறுப்பினர் அதுபற்றிக் கவலைப்பட வேண்டாம்.



திரு. ஏ. ஜே. தாஸ்: நான் சொன்னது ஒன்றும் கற்பனை இல்லை. அமைச்சரிடம் தனியாக இதுபற்றிச் சொல்கிறேன். அதற்குண்டான தஸ்தாவேஜுகளுடன் சபையிலே நான் விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை.

ஆகவே அமைச்சர் அவர்கள் அதற்காக ஒரு நேரத்தை ஒதுக்கினால் அமைச்சரிடம் நேரடியாகக் காட்டுகிறேன். இந்த நிலைமைகளையெல்லாம் போக்க வேண்டும். இப்படி பல தவறுகள் நடப்பதை அந்த இலாக்கா கண்காணிக்க வேண்டும்.

மருத்துவ மனைகளை எடுத்துக் கொண்டால் பொது மருத்துவ மனையானாலும் மற்ற மருத்துவ மனைகளானாலும் சரி மிகவும் சுகாதாரக் குறைவாக இருக்கின்றது. காரணம் அநேக மக்கள் தினசரி வருகிறார்கள். சிகிச்சை பெறுகிறார்கள். மக்கள் இன்றைக்கு மருத்துவ மனைகளை நாடித்தான் வருகிறார்கள். முன்பெல்லாம் மருத்துவ மனைகள் என்றாலே மக்களுக்குப் பயம் தான் வரும். வரவே பயப்படுவார்கள். ஆனால் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. எல்லோரும் மருத்துவ மனைக்கு வந்து சிகிச்சை பெறுகிறார்கள். ஆகவே ஜனக் கூட்டம் அதிகமாகிவிட்டது. படுக்கை வசதிகள் சரியாக இல்லை. கிழிந்த பாயைப் போட்டு அதிலே நோயாளிகளைப் படுக்க வைக்கிறார்கள். டாக்டர்கள் போன்ற பணியாளர்களுக்கு வேலைச்சுமை அதிகமாக இருக்கிறது. இருந்தாலும் அந்த சுகாதாரக் குறைவைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேல் நாடுகளில் அரசாங்க மருத்துவ மனைகளை தனியார் மருத்துவ மனைகள் போல் சுத்தமாக, சுகாதாரமாக வைத்திருக்கிறார்கள். நாம் ஏழை நாட்டைச் சேர்ந்தவர்கள். அந்த அளவுக்கு சுத்தமாக வைத்துக் கொள்ளாவிட்டாலும் கொஞ்சம் சுகாதாரமாகவாவது வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்கள் இப்போது இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் எல்லாம் சென்னையிலேயே தான் இருக்க வேண்டுமா? கிராமப் பகுதிகளுக்கு இவர்கள் சேவை செய்யக் கூடாதா? ஸ்பெஷலிஸ்ட் டாக்டரிடம் சிகிச்சை பெறுவதற்காக கிராமத்திலிருந்து சென்னைக்கு ஒரு நோயாளி வரவேண்டுமென்றால் அவருக்குத் துணையாக நான்கு பேர் வர வேண்டும். இதன் காரணமாக ஏற்கனவே சென்னை நகரில் ஜன நெருக்கடி இருப்பது இன்னும் அதிகமாகிவிடுகிறது. இதனால் பல தேவைகள் அதிகரிக்கின்றன. ஆகவே நல்ல ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்ப வேண்டும். அங்கே எல்லாம் அவர்கள் பணியாற்ற வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். சென்னையிலேயே மட்டும் அவர்கள் இருக்கக்கூடாது. சுகாதாரத் துறைக்காக ஏராளமான பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். அவைகளை நல்ல முறையில் செலவிட்டு நல்ல திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. க. அருணாசலம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் பற்றி என்னுடைய கருத்துக்களையும் தெரிவிப்பதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு பெரிய குறிப்புக்கள் இதிலே இருப்பதால் விரிவாகப் பேச நேரமிருக்காது. ஆகவே சுருக்கமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன்.

மருத்துவத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 99 கோடி, அதிலே இந்திய மருத்துவத்திற்காக எவ்வளவு தொகை ஒதுக்கியிருக் கிறோம்? தமிழ் மருத்துவத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கியிருக் கிறோம்? அதைப் பார்த்தால், நமது கொள்கையில் எவ்வளவு பற்றற்றவர்களாக இருக்கிறோம் என்பதைப் பார்க்கலாம்; இத்தனை ஆண்டுக்காலமாக நாம் சொல்லிக் கொண்டு வந்தும், இன்னும் ஆங்கில மருத்துவத்திற்குத்தான் 14 கோடி ரூபாயை இங்கே ஒதுக்குகிறோம். ஆண்டுக்கு ஆண்டு இதற்காகவே அதிகச் செலவு செய்கிறோம். ஆனால் உலகத்தார் நம்மைப்பற்றி என்ன நினைக் கிறார்கள் என்றால், மற்ற நாடுகள் எல்லாம் வைத்தியத் துறையில் பின் தங்கியிருக்கின்றபோது நாம் நமக்கென்று ஒரு வைத்திய முறையை வைத்து அதை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வந்தோம். இருந்தாலும் இந்திய மருத்துவத்திற்காக நாம் அதிகத் தொகை ஒதுக்குவதில்லை. நவீன முறைகளை இந்திய மருத்துவத்தில் புகுத்தினால், இன்னும் அதிகமாக நாம். மருத்துவ வளர்ச்சியடைய முடியும். அண்மையில் அறிஞர்கள், நமது இந்திய மருத்துவத்தின் சிறப்பைப்பற்றி ஆர்கியாலஜி டாக்குமெண்ட்களின்படி கண்டுபிடித்திருக் கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

அண்மையில் மெக்சிகோ நாட்டைச் சார்ந்த திரு ஈவான் எலியச் என்பவர் வட இந்தியாவைச் சுற்றிப் பார்த்து அங்கேயிருக்கும் ஆயுர் வேத முறையைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார். அதற்காக பல்வேறு கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களிடம் இதைத் தெரிந்துகொண்டு வந்தார். பின்னாலே தமிழ் நாட்டிற்கு வருவதற்கான வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. ஆனால் அவருக்கோ தமிழ்நாட்டில் வேறொரு வைத்திய முறை இருக்கும் என்பது தெரியாது. மதுரையில் இருந்தபோது, அருகிலுள்ள கிராமப் பகுதிகளுக்குச் சென்று, அங்குள்ள மக்கள் எல்லாம் எப்படி வைத்தியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டபோது நாம் சொல்லு கிறோமே செவிலித் தாய்கள்—மிட் ஒய்ப்—நர்ஸ்—இவர்களுக்குப் பதிலாக கிராமத்திலேயே சில பெண்மணிகள் இந்தப் பணியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டறிந்து, அவர் திரும்பவும் தன்னுடைய மெக்சிகோ நாட்டிற்குப்போய் இந்த மாதிரியான முறையில் தன்னுடைய நாட்டிலும் செய்யவேண்டும், மக்கள் மத்தி





யிலேயே இருப்பவர்களைக் கொண்டே இந்த முறையை அதிகமாகப் பரவச் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். சித்த மருத்துவ முறைக்கும், இயற்கை மருத்துவ முறைக்கும் ஊக்கம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கமே இப்போதுதான் இந்த இரண்டு முறைகளுக்கும் ஊக்கம் கொடுக்கவேண்டும் என்று நினைத்து வேகமாகச் செயல் படுகிறது. நாம் பல வகையிலும் வேகமாக மாறிக் கொண்டிருந் தாலும், உலகத்தில் உடல் மேம்பாட்டுக்காக பல முறைகள் கடைப் பிடிக்கப்பட்டாலும் நமது நாட்டைப் பொறுத்தவரையில், நாம் இந்த முறைகளை மிக மிக வேகமாகக் கைக்கொண்டால்தான், 2000 ஆம் ஆண்டில் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற திட்டத்தை உண்மையிலேயே உருவாக்கி நிறைவு செய்யமுடியும். இல்லையென்றால் ஆங்கில முறை தான் தொடர்ந்து இருந்து வரும். ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் இருந்தபோது, அவர்கள் கடைப்பிடிக்கிற முறைதான் உலகத்திலேயே சிறந்த முறை என்று சொல்லி நம்மை நம்ப வைத்துவிட்டார்கள். அதிலிருந்து நாம் விடுபட நாளாகலாம். ஆனாலும் இந்தக் காரியத்தை யெல்லாம் நாம் வேகமாகச் செய்தால்தான், நம்முடைய இலக்கை அடைய முடியும் என்பதை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

மற்ற துறைகளைப்பற்றி நான் அதிகமாகப் பேசாவிட்டாலும்கூட; இயற்கை மருத்துவத்தைப்பற்றி மட்டும் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இயற்கை மருத்துவ முறையை கடந்த 8 ஆண்டு களுக்கு முன்னாலேதான் நம்முடைய அரசு அங்கீகரித்து அதற்கு இங்கே அனுமதி அளித்தது. இயற்கை மருத்துவமும் ஒரு நல்ல மருத்துவ முறைதான் என்று அரசாலே ஒப்புக்கொள்ளப்பட்டது. அது பொது சுகாதாரத்தை அடிப்படையாகக்கொண்டது. அதிகமாகச் செலவு இல்லாதது. தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளக்கூடியது. இதற்கு கல்வியறிவுதான் வேண்டும். தற்போது பொதுக் கல்வி; சுகாதாரக் கல்வி என்று பிரித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலும்கூட இப்போதும் பழையபடியே ஆங்கில முறையில்தான் எந்தக் கிருமியாலே இந்த நோய் உண்டானது என்று கண்டு பிடிக்கவே முனைகிறார்கள். நாம் இயற்கை மருத்துவ முறையைப் பற்றிச் சொல்லும்போது, சுத்தமான சூழ்நிலையில் வாழ்ந்தாலே போதும். அது முடியாவிட்டாலும், யோகாசனப் பயிற்சிகளை மேற் கொள்ளலாம். இதைத்தான 'பிசியோதெரபி' என்று மேல்நாடுகளில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த 'பிசியோதெரபி' யைத்தான் நம்முடைய முன்னோர்கள் "யோகாசன முறைகள்" என்று வைத்துக் கொண்டிருந்தார்கள். அதிலும் சூட்சுமமான யோகாசனமுறைகள் மூலமாக ஆன்மாவைக் கண்டுபிடிக்கச் செய்தார்கள். தங்கள் வாழ்க்கையில் உடல் வளத்தோடு வாழ, உடம்பில் இருக்கிற கோளாறுகளை நீக்குவதற்கு, சூட்சும யோகாசன முறைகளைப் பயன்படுத்தினார்கள். தற்போது தமிழகத்தில் இந்த முறை பெரும் அளவில் நடந்து வருகிறது.

[திரு. க. அருணாசலம்] [1984 ஏப்ரல் 25

1920 ஆம் ஆண்டிலிருந்து புதுக்கோட்டையில் சர்மா சானடோரியம் என்ற நிறுவனத்தில், தண்ணீரைக் கொண்டும் இயற்கையான மண்ணைக் கொண்டும் உடல் நலத்தைக் காப்பாற்றுவதற்கான முறையை ஒரு செலவும் இல்லாத வகையில் பின்பற்றலாம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அதிலும் பின்விளைவுகள் எதுமில்லாமல் இருப்பதற்கான முறைகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயுர்வேதமானாலும் சரி, சித்த மருத்துவமுறையானாலும் சரி, பின் விளைவுகள் எப்போதும் உண்டாகத்தான் செய்கின்றன என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். மேல்நாட்டு முறைகளில் சீக்கிரமாக குணம் கிடைக்கிறது என்றாலும் அதிலும் பின் விளைவுகள் அதிக மாகத்தான் இருக்கின்றன. ஆனால் நாட்டுப்புற உணவு முறை களாலே பின்விளைவுகள் குறைவு என்றும் அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆயுர்வேதமானாலும் சரி, சித்த வைத்திய முறை யானாலும் சரி, யுனானி மற்றும் ஹோமியோபதி முறையானாலும் சரி, பின் விளைவுகள் கொஞ்சம் இருக்கத்தான் செய்கின்றன. எனவே தான் பின்விளைவுகளே இல்லாத முறையை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்லி, இன்னும் அந்த நிலையத்தில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். 1920 ஆம் ஆண்டிலிருந்து அந்த சர்மா சானடோரியத்தில் சிறிய அளவில் சிறிய வீட்டிலேயே வைத்துக் கொண்டு ஆராய்ந்து வருகிறார்கள், பலரும் அங்கே குணமாகிக் கொண்டிருக்கிறார்கள். வெளி நாடுகளிலிருந்தும் வந்து குணமடைந் திருக்கிறார்கள். அவர்கள் "நேச்சுரல் கியூர்" என்ற பத்திரிகையை நடத்துகிறார்கள். அதில் தங்கள் ஆராய்ச்சிகளைப்பற்றியும் எப்படி யெல்லாம் தங்கள் முறைகளைக் கையாளுகிறார்கள் என்பதைப்பற்றியும் மிகவும் தெளிவாகப் போடுகிறார்கள், மேல்நாட்டுப் படிப்பு படித்த வர்களும் எம். டி., எம். எஸ். போன்ற பட்டம் பெற்றவர்களும் பார்த்து இது சிறப்பாகத்தான் இருக்கிறது என்றாலும், எல்லோருக்கும் இந்த முறை பொருந்துமா என்று சந்தேகம் மட்டும் தெரிவித்திருக் கிறார்கள். அந்தக் சந்தேகம் சரியாக இருக்கலாம். தவறில்லை. ஏனென்றால் எல்லா முறைகளிலும் எல்லா நோய்களையும் தீர்த்துவிட முடியாது. நோய் நாடல் இயல் பற்றி படிக்கிறவர்கள் இதை ஒப்புக் கொள்கிறார்கள். ஆகவே இந்த இயற்கை மருத்துவ முறை நின்று விடாமல் வளர்ச்சி அடையக்கூடிய மாதிரி காரியங்களைச் செய்ய வேண்டும். இந்திய மருத்துவத் துறையிலே இருந்து நான்கு பேரை ஐதராபாத்தில் உள்ள நான்கரை ஆண்டுப்படிப்புக்கு பல காலமாக அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் படித்து வந்து என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப்பற்றி நமக்கு ஒன்றும் திட்டவட்ட மாகத் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லு வார்கள் என்று நினைக்கிறேன். அப்படி விளக்கமாகச் சொன்னால், அதை அறிந்து பொதுமக்களுக்கு உற்சாகம் ஏற்பட்டு, அவர்களும் அதிலே ஈடுபடுவார்கள். அங்கே ஓராண்டு, இரண்டாண்டு படித்த மருத்துவர்களைக் கொண்டு பல மருத்துவ மனைகள் தமிழ்நாட்டிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. கோயம்புத்தூரில் கிருஷ்ணசாமி கவுண்டர் என்பவர் இந்த முறையை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தன்னுடைய சொந்தப் பணம் 25 லட்சம்



1984 ஏப்ரல் 25] [திரு. க. அருணாசலம்]

ரூபாயைப் போட்டு, அதற்கான கட்டிடங்களைக் கட்டி, வசதிகளை ஏற்படுத்தி சிறப்பாக நடத்திச் கொண்டு வருகிறார். அங்கே சேருவதற்கு இடம் கிடைக்காமல் பலர் வரிசையில் நிற்கிறார்கள். அதே போல சகுந்தலா சானடோரியம் என்று இன்னொரு பெரிய நிலையம் இருக்கிறது. அங்கே படித்தவர்கள் எல்லாம் பிறகு அரசாங்கத்திலே சேர்ந்துவிடுகிறார்கள், பதவி பெற்றுவிடுகிறார்கள், ஆனால் அவர்கள் வேலையில் செக்யூரிட்டி கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஏழை நாட்டில் உள்ள பணத்தையெல்லாம் எடுத்து ஒரு சிலருக்கு செல வழித்து கல்வி கொடுக்கும் ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கி றோம். அந்த முறையை மாற்றுவார்கள் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன். இந்த முறையை எவ்வளவு விரைவாக மாற்றுகிறோமோ அந்த அளவிற்கு நல்லது.

யோக சிகிச்சை என்பது நோய் வருவதற்கு முன்பே நோய் தடுப் பதற்காக பயன்படுத்தப்படுகிறது. சென்னையிலே உள்ள யோக கேந்திரத்தை அணுகி வந்து யோகப் பயிற்சியைக் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள் அதற்காக கைட்லைன்ஸ் போட்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். கிராம மேம்பாட்டுக்காக எல்லாம் நடக்கிறது என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறோம், சென்னையிலே மருத்துவமனை இருந்தாலும், சில கிராம மக்கள் வருகிறார்கள். இல்லையென்று நான் சொல்லவில்லை. கிராமங்களில் உள்ளவர்கள் சென்னைக்கு வந்து இடத்தைத்தேடிக் கண்டுபிடித்து மருத்துவம் செய்துகொள்வதில் சிக்கல்கள் அதிகமாக இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியாததல்ல. ஆகவே பரவலாக யோகக் கேந்திரங்களை வைத்தால் நல்லது. இங்கே ஏற்படுத்தினால், இங்கே உள்ளவர்களே அதைப் பயன்படுத்திக்கொள்வார்களே என்ற பயம் இருக்கிறது. சென்னையிலே எத்தனையோ இடங்களிலே யோகக் கேந்திரங்கள் இருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் அனுமதி கொடுத்து அவர்களுக்கு வேண்டிய குறைந்தபட்ச உதவியைக் கொடுக்கவேண்டும். அதிகமான உதவியைக் கொடுத்தால், அதை வாங்கிக்கொண்டு அவர்கள் சரியாகச் செயல்படமாட்டார்கள். ஆகவே குறைந்தபட்ச உதவியைக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். இயற்கை மருத்துவத்திற்கு என்று, யோகப் பயிற்சிக்கென்று அட்வைசரி கமிட்டி போட்டிருந்தார்கள். இந்திய மருத்துவத்திற்குத் தலைவராக இருந்தவர்தான் இதற்கும் தலைவராக இருந்தார். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு மாதம், இரண்டு மாதங்கள் என்று அந்தப் பதவியில் இருந்ததால், அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்போது அட்வைசரி கமிட்டியினுடைய காலம் முடிந்து போய்விட்டது. இதைப்பற்றித் தெரிந்தவர்கள் தமிழ் நாட்டில் பல பேர் இருப்பதால், அவர்களுடைய யோசனையைக் கேட்டு, யோக முறையை கிராமங்களில் எல்லாம் எப்படிப் பரப்பலாம் என்று பார்க்கவேண்டும். பல கிராமங்களில் இந்த யோக முறை சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

[திரு. க. அருணாசலம்] [1984 ஏப்ரல் 25

(பிற்பகல் 12-20)

சிறு குழந்தைகள் குனிந்து குனிந்து நடக்கிறார்கள். அவர்களுக்கு சில பயிற்சிகளைக் கொடுத்த உடன் நிமிர்ந்து நடக்க ஆரம்பிக்கிறார்கள். சின்ன வயதிலேயே அவர்களுக்கு மன நோய் வந்து விடுகிறது என்று சொல்கிறார்கள். அவர்களுக்கும் சில பயிற்சிகளைக் கொடுத்த உடனே, ஆசனப் பயிற்சிகள் செய்த உடனே, அந்த மன நோய் போய் விடுகிறது என்று டாக்டர்களே, அதாவது நிபுணர்களாக இருக்கிறவர்கள், எம். பி. பி. எஸ்., எம்.எஸ்., எம். டி. படித்தவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள், எப்படி நடந்து வருகிறார்கள் என்று சொல்லி. ஆகவே இந்த முறைகளே எல்லா நோய்களுக்கும் பரிகாரம் என்று ஏற்றுக் கொண்டுவிட்டாலும் கூட, எந்தெந்த நோய்க்குப் பரிகாரம் கொடுக்கிறது என்று, நம்முடைய மாநிலத்திலே மட்டுமல்ல, டில்லியிலே இந்தியன் மெடிக்கல் கவுன்சிலிலே ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறார்கள். அதற்காக ஏற்பாடு செய்யலாம் என்று அனுமதித்திருக்கிறார்கள். இதையெல்லாம் நாமும் தெரிந்து கொண்டு இந்தக் காரியத்தைச் செய்வோமானால், மிகத் தீவிரமாக கிராமப்புறத்திலே கூட ஆரோக்கியமாக வாழுகிற வாழ்க்கையைக் கொண்டுவரலாம்.

இப்போது பொது சுகாதாரக் கல்வியைப்பற்றி என்ன சொல்கிறார்கள்? இப்போது திரு தாஸ் அவர்கள் சொன்ன மாதிரி, கொசுவைப் பற்றிப் பேசுகிறார்கள். இன்று தினமணி பத்திரிகையிலே கொசுவை எப்படி மக்கள் தாங்களே ஒழிக்கலாம், அதிலிருந்து தப்பிக்கலாம் என்று உபயோகமான 10 வழிகளைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த வழிகள் எல்லா மக்களுக்கும் தெரிவதில்லை. அறிஞர்களும், அறிவாளிகளும் கூட அறியாமல் இருக்கிறார்கள். நாம் எல்லாம் தெரிந்து கொண்டு விட்டோம்; இனி தெரிய வேண்டியது ஒன்றுமில்லை; இது சாதாரண விஷயம், இதனால் என்ன வந்து விடப் போகிறது என்று நினைக்கிறார்கள். இந்தச் சாதாரண விஷயத்தைக் கூட கூடிப் பேசி, கலந்து பேசி அவர்களுக்கும் தெரியப்படுத்தி இந்தக் கொசுவை நாமே ஒழித்து விடலாம்; இதற்கான வழிகள் இருக்கின்றன என்கிற படங்களை எல்லாம் போட்டுக் காட்டுகிறார்கள். ஆனால் அதிலே எல்லாம் இந்த மருந்து போட்டு விட்டால், கொசு சாகாது என்று சொல்கிறார்கள். இந்த மருந்து போட வேண்டிய அவசியம் இல்லாமலே, தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு வேண்டிய வழிகளை எல்லாம் இன்று 'தினமணி' பத்திரிகையிலே விளக்கமாகப் போட்டிருக்கிறார்கள். அதை எடுத்து எல்லாப் பள்ளிகளுக்கும், பொது மக்கள் எங்கெங்கு கூடுகிறார்களோ அங்கெல்லாம், எல்லாக் கடைகளுக்கும், ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப் போன்ற இடங்களுக்கும் அனுப்பி ஒரு செலவு இல்லாமல் அதைப்பின்பற்றி கொசுவை ஒழிக்க முடியும். இதற்காக அதிகமான பணம் செலவு செய்வோமானால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குள் எப்படியும் நாம் 5½ கோடி மக்களுக்கு நல்வாழ்வு கொடுத்து விட முடியும். இப்படிப் பல காரியங்களை நாம் ஒத்திப்போட்டுக்கொண்டே வந்திருக்கிறோம். 10 ஆண்டுகளிலே எல்லோரையும் படித்தவர்களாக ஆக்கி விடுவோம் என்று சொன்னோம். அதற்கும் ஏராளமான செலவு ஆகிறது. அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு எப்படி எல்லோரையும் படித்தவர்களாக ஆக்க முடியும் என்று சொல்லி முடிவு செய்து விட்டார்கள். ஆகவே இன்னும்



1984 ஏப்ரல் 25 ] [திரு க. அருணாசலம்]

10 ஆண்டுகள்; இன்னும் 10 ஆண்டுகள் என்று தள்ளிப் போட்டுக் கொண்டே போய்க்கொண்டிருக்கிறார்கள். 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே இப்போது இருக்கிற முறைகளை வைத்துக்கொண்டு மேல் நாடுகளிலே ஏற்கெனவே உலகத்தைக் கொள்ளை அடித்துச் சுரண்டி, ஏராளமான பணத்தைச் சேர்த்து வைத்திருப்பவர்கள் வேண்டுமானால் இந்த முறைகளைக் கொண்டு அவர்களுக்கு நல்வாழ்வு கொடுத்து விட்டோம் என்று சொல்லலாம். ஆனாலும் அங்குகூட மன நோய்க்கு ஆளானவர்கள் அதிகமாகிக் கொண்டு வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்த உடல் நலம் வந்து விடுகிறது; ஆனால் மன நலம் வர முடியவில்லை. யோகாசன முறை, இந்திய மருத்துவ முறை இவைகளில் எல்லாம் உடல் நலத்தோடு கூட மன நலத்தையும் சேர்த்துக்கொண்டு வருகிற ஒரு முறை இருப்பதனாலே இது இரண்டையும் சேர்த்து அனுபவிப்பது நல்லது. நம்முடைய தமிழ் நாட்டிலே நம்முடைய தலைவரை வாழ்த்தி வணங்கினோம்; அவர் சிலப்பதிகாரத்திலிருந்து நம்முடைய பண்பாட்டைக் காட்டி, அந்தப் பண்பாட்டிலே நாம் வாழ்ந்தோமேயானால், மேலே போவதற்கு வாய்ப்பு இருக்கிறதென்று சொன்னார்கள். அதற்கு இலக்கியம் படைத்தவர்கள் இலக்கியத்திலே இருப்பதைத் தெரிந்து அதன் மேல் கட்டிடத்தைக் கட்டாமல் இருக்கலாமா? அந்த நாகரீகம் அழிந்து போகுமென்று உலக வரலாறு கூறுகிறது. அதே போல திருவள்ளுவர் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே 10 குறள்களிலே இயற்கை மருத்துவத் தத்துவத்தை எழுதியிருக்கிறார்கள். அந்த குறள்களில் விரிவாக ஆராய்ச்சி செய்து எழுதியிருக்கிறார்கள். அதன்படி நாம் செய்து கொண்டோமேயானால், அந்த வாழ்க்கை எளிய முறையிலே—எழ்மையான முறையிலே அல்ல— எல்லோரும் பாராட்டத்தக்க முறையிலே, மற்றவர்கள் நல்வாழ்வு தான் வாழ்கிறார்கள். வாழ்வாங்கு வாழ்கிறார்கள், இவர்கள் வான் உரையும் தெய்வத்துள் வைக்கப்படுபவர்கள் என்று சொல்லி நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கும். ஆகவே இந்த நேரத்திலே மறுபடியும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். இந்த 99 கோடி ரூபாயிலே கூட 2 கோடி, 3 கோடி ரூபாய் தான் சித்த மருத்துவத்திற்கு உபயோகப்படுத்துகிறோம். அடுத்த ஆண்டிலேயாவது விரிவாக இந்த 3 கோடி 30 கோடி ரூபாயாக மாறி இரண்டும் சமமாகத் தான் இருக்கிறதென்று சொல்லும் அளவுக்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சித்த வைத்தியமும் இது போலவே தான். அதை இண்டகிரேடட் மெடிசினாக ஆக்கலாம், எம். பி. பி. எஸ். படித்தவர்களுக்கே இந்தக் கொள்கையை எல்லாம் சொல்லிக் கொடுத்து விடலாம் என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அந்தத் துறையிலே ஈடுபட்டு அந்தக் கல்வித் திட்டத்தில் இந்த முறைகளையெல்லாம் தெரிந்து கொள்ளும்படியாகச் செய்து விடுவார்களானால், இலகுவாக இப்போது இருக்கிற மருத்துவமனைகளிலே கூட பாதிப் படுக்கைகள் அதற்காக இருக்கும்; தினசரிச் செலவும் குறைவாகும். ஆட்கள் வருவதும் குறைந்து விடும். மருத்துவம் ஒருபுறம் இருந்தாலும் கூட, பொது சுகாதாரத்திற்கு அதிக மதிப்பு கொடுத்து, அதற்கு 17 கோடி, 18 கோடி ரூபாய் என்று செலவு

[திரு க. அருணாசலம்] [1984 ஏப்ரல் 25

பண்ணுவதற்குப் பதிலாக, அதற்கும் ரூ. 30 கோடி, ரூ. 40 கோடி என்ற அளவுக்கு செலவுத் தொகையை அதிகப்படுத்தி எல்லா கிராம மக்களுக்கும் அதன் பலன் போய்ச் சேர்கின்ற மாதிரி செய்ய வேண்டும். நம் நாட்டிலே இருக்கின்ற, தமிழகத்திலே இருக்கின்ற எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் இது பரவ வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து பஞ்சாயத்துக்களுக்கும் போக வேண்டும். பஞ்சாயத்துக்களை அடிப்படையாகக் கொண்டு செய்ய வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் 7, 8 கிராமங்கள் இருப்பதாக நான் அறிகிறேன். அந்த 7, 8 கிராமங்களுக்காவது ஒன்று என்று ஒரு ஏற்பாட்டைச் செய்து அதை அதிகப்படுத்த வேண்டும். இப்போது கொஞ்சம் கொஞ்சமாகச் செய்து கொண்டு வருகின்றார்கள். பாரா மெடிகல் ஆபிசர்ஸ் என்று சொல்லப்பட்டு, 10, 15 பேர்களைப் போட்டிருக்கின்றார்கள். அவர்கள் எல்லோருக்கும் சுகாதாரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். அவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. இங்கொன்றும் அங்கொன்றுமாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் சீக்கிரமாகத் திட்டம் போட்டு விரைவாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லி, எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். நன்றி.

திரு மு. மாசிலாமணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மக்கள் நல்வாழ்வுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேசுவதற்கான வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வள்ளுவப் பெருந்தகை அவர்கள் தன்னுடைய குறளிலே வைத்திய முறைபற்றி மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

என்று சொல்லியிருக்கின்றார்கள். அதைப் போன்று இன்றைய தினம் மாண்புமிகு பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவருடைய அமைச்சரவையில் மக்கள் நல்வாழ்வுத் துறைப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறைக்கு உரித்தான முறையிலே, நல்ல முறையிலே பணியாற்றி வருகின்றார்கள். அவர் ஓர் சிறந்த டாக்டரும் கூட. இந்த அவைக்கு வருவதற்கு முன்னாலே கூட, அவர் முதன் முதலிலே பொதுவாழ்க்கையிலே ஈடுபடுகின்றபோது, அண்ணா நகரிலேயானாலும் சரி, அல்லது ஷெனாய் நகரிலேயானாலும் சரி, அங்கே மக்கள் பெருங்கூட்டத்தை அவர்கள் சந்தித்து, நோய்களை மிகத் துல்லியமாக அறிந்து, நல்ல முறையிலே சிகிச்சை செய்து வந்திருக்கின்றார்கள் என்பது நாடறிந்த ஓர் உண்மையாகும். அத்தகைய பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இன்றையதினம் தந்திருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே மிகவும் சிறப்பாக விளக்கி வருவது இந்திய மருத்துவத் துறை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக இந்திய மருத்துவத் துறையில் 3 முறைகளைச் சேர்த்



1984 ஏப்ரல் 25] [திரு மு. மாசிலாமணி]

இருக்கின்றார்கள். ஒன்று சித்தா, அடுத்தது ஆயுர்வேதம். அடுத்தது, ஜெர்மன் நாட்டிலே தோன்றிய ஹோமியோபதி, யூனானி என்ற முறையிலே இன்றைய தினம் செயல்பட்டு வருகின்றார்கள். குறிப்பாக ஆங்கில மருத்துவ முறையிலே இன்றைய தினம் சில மருந்துகள் நோயைக் தீர்க்கின்றன. சில மருந்துகளை நோயே ஜீரணித்துக் கொண்டு வருகின்றன. அந்த நிலையிலே பார்க்கின்றபோது, தமிழகத்தைப் பொறுத்த மட்டில், 5 கோடி மக்களில் இன்றையதினம், என்னுடைய கணிப்பு சரியாக இருக்குமானால், சுமார் 4½ கோடி மக்கள் நோயினாலே அவதிப்பட்டுக் கொண்டு வருகின்றார்கள். இந்த நேரத்திலே சித்த வைத்திய முறையை வளர்க்க தமிழக அரசு, நம்முடைய பொன்மனச் செம்மல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு மேம்பாட்டுக் குழுவை அமைத்திருக்கின்றார்கள். அதற்கு முத்தமிழ் காவலர் திரு கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் தலைவராக இருக்கின்றார்கள். அவர்கள் தலைமையிலே அந்தக் குழு செயல்பட்டு வருகிறது. நல்ல மூலப் பொருள்களைக் கொண்டு மருந்துகளைத் தயாரிப்பதற்கு நோய் தீர்க்கக் கூடிய அளவுக்கு மருந்துகளைக் கண்டுபிடித்துத் தருகின்ற அளவுக்கு அந்தக் குழு செயல்பட்டு வருகின்றது.

இந்தக் குழுவிலே, இன்றைய தினம் சென்னையிலே வாழ்கின்ற, தமிழகத்திலே வாழ்கின்ற, பெரும்பாலான வைத்திய சிரோமணிகள் சேர்க்கப்படாமல் விட்டுப் போயிருக்கின்றார்கள். அவர்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று இந்த அவையின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

இன்றைய தினம் ஆங்கில வைத்திய முறையிலே தீராத நோய் மதுமேக நோய். இதை சர்க்கரை வியாதி என்றும், நீரிழிவு நோய் என்றும் சொல்வார்கள். 90 சத வீதம் மக்கள் அந்த நோயினால் அவதிப்படுகின்றார்கள். இந்த நோய்க்கு மருத்துவம் ஆங்கில முறையில் செய்வதைவிட சித்தா முறையிலே சிறப்பாக இருக்கிறது. அதாவது சிறுகுறிஞ்சா இலை, நாவல்கொட்டை இரண்டையும் சேர்த்துக் கொடுத்தாலே இந்த நோய் போய்விடும். அது மட்டுமல்ல. இன்னொன்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா). மாண்புமிகு உறுப்பினர் திரு மாசிலாமணி எப்போது டாக்டராக மாறினார் என்று கேட்க விரும்புகிறேன்.

திரு மு. மாசிலாமணி: நான் மருத்துவக் குடும்பத்தில் பிறந்தவன் என்னுடைய பாட்டியும், என்னுடைய தாயாரும், என்னுடைய தகப்பனாரும் என்னுடைய சிற்றப்பாவும் இந்த மருந்துத் தொழிலை செய்பவர்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்,

[திரு மு. மாசிலாமணி] [1984 ஏப்ரல் 25

மதுமேக நோய் உடலுக்கு அதிகமான பலவீனத்தைத் தருகிறது. அந்த நோய் இன்றைக்கு எப்படி வருகிறதென்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிக்க செயல்பட்டு வந்தாலும், என்னுடைய அனுபவங்களையும் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிகமான வெட்டை ஏற்பட்டாலும், ஒரு மனிதன் சிந்தித்துச் சிந்தித்து மன உளைச்சல் ஏற்பட்டாலும், இந்த வியாதி வரும். மாண்புமிகு உறுப்பினர் திரு அருணாசலம் அவர்கள் கூட, இந்த நோய் 5 வயதான சிறு குழந்தைகளுக்கும் வருகிறதென்று சொன்னார்கள். உண்மைதான். இந்த நோய் அரசியல் வாதிகளுக்கு முக்கியமாக வருகிறது. இங்கே உள்ளவர்களுக்கு இருக்கிறதோ இல்லையோ, வெளியே சொல்ல மாட்டார்கள். நான் உண்மையாகச் சொல்கிறேன். 40 வயது தாண்டி விட்டாலே முதல் மணி அடித்து விட்டதென்று பொருள். 50 வயது கடந்து விட்டால் இரண்டாவது மணி அடித்து விடுகிறது. 70 வயதடைந்ததும் 3 ஆவது மணி அடித்து விடுகிறது. அதற்குப் பிறகு ஒருவர் வாழ்ந்தால் அது ஆண்டவன் செயல் என்று சொல்வார்கள். இந்த நோய் எப்படி ஒரு மனிதனை வாட்டிவதைக்கிறது? முதலிலே இந்த நோயைத் தீர்த்துக் கொள்வதற்கு மருந்தை உட்கொள்வதை விட உணவில் கட்டுப்பாடு அவசியம். 40 வயது அடைந்து விட்டாலே உணவில் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்து விட வேண்டும். வேப்பங்குச்சியில் நாற்பது நாட்களுக்கு ஒரு மண்டலத்திற்கு பல்துலக்கி வந்தால், இந்நோய் தீர்ந்து விடுகிறதென்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஆளுநர் உரையின்போது, கீழாநல்லி கீரையை அரைத்து எலுமிச்சை அளவிற்கு சாப்பிட வேண்டும், சாப்பிட்டால் தீர்ந்துவிடுகிறதென்று சொன்னார்கள். ஆனால் சாப்பிடுவதற்கு மனம் வரவில்லை, கசப்புணர்ச்சி தருகிறதென்று சொன்னார்கள். இப்போது அதை மருத்துவ வல்லுநர்கள் கேப்சூல்-இல் கொடுக்கிறார்கள். அதை காப்சூல்-இல் சாப்பிட்டால் கசப்பில்லை.

வைத்தியர்கள், காப்பி, டீயில் ஜீனி போட்டு சாப்பிடவேண்டாம் இனிப்பு சாப்பிட வேண்டாம் என்று சொல்வார்கள். இதனால் எல்லாம் இந்த நோய் வருவதில்லை என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

வில்வங்கத்தில் வெள்ளீயம் என்று சொல்வார்கள். இதனை வங்கம் முடிந்தால் தங்கம் என்று சித்தர்கள் சொல்வார்கள். அந்தக் குழுவிலே இடம் பெற்றால்தான் அந்தக் கருத்துக்களைச் சொல்லலாம் என்ற வாய்ப்பு இருக்கிறது. கடந்த காலத்திலேகூட நான் இங்கே மேலவையிலே பேசுகிறபோது மாண்புமிகு தமிழக முதல்வர், எங்களுடைய தலைவர், புரட்சித் தலைவர் என் பேச்சைக் கேட்டவுடனே என்னை இந்த மேம்பாட்டுக் குழுவிற்கு உறுப்பினராகப் பணித்தார்கள். அந்த மேம்பாட்டுக் குழுவிலே நான் நிறைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன்.



[1984 ஏப்ரல் 25] [திரு மு. மாசிலாமணி]

கிராமங்களில் பெருச்சாளி கடிக்கிறது. பாம்பு கடிக்கிறது அவர்களை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு போய் சேர்த்து அவர்கள் உயிரைக் காப்பாற்றுவதற்கு காலம் இடம் தரவில்லை. விஷம் உடனே தலைக்கு ஏறிவிடுகிறது. நரம்பெல்லாம் பரவி விடுகிறது. விஷப் பாம்பு கடிக்கு என்ன மருந்து? அதற்கு மூலிகை இருக்கிறது. பெருச்சாளி கடித்தால், 6 மாதம் கழித்து, பனிக் காலம் வந்தால், மழைக் காலம் வந்தால், பெருச்சாளி எப்படிக் கூவுகிறதோ அப்படி 'கர், கர், என்று கூவி, கூவி செத்துவிடுகிறார்கள். அதற்குச் சிறந்த மருந்து இருக்கிறது. பணம் கொடுத்து வாங்க வேண்டியதில்லை. வேப்பிலை இருக்கிறது. அருகம்புல் இருக்கிறது. அவற்றை மஞ்சளோடு சேர்த்து அரைத்து, கடிவாயில் வைத்து கட்டிவிட வேண்டும். இரவு சாப்பாட்டிற்குமுன், வெள்ளை சாதத்துடன் தேங்காய் எண்ணெய், மஞ்சள் சேர்த்து அரைத்து, அதைக் கட்டிவிட்டால் அந்த விஷம் இறங்கிவிடும். இதை என்னுடைய தாய்க்குச் செய்திருக்கிறேன். என்னுடைய பக்கத்து வீட்டுத் தொழிலாளி நீண்ட நாள் அவதிப்பட்டதைப் பார்த்து, அவனுக்குச் சொன்னேன். அவனும் பிழைத்துக்கொண்டான். இது சித்தர்கள் கண்டுபிடித்துள்ள தமிழ் வைத்தியம். இதை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னால், அதுபற்றித் தெரிந்தவர்களை அந்தக் குழுவில் இடம் பெற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையை எடுத்துகொண்டால், இங்கே ஒரு ஜெனரல் ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கே காலையிலே 6 மணிக்குப் போய் டோக்கன் பெற்றுக்கொண்டு, நோயாளியைப் போய் பார்க்க வேண்டும். அங்கே சிவப்பு விளக்கு ஒன்று போட்டிருக்கிறார்கள், பச்சை விளக்கு ஒன்று போட்டிருக்கிறார்கள். இன்னொரு விளக்கும் போட்டிருக்கிறார்கள். அங்கே போய்ப் பாருங்கள். ஏதோ திருவிழா போல காட்சியளிக்கிறது. நன்றாக இருக்கிறவர்கள்கூட அங்கே போனால் அவர்களுக்கு நோய் வந்துவிடும். அங்கே அந்த அளவுக்கு மக்கள் கூட்டம் இருக்கிறது. என்னவளவுதான் அரசு நன்மைகளைச் செய்தாலும், மக்களுடைய சக்தி, மக்களுடைய ஒழுக்கம், மக்களுடைய நினைவு எல்லாம் தன்னைத் தானே வளர்த்துக்கொண்டால்தான் நோயை நோக்கி நாம் செல்லமுடியாது நோய் நம்மைத் தீண்டாது. அமரர் அண்ணா அவர்கள் ஒன்று சொல்லுவார்கள். கட்சிக்காரர்களின் வீடுகளில் நடக்கும் விழாக்களில் கலந்துக் கொள்ளும்போது அல்லது ஒருவர் இறந்துவிட்டால் இரங்கல் கூட்டத்தில் கலந்துகொள்ளும்போது, அருமையான கருத்து ஒன்றைச் சொல்லுவார்கள். ஒரு மனிதன் இந்தச் சமுதாயத்திற்கு, நாட்டுக்குத் தேவைப்படுபவனாக இருக்க வேண்டுமென்றால், அவன் ஒழுக்கத்தோடு வாழ்ந்து காட்ட வேண்டும். ஏதோ பிறந்துவிட்டோம், வாழ்ந்துவிட்டோம் என்று இருக்காமல், குடும்பத்திற்கு மட்டுமல்ல, நாட்டுக்கும் தேவை, இயக்கத்திற்கும் தேவை, சமுதாயத்திற்கும் தேவை என்ற முறையில் வாழ வேண்டுமென்று சொல்லுவார்கள். இன்றைய தினம் சென்னையிலே ஜெனரல் ஆஸ்பத்திரி இருக்கிறது. ஸ்டான்லி ஆஸ்பத்திரி இருக்கிறது. இராயப்பேட்டை மருத்துவ மனை இருக்கிறது. கே. எம். சி.

மருத்துவ மனை இருக்கிறது, மனநோய் மருத்துவமனை இருக்கிறது. இத்தனை மருத்துவ மனைகளிலும் நோயாளிகள் இருக்கிறார்களா, இல்லையா என்றால், வெயிட்டிங் லிஸ்டில் இருந்து கொண்டிருக்கிறார்கள். காரணம் என்ன? மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்வர்கள் டாக்டராக இருப்பதால், 20,25 ஆண்டுகளுக்கு முன்பு அவரிடம் நாங்கள் தொடர்பு கொள்ளும் போது உடனே அவர் கையைப் பிடித்து, நாடியைப் பார்த்து ,என்ன மாசிலாமணி, சவுக்கியமா என்று கேட்பார்கள். அதில் சிறந்த வைத்தியமுறை இருக்கிறது. ஒரு மனிதனுக்கு சூடு,வெப்பம் வருகிறது. நன்றாக வெய்யிலில் அலைந்துவிட்டு வருகிறான். வழியிலே ஒரு கடையைப்பார்க்கிறான். உடனே அங்கே சென்று ஐஸ் போட்டு சாப்பிடுகிறான். அங்கேதான் வருகிறது ஆபத்து. வெய்யிலிலே திரிந்து, வீட்டுக்கு வந்து, சுடு தண்ணீரைச் சாப்பிட்டால் நோயில்லை. வெய்யிலில் போய் வருகிறேன், சுடு தண்ணீரைச் சாப்பிடச் சொல்கிறாயே, மனிதன்தானா என்று கேட்கலாம். சுடு தண்ணீர் குளுமையை ஏற்படுத்துகிறது. பச்சைத் தண்ணீர் உஷ்ணத்தை ஏற்படுத்துகிறது.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : சுடு தண்ணீரைக் குளிர வைத்த பிறகு அதைக் குடிக்கலாமா?

திரு மு. மாசிலாமணி : சுடு தண்ணீரை சூடாகத்தான் சாப்பிட வேண்டும். சுடு தண்ணீரை ஆறவைத்தால், அதில் விஷம் வந்துவிடுகிறது.

மாற்றுத் தலைவர் (திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா) : மாண்புமிகு உறுப்பினர், திரு. மாசிலாமணி அவர்கள் சொல்வது ஆபத்தாக இருக்கிறது. சுடு தண்ணீரை ஆற வைத்துக் குடித்தால் விஷமென்று சொல்லுகிறார்கள்.

திரு க. மீனாட்சிசுந்தரம் : சுடு தண்ணீரை ஆறவைத்து குடியுங்கள் என்று டாக்டர்கள் அறிவுரை சொல்லுகிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது அதற்கு முரணாக இருக்கிறது. இதில் தெளிவான முடிவை சுகாதாரத் துறை அறிவிக்குமா?

(பிற்பகல் 12-40)

திரு மு. மாசிலாமணி: நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். அதைக் கொஞ்சம் மிதமாகச் சுட வைத்து சாப்பிட்டால், உடலுக்கு நல்லது. இதுபற்றி சித்தர்கள், என்னுடைய பாட்டி கூறியிருக்கிறார்கள். சுடு தண்ணீரைத்தான் நான் 20 வருடங்களாகச் சாப்பிடுகிறேன். மற்ற இடங்களுக்கு கமிட்டியுடன் போகும்போது கூட, நான் சுடு நீரைத் தான் சாப்பிடுகிறேன். ஒழுக்கம் இருக்க வேண்டும்.



"இஷ்டமுடன் என் தலையில் எழுதிய சிவன் செத்து விட்டானோ முட்ட முட்ட பஞ்சம் வந்தாலும் பாரம் அவனுக்கே" என்பதுபோல நெஞ்சில் அஞ்சாமல் இரு என்று சொல்வதில் பொருள் இல்லை. ஒழுக்கமாக இருந்தால் எந்த நோயும் தீண்டாது. இன்றைக்கு சென்னை நகரில் சித்தா மருத்துவம் மேம்பாடுடையதாக இருக்கிறது. மக்களும் அதைப் பின்பற்றுகிறார்கள். சென்னை கோட்டையில், அரும்பாக்கத்தில், பெல்ஸ் ரோட்டில், சைதாப்பேட்டையில், சேப்பாக்கத்தில் எல்லாம் சித்தா மருத்துவமனைகள் இருக்கின்றன. கடந்த முறை நான் பேசும்போது வட சென்னையிலே தொழிலாளர்கள் ஏராளமானவர்கள் இருப்பதால், ஊரார்புரில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் இருக்கிறார்கள், அதுபோல் பி and சி மில்லில் 16 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள், ஆகவே சித்தா மருத்துவ மனை அமைக்க வேண்டுமென்று பேசினேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பி and சி மில்லில் 7,000 பேர் தான் வேலை செய்கிறார்கள்.

திரு மு. மாசிலாமணி : திருத்திக்கொள்கிறேன். வட சென்னையில் தொழிலாளர்களின் நலனுக்காக சித்தா மருத்துவமனை இல்லை. ஆகவே தான் ஊரார்புர் பகுதியில் இரண்டு சித்தா மருத்துவமனைகள் இருக்க வேண்டுமென்று நான் சொன்னேன். அந்தக் கருத்து குறிப்பிலே இருக்கிறது. இதை நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்னொன்று, சித்தா மருத்துவம் என்று சொல்கின்றபோது, பல நோய்களைத் தீர்ப்பதற்கான மருந்துகள் எல்லாம் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலோபதி மருந்தை வாங்கிப் பயன்படுத்தினால் தான், மெடிக்கல் பில் என்ற வகையில் அதற்கான பணத்தைத் தருகிறார்கள். ஆனால் சித்தா மருத்துவம் என்று வரும்போது தங்க பஸ்பம் சாப்பிடச் சொல்கிறார்கள். 70 வயது கிழவன் கூட தங்க பஸ்பம் சாப்பிட்டால் எழுந்து நடப்பான். இரண்டாவது வெள்ளி பஸ்பம் மூன்றாவது அயன் செந்தூரம். இந்த மூன்றையும் பயன்படுத்துவதற்கு முன்பு, மருத்துவரால் நன்கு பரிசோதிக்கப்பட்டு அவர் சிபாரிசு செய்த பிறகு தான், சாப்பிட வேண்டும். தங்க பஸ்பம் ஒருவர் சாப்பிடுவதற்குமுன்பு அதைச் சாப்பிட்டால் தாங்கக்கூடிய உடம்பா அவருடைய உடம்பு என்று பார்த்து சாப்பிட வேண்டும், இல்லாவிட்டால், வயிற்றுப்போக்கு போன்ற பலவிதமான நோய்கள் ஏற்பட்டு உடம்பே இல்லாமல் போய்விடும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த மெடிக்கல் பில்லுக்கான பணத்தை வழங்கும்போது, தங்க பஸ்பத்திற்கு வழங்கவில்லையென்றாலும் கூட, வெள்ளி பஸ்பம், அயன் செந்தூரம் போன்றவற்றுக்காவது வழங்க வேண்டும்.

திரு ஏ. ஜே. தாஸ் : உறுப்பினரின் கருத்தை ஏற்றுக்கொண்டு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் உறுப்பினர்களுக்குத் தங்க பஸ்பம் வழங்க ஏற்பாடு செய்வாரா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் கேட்டதற்காகச் சொல்கிறேன். தங்க பஸ்பமாக இருந்தாலும் வேறு மெட்டல் பஸ்பமாக இருந்தாலும், ரொம்ப ஜாக்கிரதையாகப் பயன் படுத்துவது நல்லது. இவைதச் சாப்பிடுவதால் சில நேரத்தில் **Functioning of the kidneys,** எந்த இடத்தில் அது உற்பத்தி ஆகிறதோ அந்த இடத்திலே ஒரு சிறிது பாதிக்கப்பட்டாலும்—ஒரு பெர்சன்ட் அபக்ட் ஆனாலும் கூட, ஆபத்து தான். ஆகவே தான் இம்மாதிரி லேகியத்தை கொடுக்கும்போது, ரொம்ப ஜாக்கிரதையாகக் கொடுக்க வேண்டும். அதற்காகத் தான் இதிலே ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டு மென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. மாசிலாமணி அவர் களும் சொன்னார்கள். கொடுத்துவிட்டு பிரச்சினைகள் வருவதற்குப் பதிலாக, நன்றாகப் பார்த்துவிட்டு கொடுக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். அந்தக்கருத்து தான் முக்கியமான கருத்து.

**திரு. மு. மாசிலாமணி: :** அடுத்து, இன்றைய தினம் வயது முதிர்ந்த சித்த மருத்துவர்களுக்கு நற்சான்றிதழ்களும் பணமுடிப்பும் தர வேண்டு மென்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். எனவே அதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ஆர்.ஐ.எம்.பி. வைத்திய சர்டிபிகேட் கொடுக்க விதிகள் இருந்தும் அதைக் கொடுக்க இயலாமல் இருக்கிறார்கள். ஆர். ஐ. எம். பி. வைத்திய சர்டி பிகேட் கொடுக்க உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சமீபத்தில் நான் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தபோது, என்னிடம் அவர்கள் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இயற்கை வைத்தியத்தைப் பொறுத்தவரையில், தமிழக அரசு மிகவும் பாராட்டத்தக்க செயல்களைச் செய்து வருகிறது. சூரிய ஒளி, சுத்தமான காற்று, சுத்தமான தண்ணீர் இவைகளை வைத்து தயாரிப்பது தான் இயற்கை வைத்திய முறை. இந்த முறை மகாத்மா காந்தியடிகளால் கூட பாராட்டப் பெற்றது. சத்திய சோதனை புத்தகத்திலும் எழுதியிருக்கிறார்கள். அதேபோல் யோகாசன முறை என்றும் இருக்கிறது. அந்த முறையைப் பின்பற்றித்தான் இன்றைய தினம் அயல்நாடுகளிலும் இந்தியாவிலும் அக்குபஞ்சர் முறை சிகிச்சை நடந்து வருகிறது. அதன்மூலம் பல நோய்கள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. பல வைத்தியங்களை தமிழக அரசு ஊக்குவித்து வருகிறது. அதே போல் சித்த வைத்திய முறைகளையும், யுனானி வைத்திய முறை களையும், கேரள ஆயுர்வேத வைத்திய முறைகளையும் ஆதரித்து, பல நோய்களைத் தீர்க்க முயற்சி எடுக்க வேண்டும். அவைகளால் தீர்க்கப்படமுடியாத நோய்கள் கூட தீர்க்கப்படுகின்றன.

முன்பொரு முறை ஆளுநர் உரையின்மீது நான் பேசும்போது பாலி வரும் யானைக்கால் வியாதியைப்பற்றிப் பேசினேன். இப்போது எங்கு பார்த்தாலும் பரவலாக இந்த வியாதி வருகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் தண்ணீரில் உள்ள பூச்சிகள்தான். அந்த நோய் உள்ளவரை



ஒரு ஈ கடித்துவிட்டு மற்றவரைக் கடித்தால் அவருக்கும் யானைக்கால் நோய் வருகிறது. திடீரென்று இந்த நோய் வருகிறது. இதற்கு இப்போது புதுவகையான மருந்துகள் கண்டுபிடித்திருக் கிறார்கள். நோயைத் தடுக்கும் முறைகளை நாமும் பின்பற்ற வேண்டும். ஆட்சியில் உள்ள அரசே இவைகளைச் செய்வதைவிட, நாமும் அக்கறையோடு சுகாதாரத்தோடு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி வாழ்ந்தால் மக்களுக்குத் தொண்டு செய்ய முடியும். மக்களுக்கு நல்ல பணியை ஆற்ற முடியும். நாமும் ஒழுக்கத் துடன் வாழ்ந்து நல்ல பழக்கங்களைக் கையாள வேண்டுமென்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமரு கிறேன்.

***திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மீதான கொள்கைக் குறிப்பின் மீது சில மட்டுமே சொல்லி நான் அமைய விரும்புகிறேன்.

இங்கே எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் திரு. மாசிலாமணி அவர்கள் பல்வேறு சித்த வைத்திய முறைகளையெல்லாம் உறுப்பினர் களுக்குச் சொல்லி ஒரு வகுப்பு நடத்துவதைப் போல மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக பல்வேறு நோய்களுக்கு நம் முடைய நாட்டிலே கூட இன்னமும் மருந்துகள் கண்டுபிடிக்க முடியாமல் பல நோய்களுக்கு வைத்தியம் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், "மஸ்குலர் டிஸ்டிராபி" என்று சொல்லக்கூடிய நோய்க்கு மருத்துவம் கண்டுபிடிக்க முடிய வில்லை. மாண்புமிகு அமைச்சருக்குக்கூட அது தெரியும். எந்த டாக்டரைக் கேட்டாலும், அதற்கு வைத்தியமே இல்லை என்று தான் சொல்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நோய்களுக்கு மருத்துவம் கண்டு பிடிக்காத நிலை இருக்கிறபோது, அவைகளுக்கான ஆராய்ச்சி செய்யப் படவேண்டிய அவசியம் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அந்த வைத்தியத்தை இந்த அமைச்சரின் காலத்திலேயே செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** உறுப்பினருக்கு நினைவு படுத்துகிறேன், "கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு."

**திரு க. மீனாட்சிசுந்தரம் :** கல்லாததையும் கற்பிப்பதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும். முயற்சிக்கும் முறையில் இந்தத் துறை செயல்பட வேண்டும். நாம் கற்றது குறைவாக இருக்கலாம். சாகின்ற வரையில் கற்றுக்கொண்டே இருக்க வேண்டுமென்பதுதான் நம் எண்ணம்.

**மாற்றுத் தலைவர் (திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா):** எப்படி இருந் தாலும், ஒரு நாள் சாகத்தானே வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** எப்போதோ சாகப்போகிறோம் என்பதற்காக இப்போது கற்காமல் இருக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : கற்றது கைம்மண்ணளவு என்று சொன்ன காரணத்தைத் தெரிந்துகொண்டால், நாம் கற்றுக்கொண்டே இருப்போம். The moment we identify our ignorance, that is the beginning of our knowledge. உறுப்பினர் சொன்ன கருத்தும் நான் சொன்ன கருத்தும் ஒன்றாகத் தான் இருக்கிறது. எவ்வளவுதான் கண்டு பிடித்தாலும்கூட பல நோய்களுக்கு விடை கண்டு பிடிக்காமல் தான் இருக்கிறது என்றுதான் சொன்னேன்.

(பிற்பகல் 12-50)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நம்முடைய நாட்டில் இன்னும் பல நோய்களுக்கு மருந்தே கண்டுபிடிக்கவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். அப்படி இருந்தாலும், நம் நாட்டைப் பொறுத்த வரையில், சித்த மருத்துவ முறையில் எளிதான வகையில் அனைத்திற்கும் வைத்தியம் இருப்பதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாசிலாமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போலவே, பல பெரியவர்களும் சொல்லுகிறார்கள். மஞ்சள் காமாலை நோய்க்கு ஆங்கில மருத்துவத்தை விட எங்கள் பகுதியில் எங்களுக்குத் தெரிந்த ஒரு கிராமத்தில் இருக்கிற ஒரு பெரியவர் செய்கிற வைத்தியத்தில், அது 2 நாட்களில் குணமாகிறது என்பதை நாங்கள் நிதர்சனமான முறையில் பார்க்கிறோம். அது என்ன முறை என்பது எனக்குச் சரியாகத் தெரியாத காரணத்தால், அதைப்பற்றி இங்கே வகுப்பு நடத்த விரும்பவில்லை. எனவே அந்த மாதிரி இருக்கக் கூடியவர்களை நாம் திரட்டியாக வேண்டும். ஆனால் நம் நாட்டில் இருக்கிற ஒரு கெட்ட பழக்கம் என்னவென்றால், ஒரு மருந்தைப் பயன்படுத்தி அதனால் பலன் கண்டவர்கள் அந்த மருந்தைப்பற்றி அடுத்தவர்களிடம் சொல்லிவிட்டால், பின்னாலே அதற்குப் பலன் குறைந்துவிடும் என்ற மூட நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மூட நம்பிக்கையைத் தகர்க்கிற வகையில் அப்படி யார் யார் சிகிச்சையைப்பற்றிய நுணுக்கம் அறிந்திருக்கிறார்களோ அவர்களையெல்லாம் ஒரு குழு நேரில் கண்டு பேசி இருக்கிற தெளிவின்மையைச் சுட்டிக் காட்டி—சொன்னால் பயன் இல்லாமல் போய்விடும், அல்லது குறைந்துவிடும் என்ற எண்ணம் சரியல்ல. அதனாலே பலன் குறைந்துவிடாது என்று நிரூபித்து, அந்த ரகசியங்களை எல்லாம் பெற்று நம் மக்களுக்குப் பயன்படுகிற சூழ்நிலையை மருத்துவத்துறை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சித்த மருத்துவத்தைப்பற்றி இங்கே பேசப்பட்டதால் எனக்கும் ஒன்று நினைவுக்கு வருகிறது. சித்தர் பாடல்களில் ஒரு குறிப்பு வருகிறது. அதாவது—

"மண் பரவு கிழங்குகளில் கருணையின்றிப் புசியோம்,
வாழையிளம் பிஞ்சொழிய கனியருந்தல் செய்யோம்."

என்று சித்தர் பாடலிலே வருகிறது. வாழையின் கனியைச் சாப்பிடக் கூடாது, இளம் பிஞ்சைத்தான் சாப்பிட வேண்டும் என்று அந்த



நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன காரணத்தாலோ நாம் கனியைத்தான் சாப்பிடுகிறோம். அந்த உண்மை தெரியாத காரணத்தால், அதைச் செய்து வருகிறோம். எனவே இப்படிப்பட்ட நூல்களில் இருக்கிற முறைகளைக் கூட ஆய்வு செய்து அது மக்களுக்குப் பயன்படுகிற வகையில் அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்குப் பின்னாலே என்னுடைய கட்சியைச் சார்ந்தவர்களே கூட இங்கே பேசுவார்கள் என்பதால், நான் இதைத் தொடர்ந்து பேச விரும்பவில்லை என்றாலும் ஓரிரு கருத்துக்களை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

கிராமங்களில் இன்றைய தினம் டாக்டர்கள் பற்றாக்குறை மிகவும் அதிகமாக இருக்கிறது. மருத்துவமனைகளில் ஆண்டு முழுவதுமே டாக்டர்களே இல்லாத நிலை இருக்கிறது. அதையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னால் தேர்வாணைக் குழுவின் முடிவு வரவில்லை என்கிறார்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லை, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத்தான் போட வேண்டும், அந்தப் பட்டியல் முடிவாகட்டும், பின்னாலே போடலாம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இப்படியே காலம் கடத்தி வரும் நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. இதன் காரணமாகக் கிராமப் புறங்களில் நோய்கள் அதிகமாகப் பரவுகின்றன. ஏழை மக்கள் இதனாலே சிரமப்படுகிறார்கள். வசதி படைத்தவர்கள் வெளியே சென்று மருத்துவ வசதி பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. எனவே ஏழைகள்தான் இதனால் கஷ்டப்படுகிறார்கள். எனவே டாக்டர் பட்டம் பெற்றவர்களைப் பொறுத்த வரையில், நம்முடைய அரசினால் ஏராளமாகச் செலவழிக்கப்பட்டதன் அடிப்படையில், பட்டம் பெறுகிற அத்தகைய டாக்டர்கள் கண்டிப்பாக கிராமப் பகுதிகளில் பணியாற்றினால்தான், மற்ற வாய்ப்புகள் அளிக்கப்படும் என்று ஒரு சட்டமே கொண்டுவரப்பட வேண்டும். உதாரணத்திற்குச் சொல்வதென்றால், 3 ஆண்டுக் காலம் அல்லது ஒரு குறிப்பிட்ட வரைமுறை இப்போது இருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியாது—அந்த காலவரையறைவரை, கட்டாயமாகக் கிராமங்களில் பணிபுரிய வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பு என்ற நிலையை உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட முறையை நாம் கொண்டுவந்தாக வேண்டும். காரணம் இன்னும் ஆண்டுக் கணக்கில் கிராமப் பகுதிகளில் டாக்டர்கள் இல்லை என்ற நிலைமைதான் இருந்து வருகிறது. பல முறை நானே என்னுடைய பகுதியைப்பற்றிப் புகார் செய்திருக்கிறேன். தலைஞாயிறில் 3 டாக்டர்கள் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு டாக்டர் கூட இல்லை. அங்கே டாக்டர்களைப் போட வேண்டும் என்று சொல்லி, அவையிலேயே நான் ஓர் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்த உடனே, அமைச்சர் அவர்கள் அவசர அவசரமாக எங்கேயோ இருந்த இரண்டு டாக்டர்களை அந்த இடத்திற்கு மாற்றி அவர்களைப் போட்டுவிட்டோம் என்று இங்கே தெரிவித்தார்கள். ஆனால் மாற்றப்பட்ட அந்த இரண்டு டாக்டர்களும் அந்த இடத்தில்

'ஜாமீன்' செய்யாமல் விடுப்பு போட்டுவிட்டு போய்விட்டார்கள். ஊருக்குப் போய்க் கேட்டால், மாற்றியது உண்மைதான், ஆனால் அவர்கள் லீவில் போய்விட்டார்கள், இங்கே வரவே இல்லை என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமைதான் பல கிராமங்களிலும் இன்றைக்கும் இருந்து வருகிறது. கிராமங்களுக்கு மாற்றல் வந்தால் உடனே லீவு போட்டு விடுகிறார்கள். அதுமட்டுமல்ல தங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி, பண வசதியைப் பயன்படுத்தி, வேறு இடத்திற்கு மாறுதல் பெற்று சென்று விடுகிறார்கள். போட்ட இடத்தில் வந்து சேருவதே இல்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. எனவே இந்த நிலைமையை மாற்றுவதற்கு இதற்காக என்றே ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். 3 ஆண்டுக் காலத்திற்குக் கண்டிப்பாக கிராமப் புறங்களில் பணியாற்றினால்தான் மற்ற பகுதிகளில் வாய்ப்பு அளிக்கப்படும் என்று, டாக்டர்களைப் பொறுத்த வரையில், ஒரு நிலையை உருவாக்க வேண்டும்.

ஒரு இடத்திற்கு ஒரு டாக்டரைப் போட்டால், பிறகு அவர் விடுப்பு கேட்டாலும் சரி, எவ்வளவு செல்வாக்கு உள்ளவர் வந்து பரிந்துரை செய்தாலும் சரி அதை அனுமதிப்பதில்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதைப்போலவே தருவதைத் தந்து பெறுவதைப் பெறும் முயற்சியையும் தடுப்பதற்கு இந்தத் துறை முன்வரவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

எந்த மருத்துவமனைக்குச் சென்றாலும், அந்த மருத்துவமனையில் இருக்கக்கூடிய மருந்துகள் எல்லாம் அங்கே இருக்கின்ற நோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை குழு அமைத்து ஆய்வு செய்ய வேண்டும். பல மருத்துவமனைகளில் இருக்கின்ற மருந்துகள் எல்லாம் டாக்டர்களின் வீடுகளுக்குச் செல்கின்றன. மருத்துவமனைக்கு வருகின்றவர்களுக்கு ஏனோ தானோ என்று வைத்தியம் செய்கிறார்கள். டாக்டர்களின் வீடுகளுக்குச் சென்றால், தனி வைத்தியம், நல்ல வைத்தியம் செய்கிறார்கள். ஆனால் அதே மருத்தவர் மருத்துவமனையில் வைத்தியம் பார்த்தால், நோய் குணமாவதில்லை. நோய் குணமடைவதற்கு நாள் கணக்கு, வாரக்கணக்கு ஆவதற்குரிய ரகசியம் என்ன என்பதை குழு அமைத்து இந்தத் துறை ஆய்வு செய்து இந்தக் குறையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஊரில் டாக்டர்களைப் போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க மூன்று டாக்டர்களைப் போட்டார்கள். ஒரு டாக்டர் உடனே மாறுதல் வாங்கிச் சென்றுவிட்டார். யாருடைய செல்வாக்கைப் பெற்றோ போய்விட்டார். இப்போது அங்கே இரண்டு டாக்டர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, டாக்டர்கள் கிராமப்புறங்களுக்குச் செல்வதற்கு தனி வகுப்புகளை நடத்தி அனுப்ப வேண்டும். கிராம மக்களிடத்திலே டாக்டர்கள் அன்போடு பழக கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களை அசிங்கமாக நினைக்கக்



கூடாது. எங்கள் ஊரிலே இப்போதுள்ள டாக்டர் என்ன செய்தார் தெரியுமா? அங்கே வருகிற கிராம மக்கள் மேசையின் மேல் கை வைக்கிறார்கள் என்றால், அப்படி கை வைக்காமல் இருக்க கடைநிலை ஊழியர்களுடைய உதவியைக் கொண்டு அவர் பயிற்சி கொடுக்கலாம். ஆனால் அவர் தன்னுடைய மேசையின் விளிம்பைச் சுற்றி கருவேலம் முள்ளைக் கொண்டு வந்து வைத்துவிட்டார். மக்கள் மேசை மேல் கை வைத்தால் அந்தக் கருவேல் முள் குத்தும் என்று வைத்து விட்டார். மக்கள் என்னிடத்திலே வந்து புகார் கொடுத்த பிறகு, நான் சென்று பார்க்கும் நேரத்தில் அவர் அதை எடுத்துவிட்டார். அப்படிப்பட்ட ஒரு டாக்டர், மக்கள் தன் கிட்டே நெருங்கக் கூடாது. நெருங்கினால் அசிங்கம் என்று கருதக்கூடிய டாக்டர் இருக்கிறார். அந்தப் பகுதியிலே நம் நாட்டிலே மது விலக்கு ரத்து செய்யப்படவில்லை அரசின் குறிப்பின்படி. ஆனால் எப்படி நடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அரசின் வாசகப்படி மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிறது. தளர்த்தப்பட்டிருப்பதாலே ஊரிலே உள்ளவர்கள் குடிக்கிறார்கள். குடித்துவிட்டு, தங்களுடைய நோய்க்காக வைத்தியம் பார்க்க டாக்டரிடம் செல்லுகிறார்கள். அப்போது அந்த டாக்டர் "நீ குடித்திருக்கிறாய், வராதே" என்று விரட்டுகிறார் கிராம மக்கள் குடிக்காமல் என்ன செய்வார்கள்? குடிப்பதற்காகத்தானே கடைகளைத் திறந்து வைத்திருக்கிறோம்! மருத்துவமனைக்குப் பக்கத்திலே கூட வைத்திருக்கிறோம். குடித்து விடுகிறார், கீழே விழுந்து காயம் ஏற்படுகிறது. அப்போது டாக்டரிடம் வைத்தியம் பார்க்கப் போனால், "நீ குடித்திருக்கிறாய், உனக்கு வைத்தியம் செய்ய முடியாது போ" என்று சத்தம் போடுகிறார் அந்த டாக்டர். இதையெல்லாம் செய்யக்கூடாது என அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அறிவுரைகளை, சுற்றறிக்கைகளை அனுப்ப வேண்டும். அங்கே ஏழரை மணிக்கு ஓ.பி. ஆனால் எட்டே முக்கால் மணிக்குத்தான் டாக்டர் வந்து உட்காருகிறார். நான் எட்டே முக்கால் மணி வரை உட்கார்ந்திருந்தேன். கேட்டால், "இந்த ஊர் மக்கள் எட்டரை மணிக்குத் தான் வருவார்கள்" என்று சொல்லுகிறார். காரணம், அவர் எட்டரை மணிக்கு வருவதை பழக்கமாக ஏற்படுத்திக் கொண்டுவிட்டதால் அந்த நேரத்தையே ஓ.பி. நேரமாக நிர்ணயித்திருக்கிறார். அப்படி அவர் இஷ்டத்திற்கு நேரத்தை வைத்துக்கொண்டு கிராம மக்களுக்குப் பயன்படாத அளவிற்குச் செய்வதற்காக அரசாங்கத்தின் பணத்தை வீணாகச் செலவு செய்ய வேண்டுமா? இப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைஞாயிறு சுகாதார நிலையத்தில் கழிப்பிடம் இருக்கிறது, ஆனால் உபயோகப்படுத்தும் நிலையில் இல்லையென்று அமைச்சரிடத்திலே சொன்னேன். இங்கேயும் பேசினேன். இங்கே வந்து பேசிவிட்டால் நடந்துவிடும் என்று மக்கள் நினைக்கிறார்கள், பாவம் ஏமாளி மக்கள். நாங்களும் இங்கே வந்து பேசிவிட்டால் புகழ் வரும் என்று கருதி பேசுகிறோம். ஆனால் இங்கே பேசுவதால் பயன் இருக்கிறதா என்றால், இல்லை. இதை வெளியே சொல்ல வெட்கமாக இருக்கிறது.

ஓராண்டுக்கு முன்பே பேசினேன். பயன்படுத்துவதற்கு முடியாமல் ரிப்பேராக இருக்கிறது. பூட்டிக்கிடக்கிறது என்று சொன்னேன். இங்கே பேசுவதற்கு என்ன பொருள்? இங்கே பேசுவதையெல்லாம் சம்பந்தப் பட்ட இலாக்கா குறிப்பு எடுத்துக்கொண்டு உரியவர்களுக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுப்பதற்காகத்தானே! பேச வேண்டியதைப் பேசுவதற் காகத்தானே இந்த அவை இருக்கிறது? அப்படி இல்லையென்றால் பிறகு மக்கள் யாரை மதிப்பார்கள்? அமைச்சர்களை மதிப்பார்களா, உறுப்பினர்களை மதிப்பார்களா? அதைப்போலவே அச்சுகாதார நிலைய வண்டிப்பழுதாகிவிட்டது என்று பேசினேன். அதே நிலைதான் இப்போதும் இருக்கிறது. சுற்றுப்புறச் சுவர் வேண்டும் என்று பேசினேன், இன்னும் அதே நிலைதான் இருக்கிறது. அதைப்பற்றி ஒன்றும் செய்யவில்லை.

மாற்றுத் தலைவர் (திரு எஸ்.ஜே. சாதிக் பாட்சா): அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சீக்கிரமாக முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

திரு க.மீனாட்சிசுந்தரம்: அன்றைக்கு சுற்றுச் சுவர் கட்ட வேண்டுமென்று சொன்னேன். அந்தச் சுற்றுச்சுவர் கட்டப்படாதது மட்டுமல்லாமல், அங்கே அந்த மருத்துவமனையே, சுகாதார நிலையமே சமூக விரோதிகளுக்குப் பல்வேறு செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே இங்கே பேசினாலாவது அதற்குப் பின்னாலே ஓரளவு நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பதற்காக நான் இவைகளைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அதே நேரத்திலே கோவையிலே ஒரு சம்பவம். இதை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஒரு ஆசிரியர் தாக்கப்பட்டார். ஆசிரியர் தாக்கப்பட்டு மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டார். தாக்கப் பட்ட அவருடைய புஜத்திலே இருந்து அந்தக் கையே நழுவி விட்டது. இன்றைக்கு சர்ட்டிபிகேட் தந்திருக்கிறார்கள். அதாவது ஒரு மாதத்திற்குப் பின்னாலே அந்த டாக்டர் தந்திருக்கிறார். இன்னும் 40 நாட்களுக்கு 'ட்ரீட்மெண்ட்' எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அப்படி அந்த சர்ட்டிபிகேட் கொடுக்கிற அதே டாக்டரே செல்வாக்கு உள்ளவர்கள், தாக்கியவர்கள் தரப்பிலே சேர்ந்தவர்கள் பரிந்துரை செய்த உடனேயே, ஒரு நாளிலேயே 'டிஸ்சார்ஜ்' செய்கிறார். எனக்கு வலி இருக்கிறதே, நீங்கள் வைத்தியம் செய்யவில்லையே என்று கேட்டதற்குப் பின்னாலே, சேர்த்து மறுபடியும் 'டிஸ்சார்ஜ்' செய்கிறார்கள். அதற்குப் பின்னாலே இவர்கள் மீண்டும் பாதிக்கப்பட்டவர் எனக்கு வைத்தியம் செய்யமாட்டீர்களா என்று சண்டை போட்டு அதற்குப் பின்னாலே சேர்த்து மறுபடியும் 'டிஸ்சார்ஜ்' செய்கிறார்கள் ஆக செல்வாக்கு உள்ளவர்கள் அதிலும் ஆளுங்கட்சிக்காரர்கள் சொன்னால் நோயையே பார்ப்பதில்லை. வீட்டுக்கு அனுப்பிவிடுவது என்கிற நிலையிலே டாக்டர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது என்று சொன்னால், அரசியல் செல்வாக்கு அங்கே மருத்துவமனைக் குள்ளே செல்கின்றது என்று சொன்னால், நாட்டிலுள்ள மக்கள்



காப்பாற்றப்படுவார்களா? நோய்க்கு மருத்துவம் பார்க்கின்ற இடத்திலே, கூட அரசியலா? அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகலாமா? இதை யெல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு அதற்குரிய மாற்று ஏற்பாடுகளை எல்லாம் செய்ய வேண்டுமென்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொண்டு எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாற்றுத் தலைவர் அவர் களே, இங்கே மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் கருத்துச் சொன்னதற்காக நாளைய தினம் விரிவாக பதில் கொடுக்க இருக்கின்றேன். இருந்தாலும் அதைத் தெளிவு படுத்திவிடுவது நன்றாக இருக்கும் என்பதற்காக இந்த இரண்டு ஆண்டுகளிலே அதாவது 1982-83; 1983-84 ஆம் ஆண்டுகளிலே நாம் எவ்வளவு செலவு செய்திருக்கின்றோம், இந்தக் குடும்ப நல இலாக்காவுக்கு என்பதை மட்டும் சொல்கிறேன்.

Direction and administration for 1982-83 Rs. 55·95 lakhs; for 1983-84 Rs. 68.86 lakhs. Rural Family Welfare Services for 1982-83 Rs. 5 crores 43 lakhs; for 1983-84 Rs. 6 crores 21 lakhs. Urban Family Welfare Services for 1982-83 Rs. 65.34 lakhs; for 1983-84 Rs. 87.97 lakhs. Motor Vehicles for 1982-83 Rs. 28.18 lakhs; for 1983-84 Rs. 36.64 lakhs. Compensation amount for 1982-83 Rs. 4 crores 37 lakhs; for 1983-84 Rs. 10 crores 96 lakhs. இன்றைக்கு other services என்பதிலே Post partum centre, surgical equipment, Maintenance Grant, etc. என்பது other services என்கிற தலைப்பின் கீழ் வருகின்றது for 1982-83 Rs. 57.97 lakhs; for 1983-84 1 crore 2 lakhs. Mass Education for 1982-83 Rs. 19.69 lakhs; for 1983-84 Rs. 22.85 lakhs. Training நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக for 1982-83 Rs. 19 lakhs 26 thousand; for 1983-84 Rs. 42 lakhs 69 thousand. ஒட்டு மொத்த மாக இந்த இலாக்காவுக்கு for 1982-83 12 crores 26 lakhs 85 thousand; for 1983-84 Rs. 20 crores 74 lakhs 94 thousand. ஆக எந்த ஒரு தனிப்பட்ட நபருக்கும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரி சலுகை கொடுக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் இதில் ஏதாவது அவர்களுக்குத் தகவல் இருக்குமானால், தைரியமாகச் சொல்லலாம். காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன உடனே, எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து இந்தப் புள்ளி விவரங்களை நான் உடனடியாக சேகரித் தேன் என்பதற்காக அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் ஒரே ஒரு கருத்து.

மாண்புமிகு உறுப்பினர் திரு மீனாட்சிசுந்தரம் அவர்களைப் பொறுத்த வரையிலே, அவர்களே ஒப்புக்கொண்டார்கள். அவர் கொடுத்திருக்கக் கூடிய புகார் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்காக

நான் இலாக்காவுக்கு அனுப்பினேன். உடனடியாக 3 பேர்கள் போட்டார்கள். இன்னும் 2 பேர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு ஒத்துக்கொண்டதற்காக நன்றி. இன்னொரு குற்றச்சாட்டை இப்போது சொல்லியிருக்கிறார்கள். அது நிச்சயமாக விசாரிக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் கொடுத்த தகவல்கள் இருந்தாலும், எனக்குக் கிடைத்த தகவல்களை நான் அமைச்சர் அவர்கள் இடத்திலே எந்த நேரத்திலே தேவை என்று சொன்னாலும், அந்த நேரத்திலே அவர்களுக்குக் கொடுக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா): மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை நாளை 26—4—1984, வியாழக்கிழமை அன்று காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் மணி 1-04)

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

162. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமானவரி விதிகளில் செய்யப்பட்ட திருத்தம் குறித்து, வருவாய்த் துறையின் 17—9—83 ஆம் நாளிட்ட 1601 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமானவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1955) 61 (3) ஆம் பிரிவின் கீழ், அவை முன் வைக்கப்பட்டது].

163. 1978-79 ஆம் ஆண்டிற்குரிய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ( ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

* 120. சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

121. தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் குறித்த கொள்கை விளக்கக்குறிப்பு 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).



122. தமிழ்நாட்டில் வீட்டு வசதி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984—85 (தமிழ் அண்ட் ஆங்கிலம்).

123. வனத்துறை மானியக் கோரிக்கை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984—85 (தமிழ் அண்ட் ஆங்கிலம்).

124. கூட்டுறவுத்துறைக்கான கொள்கை விளக்கம், 1984—85 (தமிழ் அண்ட் ஆங்கிலம்).

125. 'தமிழகத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள்' என்ற புத்தகம் 1983—84 (தமிழ் அண்ட் ஆங்கிலம்)

126. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள் பற்றிய குறிப்பு 30—6—1983-இல் உள்ளபடி (தமிழ் அண்ட் ஆங்கிலம்).

127. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் பற்றிய குறிப்பு 1983—84 (தமிழ் அண்ட் ஆங்கிலம்).

128. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி பற்றிய சிறு குறிப்பு 31—12—1983-இல் உள்ளபடி (தமிழ் அண்ட் ஆங்கிலம்).

129. உழவர்களின் நண்பன் 'டான்பெட்-தமிழக உழவர்களுக்கு ஒரு கூட்டுறவு நிறுவனம்' என்ற புத்தகம் 1983—84 (தமிழ் அண்ட் ஆங்கிலம்).

130. கோரிக்கை எண் 19-க்கான துணைக் குறிப்பு-கழிவு நீர் போக்கு மற்றும் குடிநீர் வழங்கல், 1984—85.

---

* 24—4—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றறிக்கை முறையில் அனுப்பப்பட்டது.

இணைப்பு

[156 ஆம் பக்கத்தில் இணம் 5 (5)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## மருத்துவம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

திரு. மேலவைத் தலைவர் அவர்களே,

மருத்துவம் குறித்த கொள்கை பற்றிய முக்கிய கூறுகளை இந்த அவையின் முன் வைக்க விழைகிறேன்.

### முன்னுரை

இவ்வரசின் முக்கிய நோக்கம் சுகாதார நலப் பணிகளை மேம்படுத்தல், நோய்வராமல் தடுத்தல், நோய் தீர்த்தல், புதுவாழ்வு அளித்தல் ஆகிய பணிகளை விரிவுபடுத்துவதன் மூலம் கிராம மக்களின் நலனை தீவிரமாக மேம்படுத்துவதாகும். இந்நோக்கத்தைத் தொடர்ந்து, அதிக படுக்கை வசதிகளுக்கு வகை செய்வதற்காகக் கட்டிடங்கள் கட்டுதல், நவீன சாதனங்களை வழங்குதல், சிறப்புப் பணி புரிதல், மருத்துவ துணை மருத்துவப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், அளிக்கப்படும் பணியின் தரத்தை மேம்படுத்தல் ஆகிய வசதிகளை சமூகத்தில் மிக ஏழிய மக்களும் பெறும் வகையில் சுகாதாரப்பணி அளிக்கப்படும் முறையை மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. கிராமத்திலுள்ள ஏழை மக்களும் பயனடையும் வகையில் நவீன மருத்துவப் பணிகளை அளிக்கும் பொருட்டு மாவட்டத்திலும் வட்டத்திலும் உள்ள மருத்துவ மனைகளையும் வட்டத் தலைமை இடங்களில்லாத மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் மேம்படுத்த அரசு கருதியுள்ளது. மருத்துவ பல்கலைக்கழகத்தை ஏற்படுத்த அரசு கருதியுள்ளது. அரசு நியமித்த வல்லுநர் குழு இம்மாநிலத்தில் மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைப்பதற்காகத் தனது அறிக்கையை அனுப்பியுள்ளது. இதற்கான சட்டம் இயற்றப்பட்டு வருகிறது. வரவு செலவுத் திட்டத்தில் அடையாள நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் எவ்வித வற்புறுத்தலும் வலுக்கட்டாயமும் இல்லாமல், தானாகவே அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் இம்மாநிலம் இந்நாட்டிலேயே மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முதலிடம் வகிக்கிறது.

### மருத்துவக் - கல்வித்துறை.

மருத்துவக் கல்வி மேம்பாட்டில் தனி கவனம் செலுத்த வேண்டும் என்றும் இம்மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்வி நிலையங்களை நன்கு மேற்பார்வையிட வேண்டுமென்றும் நோக்கங்களுடன் 1966—ஆம் ஆண்டு மருத்துவக் கல்வி இயக்ககம் அமைக்கப்பட்டது. தற்போது இம்மாநிலத்தில் 8 மருத்துவக் கல்லூரிகளும், பல் மருத்துவக் கல்லூரி ஒன்றும் உள்ளன.



இவற்றுள், மூன்று மருத்துவக் கல்லூரிகளும், பல் மருத்துவக் கல்லூரியும் சென்னை மாநகரில் உள்ளன. எஞ்சியுள்ள ஐந்து கல்லூரிகள் மாவட்டங்களில் உள்ளன. இக் கல்லூரிகள் ஆண்டுதோறும் ஓராயிரத்திற்கு மேற்பட்ட மருத்துவப் பட்டதாரிகளையும், 979 மருத்துவ முதுநிலைப் பட்டதாரிகளையும் மருத்துவப் பட்ட மேற்படிப்பு, மருத்துவ பட்டய மேற்படிப்பு, உயர் சிறப்புப் படிப்புகளை உருவாக்குகின்றன. இத்துடன் துணை மருத்துவப் பணியாளர்களுக்கானப் பயிற்சியும் அளித்து வருகின்றன. பல்வேறு பட்டப்படிப்புக்கள், பட்ட மேற்படிப்பு, தனிச் சிறப்புப் படிப்பு ஆகியவற்றை பயிலுவதற்கு அனுமதி அளிக்கப்பட்ட இடங்கள் குறித்த விவரம் இணைப்பு-I மற்றும் II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட துறைகளில் ஏற்பட்டுள்ள மருத்துவ மனித ஆற்றலின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அரசு புதிய படிப்புகளை ஏற்படுத்தியும் மற்றும் இருக்கின்ற படிப்புகளில் உள்ள இடங்களை அதிகரித்தும் உள்ளது. அவை பின் வருமாறு.

### மருத்துவ பட்ட மேற்படிப்பு பட்டய மேற்படிப்புகள்.

(1) எம். டி. (பொது மருத்துவம்)

(2) எம். டி. காசநோய், மார்பு சம்பந்தப்பட்ட நோய்கள்.

(3) எம். டி. மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல்.

(4) எம். எஸ். பொது அறுவைச் சிகிச்சை.

(5) டி. எம். நரம்பியல்.

(6) டி. எம். குடல் நோயியல்.

(7) டி. எம். இதய நோயியல்.

(8) மகப்பேறு மருத்துவம் மற்றும் மகளிர் நோயியல் பட்டய படிப்பு.

(9) கண் அறுவை பட்ட படிப்பு.

(10) குழந்தை மருத்துவத்தில் பட்டய படிப்பு.

1983-84-ஆம் ஆண்டில் சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் பட்ட மேற்படிப்பு (எம். டி.) தொடங்கப்பட்டுள்ளது. இதில் மூன்று பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

பின்வரும் மருத்துவ பட்ட மேற்படிப்புகளையும் பட்டய மேற்படிப்புகளையும் 1984–85 ஆம் ஆண்டில் இருந்து சில மருத்துவக் கல்லூரிகளில் புதிதாக தொடங்க அரசு கருதி வருகிறது:—

(அ) தொழுநோய் இயலில் பட்டயப் படிப்பு.

(ஆ) எம். டி. தொழுநோயியல்

(இ) எம். பார்மசி

(ஈ) எம். டி. சத்துணவு, நீரிழிவு நோயியல்.

(உ) எம். சி. எச். குடல் நோயியல்.

(ஊ) எம். சி. எச். (நாள அறுவை மருத்துவம்).

(எ) எம். டி. நோய் குறியியல்

(ஏ) எம். டி. மேக நோய் மருத்துவம்.

(ஐ) மேக நோய் மருத்துவத்தில் பட்டயப் படிப்பு.

(ஒ) நீரிழிவு நோயியலில் பட்டயப் படிப்பு.

(ஓ) எம். சி. எச். (இதய அறுவைச் சிகிச்சை மருத்துவம்).

(அஅ) எலும்பு முறிவு நோயியலில் பட்டயப் படிப்பு.

(ஆஆ) எம். டி. எஸ். (மருந்து கொடுத்தல், நோய் அறிதல் கதிர் வீச்சியல்).

பட்ட மேற்படிப்பு/பட்டயப் படிப்புகளில் இடங்களின் எண்ணிக்கையை பின்வருமாறு அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| 1. | எம். டி. மயக்க மருந்தியல் | 2 | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். |
| 2. | டி. ஏ. | | ” |
| 3. | டி. ஏ. | 2 | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர். |

(பி) மருத்துவ அதிகாரிகளுக்கான நினைவு கூர் பயிற்சி வகுப்பு.

வட்ட, மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் பணிபுரியும் மருத்துவர்களின் பணியின் தரத்தை மேம்படுத்தவும் மருத்துவத் துறையில் தற்போது ஏற்பட்டுள்ள நவீன வளர்ச்சிகளை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடனும் மருத்துவ அதிகாரிகளுக்காக தொடங்கப்பட்ட நினைவுகூர் பயிற்சி வகுப்பு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.



(சி) மருத்துவத் துணைப் படிப்புகள்.

(1. பி.) எஸ். சி. செவிலியர் படிப்பு.

(i) 4 ஆண்டு படிப்புக் கால அளவுள்ள அடிப்படை பி. எஸ். சி. (செவிலியர்) படிப்பு சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த செவிலியர் கல்லூரியில் நடத்தப்படுகிறது. அடிப்படை பி. எஸ். சி. (செவிலியர்) பட்ட வகுப்பில் சேர்த்து கொள்ளப்படும் மாணவிகளின் எண்ணிக்கை 1983 ஆம் ஆண்டில் 25-லிருந்து 40 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

(ii) சென்னை, மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ள செவிலியர் கல்லூரியில் பி. எஸ்சி. (செவிலியர்) படிப்பு நடத்தப்படுகிறது. இதில் ஒவ்வொராண்டும் பணியிலுள்ளவர்கள் 20 பேரும், தனிப்பட்டவர்கள் 10 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்படிப்பின் கால அளவு 2½ ஆண்டுகளாகும். இப்படிப்பு அடிப்படைப் படிப்பிற்கு மேற்பட்ட ஒன்றாகும்.

(2) மருத்துவ அறிவியல் ஆவணப் படிப்பு.

மருத்துவ அறிவியல் ஆவணத்தில் பட்டப்படிப்பு சென்னை மருத்துவக் கல்லூரியில் 1983 ஆம் ஆண்டு ஜூலை முதல் நடத்தப்படுகிறது. இதில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஆறு ஆகும். (பணியிலுள்ளவர்கள் மூவர், தனிப்பட்டவர்கள் மூவர்).

(3) மருந்தாக்கியல் பட்டயப் படிப்பு.

பின்வரும் அரசினர் மருத்துவக் கல்லூரிகளில் தற்போது மருந்தாக்கியலில் பட்டயப் படிப்பு நடத்தப்படுகிறது. இதில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:—

| | | |
|---|---|---|
| (1) | மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை | 125 இடங்கள். |
| (2) | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் | 60 இடங்கள், |
| (3) | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர். | 60 இடங்கள். |

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியிலும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியிலும் மருந்தாக்கியல் படிப்பில் பட்டய வகுப்புகளைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஏனைய பயிற்சிப் படிப்புகள்.

(எ) செவிலியர் பயிற்சி.

செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் எட்டு உள்ளன. இவற்றில் மொத்தம் ஆண்டு தோறும் மொத்தம் 740 பேர் (பயிற்சி உதவித் தொகை பெறாதவர்கள் 50 பேர் உட்பட) சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்படிப்பு ஓராண்டில் இரண்டு பருவங்களில் நடத்தப்படுகிறது. (பயிற்சி உதவித் தொகை பெறுவோர் 345 பேரும், பயிற்சி உதவித் தொகை

பெறாதவர்கள் 25 பேரும் உள்ளனர்). செவிலியர் பயிற்சிப் படிப்பின் கால அளவு 3½ ஆண்டுகள் ஆகும். பொது செவிலியர் படிப்பும், பேறுகால மருத்துவ படிப்பின் காலமும் இதில் அடங்கும். பயிற்சியை வெற்றிகரமாக முடித்தபின்னர் காலி இடங்கள் ஏற்பட்டவுடன் பயிற்சி உதவித் தொகை பெற்று பயின்று வந்த அனைவரும் அரசுப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

## (பி) இயன் மருத்துவம்.

ஆண்டு தோறும் இயன் மருத்துவத்தில் (பிபிடி) பட்டப்படிப்பு, கே. கே. நகரிலுள்ள மறுவாழ்வு மற்றும் செயற்கை அவயவங்கள் பொருத்தும் நிறுவனத்தில் நடத்தப்படுகிறது. இப்பட்டப்படிப்பின் கால அளவு 3½ ஆண்டுகள் ஆகும். இதில், மருத்துவமனை பயிற்சி ஆறு மாதமும் அடங்கும். 1983-84 ஆம் ஆண்டில், பயிற்சி உதவித் தொகை பெறாத மாணவர்களின் எண்ணிக்கை 20-லிருந்து 25 ஆக உயர்ந்துள்ளது.

## (சி) பொது உடல் நலச் செவிலியர் பட்டயப்படிப்பு.

பொது உடல்நலச் செவிலியர் பட்டயப்படிப்பு 10 திங்கள் கால அளவு கொண்டது. சென்னை, மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த செவிலியர் கல்லூரியில் நடத்தப்படுகிறது. இதில் 20 பணியிலிருக்கும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

## (டி) ஏனைய படிப்புகள்.

மேற்குறிப்பிட்ட படிப்புகளைத் தவிர, அநேக பயிற்சிமுறை படிப்புகளும் அதாவது துப்புரவு ஆய்வாளர் படிப்பு, கண் வரைவாளர் படிப்பு, சான்றளிக்கப்பட்ட கதிர்வீச்சு உதவியாளர் படிப்பு, இருட்டறை உதவியாளர் படிப்பு, ஆய்வுக்கூட தொழில் நுட்பப் படிப்பு, எலும்பு முறிவு நோயியல் வல்லுநர் படிப்பு, ஆய்வுக் கூடத் தொழில் நுட்பவியல் (நிலை 2) படிப்பு, கண் சிகிச்சை உதவியாளர் படிப்பு, செயற்கை உறுப்பு, எலும்பு முறிவு சிகிச்சை தொழில் நுட்பப் படிப்பு, பல் கட்டும் படிப்பு, பல் பாதுகாப்பு படிப்பு ஆகியவை பல்வேறு மருத்துவக் கல்லூரிகளிலும், கல்லூரி இணைந்த மருத்துவமனைகளிலும், சென்னை, கிண்டியிலுள்ள தடுப்பு மருத்துவ நிலையத்திலும் நடத்தப்படுகின்றன.

## மருத்துவ பல்கலைக் கழகம்

மருத்துவப் பல்கலைக்கழகத்தின் குழு தனது அறிக்கையை அரசுக்கு கொடுத்துள்ளது. சுகாதார அறிவியலுக்காக தனி பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.



இப்பல்கலைக்கழகம் அமைப்பதில் ஏற்படும் தொடர் மற்றும் தொடரா இனச் செலவு குறித்த விவரங்களை கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்துள்ளது.

தொடரா இனச் செலவு:—

| | | |
|---|---|---|
| மூலதனம் | .. | ரூ. 531·51 இலட்சம். |
| வருவாய் | .. | ரூ. 28·00 இலட்சம். |
| மொத்தம் | .. | ரூ. 559·51 இலட்சம். |

தொடரினச் செலவு ஆண்டொன்றிற்கு ரூ. 111·85 இலட்சமாகும்.

1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 0·01 இலட்சம் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## மருத்துவக் கல்லூரிகள், கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகள் மேம்பாட்டுப் பணிகள்.

1983-84 ஆம் ஆண்டில் சில துறைகளின் நிலை உயர்த்தவும் கல்லூரி மருத்துவ மனைகளிலும், மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளிலும், சில சிறப்புப் பிரிவுகளை வலுப்படுத்தவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன் விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | மதுரை, இராஜாஜி அரசினர் மருத்துவமனை. | இதய அறுவைச் சிகிச்சைப் பிரிவு ஒன்றை புதிதாகத் தொடங்குதல். |
| 2. | சென்னை குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை. | குழந்தைகள் இதய நோய் தீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்றை புதிதாகத் தொடங்குதல். |
| | | நிலைய மருத்துவ அதிகாரி பதவி ஒன்றை ஏற்படுத்துதல், குழந்தை மருத்துவ (இரத்த அணுவியல் பிரிவு) உதவிப் பேராசிரியர் பதவி ஒன்றை ஏற்படுத்துதல். |
| 3. | கோயம்புத்தூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை. | 28 படுக்கை வசதியுடன் கூடிய மகப்பேறு வார்டு ஒன்றைத் தொடங்குதல். |

| | |
|---|---|
| 4. தஞ்சாவூர் இராஜா மிராசுதார் அரசினர் மருத்துவ மனை. | மகப்பேறு—மகளிர் நோயியல் துறைக்கு பணியாளர்களுக்கும் மருத்துவக் கருவிகளுக்கும் ஒப்புதலளித்தல். |
| 5. சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனை. | தலைக் காயங்களுக்கு சிகிச்சை பிரிவு ஒன்றைப் புதிதாக தொடங்குதல். |

1984-85 ஆம் ஆண்டில் புதிய பிரிவுகளைத் தொடங்கவும், இருக்கும் துறைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதன் மூலம் வலுப்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| 1. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, செங்கற்பட்டு. | செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் குழந்தை நல அறுவை சிகிச்சைப் பணிகளுக்கு வகை செய்தல். |
| 2. சென்னை குழந்தைகள் நல நிறுவனம். | (எ) 24 மணி நேர உயிர் வேதியியல் ஆய்வுக் கூடத்தை தொடங்குதல்.<br>(பி) ஊட்டச் சத்து மிகுந்த மருந்துகளைக் கொண்ட தனியான துறைகளைத் தொடங்குதல். |
| 3. மதுரை இராஜாஜி அரசினர் மருத்துவ மனை. | (எ) குழந்தை நல சிகிச்சை துறைக்கு கூடுதல் பணியாளர்கள்.<br>(பி) தீவிர மருத்துவச் சிகிச்சைப் பிரிவிற்கு கூடுதல் பணியாளர்கள்.<br>(சி) இதய நோய் சிகிச்சைத் துறைக்கு கூடுதல் பணியாளர்களையும், கருவிகளையும் வழங்குதல்.<br>(டி) காசநோய் மருந்தகத்திற்கு கூடுதல் பணியாளர்கள். |
| 4. சென்னை இராஜா சர் இராமசுவாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை. | உயிர்வேதியியல் ஆய்வுக்கூடத்தை மேம்படுத்துவதற்காக பணியாளர்கள் அமைத்தல். |



| | |
|---|---|
| 5. சென்னை, அரசினர் பொது மருத்துவமனை. | (அ) மருந்தாக்கியல் துறையை வலுப்படுத்தல்.<br>(ஆ) மருத்துவ வேதியல் ஆராய்ச்சி நிலையத்திற்கு கூடுதல் பணியாளர்கள்.<br>(இ) நுண் படமெடுக்கும் (மருத்துவம்) போட்டோ பிரிவு ஒன்றை அமைத்தல். |
| 6. சென்னை, கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி. | தொண்டை, காது, மூக்கு மருத்துவத் துறையில் அறுவை சிகிச்சை மருத்துவர் பதவியை ஏற்படுத்தல். |
| 7. சென்னை, மருத்துவக் கல்லூரி. | மரபு வழிப் பண்பியல் துறையை தொடங்குதல். |
| 8. சென்னை, கிண்டியிலுள்ள கிங் நிறுவனம். | ரிஹைட்ரேஷன் பொட்டலங்களை தயாரித்தல். |

புதிய கட்டிடங்களுக்கான கருவிகளும், பணியாளர்களும்.

கடந்த 5 ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட 11 கட்டிட திட்டங்களில், சில தற்போது முடிவடைந்துள்ளன, சில முடிவடையும் தருவாயிலுள்ளன. 1984-85 ஆம் ஆண்டில் (கீழே கொடுக்கப்பட்டுள்ளது) இந்த புதிய கட்டிடங்களுக்குத் தேவையான பணியாளர்கள் ரூ. 12-76 இலட்சம் மற்றும் கருவிகள் ரூ. 70-48 இலட்சம் ,மேசை நாற்காலிகள் ரூ. 3-32 இலட்சம் வாங்கவும் கருதப்பட்டுள்ளது.

1. சென்னை அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள மத்திய கருத்தடை அறுவை சிகிச்சை பிரிவிற்கு பணியாளர்களை நியமித்தல், மேசை, நாற்காலிகளை வழங்குதல்.

2. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள அவசரச் சிகிச்சை பிரிவிற்கும், விபத்துப் பணி பிரிவிற்கும் பணியாளர்களை நியமித்தல்.

3. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலுள்ள 16 படுக்கை வசதி கொண்ட குழந்தை நல அறுவை சிகிச்சை வார்டிற்கு பணியாளர்களை நியமித்தல், கருவிகளை வழங்குதல்.

4. திருச்சிராப்பள்ளி, அரசுத் தலைமையிட மருத்துவமனையில், தொடங்கப்படவிருக்கும் புதிய செவிலியர் பயிற்சிப்பள்ளிக்குப் பணியாளர்களை நியமித்தல், கருவிகளையும், மேசை நாற்காலிகளையும் வழங்குதல்.

5. மதுரை, இராஜாஜி அரசினர் மருத்துவ மனையிலுள்ள தலைக்காயங்கள் மருத்துவ வார்டுக்கு 29 படுக்கை வசதி கொண்ட வார்டிற்கு பணியாளர்களை நியமித்தல் கருவிகளையும் மேசை நாற்காலிகளையும் வழங்குதல்

6. சென்னை, அரசினர் ஸ்டேன்லி மருத்துவ மனையிலுள்ள கோபால்ட் சிகிச்சைப் பிரிவிற்கு பணியாளர்களை நியமித்தல்.

7. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் எலும்பு சிகிச்சைப் பிரிவிற்கு பணியாளர்களை நியமித்தல், கருவிகள்–மேசை நாற்காலிகள் வழங்குதல்.

8. சென்னை, கீழ்ப்பாக்கம், அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் நீரிழிவு நோய் ஆராய்ச்சி பிரிவிற்கு கூடுதல் பணியாளர்களை நியமித்தல்.

9. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 20 படுக்கை வசதியுடன் கூடிய குழந்தை நல வார்டிற்கு பணியாளர்களை நியமித்தல், கருவிகள்-மேசை, நாற்காலிகள் வழங்குதல்.

10. தஞ்சாவூர், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட தீப்புண் சிகிச்சைப் பிரிவிற்குப் பணியாளர்கள் நியமித்தல், மேஜை, நாற்காலி வாங்குதல்.

11. தாம்பரம், காசநோய் நலம் பேண் மருத்துவமனையில் புதிதாகக் கட்டப்பட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையம், புறநோய் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றிற்குக் கூடுதல் பணியாளர்கள் நியமித்தல், மேசை, நாற்காலிகள் வாங்குதல்.

சென்னையில் உள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் சமூக நோய்த் தடுப்பு மருத்துவத் துறையின் நிலையை உயர்த்த தல்.

1984–85-ஆம் ஆண்டில் சென்னை, மருத்துவக் கல்லூரியில் உள்ள சமூக நோய்த்தடுப்பு மருத்துவத் துறையில் சில பதவிகளின் நிலையை உயர்த்தவும் புதிய பதவிகளை செயற்படுத்தவும் வகை செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

அரசினர் பொது மருத்துவமனையில் மூப்பியல் மருத்துவத்துறையும் மாநகரில் உள்ள 8 புறநகர் மருத்துவ மனைகளில் மூப்பியல் மருத்துவப் பிரிவுகளும் தொடங்குதல்.

நமது நாட்டில் முதியோரின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. 1931-இல் 60 வயதுக்குமேல் வாழ்ந்த முதியோர்களின் எண்ணிக்கை 2 சதவீதமாகும். ஆனால் 1981-ல் இவர்களின் எண்ணிக்கை 12 சதவீதமாக இருந்தது. இனிமேலும் இது அதிகரிக்கும். எனவே நமது மாநிலத்தில் முதியோருக்குப் போதுமான மூப்பியல் மருத்துவ வசதி அளிப்பது அவசியமாகும். எனவே, சென்னை பொது மருத்துவமனையிலும், மாநகரில் உள்ள 3 புறநகர் மருத்துவ மனைகளிலும் (கே கே. நகர், அண்ணா நகர், தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள அரசினர் புறநகர் மருத்துவமனைகள்) மூப்பியல் சார்ந்த மருத்துவத்துறை தொடங்க கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 2·59 இலட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



புற்றுநோய்க் கட்டுப்பாடு.

1984-85-ஆம் ஆண்டில் காஞ்சிபுரம், காரப்பேட்டையில் உள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்கு கூடுதலாக இரண்டு சிவில் அறுவை மருத்துவர்களையும், ஆறு உதவி அறுவை மருத்துவர்களையும் நியமனம் செய்ய அனுமதி வழங்கக் கருதப் பட்டுள்ளது.

சாதனங்கள்.

1983-84 ஆம் ஆண்டில் சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் நவீன உட்கோள் இதய மருத்துவ சோதனைக்கூடம் செயற்கை அமைக்கவும், குளிரூட்ட மிகை வேக மையப் கணைய சிகிச்சைக்கருவி, மருத்துவலேசர் ஒளிக்கற்றைக் கருவி ஆகிய போக்குச் சுழற்சிக் கருவி, அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் பல்வேறு வற்றை வாங்கவும் மருத்துவக்கருவிகளான, செயற்கைச் சிறுநீரகக் கருவிகள், உயர் நவீன ஒருமிநீக்குக்கருவிகள், நுண் ஒலி உடற்பகுப்பாய்வுக் கருவி அழுத்தக் ஒளிவயஉருப்பெருக்கி, வாயுமயநிறப் பகுப்பாய்வுக் கருவி ஆகிய மருத்துவக் கருவிகளை வழங்கவும் அரசு அனுமதித்துள்ளது. இவை மருத்துவக் கல்லூரிகள், கல்லூரி இணைந்த மருத்துவ மனைகள், இண்டியில உள்ள கிங் நிறுவனம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும். மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை திருநெல்வேலி அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய கீழ்ப்பாக்கம் அரசினர் மருத்துவக் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் ஆக்சிஜன் வற்றில் உள்ள இதய நோய் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு சேமிப்புக்கு மைய ஏற்பாட்டிற்கு நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. ரூ. 117·92 இலட்சம்

சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் நவீன உட்கோள் இதய மருத்துவச் சோதனைக்கூடம் ஏற்படுத்தல்.

சென்னை, பொது மருத்துவமனையில் அமைக்கப்படவிருக்கும் நவீன உட்கோள் இதய மருத்துவ சோதனைக் கூடத்தின் சூரிய கருவிகளும் உயர் ஆற்றல் மின் ஆக்கியுடன் அனைத்து துணைக் கருவிகளும் ரூ. 73·55 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன. அவை விரைவில் நிறுவப் படும். 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 78·45 இலட்சம் செலவில், நவீன மருத்துவக் கருவிகளான இதய மீளொலி வரை கருவி, நலநிலைக்காட்சிக் கருவி, வாயுமய நிறப்பகுப்பாய்வுக் கருவி, டி. வரைபடக் கருவி, சிறுநீர்ப்பைதாரை நோக்கி, சோடியம், பொட்டாசியம் ஆகிய தனிமங்கள் கணிமின்கருவி, கீற்றொலி விளக்கு ஆகியவற்றை, மருத்துவக் கல்லூரிகள், கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகள், சென்னை பல்மருத்துவக் கல்லூரி ஆகியவற்றுக்கு வழங்கக் கருதப்பட்டுள்ளது.

## மருத்துவக் கருவிகள் பராமரிப்புப் பட்டறை.

மருத்துவக் கல்லூரி, கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனை ஆகியவற்றில் மருத்துவக் கருவிகளை நல்ல நிலையில் வைத்து வரும் பொருட்டு, மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் இணைந்த பெரிய மருத்துவமனைகள் மூன்றிலும் மாநகரில் உள்ள கல்லூரி இணைந்த பெரிய மருத்துவமனை ஒன்றிலும் சிறு பணிப்பட்டறைகள் அமைக்க ஏற்பாடு செய்யும் திட்டம் 1984-85 ஆம் ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

## கட்டிடங்கள்.

1983-84 இல் கல்லூரி இணைந்த மருத்துவமனைகள், மாணவியர் இல்லங்கள் ஆகியவற்றின் வசதிகளைப் பெருக்கும் வகையில் கட்டிடம் கட்டும் பல்வேறு திட்டங்களுக்கு ரூ. 197·90 இலட்சத்தை அரசு அனுமதித்துள்ளது. 1984-85 இல் கட்டிடம் கட்டும் திட்டத்திற்கு ரூ. 69·03 இலட்சம் அனுமதிக்கக் கருதப்பட்டுள்ளது. அவற்றுள் முக்கியமான திட்டங்கள் சில வருமாறு:—

1. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மகப்பேறு வார்டின் மீது ரூ. 20·00 இலட்சம் செலவில் முதல் மாடி கட்டுதல்.

2. சிசு நல நிலையம்:—குழந்தைகள் மருத்துவமனையில் ரூ. 12·60 இலட்சம் செலவில் நவீன சமையற்கூடம் கட்டுதல்.

## மாணவர்களுக்கு அதிக வசதிகள் செய்து கொடுத்தல்.

சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் சிற்றுண்டியகம் இருக்கும் முதல் மாடிக்குமேலே, வெளியிலிருந்து வந்து படிக்கும் மாணவர்களுக்கு (ஆண்கள்) நண்பகல் உணவறை கட்டுதல்.

சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவியர் இல்லத்தில் கூடுதல் இடவசதிகள் செய்து கொடுத்தல்.

சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் கட்டாயச் சுழல் முறை ஏற்பாட்டின்படி தங்கியிருக்கும் மருத்துவர்களுக்கு தற்போதுள்ள வசதிகளை நவீனப்படுத்தல்.



## குளுமைசாதன வசதிகள்.

1984-85 ஆம் ஆண்டில் பின்வருவனவற்றிற்கு குளுமைசாதன வசதிகள் செய்து கொடுக்கக் கருதப்பட்டுள்ளது:—

கோயம்புத்தூரில் உள்ள கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரட்டை அறுவை சிகிச்சைக் கூடங்கள் இரண்டிற்கு குளுமை வசதி செய்து கொடுத்தல்.

சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர இதய நோய் சிகிச்சைப் பிரிவுக்குக் குளுமை வசதி செய்து கொடுத்தல்.

## பிணவறைக் கட்டிடம்.

சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குளுமை வசதி கொண்ட பிணவறைக் கட்டிடம் கட்டக் கருதப்பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கல்.

1984-85 இல் ரூ. 4·40 இலட்சம் செலவில் பின்வரும் நிறுவனங்களுக்குக் குடிநீர் வழங்கும் வசதியை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.—

சென்னை, இசை நிலையத்தில் குடிநீர் வழங்கும் வசதியை மேம்படுத்தல்.

சென்னையில் உள்ள அரசினர் கஸ்தூரிபாய் மகளிர்–சிறார் மருத்துவமனையில் 5 மீட்டர் விட்டமுடைய கிணறு தோண்டுதல்.

## மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்திற்கு மானியங்கள்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உள்ள திசுக்கள் தட்டச்சு வசதியை மேலும் பெருக்கிக் கொள்ள நிதி உதவி அளிக்கும்படி அப் பல்கலைக்கழகம் அரசினைக்கேட்டுக்கொண்டது. தற்போது இந்தியாவில் நான்கு இடங்களில் டிஸ்யு தட்டச்சு வசதி உள்ளது. இந்த நான்கு மையங்களில் தென்னிந்தியாவில் உள்ள மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் மட்டும்தான் இந்த வசதி உள்ளது. அப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்கூடத்திற்குக் கட்டிடங்கள் கட்டவும், சாதனம், தாரசாக்கி, உள்ளிட்ட திசு தட்டச்சுத் தட்டுகள் வாங்கவும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும் ரூ. 6·42 இலட்சம் மானியம் வழங்க கருதப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டிற்கு வழங்க ரூ. [illegible] இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## செவிலியர் பயிற்சிக்காக ஆசிரியர் பதவிகள் மேலும் கூடுதலாக்குதல்.

1984-85 இல் மருத்துவச்சி பயிற்சிக்காக கூடுதலாக இரண்டு சிற்றாசிரியர் (நிலை 2) பதவிகளையும் (கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஒரு பதவி மகப்பேறு மகளிர் நோய் இயல் மருத்துவ நிலையம் சென்னை, தாய்சேய் நல மருத்துவ மனைக்கு ஒரு பதவி), சென்னை மருத்துவக் கல்லூரி செவிலியர் கல்லூரியில் 6 பொது சுகாதார செவிலியர் பதவிகளையும், 2 மருத்துவப் பயிற்சி நிலைய போதகர் பதவிகளையும் உருவாக்குவதன் மூலம் செவிலியருக்குப் பயிற்சியளிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்தக் கருதப்படுகிறது.

## சென்னை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் உதவி பேறுகால மருத்துவச் செவிலியர்—சுகாதார மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு குறுகிய காலப்பயிற்சி தொடங்குதல்.

சென்னை, இராயப்பேட்டை, அரசினர் மருத்துவமனையில் துணைச் செவிலியர்—மருத்துவச்சி, சுகாதார துணைச் செவிலியர் மேற்பார்வையாளர் ஆகியோருக்குப் பொது செவிலிப்பணியில் குறுகியகாலப் பயிற்சி வகுப்பினைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. மேற்கண்ட வகுப்புகளில் ஒவ்வொரு தடவையும் 25 பேருக்குப் பயிற்சியளிக்கப்படும்.

## மருந்தாக்கியல் குழு அமைத்தலும் துணை மருத்துவ தேர்வு நடத்துவதெற்கென்று பிரிவு ஒன்றை ஏற்படுத்தலும்.

தமிழ்நாட்டில் 3 அரசினர் கல்லூரிகள் மருந்தாக்கியல் பட்டயப்படிப்பு வகுப்பு நடத்துகின்றன. இத்துடன் 10, தனியார் கல்லூரிகளிலும் மருந்தாக்கியல் பட்டயப்படிப்பு வகுப்பு நடத்தப்படுகிறது. தனியார் கல்லூரிகள் செயல்படுவதைச் சீரமைக்கும்பொருட்டு அவற்றை ஆய்வு செய்யவும், மேற்பார்வையிடவும், தேவையான பணியாளர்களுடன் மருந்தாக்கியல் மேற்பார்வைக்குழுவை அமைக்க வேண்டுமென்று மருத்துவக் கல்லூரி இயக்குநர் அனுப்பிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மருத்துவ இயல் மருந்தாக்கியல் முதலியவற்றில் பட்டயப்படிப்பு பட்ட மேற்படிப்பு வகுப்புகள் நடத்துவதுடன், மருத்துவக்கல்வி இயக்குநர் அலுவலகம் 13 துணை மருத்துவப்பயிற்சி வகுப்புகளையும் (பட்டயம், சான்றிதழ்) நடத்துகிறது. நல்ல திறமையுள்ள துணை மருத்துவப்பணியாளர்களை உருவாக்க வேண்டுமெனில், தொடர்ந்து தரமான பயிற்சி அளிக்க வேண்டியதும், தேர்வு நடத்த வேண்டியதும் மிகவும் முக்கியமானதாகும். எனவே, துணை மருத்துவப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கென்று தனிப்பிரிவு இருப்பது இன்றியமையாததாகும். தேர்வுகள் கட்டுப்பாட்டாளருடன், தேவையான பணியாளர்களையும் கொண்ட தனிப் பிரிவு ஒன்றை அமைக்க மருத்துவக் கல்வி இயக்குநர் கொடுத்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



## கிராமப் பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு இலவசமாகப் பற்பொடி வழங்கும் திட்டம்.

குழந்தைகளுக்கான முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கும் பல்வேறு மையங்கள் மூலம் கிராமப் பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு இலவசமாகப் பற்பொடி வழங்கும் திட்டத்திற்கு அரசு 1982 ஆகஸ்டில் அனுமதி அளித்தது. குழந்தைகளுக்கான முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவு பெறும் சுமார் 60 இலட்சம் குழந்தைகளுக்கு மாதந்தோறும் இலவசமாக 30 கிராம் பற்பொடி வழங்கப்படுகிறது.

1982-83-இல் இதற்கான செலவு ரூ. 1,21,58,000. 1983-84 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் ரூ. 2,44,33,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளும் பொருட்டு 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 2,42,48,000 ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

இப்பற்பொடி, அரசு வரையறுத்துள்ள மருத்துவப் பொருள் கலவை அளவிலேயே தயாரிக்கப்படுகிறது. சின்கோனாத் துறை, கோயம்புத்தூர். பெரியார், நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் பற்பொடி வழங்குகிறது. தமிழகமெங்கிலும் உள்ள 38 சிறு தொழிற் பிரிவுகள் பற்பொடி தயாரித்து, அவற்றை சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக மற்ற மாவட்டங்களுக்கு வழங்குகின்றன.

## பால்வினை நோய்க்கட்டுப்பாட்டுத் திட்டம்.

பால்வினை நோயைக் கட்டுப்படுத்த, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தைச் செயலாக்க அரசு 1983-84-ல் அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சென்னை அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள பால்வினை நோய் சிகிச்சை நிலையம் பால்வினை நோய் சிகிச்சை கல்வி பயிற்சி வட்டார நிலையமாகவும், தென் மண்டலத்திற்கென்று பால்வினை நோய் வட்டார ஆய்வுக் கூடமாகவும் செயல்படும், தமிழக அரசின் பொறுப்பில் மேற்படி நிலையத்தில் ஆய்வு இயங்கும் பிரிவு அமைக்கப்படும்.

கல்விப் பயிற்சி வட்டார நிலையமானது மாவட்ட அல்லது சிவில் மருத்துவ மனைகள், தொடக்கச் சுகாதார நிலையங்கள் முதலியவற்றில் பணிபுரிகின்ற அல்லது பணிபுரியவிருக்கும் மருத்துவப்பணியாளர்களுக்கும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் நினைவுகூர் பயிற்சி வகுப்புகள் நடத்தும்.

பால்வினை நோய் வட்டார ஆய்வுக்கூட சோதனையை நல்ல முறையில் நடத்தி மதிப்பிட மாவட்ட, மருத்துவ மனைகள், அரசினர் பொதுச் சுகாதார ஆய்வுக்கூடங்கள் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில்

செயல்பட்டுவரும் பல்வேறு ஆய்வுக்கூடங்களுடன் வட்டார ஆய்வுக்கூடம் ஒருங்கிணைந்து செயல்படுவதுடன் ஒத்துழைப்பும் நல்கும். வட்டார ஆய்வுக்கூடம் பால்வினை நோய் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும்; ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப்பணியாளர்களுக்கு இது தொடர்பாக பயிற்றுவிப்பதுடன் பயிற்சி வகுப்புகளையும் நடத்தும்.

பால்வினை நோய் சிகிச்சை வட்டார ஆய்வு ஊர்திப் பிரிவு இந்நோய் தொற்றும் கூறுகள் பற்றி ஆய்வு செய்யும். இந்நோய் எளிதில் பரவுவதற்குப் பெரிதும் வாய்ப்புள்ள பகுதியையும் ஆய்வு செய்யும்.

### பார்வை இழப்பைக் கட்டுப்படுத்துதல்

(அ) பார்வை இழப்பைக் கட்டுப்படுத்தும் தேசிய திட்டத்தின்கீழ் அரசு மருத்துவ மனைகளிலுள்ள மாநில கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுகள், (ஆ) மத்திய அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுகள், (இ) தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்படுகின்றன.

(எ) மாநில கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுகள்:—

(i) சென்னை அரசினர் கண் மருத்துவ மனையில் உள்ள இரண்டு கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுகள்;

(ii) மதுரை, இராஜாஜி அரசினர் மருத்துவ மனையில் உள்ள கண் சிகிச்சை ஊர்திப் பிரிவு.

(iii) தஞ்சாவூர், இராஜா மிராசுதார் மருத்துவ மனையில் உள்ள கண் சிகிச்சை ஊர்திப் பிரிவு.

(iv) கோயம்புத்தூர், மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள்ள கண் சிகிச்சை ஊர்திப் பிரிவு.

(பி) மத்திய கண் சிகிச்சை இயல் ஊர்திப் பிரிவுகள்:—

பார்வை இழப்பைக் கட்டுப்படுத்தும் தேசியத் திட்டத்தின் கீழ் இயங்கும் கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுகள்:

(i) மதுரை இராஜாஜி அரசினர் மருத்துவ மனையில் கண் சிகிச்சை ஊர்திப் பிரிவு.

(ii) திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் கண் சிகிச்சை ஊர்திப் பிரிவு.

(iii) 1983–84-ல் தஞ்சாவூரில் இராஜா மிராசுதார் மருத்துவ மனையில் தேசியத் திட்டத்தின்கீழ் கண் சிகிச்சை ஊர்திப் பிரிவை ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது;



(சி) பார்வை இழப்பைக் கட்டுப்படுத்தும் தேசியத் திட்டத்தின்கீழ், பின்வரும் நிலையங்களில் உள்ள கண் சிகிச்சைத் துறைகள் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

(1) 1980 நவம்பர் திங்களில் மதுரையிலுள்ள மதுரை மருத்துவக் கல்லூரி.

(2) 1982–83-ல், திருநெல்வேலியிலுள்ள மருத்துவக் கல்லூரி.

(3) 1983–84-ல், தஞ்சாவூரிலுள்ள தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி.

(டி) பார்வை இழப்பைக் கட்டுப்படுத்தும் தேசிய திட்டத்தின் கீழ் மாவட்ட மருத்துவ மனைகளைத் தெரிந்தெடுத்தல்.

பின்வரும் மருத்துவ மனைகள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன:—

(i) 1982–83.

1. அரசு மருத்துவ மனை, பழனி, மதுரை மாவட்டம்.
2. அரசு மருத்துவ மனை, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.
3. அரசு மருத்துவ மனை, ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.
4. அரசு மருத்துவ மனை, கானாடுகாத்தான், இராமநாதபுரம் மாவட்டம்.
5. அரசு மருத்துவ மனை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டம்.
6. அரசு மருத்துவ மனை, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.
7. அரசு மருத்துவ மனை, குன்னூர், நீலகிரி மாவட்டம்.
8. அரசு மருத்துவ மனை, மேட்டூர் அணை, சேலம் மாவட்டம்.
9. அரசு மருத்துவ மனை, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டம்.
10. அரசு மருத்துவ மனை, கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.
11. அரசு மருத்துவ மனை, திருச்செந்தூர், திருநெல்வேலி மாவட்டம்.
12. அரசு மருத்துவ மனை, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

### (ii) 1983-84

(1) அரசு மருத்துவ மனை, கோபிச்செட்டிபாளையம்.

(2) அரசு மருத்துவ மனை, கும்பகோணம்.

#### ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களிலுள்ள 45 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 1980-81-82-இல் பார்வையின்மை கட்டுப்பாடு குறித்த தேசியத் திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்டன; இதுவரை அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களிலுள்ள மருத்துவ அதிகாரிகளுக்கு கண்நோய் மருத்துவத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களில் கண் நோய்ச் சிகிச்சை உதவி மருத்துவர்கள் பணியில் அமர்த்தப்படுவர்.

1983-84-இல் தேசியத் திட்டத்தின்கீழ் மேலும் 80 ஆரம்பச் சுகாதார நிலையங்களை தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தெரிந்தெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

#### பாதுகாப்பு ஏற்பாடுகள்.

மருந்துப் பொருட்கள், உணவுப் பொருட்கள், ஏனைய வகைப்பொருட்கள் திருடு போவதைத் தடுக்கும் பொருட்டும், மருத்துவ மனைகளின் வளாகத்திற்குள் தேவையில்லாதவர்கள் நுழைவதை முறைப்படுத்தும் பொருட்டும், பின்வரும் மருத்துவ மனைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த, கூடுதல் பணியாளருக்கு (காவல் துறை பணியாளர்) அரசு அனுமதி வழங்கியுள்ளது:—

1. அரசினர் பொது மருத்துவ மனை, சென்னை.
2. அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை.
3. அரசினர் இராயப்பேட்டை மருத்துவ மனை, சென்னை.
4. அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, சென்னை.

'கிங்' நிறுவனம், கிண்டி:—

கிண்டி, 'கிங்' நிறுவனம், நோய்த்தடுப்பு மருந்துகள் நிணைநீர் ஆகியவற்றைத் தயாரிக்கும் ஓர் பெரிய பொதுச்சுகாதார ஆய்வுக்கூடமாக மட்டுமின்றி கல்வி ஆராய்ச்சி நிலையமாகவும் திகழ்கிறது. இந்நிறுவனம் இம்மாநிலத்தின் தேவைகளை நிறைவுசெய்வதுடன், பல்வேறு மாநிலங்களுக்கும் காலரா நோய்த் தடுப்பு ஏனைய நோய்த்தடுப்பு மருந்துப் பொருட்களை வழங்கி வருகிறது. வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பு மருந்துக்கு மிக தேவையிருப்பதால் இந்நிறுவனம் வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பு மருந்து தயாரிக்கும் பணியினைத் தொடங்கியுள்ளது.



2. முத்தடுப்பு ஊசி மருந்து தயாரிப்பை அதிகரிக்கவும், வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பு மருந்து தயாரிக்கவும் சாதனம் இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கும் வகையில் ரூ. 7·91 இலட்சம் செலவிட அரசு 1983-84-இல் அனுமதி வழங்கியுள்ளது.

#### மருத்துவப் பணிகள்—குடும்பநலத் துறை.

#### மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கு மேம்பாட்டுப் பணிகள்.

இம்மாநிலத்தில் தற்போது 15 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் உள்ளன. 1983-84 இல் இம்மாநிலத்திலுள்ள 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் அதிக நோயாளிகளுக்கு மருத்துவ வசதி செய்துகொடுப்பதற்காக படுக்கை எண்ணிக்கை கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு உயர்த்தப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| 1. 15 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் (பேறு காலத்திற்குப் பிந்திய சிகிச்சைக்காக, ஒவ்வொரு மருத்துவமனைக்கும் 25 படுக்கைகள் என்கிற அளவில்). | 375 |
| 2. மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, காஞ்சிபுரம் | 8 |

கூடுதல் வார்டுகள் கட்டுதல் ஏனைய வசதிகள் செய்து தருதல் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு அரசு 1983-84-ல் அனுமதி வழங்கியது; அவற்றின் விவரம் வருமாறு:—

1. திண்டுக்கல் அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் நிர்வாகக் கட்டிடம் ஒன்று கட்டுதல்.

2. திண்டுக்கல், ஈரோடு, கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளின் தீவிர மருத்துவக் கவனிப்பு பிரிவுகளில் குளுமை வசதிகள் செய்து கொடுத்தல்.

3. நாகப்பட்டினம், இராமநாதபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கு உயர் அழுத்த மின் [illegible].

4. திருப்பூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கு மின் உற்பத்தி இயந்திரங்கள் வழங்குதல்.

1984-85-ல் செய்ய உத்தேசிக்கப்பட்ட மேம்பாட்டுப் பணிகள்.

1. கடலூர் அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் உள்ள அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்குக் குளுமை வசதி செய்தல்.

2. தூத்துக்குடி, நாகர்கோவில், திருப்பூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளின் தீவிர மருத்துவக்கவனிப்பு பிரிவுகளுக்குக் குளுமை வசதிகள் செய்தல்.

3. தற்போதுள்ள அறுவை சிகிச்சை உதவி மருத்துவர்கள் பதவிகளை அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பதவிகளாக மாற்றுவதன் மூலம் அரசினர் தலைமையிட மருத்துவ மனைகளில் மருத்துவ வல்லுநர் பணிக்கு வசதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. உதகமண்டலம் சேட் மருத்துவ மனைக்கும், புதுக்கோட்டை மாவட்டம் ராணியின் மருத்துவ மனைக்கும் மின் உற்பத்தி இயந்திரங்கள் வழங்குதல்.

வட்டத்தலைமையிட மருத்துவ மனைகளுக்கு மேம்பாட்டு பணிகள்.

இம்மாநிலத்தில் 122 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் உள்ளன.

கீழ்க்காணும் வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளின் படுக்கை எண்ணிக்கை 1983-84-ல் உயர்த்தப்பட்டிருக்கிறது:—

| | | |
|---|---|---|
| 1. | அரசினர் வட்டத்தலைமையிட மருத்துவ மனை, கும்பகோணம் .. .. .. .. | 50 படுக்கைகள். |
| 2. | அரசினர் வட்ட மருத்துவ மனை, அறந்தாங்கி .. .. .. .. | 24 படுக்கைகள். |

1983-84-ல் கூடுதல் வார்டு கட்டுதல், ஏனைய வசதிகள் செய்தல் முதலியவற்றிக்கு அனுமதி வழங்கிய பல்வேறு இடங்கள் பின் வருமாறு:—

1. கோபிசெட்டிபாளையம் அரசினர் மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை இரட்டைக்கூடம் கட்டுதல்.

2. தேனி அரசினர் மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.

3. நத்தத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவ மனையாக மாற்றுதல்.



4. பெரியார் மாவட்டம், சத்தியமங்கலத்தில் 50 படுக்கை வசதி கொண்ட அரசினர் மருத்துவமனை ஒன்றைப் புதிதாக கட்டுதல்.

5. தென்னார்காடு மாவட்டம், பண்ருட்டியில் முதல் கட்டமாக 25 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனை ஒன்றைப் புதிதாக கட்டுதல்.

6. திருநெல்வேலி மாவட்டம் காயல்பட்டிணம் அரசினர் மருத்துவ மனையில் 24 படுக்கை வசதி கொண்ட வார்டு ஒன்று எக்ஸ்-கதிர் பிரிவுக்கட்டிடம், ஆய்வுக்கூடம், வளாகச் சுவர் ஆகியவை கட்டுதல்.

7. தென்னாற்காடு மாவட்டம், சேத்தியாதோப்பில் 16 படுக்கை வசதிகள் அறுவைசிகிச்சை கூடம், புறநோயாளிகள் பிரிவு ஆகியவற்றுடன் கூடிய ஒரு புதிய அரசு மருத்துவமனை கட்டுதல்.

1984-85 ஆம் ஆண்டில் வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் செய்யக் கருதியுள்ள மேம்பாடுகள்.

1. வட்டத் தலைமையிட மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் குறைந்த அளவு 50 படுக்கை எண்ணிக்கைகள் உயர்த்துவதற்காக கூடுதல் வார்டுகள் கட்டுதல்.

2. சில வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய மின் உற்பத்தி இயந்திரங்களை வழங்குதல்.

3. 10 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் பேறுகாலத்திற்குப் பிந்திய சிகிச்சைக்காக 10 படுக்கைகளுக்கு அனுமதி அளித்தல்.

வட்டத்தலைமையிட மருத்துவமனை அல்லாத பிற மருத்துவமனைகளை மேம்படுத்தல்.

தற்போது இம்மாநிலத்தில் வட்டத்தலைமையிடம் மருத்துவ மனைகள் அல்லாத 121 மருத்துவமனைகள் செயல்படுகின்றன.

1983-84 ஆம் ஆண்டில் அதிக நோயாளிகளுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக பின்வரும் மருத்துவமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. | அரசு மருத்துவமனை, கொடுமுடி .. | 6 |
| 2. | அரசு மருத்துவமனை, சித்தமல்லி .. | 10 |
| 3. | அரசு மருத்துவமனை, மணமேல்குடி .. | 20 |
| 4. | அரசு மருத்துவமனை, எட்டயபுரம் .. | 10 |
| 5. | அரசு மருத்துவமனை மங்கநல்லூர் .. | 10 |

கன்னியாகுமரி அரசு மருத்துவமனையில் 6 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று கட்டுவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

**1984–85 ஆம் ஆண்டில் தாலுகா அல்லாத மருத்துவமனைகளில் எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள்.**

1, செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் புற நோயாளிப் பிரிவைக் கட்டுதல்.

2. கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் மகப்பேறு சிகிச்சை, அறுவை சிகிச்சைக்கூடம் கட்டுதல்.

3. தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவ மனையில் எக்ஸ்-கதிர் பிரிவு கட்டுதல்.

4. பெரியார் மாவட்டம், திங்களூரில் அவசர சிகிச்சைக்கான படுக்கைகளுடன்கூடிய ஒரு அறையுடன் புதிய அரசு மருந்தகக் கட்டிடம் கட்டுதல்.

1983–84 ஆம் ஆண்டில் மாவட்ட தலைமையிட மருத்துவமனைகள், வட்ட, வட்டமல்லாத மருத்துவ மனைகளிலும் 513 படுக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் உள்ள மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 14,247 ஆகும் (மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகள் நீங்கலாக). இது தவிர 712 படுக்கைகள், காசநோய் மருத்துவ மனைகளிலும் உள்ளன.

**ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக்குதல், புதிதாக மருந்தகங்களைத் திறத்தல்.**

1. நல்ல வசதிகளுடன் செயல்படச் செய்வதற்காக ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் ஒவ்வொரு கட்டமாக அரசு மருந்தகங்களாக மாற்றப்பட்டு வந்துள்ளன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக்கும் கொள்கையை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்ற குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வருங்காலத்தில் கிராமப்புற பகுதிகளில் புதிதாக அரசு மருந்தகங்கள் எதுவும் தொடங்கப்படமாட்டாது என்று அரசு 1983 ஆம் ஆண்டில் கொள்கை அளவில் ஒரு முடிவு எடுத்துள்ளது. தற்போதுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை இனி அரசு எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக கிராமப்புற பகுதிகளில் நவீன (ஆங்கில மருத்துவம்) மருந்தகங்களை தொடங்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும். இது போன்ற மருந்தகங்களின் பராமரிப்புக்காக சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமைகளைப் பொறுத்து மாநில நிதியிலிருந்து 100 சதவீதம் வரை நிதி உதவி அளிக்கப்படும்.





2. இந்த கொள்கையின்படி, 1983 ஆம் ஆண்டில் பின் வரும் 37 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை மாநில அரசு உதவியுடன் ... அரசு பிறப்பித்தது. ஏழு ஊராட்சி இடங்களில் தொடங்குவதற்கான உத்தரவுகளை அவற்றிற்குத் தேவையான ஒன்றிய மருந்தகங்களை தொடங்குமாறும் விண்ணப்பம் செய்துகொள்ளுமாறும் நிதி உதவிக்கு அரசினிடம் ஒன்றியங்களுக்கு உத்தரவிடுமாறு கிராம சம்பந்தப்பட்ட ஊராட்சி வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

(1) கொத்தமங்கலம், புதுக்கோட்டை மாவட்டம்.

(2) கீரனூர் (ஒட்டன்சத்திரம் தொகுதி), மதுரை மாவட்டம்.

(3) கீழப்புலியூர்-புதூர்; திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(4) கத்திரிப்புலம், வேதாரண்யம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

(5) கொம்டணைபுதூர், பெரியார் மாவட்டம்.

(6) ஏலூர், புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், சேலம் மாவட்டம்.

(7) மட்டப்பாறை; மதுரை மாவட்டம்.

3. ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமைக் கருத்தில் கொண்டு, அரசு எந்த அளவிற்கு நிதி உதவி செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்வதற்கு மாவட்ட ஆட்சியர்களுடனும், மருத்துவப்பணிகள்—குடும்ப நலத்துறை இயக்குநருடனும் கலந்தாலோசித்து புதிய ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை (ஆங்கில மருத்துவம்) தொடங்குவதற்கான இடங்களின் முன்னுரிமைப்பட்டியலை தயாரிக்குமாறு கிராம வளர்ச்சி இயக்குநருக்கு 1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் உத்தரவிட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

**சிறப்புச் சிகிச்சைத் துறைகளைத் தொடங்குதல்.**

அதிகமான கிராமப் பகுதிகளுக்கு சிறப்பு மருத்துவ பேணும் பொருட்டு 1983–84 ஆம் ஆண்டில் பல்வேறு பணிகளை அளிக்கும் சிறப்புத் துறைகள் தொடங்கப்பட்டன. அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) அரக்கோணம், உசிலம்பட்டி ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் கண் மருத்துவப் பிரிவுகள்.

(2) நாமக்கல், கும்பகோணம், முதுகுளத்தூர், குன்னூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுகள்.

(3) இராசிபுரம், கொளச்சல ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் பல் மருத்துவப்பிரிவு.

1984-85 ஆம் ஆண்டில்; வட்ட மருத்துவ மனைகளிலும் வட்ட தலைமையிடமல்லாத மற்ற மருத்துவமனைகளிலும் இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

பரிசோதனை ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்தல்.

பரிசோதனைக் கூடங்கள் இல்லாமல் சுமார் 86 மருத்துவ மனைகள் உள்ளன. வட்டத் தலைமையிடங்களிலுள்ள மருத்துவ மனைகள் அனைத்திலும் அவற்றில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையைக் கருதிப் பாராது நோய் கண்டறியும் அடிப்படை வசதிக்கு வகை செய்யும் பொருட்டு பரிசோதனை ஆய்வுக் கூடங்களை அமைப்பது அவசியம் எனக் கருதப்படுகிறது.

அதன்படி 1983-84 ஆம் ஆண்டில் 35 மருத்துவ மனைகளில் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டன. 1984-85 ஆம் ஆண்டில் மேலும் 17 மருத்துவ மனைகளில் பரிசோதனை ஆய்வுக் கூடங்களை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விபத்து அவசரகால சிகிச்சை.

தற்பொழுது சாலை விபத்துக்களும், ஏனைய விபத்துக்களும் அதிக எண்ணிக்கையில் ஏற்பட்டு வருகின்றன. விபத்துக்குள்ளானவர்களுக்கு போக்குவரத்து வசதி, அவசர மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்வதற்கு 1979 ஆம் ஆண்டில் அரசு விபத்து மற்றும் அவசர கால சிகிச்சைத் திட்டத்தைச் செயல்படுத்தியது. 1983-84 ஆம் ஆண்டு வரை 10 மாவட்டங்களில் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது.

1983-84 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் இரண்டு மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. அதாவது செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம், திருத்தணி ஆகிய இரண்டு இடங்களிலும் தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய இரண்டு இடங்களிலும் செயல்படுத்தப்பட்டன.

1984-85 ஆம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்டத்திலும் ஒரு அரசு மருத்துவ மனையில் இத்திட்டத்தை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எக்ஸ்-கதிர் சாதனங்கள்.—கதிர் வீச்சு முறை பரிசோதனைக்கு வரும் நோயாளிகளுக்கு சிறந்த மருத்துவ வசதி அளிப்பதற்காக 200 எம்.ஏ. எக்ஸ் கதிர் இயந்திரங்கள் பின்வரும் மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(1) அரசினர் மருத்துவ மனை, விளாத்திகுளம் (1.58 இலட்சம் ரூபாயில்).

(2) அரசினர் மருத்துவ மனை, வத்தலக்குண்டு (1.58 லட்சம் ரூபாயில்).



இதுபோன்ற 1983-84 ஆம் ஆண்டில் தேவைக்கேற்ப சாதனங்கள் இல்லாத மருத்துவ மனைகளுக்கு அவை வாங்கி வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(i) ஒவ்வொன்றும் ரூ. 5,000 விலையுள்ள ஆடியோ மீட்டர்களை 10 மருத்துவ மனைகளுக்கு வழங்கியது.

(ii) ஒவ்வொன்றும் ரூ. 6,400 விலையுள்ள இதயத் துடிப்பை அறியும் கருவியை 10 மருத்துவ மனைகளுக்கு வழங்கியது.

(iii) ஒவ்வொன்றும் ரூ. 9,300 விலையுள்ள 3 முடநீக்கு எலும்பு முறிவு அறுவை மேசைகள் வழங்கியது.

தொழுநோய் ஒழிப்புத் தேசியத் திட்டம்.

தொழுநோய் ஒழிப்புத் தேசியத் திட்டத்தில் நோய் கண்டறிதல், நோய்க்குத் தக்க சிகிச்சையளித்தல், சுகாதாரக் கல்வி ஆகியவற்றிற்குப் பின்பற்றும் அதே முறையில் தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தினை தமிழ்நாடு பின்பற்றுகிறது. 1983-84 ஆம் ஆண்டில் சிகிச்சை பயனற்றுப் போனவர்களை அறிந்து அவர்கள் வெளியே செல்ல விரும்புவார்களாயின் அவர்களை கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

(i) மக்களைப் பரிசோதித்து நோயைக் கண்டறிதல்.

சிகிச்சை அளித்ததின் பயனைக் கண்டறிவதற்காக குலுக்கல் முறை மூலம் ஒவ்வொரு சுகாதார துணை நிலையத்திலிருந்தும் 5,000 மக்கள் உள்ள பகுதி தேர்ந்தெடுக்கப்படுகிறது. நோய் பீடிக்கப் பட்டுள்ளவர்களை கண்டறிவதற்காக ஆண்டு ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. மருத்துவ பரிசோதனை செய்யப்பட்ட மக்கள், நோய் கண்டுள்ளதாக கண்டறியப்பட்டவர்கள், நோய் கண்டுள்ளதாக கண்டறியப் பட்டவர்களின் வீதங்கள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே விவரமாக கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | | மருத்துவ பரிசோதனை செய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | நோய் கண்டுள்ளதாகக் கண்டறியப் பட்டவர்கள். | புதிதாக நோய் கண்டுள்ளதாகக் கண்டறியப் பட்டவர்களின் வீதம் 1,000 பேருக்கு. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1979 | .. | 92.8 | 41,683 | 4.5 |
| 1980 | .. | 97.6 | 29,968 | 3.0 |
| 1981 | .. | 105·3 | 25,475 | 2.4 |
| 1982 | .. | 132.38 | 32,864 | 2.4 |
| 1983 டிசம்பர் வரை | | 131.07 | 25.791 | 1·96 |

(ii) பள்ளிகளில் மேற்கொள்ளப்படும் மருத்துவ சோதனை.

வறிய நிலையிலுள்ளவர்களின் குழந்தைகளுக்கு நோயெதிர்ப்பு தடுப்பு சிகிச்சை அளிக்கப்படும்போது திசுக்களில் ஏற்படும் மாற்றம் தொழுநோய்க்குரிய அறிகுறியைப்போல் தோன்றும். நகர்ப்பகுதி மக்கள் கிராமப் பகுதி மக்களின் வாழ்க்கை முறையில் பெரும் வேறுபாடுகள் உள்ளன. இதனால் நகரப் பகுதிகளிலுள்ள பள்ளிபிள்ளைகள் ஆண்டு தோறும் சோதனை செய்யப்படுகின்றனர்.

1979 ஆம் ஆண்டு முதல் கடந்த 5 ஆண்டுகளாகப் பள்ளிக்குழந்தைகளுக்கு மருத்துவ சோதனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விவரம் வருமாறு:—

| ஆண்டு. | | | சோதனைச் செய்யப்பட்ட குழந்தைகள். | புதிதாகச் சோதனை யிடப் பட்டவர்கள். | ஏற்கனவே சோதனை செய்யப் பட்டவர்கள். |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) |
| 1979 | .. | .. | 17,79,721 | 12,258 | 9,489 |
| 1980 | .. | .. | 18,06,851 | 9,741 | 14,630 |
| 1981 | .. | .. | 25,27,355 | 12,380 | 15,916 |
| 1982 | .. | .. | 46,78,890 | 16,095 | 28,916 |
| 1983 | .. | .. | 52,09,801 | 13,369 | 28,774 |

(தோராயமானது).

(iii) சுகாதார பரிசோதனை.

இரண்டாவது பிரிவினர் நோயாளிகளுடனேயே வாழ்ந்து வரும் வறிய நிலையிலுள்ளவர்களாவர், நோயுற்றவர்கள் ஏனையோர்களோடு தொடர்ந்து நெருங்கி பழகுவதனால் அவர்களுக்கும் நோய் பரவுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. எனவே இத்தகையோருக்கு அடிக்கடி பரிசோதனை செய்யப்படுகிறது.



கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் விவரம் வருமாறு:—

| ஆண்டு. | | சுகாதாரப் பரிசோதனைகள். | நோயாளிகளுடன் தொடர்ந்து பழகியதால் நோய் பற்றிக் கொண்டவர்கள். | ஆண்டொன்றில் 1,000 பேருக்கு நோய் ஏற்பட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1979 | .. | 14,6[illegible] 646 | 3,767 | 2.5 |
| 1980 | .. | 16,11,638 | 2,585 | 1.6 |
| 1981 | .. | 16,90,472 | 2,592 | 1.5 |
| 1982 | .. | 19,26,734 | 2,704 | 1.4 |
| 1983 | .. | 10,92,125 | 2,004 | 1.8 |

(1983 டிசம்பர் வரை).

(iv) சிகிச்சை.

மருத்துவ அதிகாரி ஒருவரின் தலைமையில் இயங்கும் நடமாடும்
மருத்துவக் குழுவினர் அண்மையிலுள்ள நோயாளிகளுக்கு இங்களோடு
முறை சிகிச்சை அளிக்கின்றனர். எனவே எந்தவொரு நோயாளியும்
சிகிச்சை பெறுவதற்காக அதிக தொலை நடந்து செல்லத்தேவையில்லை.
சிகிச்சை செய்யப்படும் நாளுக்கு 2 அல்லது 3 நாட்களுக்கு முன்னதாகவே
சிகிச்சை அளிக்கப்படும் நாள் பற்றி நோயாளிகளுக்குத் தகவல் அளிக்கப்
சிகிச்சை அளிக்கப்படும் நாளன்று சிகிச்சைக்கு வராத நோயாளிகள்
படுகிறது. சிகிச்சை அளிக்கப்படும் நாளன்று சிகிச்சைக்கு வராத நோயாளிகள் ஏன் சிகிச்சை பெற வரவில்லை என்பதற்கான காரணங்களை அறிந்து
கொள்ளுவதற்காகவும், தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதில் தடை
ஏற்படாவண்ணம் அவர்கள் சிகிச்சைக்கு வராத நாட்களில் அவர்களுக்கு
அவர்களது வீடுகளிலேயே சிகிச்சை அளிப்பதற்கும் அவர்களுடன்
தொடர்பு கொள்ளப்படுகிறது. நோயாளிகளின் நலனைக் கருதி சாலை
யோரச் சிகிச்சை கூடங்கள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன

பள்ளிக்குழந்தைகளுக்கு ஆசிரியர்களின் உதவியோடு அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே ஒவ்வொரு திங்களிலும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

| ஆண்டு. | | | இவ்வாண்டில் நோயுற்றவர்கள் என்று கண்டறியப் பட்டவர்கள். | இவ்வாண்டில சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) |
| 1979 | .. | .. | 86,383 | 75,859 |
| 1980 | .. | .. | 75,747 | 66,173 |
| 1981 | .. | .. | 79,332 | 67,333 |
| 1982 | .. | .. | 71,582 | 60,923 |
| 1983 | .. | .. | 54,389 | 44,423 |

(1983 நவம்பர் வரை).

(v) சோதனை முறையில் பல மருந்துகளை ஒன்று சேர்த்துக் கொடுத்தல்.

இத்திட்டத்தின் கீழ் வட ஆற்காடு மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1983 ஆம் ஆண்டில் மே திங்களில் திருவண்ணாமலையில் சிகிச்சை அளிக்கும் முறை தொடங்கப்பட்டது. பின்னர் இத்திட்டம் திருப்பத்தூரிலும் அரக்கோணத்திலும் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தும் கட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. மேற்சொன்ன திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டபோது சிகிச்சைப் பெறுவதற்காக 99 சதவீத நோயாளிகள் வந்திருந்தனர். நோய் கண்டிருப்பவர்களுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மருந்துகளை ஒன்று சேர்த்து சிகிச்சை அளிக்கும் சோதனைத் திட்டம் வட ஆற்காடு முழுவதிலும் 6 திங்களுக்குள் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தை தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு உள்ளது.

மேற்சொன்ன திட்டம் தவிர தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய தொழுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவுகள், தொழுநோய் நிலையங்கள், சீரமைப்பு பிரிவுகள், சிகிச்சைப் பிரிவுகள் முதலியவற்றை ஏற்படுத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(vi) பொது.

ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைவதற்குள், தமிழ்நாடு அரசின் மருத்துவ நிலையங்கள் மூலமாக 290 இலட்சம் மக்களுக்கும், தொண்டு நிறுவனங்கள் மூலமாக 90 இலட்சம் மக்களுக்கும் சோதனை செய்யப்பட்டது. மொத்தமுள்ள 411 இலட்சம் மக்கள் தொகையில் (1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) 380 இலட்சம் மக்கள் இதுவரை சோதனை செய்யப்பட்டுள்ளனர். நீலகிரி மாவட்டமும், சிறு பகுதிகள் அடங்கிய ஒரு சில பகுதிகளில் மட்டுமே இன்னும் இத்திட்டம் செயல்படுத்தப்படாமல் உள்ளன.

காச நோய் தடுப்புத் திட்டம்.

காசநோயை கட்டுப்படுத்துவதற்கு மூன்றாவது திட்டத்தில் தேசிய காச நோய் தடுப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது. மாவட்ட காச நோய்த் தடுப்புத் திட்டம், தேசிய காச நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் செயல்படும் ஒரு பிரிவாகும். தமிழ்நாட்டில் மாவட்ட காச நோய் தடுப்புத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. மேற்கண்ட மாவட்ட காச நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் காச நோயாளிகளுக்கு, நோய் கண்டுபிடிப்பதும், சிகிச்சையும் எல்லா அரசு மருத்துவமனைகளிலும், அரசு மருத்துவகங்களிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் அளிக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் மாவட்ட காச நோய்த் தடுப்புத்திட்டத்தின்கீழ் 1963 முதல் 1983 வரை 12.331 இலட்சம் காச நோயாளிகள் கண்டுபிடிக்கப்



பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மருத்துவமனைகளில் தங்கவைத்து, சிகிச்சை அளிக்கப்படுவது, காசநோயால் தீவிரமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே தேவையானது. தமிழ்நாட்டில் எட்டு அரசு காச நோய் மருத்துவமனைகளும், மூன்று தனியார் நிறுவனங்களும் உள்ளன. மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் சில வட்ட மருத்துவமனைகளிலும் காச நோயாளிகளுக்கு, அவசர சிகிச்சைக்காக சில படுக்கை வசதிகள் உள்ளன. மொத்தத்தில் காச நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக 3,569 படுக்கை வசதிகள் உள்ளன.

பி. சி. ஜி. ஊசி போடும் திட்டம் காச நோய்த் தடுப்புத் திட்டத்தில் ஒரு பகுதியாகும். தமிழ்நாட்டில் 23 பி. சி. ஜி. குழுக்கள் மாவட்ட காச நோய்த் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் வீடு வீடாகச் சென்று இளம் குழந்தைகளுக்கு பி. சி. ஜி. ஊசிகளை போடுகின்றன. புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு பி. சி. ஜி. ஊசி தாய்சேய் நல விடுதிகளிலும் பொது மருத்துவமனைகளின் மகப்பேறு வார்டுகளிலும் போடப்படுகின்றது. தமிழ்நாட்டில் மாவட்ட காச நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் 1963 முதல் 1983 முடிய 205·40 இலட்சம் பேர்களுக்கு பி. சி. ஜி. ஊசி போடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இரண்டு காச நோய் விளம்பரப் பிரிவுகள் உள்ளன. ஒன்று மதுரையிலும் மற்றொன்று திண்டுக்கல்லிலும் உள்ளன. இவ்விரண்டு பிரிவுகளும் காச நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் பள்ளிகளிலும்; கல்லூரிகளிலும், சேரிப்பகுதிகளிலும் காச நோய் பற்றிய திரைப் படங்களைக் காண்பித்து, காச நோய் இருப்பதை முன் கூட்டியே அறிந்து அதனைக் களைவதற்கு வேண்டிய வசதிகள் உள்ளன என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்துகின்றன.

கைத்தறித் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள் ஆகியோருக் கான சுகாதார அடங்கல் திட்டம்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள் ஆகியோரின் பயனுக்கென்று சுகாதார அடங்கல் திட்டத்தைச் செயலாக் தமிழக அரசு 1980 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியது. இ திட்டத்தின்கீழ் சிறிய கதிரியக்கியம் பிரிவின் உதவியுடன் இயலூர் சேலம், ஈரோடு, திண்டுக்கல், தூத்துக்குடி, வேலூர் ஆகிய இடங்க லிருந்து தொடங்கப்பட்டு, இம்மாநிலம் முழுவதும் இயலூர் மருத்துவப் பிரிவுகள் ஐந்து அமைக்கப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர் ஆகியோரின் மொத்த எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களிடை காசநோய் அறிகுறி தெரிவது பரிசோதிக்கப்பட்டுள்ளது. காச நே உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளவர்களுக்கு முறைப்படி சிகி அளிக்கப்படுகிறது. பிற நோயுற்றவர்களும் கவனிக்கப்படுகின்ற அவர்களுக்கு, தொடக்கத்தில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. பின் அவர்கள் தொடர்ந்து சிகிச்சை பெறும் பொருட்டு அருகிலு மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றனர்.

இத்திட்டத்தின்கீழ் செயல்பாட்டு விவரம் வருமாறு:—

| ஆண்டு. | திட்டம். | பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை. | காசநோய் அறிகுறி உள்ளவர்கள். | எக்ஸ்கதிர் (மார்புப் பகுதி) பரிசோதனை செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை. | எச்சில் பரிசோதனை செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை. | காச நோய் பாதிக்கப்பட்டவர்கள், சிகிச்சை அளிக்கப் பட்டவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1980 .. | கைத்தறித் தொழிலாளர்கள். | 12,720 | 402 | 112 | 108 | 20 |
| 1981 .. | ஷை | 1,48,739 | 3,169 | 1,349 | 762 | 226 |
| 1982 .. | ஷை | 1,80,832 | 4,553 | 951 | 1,735 | 172 |
| 1983 .. | ஷை | 3,96,807 | 22,099 | 17,078 | 4,142 | 836 |
| (31-12-1983 வரை) மொத்தம் .. | | 7,39,158 | 30,223 | 19,490 | 6,747 | 1,254 |
| 1980 .. | பீடித் தொழிலாளர்கள் | 15,001 | 273 | 78 | 26 | 18 |
| 1981 .. | ஷை | 58,114 | 2,046 | 532 | 147 | 112 |
| 1982 .. | ஷை | 64,714 | 2,683 | 1,040 | 415 | 107 |
| 1983 .. | ஷை | 69,907 | 8,559 | 5,704 | 1,221 | 63 |
| (31-12-1983 வரை) மொத்தம் .. | | 2,07,736 | 13,561 | 7,354 | 1,809 | 300 |
| (1980 முதல் 31-12-83 வரை) | பெரு மொத்தம் .. (இரு திட்டங்கள்). | 9,46,894 | 43,784 | 26,844 | 8,556 | 1,554 |

## 1984–85 ஆம் ஆண்டிற்கான செயற்குறிப்பு

திருச்சிராப்பள்ளி, அரசு இராஜாஜி மருத்துவமனையில் காச நோய்ப் பிரிவிற்காக ரூ. 1·17 இலட்சம் செலவில் கூடுதலாக 25 படுக்கை வசதிகளைச் செய்யவும் பணியாளர்களை நியமிக்கவும் அரசு அனுமதி வழங்கக் கருதியுள்ளது.

### தனியார் மருத்துவ நிலையங்களுக்கான மானியங்கள்.

தனியாரால் நடத்தப்பட்டு வரும் மருத்துவ நிலையங்களுக்கு மானிய உதவி வழங்கப்பட்டு வருகிறது. நம் மாநிலத்தில் கீழ்க்கண்ட வகையான மானியங்கள் வழங்கப்படுகின்றன:—

### 1. தனியார் மருத்துவ நிலையங்களுக்கான பராமரிப்பு மானியம்.

மருத்துவப்பணி-மக்கள் நல்வாழ்வு இயக்குநரின் பரிந்துரையின் பேரிலும், தணிக்கை பட்டியலை அனுப்புவதன் பேரிலும் இம்மானியம் வழங்குவதை முறைப்படுத்தும் நிபந்தனைகள் சரிவர உள்ளன என்று ஆய்வுக்குழுவினர் தெளிவதன்பேரிலும் இம்மானியம் வழங்கப்படுகிறது. மொத்தம் 38 நிறுவனங்கள் பராமரிப்பு மானியம் பெறுகின்றன.

1983–84-ல் நாட்ராம்பள்ளியிலுள்ள இராமகிருஷ்ணமட அறக் கட்டளை மருந்தகத்திற்கு பராமரிப்பு மானியமாக ரூ. 8,000 வழங்க அரசு அனுமதி அளித்தது. இந்த நிலையம் பராமரிப்பு மானியம் பெறும் நிறுவனங்களுள் ஒன்றாகப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளது.

### 2. கட்டிட மானியம்.

தனியார் மருத்துவ நிறுவனங்களின் மருத்துவ வசதிக்காக கட்டிடங்களைக் கட்டும் பொருட்டு, அக்கட்டிடப் பணிக்காகவும் மொத்த மதிப்பீட்டுச் செலவில் ½ பகுதித் தொகை மானியமாக வழங்கப் படுகிறது. இத்தொகை அரசால் குறிப்பிடப்பட்ட உச்சவரளவுத் தொகைக்கு உட்பட்டு வழங்கப்படும்.

அடையாறு, புற்றுநோய் நிலையத்திற்காக கிண்டி ராஜ்பவன் வளாகத்தின் புதிய தொகுதியில் உட்புற உறுப்புக்களில் தோன்றும் கட்டியைப் பற்றி மருத்துவ ஆராய்ச்சி செய்யும் பிரிவிற்கான கட்டிடம் மற்றும் சமையற்கூடக் கட்டிடம் கட்டுவதற்காக 1983–84-ல் ரூபாய் 5·77 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

### 3. கருவிகள் மானியம்.

இம்மானியமும் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு கருவிகள் வாங்குவதற்காக, அக்கருவியின் விலையில் பாதித்தொகை வழங்கப் படுகிறது. இம்மானியமானது இந்நிறுவனங்கள் கருவியை வாங்கியவுடன் அதற்கான கணக்குகளுடன் தணிக்கைப் பட்டியலையும் சமர்ப்பித்த பிறகே வழங்கப்படுகிறது.



### 4. தனியார் தொழுநோய் நிறுவனங்களுக்கான தலைவீத மானியம்.

இம்மானியமானது தனியார் தொழுநோய் நிலையங்களில் சிகிச்சைப் பெற்றுவரும் தொழுநோய் நோயாளிகளுக்கு ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூபாய் 25 வீதமும் இவர்களைச் சார்ந்துள்ள ஆரோக்கியமான குழந்தைகளுக்கு ரூபாய் 12 வீதமும் மாதா மாதம் வழங்கப்படுகிறது. மேலும், தொழுநோய்த் தொண்டு நிறுவனங்களில் கவனிக்கப்படும் தொற்றுநோய் சிகிச்சைக்காகவும் தொழுநோய் புனர் வாழ்வு அறுவைச் சிகிச்சைக்காகவும் தொழுநோய் சிகிச்சை அல்லாத வெளிப்புண்கள் சிகிச்சைக்காகவும் மேற்கூறிய தலைவீத மானியம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசிடமிருந்து இதுபோன்ற 11 (பதினோரு) நிறுவனங்கள் இம்மானியத்தைப் பெற்று வருகின்றன.

### பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் இடங்களில் 1983–84 ஆம் ஆண்டில் புதிய மருந்தகங்களைத் திறப்பதற்கு அரசு ஆணைகள் பிறப்பித் துள்ளது. இம்மருந்தகங்கள் தற்போது செயற்பட்டு வருகின்றன.

1. அரசு மருந்தகம், நாகலூர், சேலம் மாவட்டம்.

2. அரசு மருந்தகம், தொங்குமலை, ஜவ்வாது மலை, வட ஆற்காடு மாவட்டம்.

### 1984–85 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக் கைகள்.

1984–85 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது:—

(1) சேலம் மாவட்டம், கல்ராயன்மலை, கருமான் துறையில் உள்ள அரசு மருத்துவமனையில் 6 படுக்கைகள் கொண்ட அறுவைச் சிகிச்சைக் கூடத்துடன்கூடிய மகப்பேறு வார்டு, சவப்பரிசோதனை கொட்டகை கட்டுதல்.

(2) மலைப் பகுதிகளில் செயல்பட்டுவரும் 4 அரசு மருந்தகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆம்புலன்ஸ் வேன் வீதம் மொத்தம் 4 ஆம்புலன்ஸ் வேன்களை வாங்குதல்.

### ஓமியோபதி

ஓமியோபதி திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தவும், ஓமியோபதி முறை மருத்துவத்தின் மூலம் மக்களுக்குத் தீவிர சிகிச்சை அளிப்பதற்காகவும், தமிழ்நாடு மாநிலத்தில் பொதுவான ஓமியோபதி முறை மருத்துவம் மட்டுமே பின்பற்றப்பட்டு வருகிறது.

ஓமியோபதி கல்வியும், ஓமியோபதி மருத்துவ முறையும், தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு ஓமியோபதி மருத்துவமுறை—ஓமியோபதி மருத்துவர்கள் சட்டத்தின்கீழ் முறைப்படுத்தப்பட்டது. ஓமியோபதி முறை மருத்துவத்திற்கு சிறப்பிடம் அளிக்கும் நோக்கத்துடனும், ஓமியோபதி முறை மருத்துவம் இம் மாநிலத்தில் தீவிரமாக பின்பற்றப்படுவதற்கு வகைசெய்யும் நோக்கத்துடனும் தமிழ்நாடு அரசு ஓமியோபதி முறை மருத்துவத்தை ஒப்பளிக்கப்பட்ட ஒரு மருத்துவ முறையாக அங்கீகரித்துள்ளது.

ஓமியோபதி முறை மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக 25 படுக்கை வசதியுடன் கூடிய புதிய மருத்துவமனை யிணைந்த ஓமியோபதி அரசு மருத்துவக் கல்லூரி ஒன்று, மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் இயங்கிவருகிறது. கண்டறிவதற்காகவும் நோயை சிகிச்சை அளிப்பதற்காகவும் இம்மருத்துவமனையில் எக்ஸ்கதிர் (X-ray) மற்றும் மருத்துவ ஆய்வுக்கூட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஓமியோபதி முறை மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக, அனைத்து மாவட்டங்களிலுள்ள அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில், ஓமியோபதி முறை மருந்தகங்கள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் இராமநாதபுரம் மாவட்ட அரசுத் தலைமையிட மருத்துவமனைக்கு அருகே அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இல்லம் ஆகியவற்றை கட்டுவதற்கு, தேவையான இடத்தை கண்டறிய வேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

1984–85 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் 2 ஓமியோபதி முறை அரசு மருந்தகங்களை தொடங்க அரசு கருதியுள்ளது.

### டேனிடா நிதி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் குடும்ப நலத் திட்டம்.

தமிழகத்தில் சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களிலுள்ள கிராம மக்களின் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்தினை மேம்பாடு அடையச் செய்வது இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். ஐந்து ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 14.40 கோடியாகும். அவற்றுள் டென்மார்க் அரசு நிதியுதவி ரூ. 12.71 கோடியாகும். இத்திட்டம் 1—8—1981 முதல் அமுல் படுத்தப்பட்டு வருகிறது.





இத்திட்டத்தின் குறிக்கோளை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களாவன:—

(1) 5,000 மக்கட் தொகைக்கு ஒரு சுகாதாரத் துணை நிலையம் வீதம் அமைத்து, ஒவ்வொரு சுகாதாரத் துணை நிலையத்திற்கும் ஒரு பலநோக்குச் சுகாதார ஆண் பணியாளரும், ஒரு பலநோக்குச் சுகாதார பெண் பணியாளரும் நியமனம் செய்தல். நான்கு சுகாதார துணை நிலையங்களுக்கு ஒரு பலநோக்குச் சுகாதார ஆண் மேற்பார்வையாளரும், ஒரு பலநோக்கு சுகாதார பெண் மேற்பார்வையாளரும் நியமித்தல்.

(2) சுகாதார துணை நிலையங்கள் கட்டுதல்.

(3) சில மருத்துவமனைகளில் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் நலப் பகுதிகள் அமைத்தல்.

(4) சில மருத்துவமனைகளில் இருபத்து நான்கு படுக்கைகள் கொண்ட மகப்பேறு பகுதிகள் அமைத்தல்.

(5) சில மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் அமைத்தல்.

(6) சில ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்தகக் கட்டிடங்கள் கட்டுதல்.

(7) மருத்துவ அலுவலர்களுக்கும் சுகாதார மேற்பார்வையாளர்கள் (மகளிர்) குடியிருப்புக்கான கட்டிடங்கள் கட்டுதல்.

(8) குழந்தைகள், கருவுற்றிருக்கும் மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்காக ஊட்டச் சத்துணவு மையங்கள் நிறுவுதல்.

(9) சில கிராமங்களில் சுகாதார கழிப்பறைகள் மற்றும் உறிஞ்சு குழிகள் கட்டுதல்.

(10) துணை சுகாதார நிலையங்கள்/ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தண்ணீர் வசதி செய்தல்.

(11) புதிய மாற்று முறைத் திட்டங்கள்.

(12) சமுதாய நல நிதித் திட்டங்கள்.

(13) வழிப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

திட்டக் காலமாகிய 1981-86-ல் கீழ்க்கண்ட கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| (1) சுகாதாரத் துணை நிலையங்கள் .. | 523 |
| (2) சுகாதார மேற்பார்வையாளர்களுக்கான குடியிருப்புக்கள் .. | 255 |
| (3) ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்தக கட்டிடங்கள் .. | 16 |
| (4) ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவ அலுவலர்களுக்கான குடியிருப்புக்கள் .. | 36 |
| (5) மகப்பேறு பகுதிகள் .. | 2 |
| (6) அறுவை சிகிச்சைக் கூடங்கள் .. | 4 |
| (7) குழந்தைகள் சிகிச்சைப் பகுதிகள் .. | 2 |

### சுகாதாரத் துணை நிலையங்கள் அமைத்தல்

முதற்கட்ட வட்டாரங்களில அனுமதி வழங்கப்பட்ட 95 சுகாதார துணை நிலையங்களும் (சேலம் மாவட்டத்தில் 29-ம் தென்னாற்காடு மாவட்டத்தில் 66-ம்) நிறுவப்பட்டன.

இரண்டாவது கட்ட வட்டாரங்களில் அனுமதி வழங்கப்பட்ட 354 சுகாதார துணை நிலையங்களும் (சேலம் மாவட்டத்தில் 84-ம், தென்னாற்காடு மாவட்டத்தில் 270-ம்) நிறுவப்பட்டன.

மூன்றாவது கட்ட வட்டாரங்களில், அனுமதி வழங்கப்பட்ட 231 சுகாதார துணை நிலையங்களும் (சேலம் மாவட்டத்தில் 53-ம் தென்னாற்காடு மாவட்டத்தில் 178-ம்) நிறுவப்பட்டு வரு கின்றன. விரைவில் நிறுவப்பட்டு விடும்.

### கட்டுமானம்

#### சுகாதார துணை நிலையக் கட்டிடங்கள்

சேலம் மாவட்டத்தில் 28-ம், தென்னாற்காடு மாவட்டத்தில் 30-ம் ஆக முதற்கட்டமாக அனுமதி வழங்கப்பட்ட 58 சுகாதாரத் துணை நிலையங்களும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மேலும் இரண்டாம கட்டமாக சேலம் மாவட்டத்திற்கு 133-ம், தென் னாற்காடு மாவட்டத்தில் 180-ம் ஆக அனுமதி வழங்கப்பட்ட 313 சுகாதார துணை நிலையக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வரு கின்றன.



இவற்றுடன் அனுமதி வழங்கப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 13 பொது மருந்தகத் துணை கட்டிடங்களும், மருத்துவ அலுவலர்களின் 21 குடியிருப்புக் கட்டிடங்களும், 4 அறுவைச் சிகிச்சைக் கூடங்களும், 2 மகப்பேறு மருத்துவப் பிரிவுகளும், ஒரு குழந்தைகள் சிகிச்சைப் பகுதியும் கட்டப்பட்டு வருகின்றன.

மூன்றாம் கட்டமாக அனுமதி வழங்கப்பட்ட 152 சுகாதார துணை நிலையங்களும் (சேலம் 77, தென்னாற்காடு 75) சுகாதார பெண் பார்வையாளர்களுக்கு 104 குடியிருப்புகளும் (சேலம் 38, தென்னாற்காடு 66) சேலம் மாவட்டத்தில் 3 பொது மருந்தக துணை கட்டடங்களும், மருத்துவ அலுவலர்களுக்கு 15 குடி யிருப்புக்களும் (சேலம் 5, தென்னாற்காடு 10) மற்றும் சேலம் மாவட்டத்தில் ஒரு குழந்தைகள் நலப் பிரிவும் கட்டு மானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ஊட்டச்சத்துத் திட்டம்

இரண்டு முன்னோடி வட்டாரங்களில் துவக்கப்பட்ட 111
ஊட்டச்சத்து மையங்களில், குழந்தைகள், கருவுற்றிருக்கும் பெண்
கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஊட்டச்சத்துணவு
வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் 6,500 குழந்தைகளும்
3,000 பெண்களும் அன்றாடம் ஊட்டச்சத்து பெறுகிறார்கள். இவ்
ஊட்டச்சத்து உள்ளூர் பெண்களைக் கொண்டு 25 ஊட்டச்சத்து
உற்பத்தி நிலையங்களில் தயாரிப்பதன் மூலம் ஒவ்வொரு உற்பத்தி
நிலையத்திலும் நான்கு பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்
டுள்ளது. ஊட்டச்சத்து மையங்கள் இயங்கிவரும் 111 கிராமங்கள்
ஒவ்வொன்றிற்கும், அந்தந்தக் கிராமத்திலிருந்தே ஒரு சமூகப்
பணியாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் மூலம்
குழந்தைகள், கருவுற்றிருக்கும் பெண்கள் மற்றும் பாலூட்டும்
தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துணவு வழங்குவதுடன், உள்ளூர்
மக்களுக்கு வேலை வாய்ப்பும் வழங்கப்படுகின்றன. குழந்தைகளின்
வளர்ச்சி அவர்களின், மாதாந்திர எடை கணக்கிடுவதின் மூலம்
கண்காணிக்கப்படுகிறது. மகளிர் மன்றங்களை நிறுவி, தங்களுடைய
சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிலையினை பாதுகாத்துக்
கொள்வதற்கான பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்
கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
மகளிர் மன்றங்களைப் பதிவு செய்து, சமூக நல வாரியம் மற்றும்
தானாக முன்வந்து உதவி செய்யும் இதர நிறுவனங்களுடன்
இணைந்து செயல்படச் செய்வதன் மூலம் மக்கள் தங்களது தேவை
களைப் பூர்த்தி செய்துகொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன.

### புதிய மாற்று முறைத் திட்டங்கள்.

சுகாதாரப் பராமரிப்பிற்காக மாற்று முறையாக சில புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப் படுகின்றன. உதாரணமாக கல்ராயன்மலைப் பகுதியில் மக்கள் எளிதில் அடைய முடியாத தூரத்திலுள்ள இன்னாடு என்னும் கிராமத்தில், கிராமச் சுகாதாரப் பாதுகாப்பு நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அங்கு ஒரு ஆண் மற்றும் பெண் மருத்துவர்களும், ஒரு மருத்துவப் பணியாளரும், ஒரு உதவியாளரும் பணியாற்றி வருகின்றனர். போதுமான மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் சென்னையிலுள்ள பஞ்சாப் அசோசியேஷன் மூலம் நடத்தப்பட்டு வருகின்றது.

பல மருந்து வழங்கு முறையைக் கொண்டு, இராசிபுரம் மற்றும் விழுப்புரம் பகுதிகளில், தொழுநோயைக் குணப்படுத்துவதற்கான திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிகிச்சைக் காலத்தைக் குறைப்பதுடன், தொழுநோய் மேலும் பரவாமலும் தடுக்கவும் இயலும். இத்திட்டத்தின் முக்கிய அம்சமாவது, தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இத் திட்டத்தின் நோக்கம் மற்றும் சிறப்புகளைத் தெரிவித்து தொடர்ந்து சிகிச்சை பெறச் செய்து, முன்னேற்றத்தைக் கூர்ந்து கண்காணிப்பதுமாகும். யானைக்கால், பால்வினை நோய், தோல் சம்பந்தமான தொற்றுநோய், குரல்வளைச சுரப்பி வீக்கம், காசநோய் போன்ற பல்வேறு வியாதிகளை குணப்படுத்துவதற் கான முறைகளைச் செயற்படுத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப் படுகின்றன.

### சமுதாய நல நிதி.

குறிப்பிட்ட சமூகத்தின் ஒட்டு மொத்தமான சில பிரிவினரின் அவசரத் தேவைகளுக்குப் பயன்படும் வகையில், மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட அளவில் ஒரு குழு நியமிக்கப்பட்டு சமுதாய நலநிதித் திட்டம் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் திட்டங் களைத் தெரிவு செய்து மாவட்ட அளவிலான குழுவிற்குப் பரிந் துரை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் திட்டப் பணிகளில் சமுதாய மக்கள் பங்கேற்க வகை செய்யப்படும்.

### சுற்றுப்புறச் சுகாதாரத் திட்டம்.

சுகாதாரப் பராமரிப்புக்குத் துணையாகச் சுற்றுப்புறச் சுகாதாரச் சூழ்நிலையை மேம்பாடு அடையச் செய்யும் பொருட்டு சுகாதாரக் கழிப்பிடங்கள் மற்றும் உறிஞ்சு குழிகள் கட்டித் தரப் படுகின்றன. இத்திட்டத்தின் முக்கிய அம்சமாவது, மக்களே இத்திட்டத்தின் அவசியத்தை உணர்ந்து, வீட்டிற்கொரு சுகாதாரக் கழிப்பிடம் கட்டிக்கொள்ள முன்வரச் செய்வதாகும்.



இதுவரை, சேலம் மாவட்டம், பன்னவாடி கிராமத்தில் 100 சுகாதாரக் கழிப்பிடங்களும், வீமனூர் கிராமத்தில 125 சுகாதாரக் கழிப்பிடங்களும் கட்டப்பட்டுள்ளன. இக்கிராமங்களில் உறிஞ்சு குழிகளும் கட்டப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் 8,000 உறிஞ்சு குழிகளும், தென்னாற்காடு மாவட்டம், ராவுத்தன்குப்பம் கிராமத்தில் 100 கழிப்பறைகளும், உறிஞ்சு குழிகளும் கட்டு வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படவுள்ளன.

### பயிற்சி.

1983-84 ஆம் ஆண்டில் 338 மருத்துவத் தாதியர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டன. 1984-85 ஆம் ஆண்டில் 774 தாதியர் களுக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. திருக்கோயிலூர் டேனிஷ் மிஷன மருத்துவ மனையில் வழங்கப்படும் மலைவாழ் பெண் களுக்கு சுகாதாரப்பணி பற்றிய பயிற்சியும், இதர பெண்களுக்குப் பலநோக்குச் சுகாதாரப் பணிகள் பற்றிய பயிற்சியும் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்டத்திற்கு 3 வீதம் இரு மாவட்டங்களி லும் 6 மாவட்டப் பயிற்சிக் குழுக்கள் அமைத்து சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரிவான பாடத்திட்டங்களும் பயிற்சிகால அளவும் வகுக்கப்பட்டு இத்திட்டம் விரைவில் செயல்படவுள்ளது.

### சுகாதாரத் துணை நிலையங்களுக்குக் குடிநீர் வசதி.

ரூ. 32.22 இலட்சம் செலவில், திட்டப் பகுதிகளில் உள்ள 259 சுகாதாரத் துணை நிலையங்களுக்கு குடிநீர் வசதி செய்ய அரசு அனுமதி வழங்கி உள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வழங்கு மற்றும் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் செயல்படுத்தப்படவுள்ளது. நீர்க் குழாய்கள் அமைத்தல், ஆழ்கிணறு மற்றும் துளைக் கிணறுகள் அமைத்தல் மூலம் குடிநீர் வசதிகள் செய்யப் படும்.

### ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கூடுதலாக மருத்துவ சாதனங்கள் வழங்குதல்.

கீழ்க்கண்டவாறு மருத்துவ சாதனங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

| மருத்துவ சாதனங்கள். | ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | சேலம். | தென் ஆற்காடு. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| மேற்பரப்பில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், தகடு பதிக்கப்பட்ட மகப்பேறு படுக்கை. | 32 | 34 | 66 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| இரத்த அழுத்தம் கணக்கிடும் கருவிகள். | 35 | 34 | 69 |
| கிருமி நாசினி சாதனங்கள் (ஸ்டெரிலைசர்ஸ்). | 35 | 34 | 69 |

### தகவல் தொடர்பு.

கேர் (CARE) நிறுவனத்தாரிடமிருந்து இரண்டு செய்திப் படங்கள் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திட்ட மாவட்டங்களில், பெரும்பாலான மக்களுக்குத் தகவல் தொடர்பு சாதனமாக இச்செய்திப் படங்கள் பயன்படுத்தப்படும். திட்டத்தின் தகவல்-கல்வி தொடர்பு நடவடிக்கைகளின் முக்கிய நோக்கம் நேரடித் தொடர்பு மற்றும் குழுத்தொடர்பு ஆகியவற்றை விளம்பர சாதனங்களின் உதவியுடன் செயல்படுத்துவதாகும். களப் பணியாளர்கள், நேரடித் தொடர்பு மற்றும் குழுத் தொடர்பு முறை பற்றிப் பயிற்சியளிக்கப்படுவர்.

### வழிமுறைப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு

செயற்படுத்தப்படும் திட்டங்கள் முறையாக வழிமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. சில சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தேசியக் காசநோய் நிறுவனத்தால் அடிப்படை ஆய்வு நடத்தப்பட்டு தொகுப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திட்டத்தின் இடைக்கால மதிப்பீடு 1984-85 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ளது.

### நிதி நிலை அறிக்கை

1983-84 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும், 1983-84 ஆம் ஆண்டிற்கான செலவினம் மற்றும் 1984-85 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடும் கீழே தரப்பட்டுள்ளன.



### டேனிடா திட்டம்.

திருத்த மதிப்பீடு 1983-84, செலவுக் கணக்கு 1983-84 மற்றும் வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1984-85-க்கான அட்டவணை.

(ரூபாய் இலட்சத்தில்)

| வரிசை எண்ணும் விவரங்களும். | திருத்த மதிப்பீடு 1983-84. | செலவு: கணக்கு 1—4—1983—31—12—1983. | செலவு: எதிர்பார்க்கப்படும் செலவு 1—1—1984—31—3—1984. | செலவு: மொத்தம். | திட்ட வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1984-85. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. கூடுதல் துணை நிலையங்கள் | 26.32 | 1.82 | 23.31 | 25.13 | 25.34 |
| 2. கூடுதல் பணியாளர் .. | 43.06 | 22.54 | 12.95 | 35.49 | 67.26 |
| 3. திட்ட அமைப்பு .. | 19.79 | 13.27 | 5.15 | 18.42 | 20.76 |
| 4. கட்டுமானப் பணி அமைப்பு .. | 4.80 | 3.89 | 1.62 | 5.51 | 5.00 |
| 5. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 7.00 | 1.10 | 1.50 | 2.60 | 6.00 |
| 6. மக்கள் தொடர்பு (நல்வாழ்வு கல்வி) | 15.00 | 1.41 | 1.59 | 3.00 | 25.00 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 7. பயிறு .. .. .. | 10.00 | 2.54 | 2.46 | 5.00 | 20.00 |
| 8. கட்டுமானம் .. .. .. | 311.79 | 58.96 | 262.75 | 321.71 | 148.66 |
| 9. மாற்றுத் திட்டங்கள் .. .. | 10.00 | 0.42 | 1.58 | 2.00 | 30.00 |
| 10. சமுதாய நல நிதி .. .. | 10.00 | 10.05 | 3.95 | 4.00 | 20.00 |
| 11. அச்சகத்து .. .. | 15.00 | 10.44 | 4.56 | 15.00 | 12.00 |
| 12. சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குதல். .. | 31.00 | 8.56 | 12.44 | 21.00 | 31.00 |
| மொத்தம் .. | 503.76 | 125.00 | 333.86 | 458.86 | 411.02 |



## குடும்பநலத் திட்டம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு:

மக்கள் தொகை மட்டுமீறிய வகையில் பெருகி இருப்பதையும் மாநிலத்தின் நாட்டின் திட்டமிட்ட சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு மக்கட் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசிய மென்பதையும் உணர்ந்து, தமிழ்நாடு அரசு, 1956 ஆம் ஆண்டு முதற் கொண்டே குடும்பநலத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து வந்துள்ளது. இது, மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இயன்றவரை தொண்டு நிறுவனங்களைப் பயன்படுத்தி கட்டாயப்படுத்தாமல் தாமே முன்வந்து விரும்பி ஏற்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(1) மாவட்ட ஆட்சியர்கள், அவர்களுடைய பணியாளர்கள் ஆகியோரின் மதிப்புமிக்க ஒத்துழைப்புடன் இத்திட்டம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு மாவட்ட அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொள்வதைக் கருதியும் இந்திய அரசின் பரிந்துரையின்படியும் நலத்திட்டத்தைத் தீவிரமாகச் செயல் படுத்துவதற்காக தேர்வுத்தர பதவித்தரத்தில் ஐ. ஏ. எஸ். அதிகாரி ஒருவர் 1983 அக்டோபரிலிருந்து குடும்பநல இயக்குநராக நியமிக்கப் பட்டுள்ளார்.

(2) இந்தியாவில் மக்கள் தொகை 1971—81 ஆண்டுகளில் ஒவ்வொரு மாதமும் சுமார் 1.14 மில்லியன் விகிதத்தில் பெருகி வந்துள்ளது. மக்கட்தொகை இந்த நூற்றாண்டின் இறுதியில் 1065 மில்லியனாக அதிகரிக்கும்.

(3) தமிழ்நாடு பிறப்பு-இறப்புப் பதிவாளர் கணக்கின்படி 1977 முதல் 1981 வரையான 5 ஆண்டுகளில் இம்மாநிலத்திலும், இந்திய அளவிலும் நிலவும் பிறப்பு-இறப்பு குறித்த புள்ளி விவரம் வருமாறு:—

| ஆண்டு. | தமிழ்நாடு | | இந்தியா. | | தமிழ் நாடு குழந்தைகளின் இறப்பு வீதம் 1,000-க்கு. | இந்திய குழந்தைகளின் இறப்பு வீதம் 1,000-க்கு. |
|---|---|---|---|---|---|---|
| | பிறப்பு வீதம் 1,000-க்கு. | இறப்பு வீதம் 1,000-க்கு. | பிறப்பு வீதம் 1,000-க்கு. | இறப்பு வீதம் 1,000-க்கு. | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1977 .. | 29.3 | 13.7 | 33.0 | 14.7 | 113.5 | 130 |
| 1978 .. | 28.9 | 12.8 | 33.3 | 14.2 | 99.6 | 127 |
| 1979 .. | 28.1 | 12.0 | 33.2 | 12.8 | 98.5 | * |
| 1980 .. | 27.1 | 10.9 | 33.5 | 12.5 | 99.8 | .. |
| 1981 .. | 26.1 | 10.9 | 33.9 | 12.5 | 81.2 | .. |

* புள்ளி விவரம் கிடைக்கவில்லை.

மக்கட் தொகை அதிகரிப்பு.

| | | |
|---|---|---|
| இந்தியா | .. .. .. .. .. .. | 24.75 சத வீதம். |
| தமிழ்நாடு | .. .. .. .. .. .. | 17.23 சத வீதம். |

(4) கடந்த ஐந்து ஆண்டுகளில் பிறப்பு, இறப்பு, குழந்தைகள் இறப்பு வீதம் குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைந்து வந்துள்ளது என்பதை அறியலாம். தமிழ்நாட்டில் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்துள்ள தகுதிவாய்ந்த தம்பதியரின் சத வீதம் 30·2 ஆகும்.

பிறப்பு வீதத்தையும், இறப்பு வீதத்தையும் கி. பி. 2000 ஆண்டில் 1000-க்கு முறையே 21·9 என்ற வீதத்தில் குறைப்பதே நம்முடைய தேசிய கொள்கையாகும். இந்த குறிக்கோளை நமது மாநிலத்தில் 1991-92-க்குள் எய்தக் கருதப்பட்டுள்ளது. இக்குறிக்கோளை எய்தும் நோக்குடன் தகுதி வாய்ந்த தம்பதியர் நிலையான அல்லது தற்காலிகமான குடும்பநலத் திட்ட முறைகளைப் பின்பற்றி "சிறு குடும்ப முறையை" ஏற்கும் வகையில் அவர்களுக்கு அறிவுரை வழங்கி விளக்கமளிக்க மும்முரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1983-84 ஆம் ஆண்டு குடும்பநலத் திட்டத்தின் இலக்கும், சாதனையும்.

| குடும்பநலத் திட்ட முறைகள். (1) | 1983-84 ஆண்டில் மத்திய அரசு வரையறுத்துள்ள இலக்கு. (2) | 31—12—83 வரை எய்திய சாதனை. (3) | 1982-83-ல் இதற்கு இணையான கால அளவில் எய்திய சாதனை. (4) |
|---|---|---|---|
| 1. அறுவைச சிகிச்சை .. | 3,99,000 | 3,40,663 | 1,45,468 |
| 2. கருத்தடை வளையங்கள் பொருத்துதல். | 1,68,000 | 31,665 | 24,973 |
| 3. மரபு முறையிலான கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்துவோர். | 2,44,000 | 41,626 | 39,731 |
| 4. கருத்தடை மாத்திரைகள் உட்கொள்வோர் 27—2—83 வரை. | 90,000 | 8,973 | 2,522 |



(5) கருத்தடை வளையங்கள் பொருத்துதல். நிரந்தர குடும்பநல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, இத்திட்டத்தை ஏற்றுக்கொள்பவர்களுக்குத் தற்காலிக குடும்பநல வசதிகளையும், பெருமளவில் செய்து கொடுக்கக் கருதப்பட்டுள்ளது. கருத்தடை வளையம் பொருத்தும் நடவடிக்கையை தீவிரப்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது, கிராமப்பகுதி குடும்பநல நிலையங்கள், நகர்ப்பகுதி குடும்பநல நிலையங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றில் பயிற்சி பெற்ற உதவி அறுவைச் சிகிச்சை பெண் மருத்துவர்கள் மூலம் மட்டுமே கருத்தடை வளையம் பொருத்தும் பணி மேற்கொள்ளப்படுகிறது. கருத்தடை வளையம் பொருத்துவதில் பெண் மருத்துவப் பார்வையாளர்களுக்குப் பயிற்சியளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசு, உள்ளாட்சி மற்ற தொண்டு நிறுவனங்கள் முதலியவற்றில் பணியாற்றும் எல்லாப் பெண் மருத்துவப் பார்வையாளர்களுக்கும் பயிற்சி பெற்ற உதவி அறுவைச் சிகிச்சை பெண் மருத்துவர்களின் நேரடி மேற்பார்வையின்கீழ் குறைந்தது மூன்று வார காலத்திற்கு இப்பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியை முடித்தவுடன் பயிற்சி பெற்றவர்களுக்கு இப்பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் ஒன்று வழங்கப்படும். பயிற்சி பெற்ற உதவி அறுவைச் சிகிச்சைப் பெண் மருத்துவர்களோடு இவர்களும் கருத்தடை வளையம் பொருத்தும் பணியில் ஈடுபடுத்தப்படுவர். இதனால் சில கிராமப் பயிற்சி பெற்ற உதவி அறுவைச் சிகிச்சை பெண் மருத்துவர்கள் பகுதியில் கிடைக்காமலிருப்பதைப் போக்கும் மேற்சொன்ன பயிற்சியைச் செயல் படுத்தும் நோக்கத்தோடு 1984 ஆம் ஆண்டு சனவரியில் சென்னையிலும் (21—1—1984), மதுரையிலும் (25—1—1984), குடும்பநலத்துறை இயக்கத்தின் மூலம் "கருத்தடை வளையம்" பற்றி அறிந்து கொள்வதற்காக இரு கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டது.

(6) பேறு காலத்திற்குப் பின் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யும் திட்டம்.—பிரபலமான நகராட்சி மருத்துவ மனைகளில் மருத்துவப் பேறுக்காக மகளிர் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்யும்போது குடும்பநல நடவடிக்கைகளைத் தீவிரமாக செயல்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மருத்துவமனைகளில் அவர்களின் பேறு காலத்தின்போது அவர்களுக்குக் குடும்பநலம்பற்றி தொடர்ந்து போதித்து குடும்பநலத் திட்டத்தை அவர்கள் இசைந்து ஏற்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது இம்மாநிலத்தில்,

பேறுகாலத்திற்குப்பின் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யும் 32 நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை குறித்த விவரம் வருமாறு:—

| வகை. | செயல்பட்டு வரும் நிலையங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | அரசு. | உள்ளாட்சி மன்றங்கள். | தொண்டு நிறுவனங்கள். |
| (1) | (2) | (3) | (4) |
| 'ஏ' வகை .. | 13 | .. | 1 |
| 'பி' ,, .. | 9 | 4 | 2 |
| 'சி' ,, .. | 1 | 1 | 1 |
| மொத்தம் .. | 23 | 5 | 4 |

மேற்சொன்ன 32 நிலையங்கள் தவிர 5 துணைக்கோட்ட மாவட்ட மருத்துவமனைகளிலும் இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. உடனுக்குடன் குடும்பநலம் பற்றிய ஆலோசனை, நோய்களுக்கான சிகிச்சை அளிக்கப்படுவதற்காக மேற்சொன்ன ஒவ்வொரு துணைக் கோட்ட மாவட்ட மருத்துவ மனைகளிலும் சில ஆரம்ப சுகாதார நிலையங்கள் இணைக்கப் பட்டுள்ளன.

(7) கருத்தடை அறுவைச் சிகிச்சை.—இத்திட்டத்தின்கீழ், நிரந்தரக் குடும்பநலத் திட்டத்தை செயல்படுத்தும் வகையில் மகளிருக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. இவை தவிர 1982–83 ஆம் ஆண்டின் இறுதியில் இம்மாநிலத்தில் லேப்ராஸ்கோப்பிக் என்னும் புதிய முறை துவங்கி பின்பற்றப்பட்டு வருகிறது. இம்முறையில் 1983–84 ஆம் ஆண்டில் தீவிரமாகப் பின்பற்றப்பட்டு 31—12—1982 ஆம் நாள் வரை இம்முறையின் மூலம் 1,75,542 நபர்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. இதைப்போன்றே மகளிருக்கான கருத்தடை சிகிச்சை முறை மூலம் 31—12—1983 ஆம் நாள் வரை 1,51,455 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. மேலும் 31—12—1983 ஆம் நாள் வரை, 13,665 ஆண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப் பட்டது.



(8) நகர்ப்பகுதி குடும்பநல நிலையம்.—அரசு மருத்துவ நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றால் நகர்ப்பகுதி குடும்பநல நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது இம்மாநிலத்தில் 245 குடும்பநல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு:—

| நகர் பகுதி குடும்பநல நிலையங்கள். | வகை 1. | வகை 2. | வகை 3. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| அரசு நடத்துபவை .. | 84 | 41 | 39 | 164 |
| உள்ளாட்சி மன்றங்கள் நடத்துபவை. | .. | 2 | 64 | 66 |
| தொண்டு நிறுவனங்கள் நடத்துபவை. | .. | .. | 15 | 15 |
| மொத்தம் .. | 84 | 43 | 118 | 245 |

(9) தாய்-சேய் நலத்திட்டம்.—"சிறு குடும்பகோட்பாட்டில்", நம்பிக்கை ஊட்டுவதற்காக, தாய்-சேய் நலத்திட்டத்தை செம்மையாகச் செயற்படுத்துவது இன்றியமையாததாகும். குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவது (D.P.T.D.T. போலியோ) மற்றும் இரும்பு சத்துள்ள மாத்திரைகளை வழங்குவது (F.S.D. சிறியது), கருவுற்ற தாய்மார்களுக்கு இரும்புச்சத்துள்ள மாத்திரைகளை (F.S.D. பெரியது) வழங்குவது ஆகிய இத்திட்டத்தின் நோக்கமாகும், இத்திட்டத்தைச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும், மாநில அளவில் ஒருங்கிணைந்த கட்டுப்பாடு இருக்கும் வரையில், மக்கள் நல்வாழ்வு நோய்த்தடுப்பு மருந்து துறை இயக்குநர் இத்திட்டத்திற்காகவும், நோய்த்தடுப்பூசி போடும் பணிகளைக் கவனிக்கவும் மாநில அளவிலான அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார், மாநில முழுவதுமாக முகாமிட்டு, நோய்த் தடுப்பூசி போடும் பணி நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1984 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் வரையில் நோய்த் தடுப்பூசி போடுவதற்கான குறிக்கப்பெற்ற இலக்கும், இலக்குச் சாதனைகளும்.

| ஊசி/மாத்திரை மருந்துகள். (1) | ஆண்டுக்கான இலக்கு. (2) | வீதாச்சார இலக்கு. (3) | 1983–84 (சனவரி வரை) எய்திய சாதனை. (4) | சாதனை வீதாசார இலக்கு. (5) | அளவு இலக்கில் சாதனை அளவு. (6) |
|---|---|---|---|---|---|
| டி. பி. டி. .. | 11,00,000 | 9,16,667 | 5,94,327 | 65 | 55 |
| டி. டி. .. | 9,00,000 | 7,50,000 | 6,28,789 | 85 | 70 |
| டி.டி. (எம்) .. | 8,00,000 | 6,66,667 | 3,60,916 | 54 | 45 |
| டி. டி. (10 வயது) .. | 3,00,000 | 2,50,000 | 1,54,428 | 62 | 51 |
| டி. டி. (16 வயது) .. | 2,00,000 | 1,66,667 | 52,266 | 31 | 26 |
| டி. எ. .. | 7,50,000 | 6,25,000 | 5,52,679 | 88 | 74 |
| போலியோ .. | 7,00,000 | 5,83,333 | 4,02,452 | 69 | 57 |
| எப். எஸ். டி. (எல்) .. | 8,00,000 | 6,66,667 | 5,53,278 | 83 | 69 |
| எப். எஸ். டி. (எஸ்) . | 8,00,000 | 6,66,677 | 6,94,025 | 115 | 96 |
| வைட்டமின் 'ஏ' .. | 22,00,000 | 18,33.333 | 10,38,548 | 57 | 47 |



(10) **மருத்துவச்சிகள் பயிற்சி.**—மருத்துவச்சிகள் தாய்மார்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாலும் கிராமப் பகுதிகளில் பேறு காலத்தின்போது அவர்கள் பெரும் அளவில் உதவியாக இருப்பதாலும் கிராம சமுதாய வாழ்க்கையில், வழிவழி வந்த உள்ளூர் மருத்துவச்சிகளின் பங்கு மிக முக்கியமானதாகும். அவர்கள் குழந்தைப்பேறு, குழந்தை வளர்ப்பு, குடும்பநலத்திட்ட முறையில் தாய்மார்களை ஈடுபடுத்துவது ஆகியவற்றில் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளனர். 1983–84 ஆம் ஆண்டில் 3,000 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க 31—12—1983 வரையில் 916 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(11) **மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல்.**—முறையற்ற கருக்கலைப்பு செய்து கொள்வதனால், கருவுற்ற மகளிர் இறப்பதையும், நோய்வாய்ப்படுவதையும் குறைப்பதற்காக 1971 ஆம் ஆண்டு மருத்துவ முறை கருச்சிதைவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சுகாதாரக் காப்பு நடவடிக்கையாக இச்சட்டம் கொண்டுவரப்பட்ட போதிலும் இது குடும்ப நலத் திட்டத்திற்கு உதவியாக இருக்கிறது. தற்போது 166 அரசு மருத்துவ நிறுவனங்களிலும் 34 தனியார் மருத்துவ நிறுவனங்களிலும், மருத்துவ முறையில் கருச்சிதைவு செய்து கொள்வதற்கான வசதிகள் உள்ளன.

(12) **பிரச்சாரமும், விளம்பரமும்.**—தகுதி வாய்ந்த தம்பதியருக்கு "சிறு குடும்பக்கோட்பாடு" பற்றி அறிவுறுத்தி அவற்றை பின்பற்ற ஊக்க மளிப்பதில் பிரச்சார விளம்பர பிரிவு முக்கியப் பங்கு வகிக்கிறது. அகில இந்திய வானொலி நிலையம், தொலைக்காட்சி, செய்தித் தாள்கள் போன்றவற்றின் மூலம் குடும்பநலத் திட்டம்பற்றி இப்பிரிவு மக்களுக்கு எடுத்துரைக்கிறது. பிறப்பு வீதத்தைக் குறைக்கும் நோக்கத்துடன இளம் தம்பதியர்களிடையே தற்காலிகக் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளைப் பரப்புவதற்காக விளம்பரங்கள், சுவரொட்டிகள், வரைச்சித்திரங்கள் போக்கு வரத்து வண்டிகளில் விளம்பரம் செய்தல், ஆகியவற்றோடு திரையரங்கு களில் "சிலைடுகள்" போட்டு காண்பித்தல் ஆகிய பணிகளை இப்பிரிவு மேற்கொள்கிறது. மக்கள் தொடர்புத் திட்டத்தின்கீழ் பொருட்காட்சிகள், கிராமிய நாடகங்கள், நாடகங்கள், தனித்திரைப்படங்கள் ஆகியவை நடத்தப் பட்டு வருகின்றன. தொண்டு நிறுவனங்களும் இத்திட்டத்தில் இம்மாநில அரசுடன் குறிப்பிடத்தகுந்த அளவிற்கு பங்கு எடுத்துக்கொண்டுள்ளன. பிரச்சாரப் பணியாளர் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 1983–84 ஆம் ஆண்டில் 31—12—1983 வரையில் 775 பிரச்சாரப் பணியாளர் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

(13) **வரவு-செலவுத் திட்டம்.**—1984–85 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1,743·28 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. (கிராமச் சுகாதார நிலையங்கள் டானிடா திட்டத்திற்கான நிதியொதுக்கம் நீங்கலாக) 1983–84 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில்

ரூ. 1,630·67 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டது. (தலைமைச் செயலகம், கிராமத்துணை நிலையங்கள், கட்டிடங்கள் பாண்டியர் திட்டத்திற்கான நிதியொதுக்கம் நீங்கலாக.)

பிற் சேர்க்கை 1.

பட்டப் படிப்புகள்.

| படிப்பின் பெயர். (1) | கால அளவு. (2) | | ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|---|
| எம். பி. பி. எஸ். .. | 5 1/2 ஆண்டுகள் (உட்பணி பயிற்சி உட்பட). | | 1,071 |
| பி. பார்மசி .. .. | 4 ஆண்டுகள் | | 58 |
| பி. டி. எஸ். .. .. | 4 ஆண்டுகள் | | 49 |
| பி. எஸ். சி. செவிலியர் .. | 2 1/2 ஆண்டுகள் | பணிபுரிவோர் | 20 |
| | | தனியார் | 10 |

பிற் சேர்க்கை 2.

பட்ட மேற்படிப்பு மற்றும் உயர்நிலைச் சிறப்பு வகுப்புகளுக்கான பட்டியல்.

| படிப்பின் பெயர். (1) | ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| எம். டி. .. .. .. .. .. | 262 |
| எம். எஸ். .. .. .. .. .. | 153 |
| எம். சி. எச். .. .. .. .. .. | 33 |
| டி. எம். .. .. .. .. .. | 21 |



| (1) | (2) |
|---|---|
| எம். டி. எஸ். .. .. .. .. .. | 18 |
| எம். பார்மசி .. .. .. .. .. | 3 |
| பி. எச். டி. .. .. .. .. .. | 4 |

பட்டமேற்படிப்பு, பட்டயப் படிப்பு வகுப்புகள்.

| | |
|---|---|
| டி. ஜி. ஓ. .. .. .. .. .. | 95 |
| டி. எல். ஓ. .. .. .. .. .. | 48 |
| டி. ஓ. .. .. .. .. .. | 54 |
| டி. எம். ஆர். டி. (D. M. R. T.) .. .. .. | 8 |
| டி. எம். ஆர். டி. (D. M. R. D.) .. .. .. | 25 |
| டி. ஏ. .. .. .. .. .. | 54 |
| டி. ஆர்தோ. .. .. .. .. .. | 30 |
| டி. சி. எச். .. .. .. .. .. | 83 |
| டி. டி. சி. டி. .. .. .. .. .. | 14 |
| டி. வி. .. .. .. .. .. | 20 |
| டி. ஐ. பி. .. .. .. .. .. | 9 |
| டி. டி. .. .. .. .. .. | 18 |
| டி. பி. எம். .. .. .. .. .. | 16 |
| டி. ஜி. யு. எம். .. .. .. .. .. | 4 |
| டி. பி. எச். .. .. .. .. .. | 10 |
| எல். பி. எச். .. .. .. .. .. | 1 |

### பிற் சேர்க்கை 3.

### 1984-85 ஆம் ஆண்டு புதிய திட்டப் பணிகளின் விரிவான பட்டியல்.

| தொடர் எண். (1) | திட்டப் பணிகளின் விவரம். (2) | இறுதிச் செலவு. (3) | 1984-85-ல் செலவு. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத்துறை. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் மருத்துவக் கல்வி இயக்குநர். | | |
| | கல்லூரி இணைந்த மருத்துவ நிறுவனங்களில் நோய் கண்டறிதல்—ஆராய்ச்சி ஆகியவற்றுக்கு நவீன வசதிகளை அளித்தல். | | |
| 1 | மாவட்டங்களில் உள்ள கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளுக்குக் கருவி வழங்குதல். | 20·00 | 20·60 |
| 2 | மாநகரில் உள்ள கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளுக்குக் கருவிகள் வழங்குதல். | 25·00 | 25·00 |
| 3 | மாவட்டத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளுக்குக் கருவிகள் வழங்குதல். | 5·00 | 5·00 |
| 4 | மாநகரில் உள்ள மருத்துவக் கல்லூரிகளுக்குக் கருவி வழங்குதல். | 5·00 | 3·00 |
| 5 | சென்னை பல்நோய் மருத்துவ மனைக்குக் கருவி வழங்குதல். | 5·00 | 5·00 |
| 6 | சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் உள்ள பெர்னார்டு ரேடியாலஜி நிறுவனத்திற்குக் கருவிகள் வழங்குதல். | 10·00 | 10·00 |
| 7 | சென்னை அரசினர் பொது மருத்துவ மனை மத்திய [illegible] பிரிவுக்குப் பணியாளர்களை நியமித்தலும் மேஜை, நாற்காலி முதலிய பொருள்கள் | 2·31 | 2·17 |





| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 8 | சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் அவசர அறுவை சிகிச்சை அறைக்கான பணியாளர்களை நியமித்தல். | 6·53 | 6·00 |
| 9 | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் 16 படுக்கைகள் கொண்ட சிசு நோயியல் அறுவை சிகிச்சை வார்டுக்காகக் கருவிகள் வழங்குதலும் பணியாளர்களை நியமித்தலும். | 1·30 | 1·22 |
| 10 | மதுரை, ராஜாஜி அரசினர் மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட வார்டிற்கு (தலைக் காய சிகிச்சை வார்டு) பணியாளர்களை நியமித்தலும் கருவி வழங்குதலும். | 1·72 | 1·60 |
| 11 | திருச்சிராப்பள்ளி, அரசினர் தலைமையிட மருத்துவமனையில் செவிலியர் பயிற்சிப்பள்ளி தொடங்க பணியாளர்களை நியமித்தலும் கருவி மேஜை, நாற்காலி முதலிய பொருள்கள் வழங்குதலும். | 4·73 | 4·54 |
| 12 | சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையில் கோபால்டு சிகிச்சைப் பிரிவிற்குப் பணியாளர்களை நியமித்தல். | 3·97 | 3·67 |
| 13 | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் தீப்புண் காய சிகிச்சைப் பிரிவிற்குப் பணியாளர்களை நியமித்தலும் கருவி, மேஜை, நாற்காலி முதலிய பொருட்கள் வழங்குதலும். | 5·20 | 4·95 |
| 14 | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் நீரிழிவு நோய் ஆராய்ச்சி பிரிவிற்குப் பணியாளர்களை நியமித்தலும் கருவி, மேஜை நாற்காலி முதலிய பொருள்கள் வழங்குதலும். | 3·35 | 3.23 |

| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்) | (4) |
|---|---|---|---|
| 15 | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட சிசு நோய் வார்டுக்கு பணியாளர்களை நியமித்தலும் கருவி, மேஜை, நாற்காலி முதலிய பொருள்கள் வழங்குதலும். | 1·15 | 1·08 |
| 16 | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட தீப்புண் காய சிகிச்சை வார்டுக்குப் பணியாளர்களை நியமித்தலும் மேஜை, நாற்காலி முதலிய பொருள்கள் வழங்குதலும். | 1·10 | 1·03 |
| 17 | தாம்பரம் காசநோய் நலம் பேண மருத்துவ மனையில் மார்பு நோய் பிரிவுக்கும், புற நோயாளிப் பிரிவுக்கும் பணியாளர்களை நியமித்தலும் மேஜை, நாற்காலி முதலிய பொருள்கள் வழங்குதலும். | 1·61 | 1·49 |
| 18 | மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் எச். எல். ஏ. டிஷ்யு டைப்பிங் துறைக்கு மானியம் வழங்குதல். | 6·42 | 4·55 |
| 19 | சென்னை சிறார் நல-குழந்தைகள் மருத்துவமனையில் நவீன சமயலறை கட்டுதல். | 12·60 | 3·00 |
| 20 | மருந்தாக்கியல் குழு அமைத்தல்—சென்னை மருத்துவக் கல்வி இயக்ககம். | 1·47 | 1·35 |
| 21 | துணை மருத்துவப் பரிசோதனை நடத்துவதற்கான பிரிவு. | 1·58 | 1·46 |
| 22 | புள்ளி விவரப்பிரிவை வலுப்படுத்தல்—புள்ளி விவர உதவி இயக்குநர் பதவியுடன் பிரிவு ஒன்றை ஏற்படுத்தல். | 1·15 | 1·06 |
| 23 | காரப்பேட்டை அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவ மனையில் 150 படுக்கைகள் கொண்ட வார்டுக்கு மருத்துவ அதிகாரிகளைக் கூடுதலாக ஏற்படுத்தல். | 1·84 | 1·69 |
| 24 | மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைப் பிரிவிற்குக் கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தல். | 0.57 | 0·53 |
| 25 | மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவ மனயில் உள்ள சிசு நோயியல் துறையில் கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தல். | 1·82 | 1·67 |
| 26 | மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் இதய நோய் சிகிச்சைப் பிரிவில் கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தல். | 2·00 | 1·92 |
| 27 | மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் காசநோய் சிகிச்சைப் பிரிவில் கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தல். | 0·27 | 0·25 |
| 28 | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் சிசு நோய் அறுவைச் சிகிச்சைப் பணிக்கு வகை செய்தல். | 1·63 | 1·52 |
| 29 | சென்னை, சிறார் நல—குழந்தைகள் மருத்துவ மனையில் 24 மணி நேர உயிர் வேதியல் பரிசோதனை வசதி அளித்தல். | 0·72 | 0·66 |
| 30 | சென்னை மருத்துவக் கல்லூரியில் சமூக நோய்த் தடுப்பு மருத்துப் பிரிவை நிலை உயர்த்துதல். | 2·34 | 2·10 |
| 31 | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையிலும் சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிறுவனத்திலும் மருத்துவச்சி பயிற்சிக்கு 2 ஆம் நிலை செவிலியர் போதகர் பதவிகளைக் கூடுதலாக ஏற்படுத்தல். | 0·30 | 0·28 |

| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்) | (4) |
|---|---|---|---|
| 32 | மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள சில மருத்துவ நிறுவனங்களில் உள்ள செவிலியர் பள்ளியில் பொதுச் சுகாதாரச் செவிலியர் பதவிகள் 6-ஐ ஏற்படுத்தல் | 0·72 | 0·66 |
| 33 | சென்னை, செவிலியர் கல்லூரியில் ஆசிரியர் பதவிகள் இரண்டை ஏற்படுத்தல். | 0·60 | 0·60 |
| 34 | படுக்கைகள் 500-க்கு மேல் உள்ள சில மருத்துவமனை நிர்வாகச் செயலாளர்—பொருளாளர் நிலை II பதவிகள் பதினேழினை மருத்துவமனை நிர்வாகச் செயலாளர்—பொருளாளர், நிலை I ஆக மாற்றுதல், | 0·35 | 0·32 |
| 35 | அகநோயாளிகள் 1,000-க்கு மேல் உள்ள மருத்துவமனைகளில் தணி உதவியாளர் பதவிகள் இரண்டை ஏற்படுத்தல் (சென்னை, ஸ்டான்லி மருத்துவமனை, மன நோய் மருத்துவமனை). | 0·45 | 0·42 |
| 36 | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனை, சென்னை, குழந்தைகள் நல மருத்துவ மனை, ஓட்டேரி, திருவெட்டீஸ்வரர் காசநோய் நலம் பேண மருத்துவ மனை ஆகியவற்றில் மருத்துவ மனை நிர்வாகச் செயலாளர்-பொருளாளர் நிலை II பதவிகளை ஏற்படுத்தல். | 0·52 | 0·48 |
| 37 | கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளில் படிப்படியான நிலையில் புள்ளி விவரத் தகவல் பிரிவை ஏற்படுத்தல். | 2·69 | 2·48 |
| 38 | சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சைக்காகச் சிவில் மருத்துவர் பதவிகளை ஏற்படுத்தல். | 0·32 | 0·29 |



| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) | (4) |
|---|---|---|---|
| 39 | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் மருந்தாக்கியலில் உதவி ஆராய்ச்சிப் பேராசிரியர் பதவி ஒன்றை ஏற்படுத்தல். | 0·20 | 0·19 |
| 40 | சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் இல்லத்தில் நவீன சமையற்கூடம் அமைத்தல். | 0·74 | 0·74 |
| 41 | சென்னையிலுள்ள அரசு கண் மருத்துவமனையில் ஒளிக்கற்றைத் துறையை ஏற்படுத்துவதற்குத் தேவையான பணியாளர்கள். | 0·20 | 0·19 |
| 42 | சென்னை சிறார் நல-குழந்தை மருத்துவ மனையில் தனி சமையற் கூடத்தை ஏற்படுத்தல். | 0·24 | 0·22 |
| 43 | உடம்பில் ஏற்படும் நீர் இழப்பை ஈடுகட்டும் வாய்வழி மருந்துப் பொருட்களை சென்னை, கிங் நிறுவனத்தில் தயாரித்தல். | 0·24 | 0·23 |
| 44 | சென்னை அரசு ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனையில் குளியலறை, கழிப்பிட வசதியுடன் கூடிய தங்கும் அறை கட்டுதல். | 0·50 | 0·50 |
| 45 | சென்னை மனநோய் மருத்துவ மனை, புறநோய்ப் பிரிவின் தெற்கு மேற்குப் பக்கங்களில் சுற்றுச் சுவர் கட்டுதல். | 1·21 | 1·21 |
| 46 | மாணவர் விடுதியில் தங்கியிராது, கல்வி பயிலும் மாணவர்களுக்காக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரியில் சிற்றுண்டிச்சாலையின் முதல் மாடியில் உணவு அறை கட்ட வகை செய்தல். | 3·70 | 1·00 |
| 47 | சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை மகளிர் விடுதிக்குக் கூடுதல் இடவசதி செய்து கொடுத்தல். | 0·98 | 1·00 |
| 48 | சென்னை அரசு பொது மருத்துவ மனை கட்டாய சுழற்சி முறை பயிற்சி மருத்துவருக்கு தற்போதுள்ள இடவசதியை மாற்றியமைத்தல். | 3·60 | 1·00 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 49 | சென்னை, மனநோய் மருத்துவ மனையில் நீராவிச் சலவை நிலையத்திற்கு கல் கட்டுமான எரி எண்ணெய் சேமிப்புத் தொட்டி கட்டுதல். | 0.70 | 0.70 |
| 50 | சென்னை, மனநோய் மருத்துவ மனையில் நீராவிச் சலவை நிலையத்திற்கு நீர்த் தொட்டி அறையும் மேல்நிலை நீர்த் தொட்டியும் கட்டுதல். | 0.98 | 0.98 |
| 51 | சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி எஸ். பி. எம். பிளாக்கி லுள்ள ஆய்வுக்கூடப் பணி மேடைகளுக்கு நீர் வழங்கல். | 0.56 | 0.56 |
| 52 | சென்னை, கிண்டியிலுள்ள நோய்த் தடுப்பு மருந்து கிங் நிலையத் திற்குத் தண்ணீர் வழங்குவதை மேம்படுத்தல். | 3.40 | 3.40 |
| 53 | சென்னை, கஸ்தூரிபா-காந்தி அரசு மகளிர்-சிறார் மருத்துவமனையில் 5 மீட்டர் விட்டம் கொண்ட கிணறு வெட்டுதல். | 1.00 | 1.00 |
| 54 | கோயம்பத்தூர், மருத்துவக் கல் லூரி இணைந்த மருத்துவமனை யின் முதல் மாடியில் இரு அறுவை சிகிச்சைக் கூடங்களுக்கு குளுமை வசதி செய்து கொடுத்தல். | 8.08 | 4.00 |
| 55 | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையிலுள்ள தீவிர இதய நோய் சிகிச்சைப் பிரிவில் குளுமை வசதி செய்து கொடுத்தல். | 0.40 | 0.40 |
| 56 | சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் பிண அறை கட்டுதல். | 7.30 | 3.00 |
| 57 | சென்னை, குழந்தைகள் நல மருத்துவமனையில் மருத்துவம் சார்ந்த சத்துணவுத் துறையை ஏற்படுத்தல். | 0.30 | 0.24 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 58 | சென்னை, ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனையில் உயிர் வேதி யல் ஆய்வுக் கூடத்தை மேம் படுத்தல். | 0.29 | 0.37 |
| 59 | ஓட்டேரி, திருவட்டீஸ்வரர் காச நோய் நலம்பேண் மருத்துவ மனையில் இருமல் நோய் சளி பரிசோதனை இருமி நாசினி அறை கட்டுதல். | 1.00 | 1.00 |
| 60 | சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள மருந் தாக்கவியல் துறையை வலுப் படுத்தல். | 0.77 | 0.71 |
| 61 | சென்னை, அரசினர் பொது மருத் துவமனையில் மருத்துவ வேதியல் ஆராய்ச்சி மையமொன்றை ஏற்படுத்தல். | 0.49 | 0.43 |
| 62 | சென்னை. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் சிறுநீரக இயல் துறையை ஏற்படுத்தப் பணி யாளர்கள். | 1.01 | 0.94 |
| 63 | சென்னை, மருத்துவக் கல்லூரியில் மரபு வழியியல் துறையை ஏற் படுத்தல். | 1.15 | 1.07 |
| 64 | சென்னை, அரசினர் பொது மருத் துவமனையில் மருத்துவப் புகைப்பட மைக்ரோ பிலிமிங் யூனிட்டை ஏற்படுத்தல். | 0.33 | 0.32 |
| 65 | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் மகப்பேறு வார்டுக்கு மேல் முதல்மாடி கட்டுதல். | 20.00 | 5.00 |
| 66 | மருத்துவப் பல்கலைக் கழகம் | 0.01 | 0.01 |
| 67 | கல்லூரி இணைந்த மருத்துவமனை களில் மருத்துவக் கருவிகளை பராமரிப்பதற்குரிய பணிக்களரி | 0.01 | 0.01 |

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 68 | அரசு பொது மருத்துவமனையில் மூப்பியல் மருத்துவ சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்துதல். | 2.59 | 2.59 |
| 69 | இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் துணைச் செவிலியர் பாடமுறை ஏற்படுத்துதல். | 0.60 | 0.60 |
| | **மருத்துவப் பணிகள்—குடும்ப நலத் துறை இயக்குநர்** | | |
| 70 | தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் மாவட்டத் தலைமையிட அரசு மருத்துவமனை அறுவை சிகிச்சைக் கூடத்திற்குக் குளுமை வசதிகளைச் செய்து கொடுத்தல். | 6.00 | 4.00 |
| 71 | தூத்துக்குடி, நாகர்கோவில், உதகமண்டலம், திருப்பூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள தலைமையிட மருத்துவமனைகளில் தீவிரச் சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்தல். | 4.80 | 4.80 |
| 72 | புதுக்கோட்டை இராணி மருத்துவமனை, உதகமண்டலம் சேத் மருத்துவமனை ஆகியவற்றில் மின் உற்பத்தி கருவிக்கு வகை செய்தல். | 8.58 | 2.50 |
| | **வட்டத் தலைமையிட மருத்துவமனைகளை மேம்படுத்துதல்.** | | |
| 73 | வட்டத் தலைமையிட மருத்துவமனை ஒவ்வொன்றிலும் படுக்கைகளின் எண்ணிக்கையைக் குறைந்தது 50 ஆக உயர்த்துவதற்காகக் கூடுதல் வார்டைக் கட்டுதல். | 9.50 | 4.50 |
| 74 | நாற்பதும், அதற்குக் கூடுதலாகவும் படுக்கைகளைக் கொண்ட வட்ட, வட்டம் அல்லாத மருத்துவமனைகளில் (13 மருத்துவமனைகள்) கையடக்கமான மின் உற்பத்திக் கருவிகளை (2.5 கே. வோல்ட்) வழங்குதல். | 4.00 | 4.00 |
| 75 | செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் புற நோயாளிப் பிரிவு ஒன்றை கட்டுதல். | 8.00 | 2.00 |
| 76 | புதிய கட்டிடம் எதும் கட்டாமல் 20 வட்ட மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் 10 பிணப் பரிசோதனை படுக்கைகளை ஏற்படுத்துதல். | 4.67 | 4.46 |
| 77 | கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையில் மகப்பேறு—அறுவை சிகிச்சைக் கூடம் கட்டுதல். | 4.50 | 2.00 |
| | **வட்டத் தலைமையிடமல்லாத அரசு மருத்துவமனைகளை மேம்படுத்துதல்** | | |
| 78 | தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் 'எக்ஸ்' கதிர் பிரிவுக் கட்டுதல். | 1.55 | 1.55 |
| 79 | பெரியார் மாவட்டத்திலுள்ள திங்களூரில் அவசரச் சிகிச்சை படுக்கைகள் கொண்ட அறையுடன்கூடிய அரசினர் மருந்தகத்தைப் புதிதாகக் கட்டுதல். | 6.00 | 2.00 |
| 80 | வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு அரசினர் மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட வார்டுகள் கட்டுவதன் மூலம் சிகிச்சை விபத்து—அவசரச் சிகிச்சை பணியின் ஐந்தாம் நிலைப் பணியைச் செயல்படுத்துதல். | 16.58 | 10.00 |
| 81 | வட்ட மருத்துவமனைகளிலும் ஏனைய மருத்துவ மனைகளிலும் குருதி சேமிப்பு நிலையங்களைத் தொடங்குதல். | 1.13 | 1.07 |
| 82 | 17 இடங்களில் மருத்துவப் பரிசோதனை ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்துதல். | 4.37 | 4.14 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 83 | 75 படுக்கைகளும் அதற்கு மேலும் படுக்கைகள் உள்ள அரசினர் மருத்துவமனைகளில் கீழ்நிலைப் பதவிகளை அலுவலகக் கண்காணிப்பாளர் பதவிகளாக மாற்றுவதன் மூலம் அலுவலக நிர்வாகத்தை வலுப்படுத்துதல். | 0.75 | 0.69 |
| 84 | சிசு நோயியல், கண் நோயியல் ஆகிய பிரிவுகளில் ஒவ்வொரு சிறப்புப் பிரிவுக்கும் 15 என்ற வீதத்தில் 30 உதவி மருத்துவர் பதவிகளை சிவில் மருத்துவ வல்லுநர் பதவிகளாக மாற்றுதல். | 1.51 | 1.38 |
| 85 | சென்னையில் இரண்டு இடங்களில் ஹோமியோபதி மருந்தகங்களைத் தொடங்குதல். | 0.81 | 0.61 |
| 86 | திருச்சிராப்பள்ளி, அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் காசநோய் பிரிவுக்கு 25 படுக்கைகள் வழங்குதல் (கட்டிடங்கள் கட்டாமல்). | 1.17 | 0.93 |



பிற்சேர்க்கை 4.

மாநில வரவு-செலவுத் திட்டமும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு செலவினங்களும்.

1984-85 ஆம் ஆண்டுக்கான கோரிக்கை 18. மருத்துவம் மற்றும் கோரிக்கை 19. மக்கள் நல்வாழ்வு [illegible] நிலைகளின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 264 கோடியாகும். கழிவு நீரகற்றல் மற்றும் குடிநீர் [illegible] ஆகியவற்றின்கீழ் ரூ. 113 கோடியும் காற்று, நீர் தூய்மை கெடுதலைத் தடுத்தலின்கீழ் ரூ. [illegible] .52 கோடியும் இதில் அடங்கும். இது வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,946 கோடி[illegible] 14 விழுக்காடாகும்.

2. மருத்துவக் கோரிக்கையின்கீழ் 1984-85-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பல்வேறு [illegible] பணிகளுக்கும் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்கள் பின் வருமாறு:—

1984-85க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்

| | | திட்டச் செலவினம். | | | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | திட்டமில்லாத செலவினம். | மாநிலத் திட்டம். | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். | மத்திய அரசு உதவி செய்யும் திட்டங்கள், (50 : 50) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| 259. அரசு மருத்துவ நிலையங்களின் கட்டட பராமரிப்பு சீர் செய்தல் பணிகளுக்கான செலவு. | 1,40,00 | .. | .. | — | 1,40,000 |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய் ஆயிரத்தில்) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 280. மருத்துவம் | | | | | |
| (1) கல்வி .. | 8,69,78 | 49,08 | .. | 5,83 | 9,24,69 |
| (2) பயிற்சி .. | 36,24 | 15,79 | 1,42 | .. | 53,45 |
| (3) ஆராய்ச்சி .. | 4,50 | 4,35 | 1,58 | .. | 13,40 |
| (4) மருத்துவ நிவாரணம் (மருத்துவ கல்லூரி மருத்துவ மனைகள் மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவ மனைகள் சேர்த்து). | 65,55,51 | 5,59,72 | 98,92 | .. | 72,14,15 |
| (5) ஹோமியோபதி மருத்துவம் .. | 10,45 | 5,71 | .. | .. | 16,16 |
| (6) இந்தியமுறை மருத்துவம் * .. | 95,41 | 1,44,02 | 4.41 | .. | 2,43,84 |
| (7) பிற இனங்கள் — | 12,11,87 | 25,60 | .. | .. | 12 37.47 |
| 288. சமூக பாதுகாப்பு மற்றும் .. | 74,89 | .. | .. | .. | 74,89 |
| நலம் திருப்பி வசூலிப்பவை .. | .. | .. | .. | .. | 16,00 |
| ரு மொத்தம்—கோரிக்கை 18. மருத்துவம். | 89,98,65 | 8,04,27 | 1,06,33 | 5,83 | 99,31,08 |

* இந்திய மருத்துவம் பற்றிய குறிப்பு தனியாக அவையில் வைக்கப்பட்டுள்ளது.



3. மக்கள் நல்வாழ்வுக் கோரிக்கையின்கீழ் 1984-85-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பல்வேறு நிலைப் பணிகளுக்கும் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்க விவரங்கள் பின்வருமாறு:—

1984-85-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

| (1) | திட்டமில்லாத செலவினம். (2) | திட்டச் செலவினம். மாநிலத் திட்டம். (3) (ரூபாய் ஆயிரத்தில்) | திட்டச் செலவினம். மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள். (4) | திட்டச் செலவினம். மத்திய அரசு உதவி செய்யும் திட்டங்கள் (50 : 50). (5) | மொத்தம். (6) |
|---|---|---|---|---|---|
| 259. மக்கள் நல்வாழ்வு நிலையங்களுக்கான கட்டட பராமரிப்பு சீர் செய்தல் பணிகளுக்கான செலவு. | 10,00 | .. | .. | — | 10.00 |
| 280. மருத்துவம்-பொது சுகாதார நிலையங்கள் முதலியன. | 10,18,88 | 4,25,08 | 2,61 | .. | 14,46,57 |
| 281. குடும்ப நலம் .. | .. | 41,20 | 20,02,60 | .. | 20,43,80 |
| 282. [1] மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவு. | 9,78,18 | 2,71,06 | 7,10 | 2,21,43 | 14,77,77 |

(2) (3) (5) (6)

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
| (2) காற்று நீர் தூய்மை கெடுதலைத் தடுத்தல் | 17,27 | 34,47 | .. | — | 51,74 |
| (3) கழிவு நீரகற்றல் மற்றும் குடிநீர் வழங்கல். | 3,99 | 1,05,19,75 | 8,00,00 | — | 1,13,23,74 |
| கூட்டுக—திருப்பி வசூலிப்பவை | — | — | — | — | (+) 80,26 |
| பெரு மொத்தம்-கோரிக்கை 19. மக்கள் நல்வாழ்வு. | 20,28,32 | 1,12,91,56 | 28,12,31 | 2,21,43 | 1,61,33,88 |

** மக்கள் நல்வாழ்வு பற்றிய குறிப்பு தனியாக அவையில் வைக்கப்பட்டுள்ளது.



4. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்காக செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஒதுக்கீடுகள் தவிர மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுக் கட்டிடங்கள் ஆகியவற்றிற்காக பிற கோரிக்கைகளிலும் 1984-85-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

| | திட்டமில்லாத செலவினம். | திட்டச் செலவினம். மாநிலத் திட்டம். | திட்டச் செலவினம். மைய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள். | திட்டச் செலவினம். மைய அரசு உதவி செய்யும் திட்டங்கள் (50 : 50). | மொத்தம். |
| --- | --- | --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| வருவாய்க் கணக்கில் செலவு. | | | | | |
| மானியக் கோரிக்கை 28. | | | | | |
| சமுதாய வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகங்களும். | — | .. | — | — | — |
| 280. மருத்துவ நிவாரணம் : (உள்ளாட்சி மன்றங்களின் மகப்பேறு நிலையங்களுக்கு பராமரிப்பு மானியம் உட்பட). | 1,36,55 | 5,60 | .. | .. | 1,42,15 |
| 282. பொதுக்கழிப்பிடங்கள் கட்டுவதற்கு உதவி. | 2,00 | 6,56,00 | — | — | 6,58,00 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
| கோரிக்கை எண் 30. | | | | | |
| தமிழ்நாடு சத்துணவுத் திட்டம் பொது சுகாதாரம். | .. | 2,78,02 | .. | — | 2,78,02 |
| கோரிக்கை எண் 37. | | | | | |
| பொதுப்பணி: மருத்துவம் மக்கள் நல்வாழ்வுக் கட்டிடங்கள். வருவாய்க்கணக்கின் கீழ் வராத செலவுகள். | 6,51 | 9 | — | — | 6,60 |
| மருத்துவம், குடும்ப நலம், மக்கள் நல்வாழ்வு, துப்புரவு, குடிநீர் வழங்கல் கட்டிடப் பணிகள். | 62,39 | 10,77,27 | 1,61,78 | 1,64,44 | 14,65,88 |
| 680. மருத்துவம் குறித்த கடன்கள் | 15 | .. | .. | .. | 15 |
| 682. மக்கள் நல்வாழ்வு, துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த கடன்கள். | 7,42,93 | 17,87,62 | — | — | 25,30,55 |
| மொத்தம் .. | 9,50,53 | 38,04,60 | 1,61,78 | 1,64,44 | 50,81,35 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1984-85-ல் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 315 கோடியாகும்.



1984 எப்ரல் 25]

5. எல்லா தலைப்புகளின்கீழும் (280 மருத்துவம், 281 குடும்ப நலம், 282 மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவு, 480, மருத்துவ மூலதனச் செலவு, 481, குடும்பநல மூலதனச் செலவு, 482, மக்கள் நல்வாழ்வு, மற்றும் துப்புரவு, மூலதனச் செலவு) மருத்துவம், மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவுக்கான (குடிநீர் வழங்கலைச் சேர்க்காமல்) 1984-85 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் செலவு கீழ்வருமாறு:—

| திட்டப்பணிகள். (1) | பொறுப் பேற்ற செலவினம். (2) | 1984-85-ல் புதிதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| மாநிலத் திட்டம் | 34,61,86 | 2,78,54 | 37,40,40 |
| மத்திய அரசு பொறுப்பு திட்டங்கள். | 22,71,01 | 4,46 | 22,75,47 |
| மத்திய அரசு உதவி பெறுபவை (50 : 50). | 3,71,82 | 19,88 | 3,91,70 |

6. 1984-85 ஆம் ஆண்டில் புதிதாக ஒப்பளிப்பு வழங்கக் கருதப்பட்டுள்ள திட்டங்களின் விவரம் துறை வாரியாக கீழே தரப்பட்டுள்ளது:—

| துறை. (1) | இறுதிச் செலவு. (2) | 1984-85 செலவு. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. மருத்துவக் கல்வி .. | 202.22 | 159.69 |
| 2. மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலம். | 83.92 | 50.63 |
| 3. ஆரம்ப சுகாதார நிலையங்கள் | 49.29 | 47.14 |
| 4. மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து. | 58.39 | 19.10 |
| 5. இந்திய மருத்துவம் .. | 26.86 | 24.01 |
| 6. மாநில சுகாதார போக்குவரத்து அமைப்பு. | 3.01 | 2.60 |
| 7. மருந்துக் கட்டுப்பாடு துறை — | 0.96 | 0.71 |
| மொத்தம் .. | 424.65 | 302.88 |
| திட்டத்தில் சேராதது — | 14.70 | 8.09 |
| பெருமொத்தம் .. | 439.35 | 310.97 |

மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

மேலவைத் தலைவர் அவர்களே.

மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை பற்றிய முக்கிய கூறுகளை இந்த அவையின் முன்வைக்க விழைகிறேன்.

## I. தோற்றுவாய்.

உடல் நலம் என்பது வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். நோயற்ற வாழ்க்கை மட்டுமே நலமான வாழ்க்கை என்று கொள்ள லாகாது; ஏனெனில் உடல்நிலை, மனநிலை, சமூக நிலை ஆகியவற் றையும் உடல் நலம் முழுமையாக சார்ந்ததாக உள்ளது. உயரளவு எய்தக்கூடிய வகையிலும், ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் மக்கள் அனைவருக்கும் வளமான நல்வாழ்க்கைக்கு வகை செய்வதே நம்முடைய நோக்கமாகும். "அனைவருக்கும் நல வாழ்வு" என்கிற நோக்கத்தை எய்துவதற்கு மக்கள் அனைவரும் மக்கள் நல்வாழ்வுப் பணிகளில் முனைப்புடன் பங்கு கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமுதாய நல நிலையங்கள், சுகாதார துணை நிலையங்கள், சுகாதாரச் சிறு நிலையங்கள், நடமாடும் சுகாதாரப் பணி ப்பிரிவுகள் ஆகியவற்றை அமைத்து ஒருங்கிணைந்த முனைப்புப்பணித் திட்டங்களின் மூலம் மேற்சொன்ன நோக்கத்தை நாம் எய்த வேண்டும். 'பலநோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டம்' கொண்டு வரப்பட்டதும், மிகப்பெரிய பகுதிகளில் பெருமளவு மக்கட் தொகையினருக்கும் ஒரே வகையான சுகாதாரப் பணிகளைக் கவனித்து வந்த சுகாதாரப் பணியாளர் களுக்கு அவர்கள் நோய்த்தடுப்பு, நலவாழ்வு மேம்பாட்டுப் பணிகளைத் திறமையாக கவனிக்கும் வகையில் பல்திறப்பட்ட சுகாதாரப் பணிகளைத் குறிப்பிட்ட ஒரு பகுதியில் ஆற்றுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மக்களின் நலனை மேம்படுத்துவதில் ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு முறை நடைமுறையில் இருக்கிற ஒரு அணுகுமுறையாகும். இதனைக் கருத்தில் கொண்டு, "கி. பி. 2000-க்குள் அனைவருக்கும் நல வாழ்வு" என்கிற நோக்கத்தை எய்த தேவையான நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

## II. ஆரம்ப சுகாதார நிலைய இயக்ககம்

1. ஆரம்ப சுகாதார நிலையங்கள்.—"கி. பி. 2000-க்குள் அனை வருக்கும் நலவாழ்வு" அளிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருப்பதால் அரசு கிராமப்புற மக்களுக்கு தரத்திலும், அளவிலும் சிறந்த கூடுதலான மருத்துவ வசதிக்கும், சுகாதார வசதிக்கும் வகை செய்து வருகிறது. படிப்படியாக ஏற்கனவே உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பரா மரித்து வருவதன் மூலமும், கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்துவதன் மூலமும், நடமாடும் சுகாதாரக் குழுக்களை அமைப்பதன் மூலமும், சிறு சுகாதார நிலையங்களுக்கு அனுமதி வழங்குவதன் மூலமும், ஆரம்ப சுகாதார நிலையங்களின் நிலையினை படிப்படியாக உயர்த்துவதன் மூலமும், கிராமப் பகுதிகளில் சுகாதாரக் கவனிப்பு வசதிகள் அளிக்கப்படுகின்றன.

கிராம மக்களுக்குச் சிகிச்சை அளித்தல், நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை வழங்கும் மைய நிலையமாக ஆரம்ப சுகாதார நிலையம்



30,000 பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவது உள்ளது. 30,000 பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவது அரசின் நோக்கமாகும். இம்மாநிலத்தில் 424 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. 385 முறையான ஆரம்ப சுகாதார நிலையங்களும், 39 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும் இதில் அடங்கும். அவற்றில் 17 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 1983–84-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சமுதாய நல நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்ட 30 ஆரம்ப சுகாதார நிலையங்கள், பட்ட மேற்படிப்பு மருத்துவர்கள் இருவரை, அதாவது எம். எஸ். (அறுவை சிகிச்சை) கல்வித்தகுதி பெற்ற ஒருவரையும், டி. ஜி. ஓ. (மகப்பேறு) கல்வித்தகுதி பெற்ற மற்றொருவரையும் கொண்டிருக்கும் என்பதால், அவை மருத்துவ வல்லுநர்களைக் கொண்டு மருத்துவப் பணிகளைச் சிறப்பாகக் கவனிக்கும். நிலை உயர்த்தப்பட்ட இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகள் 30 பேருக்கு சிகிச்சை அளிக்கும் வசதியையும், எக்ஸ்-கதிர், அறுவைச் சிகிச்சை, ஆய்வுகூட வசதி முதலிய வசதிகளையும் கொண்டிருக்கும். இந்தச் சமுதாய நல நிலையங்களுக்கான (நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள்) கூடுதல் கட்டிடங்கள் கட்டப் பட்டு வருகின்றன. பெரியார் மாவட்டத்தில் வெள்ளக்கோயிலில் சமுதாய நல நிலையம் ஒன்று செயல்படத் துவங்கியுள்ளது. மேலும் இரண்டு சமுதாய நல நிலையங்கள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

424 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 267 நிலையங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் உள்ளன. 70 தொடக்கச் சுகாதார நிலையங்களில் மருந்தகக் கட்டிடங்கள் மட்டுமே உள்ளன. எஞ்சியவற்றுக்கிடையில், அரசு 1984–85-ல் ரூ 18 இலட்சம் இறுதிச் செலவில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் பணியாளர் குடியிருப்புகளைக் கட்டும் பணியையும் எடுத்துக்கொள்ள கருதியுள்ளது. எட்டு ஆரம்ப சுகாதார நிலையங் களுக்குக் கட்டிடங்கள் கட்டும்பணி நடந்தேறி வருகிறது. 16 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக மனையைத் தேர்ந் தெடுப்பது தீவிர பரிசீலனையில் உள்ளது. 'டேனிடா' திட்டத்தின்கீழ் சேலம், தென்னாற்காடு மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நிலையங் களுக்காக 13 மருந்தகக் கட்டிடங்களும், மருத்துவ அதிகாரிகளுக்காக 21 குடியிருப்புகளும் கட்டும்பணி நடந்தேறி வருகின்றது.

1984–85 ஆம் ஆண்டில் மேலும் பத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

2. நடமாடும் சுகாதாரப் பணிகள்.—வெகு தொலைவிலுள்ள கிராமங் களுக்கும் சுகாதார பாதுகாப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக இத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் இது வரையிலும் 249 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள ஊர்திகளைப் பயன்படுத்தியும், கூடுதலாக 25 மருந்தாளுநர்களை நியமிப்பதன் மூலமும் 1984–85 ஆம் ஆண்டில் மேலும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இத்திட்டத்தினை விரிவு படுத்தக் கருதப் பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 116 ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. கிராம மக்களுக்கு உதவி செய்யும் மருத்துவக் குழுவிற்கு உதவி செய்யுமாறு கிராமத்தார்களால் அமைக்கப்பட்ட கிராம நலக் குழுக்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றன.

3. சிறு சுகாதார நிலையங்கள்.—உள்ளூர் மக்களின் முழு ஒத்துழைப்புடன் மக்களுக்கு விரிவான சுகாதாரப் பணிகளை அளிக்க வேண்டி சிறிய சுகாதார நிலையங்களை ஏற்படுத்த தொண்டு நிறுவனங் களுக்கு இத்திட்டத்தின்கீழ் ஊக்கம் அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சிறு சுகாதார நிலையமும் 5,000 மக்களுக்கு சுகாதாரப் பணிகளைச் செய்யும். தற்போது ஒவ்வொரு சிறு சுகாதார நிலையத்திற்கும் ஆண்டொன்றுக்கு செலவிடப்படும் தொகையான 18,000 ரூபாயில் 50 சதவீதத்தை தொண்டு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்கின்றன. மீதமுள்ள செலவினை மாநில அரசும் மத்திய அரசும் சம அளவில் ஏற்றுக்கொள்ளுகின்றன. 1—9—1983-ம் நாளிலிருந்து சிறு சுகாதார நிலையம் ஒன்றுக்கான செலவுத் தொகைக்குரிய வரையறையானது ஆண்டொன்றிற்கு 27,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இச் செலவுத் தொகையினை தொண்டு நிறுவனம், மாநில அரசு, மத்திய அரசு ஆகியவை 1 : 1 : 1 என்ற வீதத்தில் பகிர்ந்து கொள்வதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இது வரையில் 264 சிறு சுகாதார நிலையங்களுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இதில் 251 நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன.

## III. மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து இயக்ககம்.

1. சுகாதாரத் துணை நிலையங்கள்.—கிராமப்புற எல்லைப் பகுதி களில் வசிக்கும் மக்களுக்கு ஆரம்ப சுகாதாரப் பணியினை வழங்கும் நிறுவனங்களே சுகாதார துணை நிலையங்கள் ஆகும். இவை சமவெளி களில் 5,000 மக்களுக்கு ஒன்று வீதமும், பழங்குடியினர்—மலைப்பகுதி களில் 3,000 மக்களுக்கு ஒன்று வீதமும் அமைக்கப்படுகின்றன. துணை நிலையங்கள் அமைக்கப்பட்டதில் எய்திய சாதனையின் ஆண்டு வாரியான விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1—4—1978 ஆம் நாளன்றுள்ளவாறு | .. | 2,964 |
| 1978–79 | .. .. .. | 377 |
| 1979–80 | .. .. .. | 19 |
| 1980–81 | .. .. .. | 19 |
| 1981–82 | .. .. .. | 30 |
| 1982–83 | .. .. .. | 442 |
| 1983–84 (31—1—1984 வரையில்) | .. | 754 |
| | .. | 323 |
| மொத்தம் | .. | 4,909 |

31—1—1984 ஆம் நாளன்றுள்ளவாறு இம்மாநிலத்தில் 4,909 சுகாதார துணை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டு இறுதிக்குள் 5,000 துணை நிலையங்கள் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



2. கொள்ளை நோய்கள் கட்டுப்பாடு.—குடல் சார்ந்த நோய்களான வாந்திபேதி, கடுமையான குடற் அழற்சி, டைபாய்டு, மஞ்சள்காமாலை நோய்களும், மலேரியா, யானைக்கால், மூளைக்காய்ச்சல், காசநோய், தொழுநோய் போன்றவை தமிழ்நாட்டில் பரவுகின்ற பெரிய தொற்று நோய்களாகும். இந் நோய்களை கட்டுப்படுத்தவும் ஒழிக்கவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியதனால், இந்நோயினால் ஏற்படும் இறப்புகள் மற்றும் நலிவுகள் பெருமளவுக்குக் குறைந்துள்ளன.

### வாந்திபேதி

நோய் பாதித்துள்ளதைக் கண்டுபிடித்து உரிய நேரத்தில் கட்டுப்படுத்து வதற்காக நடவடிக்கை எடுப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு நோய் கண்காணிப்பு முறையானது மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. 1982, 1983 ஆம் ஆண்டுகளில் வாந்திபேதி நோய் கண்டுள்ளவர்கள், அந்நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப் பட்டுள்ளது:—

| ஆண்டு. | நோயால் பாதிக்கப் பட்டோர் எண்ணிக்கை. | இறந்தோர் எண்ணிக்கை. | இறந்தோர் சதவீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1982 | 2,641 | 32 | 1.2 |
| 1983 | 3,306 | 27 | 0.8 |

1983-ல் நோயினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையானது முந்தைய ஆண்டை விட அதிகமாயிருந்தும், குடலில் நீர்ச்சத்துக் கோளாறு தொடர்பான நோய்சிகிச்சை முறை, தீவிர சிகிச்சை தேவைப்படும் நோயாளி களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்க பெரிய மருத்துவமனைகளுக்கு அனுப்புவது உட்பட சிகிச்சைப் பணிகளை உற்ற தருணத்தில் மேற் கொண்டதன் காரணமாக இந்நோயினால் இறந்தோர் எண்ணிக்கை குறைந்தது.

பிளேக்.—தமிழ்நாட்டில் 1965 ஆம் ஆண்டிலிருந்து மனிதர்களைப் பாதிக்கும் பிளேக் நோய் இல்லை. ஆயினும் முன்னெச்சரிக்கையாக முன்னர் இந்நோய் பரவியிருந்த மாவட்டங்களான வடஆற்காடு, தர்மபுரி, பெரியார், நீலகிரி மாவட்டங்களில் வசிப்பவர்களிடையே பிளேக் நோய் பரவாமல் இருக்க நோய்க் கட்டுப்பாட்டுப் பணிகள் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

விலங்கினங்களால் ஏற்படக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்த தக்க அறிவுரைகள் வழங்கவேண்டி மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் குழுக்களை அரசு அமைத்துள்ளது.

## மலேரியா முறைக்காய்ச்சல்

தேசிய மலேரியா நோய் ஒழிப்புத் திட்டம் 1958 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1977 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசின் திருத்தப்பட்ட செயல் திட்டத்தின்படி நிறைவேற்றப்பட்டு வருகிறது. திருத்தச் செயற் திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:—

(அ) அடிப்படை சுகாதாரப் பணியாளர்கள் கிராமப்பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் 15 நாட்களுக்கு ஒரு முறை சென்று மலேரியா நோயினால் எவரேனும் பாதிக்கப்பட்டுள்ளனரா என்று கண்டறிதல்;

(இ) இரத்த மாதிரிகளைச் சேர்த்து, சோதித்து மலேரியா நோயைக் கண்டறிதல்;

(உ) மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் என்று உறுதிப் படுத்தப்பட்ட நோயாளிகளுக்கு மருந்து கொடுத்து தீவிரச் சிகிச்சை அளித்தல்;

(எ) நோய் பரவுதலை தடுக்க வேண்டி, பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொசுக்களைப் புழுப் பருவத்திலேயே அழித்தல், பூச்சி மருந்து தெளித்தல் மூலம் நோய் பரப்பும் கிருமிகளைக் கட்டுப்படுத்தல்.

தர்மபுரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் பெண்ணையாற்றை ஒட்டிய கிராமங்களிலும் இராமேஸ்வரம் தீவு உட்பட, இராமநாதபுரம் மாவட்ட கடலோரக் கிராமங்களிலும், மலேரியா நோய் காணப்படுகின்றது. நகர்ப்புற பகுதிகளில் சென்னை மாநகரிலும், சேலம், ஈரோடு, குமாரபாளையம், இராசிபுரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தூத்துக்குடி ஆகிய இடங்களிலும் மலேரியா பரவியுள்ளது.

இம்மாநிலத்தில் 1983 ஆம் ஆண்டில் மொத்தம் 67,912 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மலேரியா நோயாளிகள் 60 சதவிகிதம் மாநகரத்தில் உள்ளவர்களாவர். கடந்த நான்கு ஆண்டு காலத்தில் சென்னை மாநகரிலும் தமிழ்நாடு முழுவதும் மலேரியா நோய் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| ஆண்டு | மாநிலம் முழுவதும். | சென்னை மாநகராட்சி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1980 | 73,381 | 36,193 |
| 1981 | 71,517 | 44,951 |
| 1982 | 66,133 | 44,981 |
| 1983 | 67,912 | 44,817 |





இராமேஸ்வரம் தீவில் மலேரியா நோய் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை விவரம் 1980 லிருந்து வருமாறு:—

| ஆண்டு. | நோயாளிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1980 | 9,541 |
| 1981 | 4,224 |
| 1982 | 3,223 |
| 1983 | 5,706 |

தென்னந்தோப்புகளில் உள்ள குழிகளில் தேங்கியுள்ள தண்ணீரைத் தூய்மைப்படுத்தாததின் காரணமாக, தொற்று நோய் பரப்பும் சிறு கிருமிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நோயினால் பாதிக்கப்பட்டோரைக் கண்டறியாதது, மீனவர்கள் அவ்வப்போது வெளியே சென்று விடுவதனால் அவர்களில் தீவிர சிகிச்சை பெறவேண்டியவர் கூட முறையாகச் சிகிச்சை பெறாதது, அவர்களில் சிலர் இத்தகைய சிகிச்சையைப் பெற மறுப்பது ஆகிய காரணங்களை முன்னிட்டு நோய் பரப்பும் கிருமிகளின் எண்ணிக்கை ஒரே அளவில் உள்ளது.

தீவிர மலேரியா தடுப்பு மற்றும் நுண்ணுயிர் ஒழிப்பு நடவடிக்கைகள் எடுத்ததின் காரணமாக இந்நோயினால் ஏற்படும் பாதிப்பு குறைந்து வருகிறது. தேசீய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 1984–85-ல் இராமேஸ்வரம் தீவில் ஒரு கள நிலையம் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் மலேரியா நோய் பரவுவதைக் குறைக்க சென்னை மாநகராட்சி தனியே தீவிரப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

### யானைக்கால் நோய்

இந்நோய், 'கியூலெக்ஸ்' வகை கொசுக்களினால் பரவுகிறது. தேசீய யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ், இம் மாநிலத்தில் 19 நோய்க்கட்டுப்பாடு பிரிவுகளும், 33 யானைக் கால் நோய் சிகிச்சைப் பிரிவுகளும், நோய் ஆய்வுப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. 1984–85-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில், மேலும் ஒரு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவை அமைக்கக் கருதப்படுகிறது.

### மூளைக் காய்ச்சல் (Japanese Encephalitis).

1983-ல் இந்நோயினால பாதிக்கப்பட்டோர் 623 பேர் ஆவர். இவர்களுள் 155 பேர் இறந்தனர். பறவைகள், பன்றிகள், கால் நடைகள் ஆகியவற்றிலிருந்து 'கியூலெக்ஸ்' வகை கொசுக்களால் மனிதர்களுக்கு இந்நோய் பரவுகிறது. கொசு ஒழிப்புப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் இந்நோய் மேலும் பரவுவதைத் தடுக்க உடனடியாகத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### நரம்புச் சிலந்தி நோய்.

தமிழகத்தில் நரம்புச் சிலந்தி நோய் அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது. தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக எவரும் இந்நோயினால் பாதிக்கப் பட்டதாகத் தகவல் இல்லை. எனினும், நரம்புச் சிலந்தி நோய் ஏற்கனவே பரவியிருந்த பகுதிகளில் கண்காணிப்புப் பணியும் பொது மக்களுக்கு சுகாதாரக் கல்வி அளிக்கும் பணியும் தொடரப்படுகிறது.

#### சந்தைகளும் திருவிழாக்களும்.

பண்டிகைக் காலங்களில் செய்யப்பட்ட துப்புரவு ஏற்பாடுகள் மக்கள் நல்வாழ்வுத் துறை அலுவலர்களால் மேற்பார்வையிடப்பட்டன. சந்தைகளும் பண்டிகைகளும் கொள்ளைநோய் ஏதுமின்றி நடந்து முடிந்தன.

**3. வறட்சி-வெள்ளத் துயர் தணிப்புப் பணிகள்.**—1982-ல் பருவமழை பெய்யாத காரணத்தால், இம்மாநிலத்தில் பெரும்பாலும் எல்லா மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டன. வறட்சிக் காலங்களில், சில நீர்நிலைகள் தூய்மைக்கேடு அடைந்த காரணத்தால், ஊட்டாயடு, மஞ்சள் காமாலை, கடும் குடல் அழற்சி நோய், வாந்திபேதி, ஏனைய வயிற்றுப்போக்கு நோய்கள் ஏற்பட வாய்ப்பிருந்தது. எளிதில் நோய் வாய்ப்படக்கூடிய மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, நீர் நிலைகளில் குளோரின் கலப்பது, தொற்றுநோய்த் தடுப்பு ஊசிபோடுதல், வயிற்றுப் போக்கு நோய்க்குத் தக்க மருந்து கொடுத்தல் ஆகிய பணிகள் மேற் கொள்ளப்பட்டன. மேலும், வயிற்றுப் போக்கு காரணமாக உடலில் நீர் வற்றிப் போகாமல் இருக்கவும் சிகிச்சை அளிக்கப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள மக்களுக்கு மருத்துவ உதவி முதலிய வற்றுக்காக ரூ. 2·30 கோடி ஒதுக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் வாரத்தில் திடீரென்று தொடர்ந்து மழை பெய்ததன் காரணமாக, தஞ்சாவூர் மாவட்டமும், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தென்னாற்காடு மாவட்டங்களைச் சேர்ந்த தாழ்வான சில பகுதிகளும், வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டன. உணவுப் பொருட்கள் மூலமும் நீர் மூலமும் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்க தக்க நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன. நோய்த் தடுப்பு நடவடிக்கையாக 25,15,673 பேருக்கு வாந்தி பேதி தடுப்பூசி போடப்பட்டது. 1984 சனவரி வரையில் 2,39,107 நீர்நிலைகளில் குளோரின் கலக்கப்பட்டது.

**4. விரிவுபடுத்தப்பட்ட நோய் தடுப்பூசித் திட்டம்.**—(1) தொண்டை அடைப்பான், (2) கக்குவான், (3) இசிவு நோய், (4) காசநோய், (5) இளம்பிள்ளை வாதம், (6) தட்டம்மை, (7) நடையாய்டு நோய்கள் காரணமாக பாதிக்கப்படுவோர், உயிரிழப்போர் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்துடன் விரிவு படுத்தப்பட்ட நோய்த் தடுப்பூசித் திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது.



### இளம்பிள்ளை வாதத்திற்குத் தடுப்பு ஊசி போடுதல்.

மூன்று மாதம் முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இ பிள்ளை வாதத் தடுப்பு சொட்டு மருந்து 4 முதல் 8 வார இ வெளியில் மூன்று முறை தரப்படுகிறது. 18 மாதங்களுக்குப் பின் வீரியத்திற்கு மீண்டும் மருந்து தரப்படுகிறது. தடுப்பு மருந்து கொடு விவரம் வருமாறு:—

| ஆண்டு. (1) | இலக்கு (பயனடைந்தோர்). (2) | தடுப்பு மருந்து (பயனடைந்தோர்). (3) |
|---|---|---|
| 1982–83 | 5·00 இலட்சம் | 4·14 இலட்சம் |
| 1983–84 | 7·00 இலட்சம் | 4·08 இலட்சம் (1984 சனவரி வரை |

#### தொண்டை அடைப்பான், கக்குவான், இசிவு நோய்களுக்கான தடுப்பு ஊசி போடுதல்.

3 மாதம் முதல் 2 வயது வரை உள்ள ஒவ்வொரு குழந்தைக்கு 4 முதல் 8 வார இடைவெளியில் முத்தடுப்பு ஊசி 3 தடவைகளாக போடப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளில் தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை வருமாறு:—

| ஆண்டு. (1) | இலக்கு (பயனடைந்தோர்). (2) | தடுப்பு ஊசி (பயனடைந்தோர்). (3) |
|---|---|---|
| 1982-83 | 11·00 இலட்சம் | 7·82 இலட்சம் |
| 1983–84 | 11·00 இலட்சம் | 5·99 இலட்சம் (சனவரி 1984 வரை) |

#### தட்டம்மை தடுப்பு ஊசித் திட்டம்.

ரோட்டரி சங்கத்தின் உதவியுடன் தட்டம்மை நோய்த் தடுப்பு ஊசித் திட்டம் செயலாக்கப்படுகிறது. 9 மாதம் முதல் 2 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கும் தட்டம்மையால் ஏற்கெனவே பாதிக்கப்படாத 2 முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கும் ஒரு முறை நோய்த் தடுப்பு ஊசி போடப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தடுப்பு ஊசி போடப் பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை வருமாறு:—

| ஆண்டு. (1) | தடுப்பூசி (பயனடைந்தோர்). (2) |
|---|---|
| 1982-83 | 8·17 இலட்சம் |
| 1983–84 | 1·98 இலட்சம் (1984 சனவரி வரை) |

டைபாய்டு நோய்த் தடுப்பு ஊசி.

5 முதல் 6 வயதான குழந்தைகளுக்கு டைபாய்டு நோய்வராமல் தடுக்கும்பொருட்டு அவர்களுக்கு நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது. அவ்விவரம் வருமாறு:—

| ஆண்டு. | இலக்கு (பயனடைந்தோர்) | நோய்த் தடுப்பு ஊசி போட்டுக் கொண்ட குழந்தைகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1982-83 | 7·5 இலட்சம் | 6·20 இலட்சம் |
| 1983-84 | 7·5 இலட்சம் | 5·62 இலட்சம் (1984 சனவரி வரை). |

பள்ளிக் குழந்தைகளுக்கு இசிவு நோய்த் தடுப்பூசி.

இத்திட்டத்தின் கீழ் 10 வயது, 16 வயது பள்ளிச் சிறுவர்களுக்கு இசிவு நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது. 1983-84 ஆம் ஆண்டில் (1984 சனவரி வரை) 10 வயதுடைய 1·57 இலட்சம் சிறுவர்களுக்கும் 16 வயதுடைய 0·53 இலட்சம் சிறுவர்களுக்கும் இசிவு நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டது.

அம்மைப்பால் பாதுகாப்பிற்கான குளிர் பதன வசதி.

குழந்தைகளுக்கு அம்மை தடுப்பு ஊசி போடப்படும் வரை தடுப்பூசி மருந்துகளின் வீரியம் குறையாமலிருக்க அவை போதிய குளிர் அறைகளில் வைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்காக கிண்டி, கிங் நிறுவனத்தின் குளிர் பதன அறையிலும், பின்னர் அவை வட்டார/மாவட்ட அளவிலுள்ள உறைப்பனிக்கலம் குளிர்பதனப்பெட்டி முதலானவற்றிலும் பாதுகாக்கப்படுகின்றன. அவைகள் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலிருந்து அல்லது நகராட்சி அலுவலகங்களிலிருந்து தடுப்பு ஊசி போடப்படும் இடங்களுக்கு தடுப்பு ஊசி எடுத்துச் செல்வதற்காக உள்ள பெட்டிகளில் வைத்து எடுத்துச் செல்லப்படுகின்றன. கோயம்புத்தூரில் ஒன்றும், திருநெல்வேலியில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக மூன்று குளிர்பதன அறைகளைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

5. மகப்பேறு சேய்நலப் பணிகள்.—சுகாதார வசதி அளிக்கும் திட்டத்தின் செறிவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 8 பெரிய திட்டப் பணிகளில் தாய்-சேய்நலப் பணிகளுக்கு வகை செய்வதும் ஒன்றாகும். இத்திட்டப்பணியில் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றக் கருதப் பட்டுள்ளது:—

(அ) ஊட்டச்சத்து கல்வி உட்பட உடல் நலம் பற்றிய கல்வி விளக்கம் அளித்தல்;



(இ) கருவுற்றிருப்பவர்களுக்கு கருவுற்றுள்ள காலத்திலும், பேறு காலத்திலும், மகப்பேறுக்குப் பிந்திய காலத்திலும், உடல்நலப் பரிசோதனை செய்தல், தேவையான மருத்துவ உதவிகள் அளித்தல்;

(உ) குழந்தைகள், பாலகர்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுத்தல்;

(எ) தாய்மார்கள், குழந்தைகளிடையே ஏற்படும் நலிவு, இறப்பு விகிதம் ஆகியவற்றைக் குறைப்பதற்காக தடுப்பு ஊசி போட வகை செய்தல்.

கிராமப் பகுதிகளில், 424 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 4,909 சுகாதாரத் துணை நிலையங்கள் ஆகியவற்றின் மூலமாக தாய்-சேய் நலப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நகரப் பகுதிகளில் 128 மகப்பேறு இல்லங்களும், 372 மகப்பேறு நிலையங்களும் இயங்கி வருகின்றன.

6. பள்ளி சிறார் நல்வாழ்வுத் திட்டம்.—இத்திட்டம், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 30 நகராட்சிகளிலும் செயல் படுத்தப்படுகிறது. மருத்துவ அலுவலர்கள், சுகாதாரப் பார்வையாளர்கள் அடங்கிய குழு பள்ளிக் குழந்தைகளுக்கு (6—11 வயது) உடல் நலப் பரிசோதனை நடத்துகின்றது. சிறப்புச் சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள் பெரிய மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றனர். இப் பள்ளிகளில் நல்வாழ்வு, நோய்கள் பற்றிய விவரங்களையும், உடல் நலப் பாதுகாப்புக்கான வழிமுறைகள் பற்றிய சில அடிப்படை உண்மைகளையும் தெரிந்து கொள்ளும்பொருட்டு மாணவர்கள் அனைவருக்கும் நல்வாழ்வுக்கல்வி அளிக்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் 5,90,416 மாணவர்களுக்கு உடல் நலப் பரிசோதனை செய்யப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டில் (1984 சனவரி வரை) 4,91,927 மாணவர்களுக்கு உடல்நலப் பரிசோதனை செய்யப்பட்டது. ஒவ்வொரு பள்ளிக் குழந்தைக்கும் அவர்கள் பள்ளிக் கல்வியை முடிக்கும் வரை பராமரிப்பதற்காக தொடக்க நிலையிலிருந்து அவர்களின் சுகாதார நிலையைக் காட்டும் சுகாதார அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதுவே இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். 1984-85 ஆம் ஆண்டில் நகராட்சிப் பகுதிகளில் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்காக இலட்சம் தொடர் சுகாதார் பதிவு அட்டைகள் வழங்க கருதப்பட்டுள்ளது.

7. சத்துணவு.—நலிந்த பிரிவைச் சேர்ந்த தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்து நிலைமை மேம்படுத்துவதற்காக பின்வரும் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன:—

(1) ஓரளவு குறைந்த ஊட்டச் சத்து உள்ளவர்களுக்கு ஊட்டச் சத்து திறனை அதிகரிக்கும் வகையில் ஊட்டச்சத்து மிக்க உணவு தனை வழங்குதல்.

(2) ஊட்டச் சத்துக் குறைவினால் ஏற்படும் நோய்களைத் தடுப்பதற்காக சிகிச்சை அளித்தல். சிறு குறைபாடுகளைத் தவிர்ப்பதற்குத் தேவையான சுகாதார நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

பின்வரும் சத்துணவு திட்டங்கள் தமிழ்நாட்டில் நிறைவேற்றப் படுகின்றன:—

சத்துணவுத் திட்டம்.

- முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்.
- தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம்.
- டானிடா உதவியுடன் நடத்தப்படும் திட்டம் (இரண்டு வட்டாரங்களில் மட்டும்).
- ஒருங்கிணைந்த சேய் நல வளர்ச்சித் திட்டம்.
- ஏனையவை
  - (1) வைட்டமின் ஏ கரைசல்.
  - (2) இரும்பு; பாலிக் அமில மாத்திரை வழங்குதல்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து இயக்கத்தைச் சேர்ந்த மத்திய சத்துணவுக் கழகம் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் நடத்திய ஆய்வுகளிலிருந்து பள்ளி செல்லும் வயதடையாத சிறுவர்கள் உட்கொள்ளும் கலோரிச் சத்துக்களின் அளவு பற்றிய விவரம் கீழ் வருமாறு:—

| வயது ஆண்டுகளில். | ஒவ்வொரு நாளும் உட்கொள்ளும் கலோரிச் சத்தின் அளவு. சிறுவர்கள். | சிறுமியர். | உட்கொள்ள வேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்ட கலோரிச் சத்தின் அளவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 0-1 | 470 | 453 | 710 |
| 1-2 | 719 | 741 | 1,220 |
| 2-3 | 916 | 965 | 1,220 |
| 3-4 | 1,119 | 1,116 | 1,720 |
| 4-5 | 1,194 | 1,223 | 1,720 |
| 5-6 | 1,317 | 1,307 | 1,720 |

பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகள் உட்கொள்ளும் உணவில் கலோரிச் சத்துக்கள் மிகக் குறைவாக உள்ளது என்பது மேற்சொன்ன அட்டவணையிலிருந்து தெளிவாகிறது.



## ஊட்டச் சத்துணவுக் கல்வி.

மாநில சுகாதாரக் கல்விக் கழகம் சத்துணவு பற்றி அனைவரும் அறிந்து கொள்ளுவதற்காக விளம்பரம் செய்வதோடு, விளம்பர வெளியீடுகளையும் வெளியிடுகின்றன. தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், டானிடாவிடமிருந்து உதவி பெறும் திட்டம் (இரண்டு வட்டாரங்களில் மட்டும்), ஒருங்கிணைந்த சேய்நல வளர்ச்சி திட்டம் ஆகியவற்றின் கீழ், திட்டப் பகுதிகளில் வாழும் தாய்மார்களுக்கு ஊட்டச் சத்தின் அவசியம், குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு பற்றி விவரமாக எடுத்துக் கூறப்படுகிறது.

## உடல் நலம் பேணுதல்.

சத்துக் குறைவான உணவுகள் உட்கொள்ளுவதன் மூலம் ஏற்படக் கூடிய நலிவுகள் மற்றும் இறப்புகளைக் குறைப்பதும் தொற்றக் கூடிய மற்றும் தடுக்கப்படக் கூடிய நோய்களிலிருந்து குழந்தைகளை தடுப்பு ஊசி போட்டுக் காப்பதும், அவர்களின் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்தலும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

## முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

இத்திட்டத்தினால் பயன் பெறும் குழந்தைகளின் உடல் எடையை பதிவு செய்யவும் அவர்களுடைய வளர்ச்சி, உடல் நலனில் ஏற்படும் முன்னேற்றம் குறித்துப் பதிவு செய்து குழந்தைகளின் உடல் நலத்தைப் பேணுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆரம்பச் சுகாதார நிலையங்களைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் குழந்தைகளைப் பரிசோதனை செய்து அவர்களுக்குத் தேவையான சிகிச்சை அளிப்பதோடு அவர்களின் உடல் நலனையும் பேணுகின்றனர். இவர்களின் உடல் நலனைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மருத்துவ அட்டைகள் வைத்து வரப்படுகின்றன. பொதுவாக இளமைப் பருவத்தில் ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து குழந்தைகளைத் தடுப்பதற்காகத் தடுப்பு ஊசி போடப்படுகிறது.

## ஒருங்கிணைந்த சேய் நல வளர்ச்சித் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் பயனடைபவர்கள் உரிய வளர்ச்சியும் போதிய நலனும் பெறுகின்றனரா என்று பரிசீலனை செய்வதற்காக ஒருங்கிணைந்த சேய் நல வளர்ச்சித் திட்டத்தைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் தலைநிலையங்களுக்குச் சென்று பார்வையிடுகின்றனர். இத்திட்டத்தின் மூலம் பயனடைபவர்களுக்கு ஏற்படும் சிறு உடல் நலக் குறைவுகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, தாய்மார்களுக்குப் பேறுகாலத்தில் ஏற்படும் நோய்களுக்காகத் தடுப்பூசியும் போடப்படுகிறது. சத்துணவுக் குறைவினால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அவர்கள் மருத்துவ வல்லுநர்களிடம் அனுப்பி வைக்கப்படுகின்றனர். குழந்தைகள் நல அமைப்பாளர்கள், குழந்தைகள் நலன் பற்றிய சுகாதார அட்டைகளை வைத்து வருவதோடு அந்த அட்டையில் குழந்தைகளின் எடை போன்ற விவரங்களையும் அவ்வப்போது குறித்து வைத்து வருகின்றனர்.

## தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம்.

மக்கள் தொகையில் நலிந்த பிரிவினரின் ஊட்டச் சத்து நிலை மேம்பாடு மற்றும் பாதுகாப்பு இத்திட்டத்தின் நோக்கங்களில் முக்கியமான ஒன்றாகும். போதிய சத்துள்ள உணவுகள் வழங்கப்படாமல் உள்ள 6 முதல் 36 திங்களுக்குட்பட்ட வயதுள்ள குழந்தைகளுக்குத் தேவையான அளவு சத்து நிறைந்த உணவுகள் வழங்கப்படுகின்றன. சத்துக் குறைவான உணவை உட்கொள்ளுவதால் ஏற்படக் கூடிய சிறு உடல் நலக் குறைவிற்காகக் குழந்தைகளைச் சோதனை செய்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. வயிற்றிலுள்ள பூச்சிகளை நீக்குவதற்காக 4 திங்களுக்கு ஒரு முறை பூச்சி மருந்து கொடுக்கப்படுகிறது. ஆண்டுக்கு இரு முறை அவர்களுக்கு வைட்டமின் 'ஏ' கரைசல் கொடுக்கப்படுகிறது. நீர்வற்றுதலுக்கு முதலுதவி அளிக்க உப்பு-சர்க்கரை கலந்த கரைசலை வீட்டிலேயே தயாரிக்கும் வழிமுறைகள் தாய்மார்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகிறது. மகப்பேறு காரணமாக இரத்த சோகை நோய் ஏற்படுவதைத் தவிர்க்க தாய்மார்களுக்கு இரும்புபாலிக் அமிலம் கலந்த மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

## டானிடா.

குளத்தூர் வளர்ச்சி வட்டாரத்திலும் (சேலம்), மைலம் வளர்ச்சி வட்டாரத்திலும் (தென் ஆற்காடு) மாதிரி சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளின் வளர்ச்சி மேம்பாடு குறித்து கண்காணிக்கப்படுகின்றது. ரீ-ஹைட்ரேஷன் கரைசலை எவ்வாறு தயாரிப்பது, பயன்படுத்துவது ஆகியவை குறித்துத் தாய்மார்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. குழந்தைகளும், தாய்மார்களும் பரிசோதிக்கப்பட்டு தேவையேற்படும்போது மருத்துவ அதிகாரிகளிடம் அனுப்பப்படுகிறார்கள்.

## குழந்தைகளிடையே ஏற்படும் பார்வை இழப்பை கட்டுப்படுத்துவதற்கான திட்டம்.

பொதுவாக 5 வயதுக்குக் குறைவாயுள்ள குழந்தைகளிடையே வைட்டமின் 'ஏ' குறைந்து காணப்படுகிறது. உடனடி நடவடிக்கையாக குழந்தைகளுக்கு ஆண்டுக்கு இரு முறை வைட்டமின் 'ஏ' மருந்து கொடுப்பதன் மூலம் வைட்டமின் 'ஏ' குறைந்து காணப்படுவது தடுக்கப்படுகிறது. இத்திட்டம், ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ துணை பணியாளர்களால் செயற்படுத்தப்படுகிறது. வைட்டமின் 'ஏ' குறைபாட்டைக் குறைப்பதற்காக உணவில் பச்சைக் காய்கறிகள், கீரைகள், ஆகியவற்றை அதிக அளவில் சேர்த்துக் கொள்ளுமாறு களப் பணியாளர்கள் சத்துணவுக் கல்வி பற்றி எடுத்துக் கூறுகின்றனர்.





## இரத்தச் சோகையைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டம்.

இரத்தச் சோகை பொதுவாக கருவுற்றிருக்கும் தாய்மார்களிடையே மகப்பேற்றின் கடைசி மூன்று மாதங்களில் காணப்படுகிறது. இது, இரும்புச் சத்து, பாலிக் ஆசிட் மாத்திரைகளைக் கொடுப்பதன் மூலம் தடுக்கப்படுகிறது. இத்திட்டம் மருத்துவத் துறைப் பணியாளர்கள் மூலம் எல்லா துணை நிலையங்களிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் செயற்படுத்தப்படுகிறது.

8. பிறப்பு-இறப்பு குறித்த புள்ளி விவரம்.—இம்மாநிலத்தின் எல்லா பகுதிகளிலும் பிறப்பு, இறப்பைப் பதிவு செய்வது கட்டாயமாகும். பிறப்பு இறப்பை பதிவு செய்வது குறித்து பொதுமக்கள் ஆதரவு திருப்திகரமாக உள்ளது. கிராமப் பகுதிகளில் பிறப்பு-இறப்பு பதிவாளர்களாகச் செயல்படும் கிராம நிருவாக அதிகாரிகள், பிறப்பு-இறப்பு குறித்துப் பதிவு செய்யும் பணியைக் கவனிக்கிறார்கள். கிராம நிர்வாக அதிகாரி பதவிகள் அனைத்தும் நிரப்பப்பட்டுவிட்டால், பிறப்பு இறப்பைப் பதிவு செய்வது சீரடையும். நகர்ப் பகுதிகளில் பிறப்பு-இறப்பு பதிவாளர்கள் அனைவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகவே நகர்ப் பகுதிகளில் பிறப்பு, இறப்பு முழுவதும் பதிவு செய்யப்படுகிறது. [illegible] தகுந்த பிறப்பு வீதம், இறப்பு வீதம், குழந்தைகள் இறப்பு [illegible]ம் ஆகியவற்றை மதிப்பிட அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட 150 கிராமப் பிரிவுகளில் பிறப்பு-இறப்பு மாதிரிப் பதிவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 1978 முதல் 1982 ஆம் ஆண்டு வரையில் கிராம நகர் பகுதிகளின் பிறப்பு, இறப்பு வீதம் வருமாறு :—

| ஆண்டு. | 1,000 பேருக்கு பிறப்பு வீதம். | | | 1,000 பேருக்கு இறப்பு வீதம். | | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமப் பகுதி. | நகர்ப் பகுதி. | இரண்டும் சேர்ந்து. | கிராமப் பகுதி. | நகர்ப் பகுதி. | இரண்டும் சேர்ந்து. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1978 .. | 30.0 | 26.3 | 28.9 | 14.5 | 9.0 | 12.8 |
| 1979 .. | 28.9 | 26.2 | 28.1 | 13.6 | 8.6 | 12.0 |
| 1980 .. | 28.6 | 23.6 | 27.1 | 12.3 | 7.8 | 10.9 |
| 1981 .. | 28.4 | 20.8 | 26.1 | 12.8 | 6.5 | 10.8 |
| 1982 .. | 27.1 | 24.9 | 26.4 | 11.7 | 7.1 | 10.9 |

தமிழ்நாட்டில் 1978 முதல் 1982 ஆம் ஆண்டு வரையில் கிராமப்பகுதி, நகர்ப்பகுதிகளின் குழந்தை இறப்பு வீதம் வருமாறு—

| ஆண்டு. | உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்கு இறப்பு வீதம். கிராமப் பகுதி. | நகர்ப் பகுதி. | இரண்டும் சேர்ந்து. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1978 .. .. | 116.4 | 60.3 | 99.6 |
| 1979 .. .. | 111.1 | 63.3 | 96.8 |
| 1980 .. .. | 115·7 | 62.7 | 99.8 |
| 1981 .. .. | 93.8 | 51.7 | 81.2 |
| 1982 .. .. | 89.5 | 52.2 | 77.2 |

9. பலநோக்குச் சுகாதாரப் பணியாளர்கள் திட்டம்.—பல நோக்குச் சுகாதாரப் பணியாளர்கள் திட்டத்தை 1—10—1982 முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு துணை நிலையத்திலும் பலநோக்குச் சுகாதார ஆண் பணியாளர் ஒருவரும், பெண் பணியாளர் ஒருவரும் பணிபுரிகின்றனர். இவர்கள், குறிப்பிட்டதொரு சுகாதாரப் பணியை மட்டுமே கவனித்து வந்த சுகாதாரப் பணியாளர்களின் பணிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் குறிப்பிட்ட பகுதியில் (அதாவது சமவெளிப் பகுதிகளில் 5,000 மக்கள் தொகையும், மலைப் பகுதியிலும் பழங்குடியினர் வாழும் பகுதிகளிலும் 3,000 மக்கள் தொகையும் கொண்ட பகுதி) தாய் சேய் நலப் பணிகள் சத்துணவு, குடும்பநலம் உட்பட பொது சுகாதாரப் பணிகள் அனைத்தையும் கவனிக்கின்றனர். ஒவ்வொரு நான்கு ஆண் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஓர் ஆண் மேற்பார்வை பணியாளரும், ஒவ்வொரு நான்கு பெண் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஒரு பெண் மேற்பார்வைப் பணியாளரும் உள்ளனர். இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு, ஆரம்பச் சுகாதார நிலையங்களிலுள்ள பணியாளர்களுக்கும் மாவட்ட அளவில் உள்ள பணியாளர்களுக்கும் பணி புரியும் போதே பயிற்சியளிக்கப்படுகிறது.

10. உணவுக் கலப்படத்தைக் தடுத்தல்.—உணவுப் பொருட்களில் கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கு சுகாதாரச் சட்டங்கள் மற்றும் நல்வாழ்வுக் கல்வி வழியாக திறம்பட்ட முறையில் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறையின் கீழ் பகுப்பாய்வகங்கள் இயங்கி வருகின்றன. கிண்டி, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள உணவு பொருட்கள் பகுப்பாய்வகங்களில் சட்டப்படிக்கான உணவுப் பொருள் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. பாளையங்கோட்டை, சேலம் ஆகிய இடங்களிலுள்ள உணவுப் பொருட்கள் பகுப்பாய்வகங்களில் ஏனைய உணவுப் பொருள் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. சென்னை மாநகராட்சியின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் ஒரு உணவுப் பொருள் பகுப்பாய்வகம் இயங்குகிறது. உணவுப் பொருட்களின் மாதிரிகளைப் பரிசோதிக்கும்



மக்களுக்காக; நகராட்சிப் பகுதிகளிலும், தெரிந்தெடுக்கப்பட்ட கிராமப் பகுதிகளிலும், 1954 ஆம் ஆண்டு உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் (மத்தியச் சட்டம் 37/1954) செயல்படுத்தப்படுகிறது. நகர்ப் பகுதிகளில் மாநகராட்சி சுகாதார அலுவலர்கள், நகராட்சி சுகாதார அலுவலர்கள் என்ற நகராட்சி ஆணையர்கள் ஆகியோர் சுகாதார அலுவலர்கள் அதிகாரிகளாகப் பணிபுரிகின்றனர். ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் கிராமப் பகுதிகளில், உள்ளூர் முறையில் உள்ளூர் சுகாதார அதிகாரிகளாகப் பணிபுரிகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளில் பகுப்பாய்வு செய்யப்பட்ட உணவுப் பொருள் மாதிரிகள் குறித்த புள்ளி விவரம் கீழ்க்காணும் விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது :—

| தொடர் எண். | விவரங்கள். | 1981–82 | 1982–83 | 1983–84 (1984-ம் ஆண்டு சனவரி வரையில்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | 20,396 | 18,481 | 16,191 |
| 2 | கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டறியப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | 2,195 | 1,887 | 2,046 |
| 3 | அபராதம் விதிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை. | 592 | 471 | 466 |
| 4 | சிறைத்தண்டனை அளிக்கப்பட்டோரின் எண்ணிக்கை. | 194 | 142 | 74 |
| 5 | வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை (ரூபாயில்). | 3,45,965 | 3,08,470 | 2,49,815 |

11. நலவாழ்வுக் கல்வி.—பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்ககத்தின் மாநில நலவாழ்வுக் கல்வி நிலையம் கீழ்க்கண்ட நோக்கத்துடன் நலவாழ்வுக்கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது:—

(1) கி. பி. 2000ம் ஆண்டுக்குள் மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் நலவாழ்வுக் கல்வி அளித்து உதவுவது.

(2) மக்கள், தங்களின் நல்வாழ்வுப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, அவற்றைக் கண்டுபிடித்து, மக்களை சிறந்த முறையில் பங்குபெறச் செய்வதன் மூலமும் அவர்களுடைய ஒத்துழைப்போடும் அவற்றைத் தீர்த்துக் கொள்ள அவர்களுக்கு உதவுவது.

(3) நல்வாழ்வுப் பணியாளர்கள் நல்வாழ்வுக் கல்விக் கொள்கைகளை நன்கு புரிந்துகொண்டு நல்வாழ்வுத்திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்த அவர்களுக்கு உதவுவது.

செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மக்கள் நல்வாழ்வுப் பணித் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்த, சம்பந்தப்பட்ட திட்டம் தொடர்பாக மக்களுக்கு நல்வாழ்வுக் கல்வியானது, சிறு குழுவிவாதம் மூலமாகவும்; தனிப்பட்டவர்களை சந்திப்பதன் மூலமாகவும், நல்வாழ்வுக் கல்வி சாதனங்கள் உபகரணங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் புகட்டப்படுகிறது. இதைத் தவிர, தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள், பொருட்காட்சி, திரைப்படம் முதலியவற்றின் மூலமாகவும், சுவரொட்டிகள், விளம்பரத்துண்டுச் சீட்டுக்கள் ஆகியவற்றை விநியோகிப்பதன் மூலமாகவும் போதிக்கப்படுகிறது.

விளம்பரப் பிரிவுகள் தற்பொழுது பத்து சுகாதார மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. மேலும் பத்து சுகாதார மாவட்டங்களில் விளம்பரப் பிரிவுகளை 1984–85-ல் அமைத்து ஒவ்வொரு பிரிவிற்கும் திரைப்படக் கருவி ரூ. 30,000 செலவிலும், திரைப்படச் சுருள் ரூ. 2,000 செலவிலும் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

## IV. மாநில மருந்துக் கட்டுப்பாடு 1984–85.

தமிழ்நாட்டில், மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம் மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலரை தலைவராகக் கொண்டு 26—11—1981 முதல் தனித் துறையாக இயங்கி வருகிறது. தலைமையிடத்திற்கு இரண்டு துணை மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலர் பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. துணை மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலர்கள் மருந்து மற்றும் அழகு சாதனங்கள் தயாரிக்க புது உரிமங்கள் வழங்குவதற்கும் புதுப்பித்தலுக்கும் உரிமம் வழங்கும் அதிகாரிகள்.

2. தமிழ்நாட்டில், மருந்து கட்டுப்பாட்டுத் துறை நிர்வாக வசதிக்காக, பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு உதவி மாநில மருந்துக் கட்டுப்பாடு அதிகாரியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அவரே அந்த மண்டலத்திற்குரிய புதிய விற்பனை உரிமம் வழங்குவதற்கும் விற்பனை உரிமங்களைப் புதுப்பிப்பதற்கும் உரிமம் வழங்கும் அதிகாரி ஆவார். இம்மாநிலத்தில் 59 மருந்து ஆய்வாளர்கள் உதவி மாநில மருந்து கட்டுப்பாடு அலுவலர்களின் கண்காணிப்பில்



பணிபுரிந்து வருகிறார்கள். மருந்துகள் ஆய்வாளர்கள், மருந்துகள் விற்பனை மற்றும் தயாரிப்பு கூடத்தினை ஆய்வு செய்தல், மருந்து மாதிரிகளை எடுத்தல், புகார் தொடர்பான புலனாய்வு செய்தல் மற்றும் சட்டத்தின் பல்வேறு வழிவகைகளை செயல்படுத்துதல் போன்ற பணிகளை செய்து வருகிறார்கள்.

3. தேனாம்பேட்டையில் உள்ள மருந்துகள் சோதனைக்கூடம் 1—4—1982 முதல் மருந்துக் கட்டுப்பாடு அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. சோதனைக்காக எடுக்கப்படும் மருந்து மாதிரிகள், தேனாம்பேட்டை மருந்துகள் சோதனைக் கூடத்திலும் மற்றும் கிண்டி கிங் நிலையத்திலும் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. மருந்துகள் சோதனைக்கூடத்தில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட மருந்து மாதிரிகளின் எண்ணிக்கை, தவறு புரிந்துள்ள மருந்து தயாரிப்பு கூடங்களுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகள், நீதிமன்றத்தின் முன் உள்ள வழக்குகள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்டுள்ள மருந்து நிறுவனங்கள். | .. 71 | (13—2—84 தேதிய நிலவரப் படி) |
| தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | .. 71 | |
| தண்டனை அடைந்தவர்கள் | .. 7 | |
| தண்டனைப்பணம் மற்றும் சிறைத் தண்டனை | .. 4 | |
| தண்டனைப்பணம் மட்டும் | .. 3 | |
| நீதிமன்றங்களில் உள்ள வழக்குகள் | .. 64 | |
| சோதனைக்காக பெறப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | .. 1,129 | (31—12—83 தேதிய நிலவரப் படி) |
| தேனாம்பேட்டை மருந்துகள் சோதனைக் கூடத்திலும் மற்றும் கிண்டி கிங் நிலையத்திலும் சோதனை செய்த மாதிரிகளின் எண்ணிக்கை. | .. 1,356 | (31—12—83 தேதிய நிலவரப் படி) |

4. தமிழ்நாட்டில், மருந்துகள் விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை 13,155; மருந்துகள் தயாரிப்புக் கூடங்களின் எண்ணிக்கை 1,496 (31—12—83 தேதிய நிலவரப்படி).

31—12—83 தேதிய நிலவரப்படி, வழங்கப்பட்ட மருந்து விற்பனை உரிமங்களின் எண்ணிக்கை 2,565, மருந்து தயாரிப்பு உரிமங்கள் 358.

5. பன்முகப்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களை திறமையான முறையில் செயற்படுத்த உதவி புரிந்துள்ளன.—

(அ) மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம், 1940.

(ஆ) மருந்துகள் மற்றும் மாயக் குணமளிப்புகள் (ஆட்சேபகரமான விளம்பரங்கள்) சட்டம், 1954.

(இ) மருந்துகள் விலைக் கட்டுப்பாடு ஆணை, 1979.

(ஈ) அபாயகரமான மருந்துகள் சட்டம், 1930.

மேற்குறிப்பிட்ட சட்டங்களின் பல்வேறு வழிவகைகள் மூலம் கீழ்க் காணும் பணிகளை செயல்படுத்தப்படுவது நோக்கமாகும்:—

1. மருந்துகள் பற்றாக்குறை தவிர்க்கப்பட்டு சீரான முறையில் பொதுமக்களுக்கு அத்தகைய மருந்துகள் கிடைக்க வழிவகைகள் செய்யப்படுகின்றன.

2. நிர்ணயிக்கப்பட்டுள்ள தரத்தில், மருந்துகள் தயாரிக்கப்படுவதை தொடர்ந்து கண்காணித்து, அவை அரசு மருத்துவ மனைகள் மூல மாகவும் விற்பனை நிலையங்கள் மூலமாகவும் பொதுமக்களுக்கு கிடைப்பதற்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

3. போதை மருந்து புலனாய்வு நிலையத்துடன், இணைந்து செயல்பட்டு, போதை மருந்துகள் கள்ளத்தனமான வழிகளில் விற்கப் படுவது தீவிரமாக தடுக்கப்படுகிறது.

4. நோய் தீர்க்கும் குணமற்ற, மற்றும் உடலுக்கு தீங்கு விளைவிக்கும், சரியான கலவையில்லாமல் தயாரிக்கப்படும் மருந்துகளின் உற்பத்தியினை கண்டுபிடித்து களையெடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படிப் பட்ட மருந்துகளின் தயாரிப்பு நிறுத்தப்பட்டிருக்கின்றது.

5. தேவைக்கு மிஞ்சிய மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் உருவாவதை தடுப்பதற்கு ஒரு நிறுவனத்திற்கு 6 கடன் உரிமங்கள் தான் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் மருந்து சோதனைக் கூட வசதிகள் இல்லாத நிறுவனத்திற்கு மருந்துகள் தயாரிப்பு உரிமம் வழங்கப்படுவதில்லை.

6. 1984–85 நிதியாண்டில், மருந்துக் கட்டுப்பாடு தலைமை யகத்திலும் மற்றும் தேனாம்பேட்டை மருந்து சோதனைக்கூடம் மற்றும் பத்து மண்டல அலுவலகங்களிலும் உள்ள கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக, ரூ. 71,000 செலவில் தணிக்கை பிரிவு ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

V. தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை.

பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவந்த மாநில சுகாதாரப் போக்குவரத்து



நிறுவனம் 1981 ஆம் ஆண்டில் அரசின் ஒரு தனித்துறையாக மாற்றி அமைக்கப்பட்டது. இதன் காரணமாக 1983 நவம்பர் 26 முதல் இதன் பெயர் தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறையாக மாற்றி அமைக்கப்பட்டது.

2. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்ற பல்வேறு இயக்குநரகங்களின் மோட்டார் வாகனங்களை பழுதுபார்த்தல், பராமரித்தல் பணிகளை கவனிப்பதுதான் இத்துறையின் முதன்மையான பொறுப்பாகும். இப்பொறுப்புக்கு ஏற்றபடி இத்துறை பணித்துறை எனவும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

3. இத்துறையால் பழுதுபார்த்து பராமரிக்கப்படவேண்டிய மோட்டார் வண்டிகளின் தற்போதைய எண்ணிக்கை 1,626 ஆகும். ஓடாத நிலையில் உள்ள மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையை எப்போதும் குறைந்த அளவிலேயே வைத்திருப்பதுதான் இத்துறையின் குறிக்கோளாக உள்ளது. இக்குறிக்கோளைக் கருத்திற்கொண்டு மாவட்டங்களிலும் மற்றும் வட்டார மையங்களிலும் பழுது பார்த்தல் மற்றும் பராமரிக்கும் வசதிகளை அரசு விரிவுபடுத்தியுள்ளது. இத் துறை, தனது கட்டுப்பாட்டின்கீழ், சென்னை, மதுரை, சேலம் ஆகிய இடங்களில் 3 வட்டார பணிமனைகளையும் திருச்சியில் ஒரு மையப் பணிமனையையும் பல்வேறு மாவட்டத் தலைமையிடங்களில் 15 நடமாடும் பணிமனைகளையும் மற்றும் 11 மாவட்ட அளவு பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பிரிவுகளையும் கொண்டுள்ளது.

4. கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி ஓடா நிலையில் உள்ள வாகனங்களின் விழுக்காட்டினை இத்துறை ஒவ்வோராண்டும் படிப்படியாக குறைத்துக் கொண்டுவருகிறது:—

| | வாகனங்களின் எண்ணிக்கை. (1) | ஓடும் நிலையில் உள்ளவை. (2) | விழுக்காடு. (3) |
|---|---|---|---|
| 1982 ஜனவரி 1-ன் நிலவரப்படி .. | 1516 | 1244 | 82 |
| 1983 ஜனவரி 1-ன் நிலவரப்படி .. | 1672 | 1404 | 84 |
| 1984 ஜனவரி 1-ன் நிலவரப்படி .. | 1626* | 1398 | 86 |

*70 வாகனங்கள் கழிக்கப்பட வேண்டியிருப்பதால் நிறுத்தப் பட்டுள்ளன; ஆகையால் இதில் சேர்க்கப்படவில்லை.

5. 1982–83 ஆம் ஆண்டிலும் 1983–84–ம் ஆண்டிலும் (1983 டிசம்பர் முடிய) இத்துறையால மேற்கொள்ளப்பட்ட சிறிய மற்றும் பெரிய அளவில் பழுதுபார்க்கப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

| ஆண்டு. (1) | சிறிய அளவில் பழுது பார்க்கப்பட்ட வண்டிகளின் மொத்த எண்ணிக்கை. (2) | பெரிய அளவில் பழுது பார்க்கப்பட்ட வண்டிகளின் மொத்த எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1982–83 .. | 105 | 667 |
| 1983–84 (1983 டிசம்பர் முடிய) .. | 122 | 720 |

6. 1983–84 ஆம் ஆண்டின் சாதனைகள் :—

1. கீழ்க்கண்ட மாவட்டங்களில் மாவட்ட அளவு பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பிரிவுகள் அமைக்கப்பட்டன :—

(1) வட ஆற்காடு.
(2) தர்மபுரி.
(3) கோயம்பத்தூர்
(4) புதுக்கோட்டை மற்றும்
(5) கன்னியாகுமரி.

2. மூன்று வட்டாரப் பணிமனைகளுக்கும் வெவ்வேறு வகையான 17 தொழிற்நுட்ப பதவிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

3. வட்டாரப் பணிமனைகள் இரண்டிற்கும் ஆறு மாவட்டப் பணிமனைகளுக்கும் தொலைபேசி இணைப்பு வசதி ஏற்படுத்தித் தர ஒப்புதல் அளிக்கப்பட்டது.

4. பெட்ரோலினால் இயங்கக்கூடிய 50 வாகனங்களை ரூ. 15 இலட்சம் செலவில் டீசலில் இயங்கக் கூடியதாக மாற்றுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

1984–85 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கிற திட்டங்கள்.

1. ரூ. 1 இலட்சம் செலவில், சென்னையில் வட்டாரப் பணிமனையிலும், திருச்சி மையப் பணிமனையிலும் குழாய்க் கிணறு வசதி செய்து தருதல்.



2. ரூ. 40,000 செலவில் எஞ்சியுள்ள ஐந்து மாவட்டப் பணிமனைகளில் தொலைபேசி இணைப்பு வசதி செய்து தருதல்.

3. வட்டாரப் பணிமனைகள் மூன்றிற்கும் மையப் பணிமனைக்கும் கூடுதல் பணியாளர்களை நியமித்தல்.

இணைப்பு.

| தொடர் எண். (1) | திட்டப்பணிகளின் விவரம். (2) | இறுதிச் செலவு. (3) | 1984–85-ல் செலவு. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்குநர். | | |
| 1. | கூடுதலாக 10 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்குதல். | 24·60 | 22·59 |
| 2. | நடமாடும் சுகாதாரப் பணிக்காக 25 மருந்தாக்குநர்களை நியமித்தல். | 6·69 | 6·55 |
| 3. | ஆரம்ப சுகாதார நிலைய அலுவலர் குடியிருப்பு கட்டுதல். | 18·00 | 18·00 |
| | பொதுச் சுகாதாரம்—நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர். | | |
| 4. | நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஒரு இலட்சம் பள்ளிச் சிறார்களுக்கு உடல் நலம் பற்றிய தகவல் அடங்கிய அட்டைகள் வழங்குதல். | 1·00 | 1·00 |
| 5. | அரசு எடுத்துக் கொண்ட 100 ஊராட்சி ஒன்றிய துணை நிலையங்களுக்குக் கருவிகளும் மேஜை, நாற்காலி முதலிய பொருள்களும் வழங்குதல். | 3·00 | 3·00 |
| 6. | இராமேஸ்வரம் தீவில் மலேரியா சிறப்புக் கட்டுப்பாட்டிற்கான களப்பணியாளர்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல். | 40·80 | 5·90 |
| 7. | சுகாதாரப் பிரிவு மாவட்டங்கள் பத்தில் பிரச்சாரப் பிரிவுகளை ஏற்படுத்துதல். | 4·38 | 4·05 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 8. | மாநிலத்தில் உள்ள 16 மாவட்டக் கணக்கு இணக்க அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் உதவியாளர் பதவியொன்றை ஏற்படுத்தல். | 1·59 | 0·92 |
| 9. | ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கும் மேற்பட்ட 11 நகராட்சிகளில் புள்ளி விவர உதவியாளர் 11 பேரை நியமிப்பதன் மூலம் நகர்ப் புறப் பகுதிகளில் பதிவை வலுப் படுத்தும் திட்டத்தை நீட்டித்தல். | 1·82 | 1·23 |
| 10. | கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோயிலில் யானைக்கால் நோய்த் தடுப்பு பிரிவு ஒன்றை ஏற்படுத்தல், கன்னியாகுமரி செங்கற்பட்டு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் ஐந்து யானைக்கால் நோய்ப் பிரிவு சிகிச்சை அமைத்தல். | 5·80 | 0·00 |
| | **திட்டத்தில் சேராதது.** | | |
| 11. | இராமேஸ்வரம் தீவில் மலேரியா கட்டுப்பாட்டிற்கான சிறப்புக் களப் பணியாளர்கள். | 0·96 | 0·54 |
| 12. | விரிவுபடுத்தப்பட்ட நோய்த் தடுப்பூசித் திட்டப் பணிக்காகக் கூடுதல் பணியாளர்களை நியமித்தல். | 10·68 | 4·96 |
| | **மாநில மருந்துக்கட்டுப்பாடு அதிகாரி.** | | |
| 13. | தலைமையிடத்தில் தணிக்கைப் பணியாளர் குழு ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்புகள் | 0·96 | 0·71 |
| | **மாநில சுகாதாரப் போக்குவரத்து நிறுவன இயக்குநர்.** | | |
| 14. | சென்னை, வட்டாரப் பணிக் களரிக்கும் (சுகாதாரம்) திருச்சிராப்பள்ளி மத்திய பணிக் களரிக்கும் (சுகாதாரம்) துணை கிளை ஒன்று அமைத்தல். | 1·00 | 1·00 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 15. | தொலைபேசி ஒன்றுக்கு ரூ. 8,000 என்ற வீதத்தில் ஐந்து மாவட்டப் பணிக்களரிகளுக்குத் தொலைபேசி வசதி அளித்தல். | 0·40 | 0·40 |
| 16. | சென்னை, சேலம், மதுரை வட்டாரப் பணிக்களரிகளுக்கும் திருச்சிராப்பள்ளி மத்தியப்பணிக் களரிக்கும் (சுகாதாரம்) கூடுதல் பணியாளர்களை நியமித்தல். | 1·61 | 1·20 |

## இந்திய முறை மருத்துவம் மீதான கொள்கை விளக்கக் குறிப்பு.

### கொள்கை

இந்திய முறை மருத்துவத்திற்கு, குறிப்பாக தமிழ்நாட்டுக்கே உரிய தமிழ்ப் பண்பாட்டின் முக்கிய அங்கமாகத் திகழ்வதுமான சித்தமுறை மருத்துவத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் அரசு தொடர்ந்து தனி முக்கியத்துவம் அளித்துவருகிறது. சித்தமுறை மருத்துவத்தைக் கீழ்க் கண்டவற்றின் மூலம் மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது:—

(1) கிராம மக்களுக்கு மருத்துவ உதவியளிப்பதற்காக ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள சித்த மருத்துவப் பிரிவுகளை நீட்டித்தல்;

(2) பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியை மேம்படுத்துவதன் மூலம் சித்த மருத்துவக் கல்வியை மேம்படுத்துதல்:

(3) ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்களை ஊக்குவித்தல்;

(4) மூலிகைகளை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்தல்; இன்றியமையாத மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்தல்;

(5) உரிய தரத்திற்குக் குறைந்த பயிற்சி நிலையங்களைக் கட்டுப் படுத்துதல்.

அரசு ஆணையர்-செயலர் பதவித் தரத்திலுள்ள இந்திய ஆட்சிப்பணி அதிகாரி ஒருவரை, இந்திய முறை மருத்துவ இயக்குநராக நியமித் திருப்பது, இந்திய முறை மருத்துவத்தின் விரைவான வளர்ச்சிக்கு அரசு முக்கியத்துவம் அளிப்பதைக் குறிக்கிறது.

### மருத்துவ உதவி

தற்போது பின்வரும் மருத்துவ நிலையங்கள் வாயிலாக சித்த முறையில் மருத்துவ உதவியளிக்கப்படுகிறது:—

(1) பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ள 208 படுக்கை வசதிகள் கொண்ட சித்தமருத்துவ மனை.

(2) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையிலுள்ள 75 படுக்கை வசதிகள் கொண்ட சித்த முறை மருத்துவப் பிரிவு.

(3) 15 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் இயங்கி வரும் சித்த முறை மருத்துவப் பிரிவுகள்.



(4) வட்டத் தலைமையிடத்திலும்; வட்டத் தலைமையிடம் அல்லா இடங்களிலும் உள்ள மருத்துவ மனைகளில் இயங்கிவரும் 87 சித்த முறை மருத்துவப் பிரிவுகள்.

(5) ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கிவரும் 181 சித்த முறை மருத்துவப் பிரிவுகள்.

(6) அரசினர் சித்த மருத்துவ மருந்தகங்கள் 8.

(7) உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப்படும் 412 சித்த முறை மருந்தகங்கள்.

(8) நெடுந்தொலைவிலுள்ள கிராமங்களில் இயங்கிவரும் அரசினர் மருந்தகங்கள் 21.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனுமதியளிக்கப்பட்ட 220 சித்த முறை மருத்துவப் பிரிவுகளில், 181 பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. தகுதி வாய்ந்த மருத்துவப் பணியாளர்கள் இல்லாததால், எஞ்சியுள்ள சித்த முறை மருத்துவப் பிரிவுகள் திறக்கப்படாமலுள்ளன. இந்த இடர்ப் பாட்டினை நீக்க, பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

(அ) காலியாகவுள்ள உதவி மருத்துவ அதிகாரிகளின் பதவிகளைத் தகுதிவாய்ந்த அதிகாரிகள் கிடைக்கும் வரை எஸ்.எஸ்.எல்.சி. படித்த "பி2" என்ற வகுப்பைச் சேர்ந்த பரம்பரை சித்த மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய அரசு ஆணை பிறப்பித்து உள்ளது. இந்தப் பதவிக் காலியிடங்களை நிரப்புவதற்காக "பி2" வகுப்பைச் சேர்ந்த 21 பரம்பரை சித்த மருத்துவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

(ஆ) சில ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள சித்த முறை மருத்துவப் பிரிவுகள், அவற்றிற்கு அருகாமையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவப் பணியாளர்களைக் கொண்டு செயல்படச் செய்யப்படுகின்றன.

மேற்கூறிய இரு நடவடிக்கைகளின் காரணமாக 220 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உள்ள சித்த முறை மருத்துவப் பிரிவுகளும் இந்த ஆண்டின் இறுதிக்குள் செயல்படத் தொடங்கும்.

### கட்டிடங்கள்

படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ் சித்த முறை மருத்துவப் பிரிவுகளுக்காகத் தனியாகக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மாவட்டம் மற்றும் வட்டங்களிலுள்ள நிலையங்களில் புற நோயாளிகளுக்கும், அக நோயாளிகளுக்கும் சிகிச்சை செய்வதற்குரிய மருத்துவ வசதிகளுடன் சித்த முறை மருத்துவப் பிரிவுகளுக்காக

7 கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு இதுவரையில் அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் 1983-84 ஆம் ஆண்டில் 5 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள இரு கட்டிடங்கள் 1984-85 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சித்த முறை மருத்துவப் பிரிவுகளில் புற நோயாளிகளுக்குரிய கட்டிடமும், 15 படுக்கை வசதி கொண்ட பிரிவும் கடையநல்லூர் (திருநெல்வேலி மாவட்டம்) அரசினர் மருத்துவ மனையிலும், சாத்தான்குடி (திருநெல்வேலி மாவட்டம்) அரசினர் மருத்துவ மனையிலும், கடலூர் (தென் ஆற்காடு மாவட்டம்) அரசினர் தலைமையிட தலைமையிட மருத்துவ மனையிலும், ரூ 18.51 இலட்சம் செலவில் கட்டுவதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## மருத்துவ மனைகள்.

இந்திய முறை மருத்துவத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பாளையங்கோட்டையில் ஒன்றும் சென்னையில் ஒன்றுமாக இரு மருத்துவ மனைகள் உள்ளன.

## அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, பாளையங்கோட்டை.

இது சித்த முறை மருத்துவத்திற்கென்றே 208 படுக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்ட மருத்துவமனையுடன் அமைந்துள்ள ஒரு கல்வி நிறுவனமாகும்.

## 1983-84 ஆம் ஆண்டிற்கான திட்டம்

(அ) 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 3.32 இலட்சம் செலவில் 24 படுக்கை வசதியுடன்கூடிய குழந்தை நலப் பிரிவு கட்டுவதற்காக அனுமதி வழங்கப்பட்டது. கட்டிடப் பணி முடியும் தருவாயிலுள்ளது. இந்தப் பிரிவு விரைவில் தொடங்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 1.20 இலட்சம் செலவில் ஊடுகதிர் பிரிவு ஒன்று கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. கட்டுமானப்பணி 1983-84 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது.

(இ) இம்மருத்துவ மனைக்கு ரூ 2.10 இலட்சம் செலவில் 200 எம்.ஏ. ஊடுகதிர் கருவி ஒன்றை வாங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. இக்கருவியை வழங்குவதற்காக நிறுவனத்திடம் தேவைக் குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இக்கருவி 1984-85 ஆம் ஆண்டில் நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனை, சென்னை.

(எ) மருத்துவ ஆவணப் பிரிவு ஒன்றுக்கு அனுமதி, வழங்கப்பட்டுள்ளது. இப்பிரிவு செயல்படத் தொடங்கியுள்ளது.

(ஐ) சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் உள்ள 150 படுக்கைகளில் சித்த முறை மருத்துவத்திற்கு மட்டும் 51 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 1983—84 ஆம் ஆண்டில் இருந்து 24 படுக்கை வசதிகள் கொண்ட குழந்தை நலப் பிரிவு செயல்படத் தொடங்கியுள்ளது.

(ஒ) மேலும் நடப்பு ஆண்டில் ரூ. 2.44 இலட்சம் செலவில் 300 எம்.ஏ. ஊடுகதிர் கருவி நிறுவப்பட்டுள்ளது. இது செயல்படத் தொடங்கியுள்ளது.

## 1984-85 ஆம் ஆண்டிற்கான திட்டம்

(அ) சித்த முறை மருத்துவப் பிரிவுகளின் நிர்வாகத்தைச் சீர் அமைக்கவும், தொழில் நுட்ப வழிகாட்டிக் குறிப்புகளை அளிக்கவும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், வட்டத் தலைமை இடங்களிலும் வட்டத் தலைமையிடமல்லாத மற்ற இடங்களிலும் அமைந்துள்ள மருத்துவ மனைகளில் உள்ள சித்த முறை மருத்துவ பிரிவுகளில் பணிபுரியும் உதவி மருத்துவ அதிகாரிகளை நிர்வாக வகையில் கட்டுப்படுத்தவும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனி மாவட்ட சித்த முறை மருத்துவ அதிகாரியை நியமிக்க கருதப்பட்டுள்ளது.

(ஆ) இம்மாநிலத்திலுள்ள மருத்துவ மனைகளில் பணியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு இந்த இயக்கத்தில் சித்த முறை மருத்துவர் ஒருவரை இந்திய முறை மருத்துவ உதவி இயக்குநராக நியமிக்க, கருதப்பட்டுள்ளது.

## மருத்துவக் கல்வி

பாளையங்கோட்டை, அரசினர் சித்த முறை மருத்துவக் கல்லூரியில் பின்வரும் படிப்புத் துறைகளில் கல்வி அளிக்கப்படுகிறது:—

(1) சித்த முறை மருத்துவத்தில் 5½ ஆண்டு கால பி.எஸ்.எம். அண்டு எஸ்.பட்டப் படிப்பு. — 77 இடங்கள் (திங்கள் ஒன்றுக்கு ரூ. 75 என்ற வீதத்தில் 53 மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை அளிக்கப்படுகிறது).

| | |
|---|---|
| (2) குணபாடம், மருத்துவம் ஆகிய பிரிவுகளில் (மத்திய அரசு ஆதரவுத் திட்டம்), நடத்தப்படும் 3 ஆண்டுக்கால எம்.டி. (சித்த) மருத்துவப் பட்ட மேற்படிப்பு. | 21 இடங்கள், ஒவ்வொரு பிரிவுக்கும் 10 இடங்களாக மொத்தம் 20 இடங்கள். மத்திய அரசு நியமன தாரருக்காக ஒரு இடம். |
| | மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை பின்வருமாறு அளிக்கப் படுகிறது.— |
| | (அ) 5 ஆண்டுப் பணிக்காலத்தை முடித்துள்ள முறையான பணியில் உள்ள மருத்துவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ, 6 0. |
| | (ஆ) 5 ஆண்டுப் பணிக்காலத்தை முடிக்காமலுள்ள முறையான பணியிலுள்ள மருத்துவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ, 500. |

## 1983–84 ஆம் ஆண்டுக்கான திட்டம்

(அ) 1982—83 ஆம் ஆண்டு வரை எம்.டி. படிப்புக்காக ஏற்கனவே உள்ள 20 இடங்களுடன் மத்திய அரசு நியமனதாரருக்காக 1983—84 ஆம் கல்வியாண்டிலிருந்து மேலும் ஒரு இடம் தற்போது சேர்க்கப் பட்டுள்ளது. இதனால் தற்போதுள்ள இடங்களின் மொத்த எண்ணிக்கை 21 ஆகும். பி.எஸ்.எம். அண்டு எஸ். பட்டப் படிப்புக்காக 1982—83 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் 75 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1983—84 ஆம் ஆண்டில் மத்திய அரசு நியமன தாரர்களுக்காக மேலும் இரு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனால் தற்போது இப்பட்டப்படிப்புப் படிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை 77 ஆகும்.

பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் பட்ட மேற்படிப்பு பட்டப்படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கு விரிவுரையாற்றுவதற்காக சித்த முறை மருத்துவக் கல்வி வல்லுநர்கள் நால்வர் கௌரவப் பேராசிரியர்களாக அரசால் நியமிக்கப் பட்டுள்ளனர்.

பாளையங்கோட்டை, அரசினர் சித்த முறை மருத்துவக் கல்லூரிக்காக ரூ. 34.98 இலட்சம் செலவில் பட்ட மேற்படிப்புக் கட்டடத்தைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் எடுத்துக் கொள்ளப்படும்.





(இ) விடுதி வசதிகள்.—நடப்பாண்டில், பாளையங்கோட்டை, அரசினர் சித்தமுறை மருத்துவக் கல்லூரியில் மாணவர், மாணவியருக்கு உரிய வசதிகளுடன் மாணவரில்லம் கட்டும் பணி முடிக்கப் பட்டுள்ளது. மாணவர்கள் அங்கு தங்கியுள்ளனர்.

## மருந்தாக்கியலில் பட்டயப் படிப்பு (சித்த முறை)

அரசினர் சித்த முறை மருத்துவக் கல்லூரியிலும், சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையிலும் இரண்டாண்டு பட்டப் படிப்பு (சித்த முறை) மருந்தாக்கியலில் நடைபெற்று வருகிறது. 1983-84 ஆம் ஆண்டில் ஒவ்வொரு தொடர்ந்து நிறுவனத்திலும் இப்படிப்புக்கான இடம் 25லிருந்து 30 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆயுர் வேத, யுனானி மருத்துவ முறைகளில் மருந்தாக்கியலில் பட்டயப் படிப்புகள தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

## செவிலியர்களுக்கு நாளது வரையில் மருத்துவத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து பயிற்சியளித்தல்.

சித்த, ஆயுர்வேத, யுனானி முறை மருத்துவங்களில் 15 செவிலியர்களுக்கு 3 மாத காலத்திற்கு பயிற்சியளிப்பதற்கான பயிற்சி வகுப்பைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப் பயிற்சி வகுப்பு சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் 1983 டிசம்பரிலிருந்து தொடங்கப் பட்டுள்ளது.

## 1984-85 ஆம் ஆண்டுக்கான திட்டம்.

(1) சித்த மருத்துவக் கல்லூரியின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, குணபாடம், உடல் கூறுகள், உடல் தத்துவம் நோய்நாடல் ஆகிய துறைகளின் நிலையை உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது. தகுதிபெற்ற பேராசிரியர்கள், சிறப்பு பேராசிரியர்கள், விரிவுரையாளர்களைக் கொண்டு இத்துறைகள் நிர்வகிக்கப்படும். அத்துடன் தேவையான சாதனங்கள், மேசை நாற்காலிகளை வழங்குவதன் மூலம் இத்துறைகள் மேம்படுத்தப்படும். இந்திய மருத்துவ மத்தியக் குழு வரையறுத்துள்ள தரத்திற்கு மேற்சொன்ன துறைகளை இது கொண்டு வரும்.

(2) நீர் வழங்கலைப் பெருக்கும் நோக்குடன் 2 இலட்சம் லிட்டர் கொள் திறன் கொண்ட நீர்த் தொட்டி ஒன்றை ரூ. 5.25 இலட்சம் செலவில் கட்டும் பணிக்கு அனுமதி வழங்கக் கருதப் பட்டுள்ளது.

## ஆராய்ச்சி

ஆயுர்வேதம், சித்த மத்திய ஆராய்ச்சிக் குழுவின் ஆதரவின் கீழ் பாளையங்கோட்டையில் உள்ள சித்த இலக்கிய ஆராய்ச்சிப் பிரிவு சித்த மருத்துவ இலக்கியங்கள் பற்றி தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றது.

சென்னையிலுள்ள வட்டார சித்த மருத்துவ மத்திய நிலையம், பல்வேறு நோய்களுக்குக் குறிப்பாக புற்றுநோய்க்குச் சிகிச்சை அளிப்பதில் ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றது. நோய்க் குறியியல், உயிர் வேதியியல், கதிர் வீச்சு இயல் ஆகிய துறைகள் செயல்படத் தொடங்கியுள்ளன; அரசினர் அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையில் ஆராய்ச்சிப் பணியை விரிவு படுத்துவதற்கு மேற்சொன்ன துறைகள் உதவியாக இருக்கும்.

## மருந்தாக்கியல் நிலையங்கள்.

மருந்தாக்கியல் நிலையங்களில் தேவையான அளவுக்குத் தரமான மருந்துகளைத் தயாரிப்பதில் அரசு நாட்டம் கொண்டுள்ளது. அதனால் மருந்துப் பொருட்கள் பற்றாக்குறை பிரச்சினை ஏற்படாமல் இருக்கலாம். எனவே, சென்னை, அரசினர் அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையிலும், பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையிலும் உள்ள மருந்தாக்கியல் நிலையங்களில் தற்போது மருந்துப் பொருட்கள் தயாரிப்பை மேம்படுத்தவும், பொள்ளாச்சியில் வட்டார மருந்தாக்கியல் நிலையம் ஒன்றை நிறுவவும் அரசு முடிவு செய்துள்ளது.

சென்னை அரசினர் அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையிலும், பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையிலும், மருந்தாக்கியல் நிலையத்தை இயந்திரமயமாக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

## 1983–84 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்.

(அ) அரசு, பாளையங்கோட்டையிலுள்ள மருந்தாக்கியல் நிலையத்தை வலுப்படுத்துவதற்காக, 1982–83-ல் ரூ. 9·90 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. மேசை, நாற்காலிகளும், சில சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் நடந்தேறி வருகின்றன. 1984–85-ல் அவை முடிக்கப்படும்.

(ஆ) சென்னை, அரசினர் அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையில் மருந்தாக்கியல் நிலையத்திற்காகக் கட்டிடம் கட்டவும். அதனை இயந்திரமயமாக்குவதற்கும் ரூ. 22.95 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டது. இக்கூடுதல் கட்டிடம் 1983–84-ல் முடிக்கப்பட்டது. மருந்தாக்கியல் நிலையத்தை இயந்திரமயமாக்கும் பணி நடந்தேறி வருகிறது. அப்பணி 1984–85-ல் முடிக்கப்படும்.

(இ) பொள்ளாச்சியில் வட்டார மருந்தாக்கியல் நிலையம் ஏற்படுத்துவதற்காக அரசு ரூ. 19.99 இலட்சம் வழங்கியுள்ளது. பொருத்தமான மனையைக் கண்டறிய இயலாமல் போனதால், பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அதனை அமைக்கலாமா என்னும் கருத்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.



## 1984–85 ஆம் ஆண்டுக்கான திட்டப்பணிகள்

சென்னை, அரசினர் அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையில் உள்ள மருந்தாக்கியல் நிலையத்தை 1984–85-ல் உடனடி செலவு ரூ. 5.00 இலட்சத்தில் மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

## மருந்துப் பொருட்கள் வழங்கல்

ஆரம்ப சுகாதார நிலையங்களையும் மருத்துவ மனைகளையும் சேர்ந்த சித்த மருத்துவப் பிரிவுகளில் மருந்துப் பொருட்களின் இருப்பையும், அவை தங்கு தடையின்றி வழங்கப்படுவதையும் உறுதி செய்யும் நோக்குடன் மருந்துப் பொருள் வழங்கல் ஏற்பாடு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது; மேலும் மருந்தகங்கள், சித்த மருத்துவப் பிரிவுகள் அனைத்திற்கும் சாதாரண நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்குத் தேவைப்படுகிற பொது மருந்து பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. சிகிச்சை பெறுகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் இந்த மருந்துப் பொருட்கள் மருந்துப் பெட்டகங்களில் (கிட்ஸ்) வழங்கப்படுகிறது. இந்தப் புதிய நடைமுறை 1984 ஜனவரி முதல் நாளிலிருந்து பின்பற்றப்படுகிறது.

## மருந்தாக்கியல் ஆலோசனைக் குழு

"மருந்தாக்கியல் ஆலோசனைக் குழு" ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் நோக்கங்கள் பின்வருமாறு.—

(1) சென்னை அரசினர் அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையிலுள்ள மருந்தாக்கியல் நிலையம், பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருந்தாக்கியல் நிலையம் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை உயர்த்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

(2) வட்டார மருந்தாக்கியல் நிலையத்தை அமைப்பது தொடர்பாக ஆலோசனை நல்குவது;

(3) இம்மருந்தாக்கியல் நிலையங்கள் கொள்முதல் செய்கின்ற மூல மருந்துப் பொருட்கள்; மூலிகைகள் ஆகியவற்றின் தரத்தை ஆய்வு செய்தல்.

டாக்டர் சி.எஸ். உத்தமராயன் அவர்களின் தலைமையின் கீழ் மருந்தாக்கியல் ஆலோசனைக் குழு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவில் தலைவர் உட்பட ஏழு உறுப்பினர்கள் உள்ளனர்.

## மருந்துப் பொருட்களைத் தரப்படுத்துதல்.

திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் தலைமையில் மருந்துப் பொருள் தர குழு அமைக்கப்பட்டுள்ளது. மருந்துப் பொருள் தரக் குழுவின் முதலாவது கூட்டம் 19—11—1983 அன்று நடைபெற்றது; அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

## புத்தகங்கள் வெளியிடுதல்.

### 1983-84 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்.

(1) 1983—84-ல் "சித்த மருத்துவச் சுருக்கம்" என்னும் நூல் ஒன்று வெளியிடப்பட்டது. மேலும், 11 புத்தகங்கள் திருத்தி அமைக்கப்பட்டு அச்சிட அனுப்பப்பட்டுள்ளது.

(2) இரண்டு கட்டுகள் கொண்ட ஓலைச் சுவடி பார்த்து எழுதப்பட்டுள்ளது. இவை சரிபார்க்கப்பட்ட பின்னர் வெளியிடப்படும்.

### 1984–85 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்

(1) ஏழு கட்டுகள் கொண்ட ஓலைச் சுவடி நகல் எடுக்கப்பட்டு அச்சிடுவதற்காக ஒப்படைக்கப்படும்.

(2) கையேட்டுப் பிரதிகள் நான்கு வெளியிடப்படும்.

(3) சித்த மருத்துவம் சம்பந்தப்பட்ட அரிய நூல்கள் ஐந்தும், எட்டு பாடப் புத்தகங்களும், குறிப்புப் புத்தகங்களும் அச்சிடப்பட்டு வெளியிடப்படும்.

### மூலிகைப் பொருள் கழகம்.

"தமிழ்நாடு மருந்துச் செடிகள் பண்ணை மற்றும் மூலிகை மருந்துகள் கழகம்" பின்வரும் நோக்கங்களை எய்துவதற்காக 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.—

(1) கழகம் தனது மூலிகைப் பண்ணைகளில் மூலிகைச் செடிகளைப் பயிரிட்டு அதனை நிதிவகையில் தனித்தியங்க வல்லதாக்குதல்.

(2) மூலிகைச் செடிகள் பயிரிடுவதற்கான விரிவாக்கச் செயல்களை, உதவித் தொகை பெறும் திட்டங்கள் மூலம், உழவர்கள் மற்றும் மலைச்சாதியினர் முதலியோருக்கு பயனளிக்கும் வகையில் ஏற்படுத்துதல்.

(3) பண்ணைகளிலிருந்து மூலிகை சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருள்களைச் சேகரிப்பதற்கான கொள்முதல் மையங்களை ஏற்படுத்துதல்;

(4) மருந்து தயாரிப்புப் பிரிவுகளை ஏற்படுத்துதல்;

(5) உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்தப்புறகு மூலிகைகளையும், மருந்துப் பொருள்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்;



(6) மூலிகை கழிவுப் பொருள்களிலிருந்து பண்ணைக்கு வேண்டிய உரங்களைத் தயாரித்தல்.

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 50.00 இலட்சமாகும்.

### மாநிலப் பதிவேடு.

இம்மாநில இந்தியமுறை மருத்துவர்களின் பதிவேட்டை சட்டபூர்வமாக மாற்றுவதற்காகச் சட்ட மன்றத்தில் சட்டமுன் வடிவு ஒன்று கொண்டுவரப்பட்டு, சட்டமன்றத்தில் ஏற்கப்பட்டது. இச்சட்டமுன் வடிவிற்கு "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேட்டிற்கு ஏற்பளித்தல் சட்டமுன்வடிவு" எனப் பெயரிடப்பட்டது. இச்சட்ட முன் வடிவிற்கு இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்காக, இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது, இந்திய அரசு இம்மாநில அரசிடம் சில உறுதிமொழிகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுள்ளது. இது குறித்து மாநில அரசு பரிசீலித்து வருகிறது.

இதுவரை பதிவு செய்து கொண்டுள்ள இந்தியமுறை மருத்துவர்கள், ஒருங்கிணைந்த மருத்துவர்கள் ஆகியோரின் விவரம் வருமாறு:—

### இந்தியமுறை மருத்துவ வாரியத்தில் பதிவு செய்துள்ளவர்கள்.

| | | |
|---|---|---|
| சித்த மருத்துவ முறை | .. | 9,899 |
| ஆயுர்வேத மருத்துவ முறை | .. | 2,603 |
| யுனானி மருத்துவ முறை | .. | 715 |
| மொத்தம் | .. | 13,217 |

### ஒருங்கிணைந்த மருத்துவமுறை வாரியத்தில் பதிவு செய்துள்ளவர்கள்.

| | | |
|---|---|---|
| சித்த மருத்துவ முறை | .. | 296 |
| ஆயுர்வேத மருத்துவ முறை | .. | 431 |
| யுனானி மருத்துவ முறை | .. | 46 |
| மொத்தம் | .. | 773 |

## மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் பின்வரும் இரு திட்டங்கள் 1983-84 ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

(1) சென்னை, அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவ மனையுடன் இணைக்கப்பட்டுள்ள மருந்தகங்களை மேம்படுத்துதல். மருத்துவ சாதனங்களும், இயந்திரங்களும் வாங்கப்பட்டு வருகின்றன. 5 ஆண்டு களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 8 இலட்சமாகும். இத் தொகை, 1984-85 ஆம் ஆண்டு இறுதிக்குள் செலவிடப்பட்டுவிடும்.

(2) சித்த முறை மருத்துவப் பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சிக்கல்வி பாளையங்கோட்டை அரசு சித்தமுறை மருத்துவக் கல்லூரியில் பயிற்று விக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பட்டமேற்படிப்பு மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 200 படிப்பு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

## தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம்.

அரசு, கடந்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது சட்ட மன்றப் பேரவையில் அளித்த உறுதிமொழிக்கு இணங்க முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு சித்த முறை மருத்துவ வாரியத்தை ஏற்படுத்தியது. இவ்வாரி யத்திடம் பின்வரும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:—

(1) புத்தகங்கள் வெளியிடுதல், சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றைத் திரட்டி புத்தகமாகத் தயாரித்து வெளியிடுதல்.

(2) மருத்துவ மனைகளில் உள்ள சித்தமுறை மருத்துவப் பிரிவு களைப் பார்வையிட்டு அவற்றை மேம்படுத்துவதற்கான கருத்துக்களைத் தெரிவித்தல்.

(3) கல்லூரிகளைப் பார்வையிட்டு, பாடத் திட்டத்தைத் திருத்தி யமைத்தல், பயிற்றுவிக்கும் முறையை திருத்தி அமைத்தல் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்.

தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம், சித்த கல்விமுறை, சித்த முறை மருத்துவமனைகள், ஆராய்ச்சிப் பிரிவுகள் போன்ற அனைத்து வகையான சித்த முறை மருத்துவம் அனைத்திற்கும் தலைமை வாரியமாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சித்த முறை வாரியம் தனது முதல் கூட்டத்தை 19—11—1983 ஆம் நாளன்று நடத்தியபோது, அடுத்த மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்கள் குறித்து திட்ட மிடுவதற்காக இரண்டு துணைக்குழுக்களை ஏற்படுத்தியது.

இவ்வாரியம் அமைத்துள்ள இரு துணைக் குழுக்களின் பரிந்துரைகள் மீது தமிழ்நாடு சித்த முறை மருத்துவ வாரியம் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.



## யுனானி மருத்துவமுறை.

(அ) **மருத்துவ உதவி.**—சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில், 49 படுக்கை வசதிகள் கொண்ட யுனானி பகுதியிலும், உள்ளாட்சி மன்றங்கள் நடத்தும் 13 மருந்தகங்களிலும், யுனானி முறையில் மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது.

(இ) **மருத்துவக் கல்வி.**—7½ ஆண்டுகால அளவிலான யுனானி மருத்துவப் பட்டப் படிப்பு நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இப்பட்டப் படிப்பிற்குச் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர் களின் மொத்த எண்ணிக்கை 16 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய அரசு நியமிக்கும் ஒரு மாணவரை சேர்த்துக் கொள்ளுவதால் இந்த எண்ணிக்கை உயர்ந்துள்ளது. யுனானி முறை மருத்துவக் கல்லூரிக்கான புதிய இடத்தைத் தேர்ந்தெடுத்து கட்டிடம் கட்டப்படும் வரை, இந்த மருத்துவக் கல்லூரி சென்னை அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவமனை வளாகத்தில் தொடர்ந்து இயங்கி வரும். புகுமுக யுனானி வகுப்புப் பாடங்களை ஆடவர், சென்னை புதுக் கல்லூரியிலும், மகளிர், எஸ். ஐ. இ. டி. மகளிர் கல்லூரியிலும் தொடர்ந்து பயின்று வருகின்றனர்.

(உ) **ஆராய்ச்சி**—யுனானி ஆராய்ச்சி மத்திய கழகம் நடத்தும் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவ மனையில் இயங்கிவருகிறது.

## யுனானி முறை மேம்பாட்டுக் குழு.

தமிழ்நாட்டில் தற்போதுள்ள யுனானி மருத்துவ வசதிகளை முழுமை யாக பயன் படுத்தவும், இவ்வசதிகளை மேலும் பெருக்குவதற்கு உரிய வழிமுறைகளைக் கண்டறிந்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்குவதற் காகவும் அரசால் ஏற்படுத்தப்பட்ட வல்லுநர்குழு தன்னுடைய அறிக்கையை அனுப்பியுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் பரிசீலனை யில் இருந்து வருகிறது.

## ஆயுர்வேத மருத்துவமுறை.

### மருத்துவ உதவி.

(அ) கீழ்க்காணும் இடங்களில் ஆயுர்வேத மருத்துவச் சிகிச்சை அளிக்கப் படுகிறது.—

(1) சென்னை, அரசினர் அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையில் 50 படுக்கைகள் கொண்ட ஆயுர்வேத சிகிச்சைப் பிரிவு.

(2) அரசினர் ஆயுர்வேத மருந்தகங்கள் ஐந்து.

(3) உள்ளாட்சி மன்றங்கள் நடத்தும் 93 மருந்தகங்கள்,

(இ) ஆயுர்வேத மருத்துவக் கல்வி.—பி.ஏ.எம்.எஸ். (B.A.M.S.) பட்டத்தை வழங்குவதற்கான பாடமுறைகளைப் போதிக்க இம்மாநிலத்தில் இரு தனியார் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன.

(உ) ஆராய்ச்சி.—ஆயுர்வேத சித்த முறை மருத்துவ ஆராய்ச்சி மத்தியக்குழு, சென்னையில் கேப்டன் சீனிவாசமூர்த்தி ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்தினை அமைத்துள்ளது. இந்த நிலையம் மலேரியா போன்ற நோய்கள் பற்றி பயனுள்ள ஆராய்ச்சி செய்து வருகிறது.

(எ) மொழி பெயர்ப்புப் பிரிவு.—ஆயுர்வேத மருத்துவப் பாட நூல்களை சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்க, மொழி பெயர்ப்புப் பிரிவை ஏற்படுத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பிரிவு நடப்பு ஆண்டில் செயல்பட்டு வருகிறது. சமஸ்கிருத மேதை திரு. ஸ்ரீராமதேசிகன் அவர்கள் இந்த மொழிபெயர்ப்புப் பிரிவிற்குக் கௌரவத் தனி அலுவலராக இருக்கிறார். புலவர்களும், வல்லுநர்களும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு இவருக்கு உதவுகின்றனர். "அஷ்டாங்க சங்கிரகம்" என்ற நூல் ஏற்கெனவே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டு வருகிறது. இரண்டாவது புத்தகம் ஒன்றும் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆயுர்வேத மருத்துவமுறை மேம்பாட்டுக் குழு.

தமிழ்நாட்டில் ஆயுர்வேத மருத்துவ முறைக்குத் தற்போதுள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் அவற்றை மேம்படுத்தவும் வழிவகைகளைத் தெரிவிக்கக் குழு ஒன்றை அரசு அமைத்தது. இக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

இயற்கை முறை மருத்துவம்.

ஹைதராபாத், பேகம்பேட்டில் உள்ள காந்தி இயற்கைமுறை மருத்துவச் சிகிச்சைக் கல்லூரியில் இயற்கை முறை மருத்துவத்தில் பயிற்சிபெற ஆண்டுதோறும் நால்வர் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

யோகாசனம்.

தமிழ்நாட்டில் யோகாசனத்தை சிகிச்சை முறையாக அரசு ஏற்பளித்துள்ளது. இம்மாநிலத்தில் உள்ள யோகாசனப் பயிற்சி நிலையங்களுக்கு அங்கீகாரம் அளிக்க அரசு, நெறிமுறைகளைப் பிறப்பித்துள்ளது.

வரவு-செலவுத் திட்டம்.

இந்திய முறை மருத்துவத்திற்காக 1982-83ல் ரூ. 151·19 இலட்சம் செலவிடப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 206·35 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1984-85-ல் 266·57 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

1984—85 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட புதிய திட்டங்களை இணைப்பில் காணலாம்.



## இணைப்பு

**இந்திய முறை மருத்துவத் துறைக்கு 1984—85-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட புதிய திட்டங்கள்.**

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | இறுதிச் செலவு. (2) (ரூபாய் ஆயிரத்தில்) | 1984–85-ல் செலவு. (3) |
|---|---|---|
| 1. பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் குடிநீர் வழங்கும் முறையை மேம்படுத்துதல் .. | 525 | 525 |
| 2. பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் உள்ள குணபாடம், உடல் கூறுகள், உடல் தத்துவம், நோய் நாடல் போன்ற துறைகளுக்கு முக்கியமான சாதனங்களையும், மேஜை, நாற்காலி போன்றவற்றையும் வாங்கிக் கொடுப்பதன் மூலம் அத்துறையின் செயல்முறையினை மேம்படுத்துதல் .. | 543 | 494 |
| 3. ஏழு மாவட்ட சித்த மருத்துவ அதிகாரிகள் பதவிகள் மற்றும் பணியாளர்கள் பதவிகள் ஏற்படுத்துதல் .. | 905 | 745 |
| 4. சென்னையில் இந்திய மருத்துவ உதவி இயக்குநர் பதவியை ஏற்படுத்துதல் .. | 103 | 77 |
| 5. சென்னை 106-ல் உள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் உள்ள மருந்தாக்கியல் பிரிவை மேம்படுத்துதல் .. | 500 | 500 |

D
V311,32:N84
N84:2091-3;1